ஸ்ரீகலா SRIKALA

# பெண் சகி

# PEN SAGI

ஸ்ரீகலா SRIKALA

# பெண் சகி

PEN SAGI



தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS
TAMIL NOVELS ONE CLICK DOWNLOADER



தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS

Download

# Contents

சகி : 1
சகி : 2
சகி : 3
சகி : 4
சகி : 5
சகி : 6
சகி : 7
சகி : 8
சகி : 9
சகி : 10
சகி : 11
சகி : 12
சகி : 13
சகி : 14
சகி : 15
சகி : 16
சகி : 17
சகி : 18
சகி : 19
சகி : 20

PDF தமிழ்.com
WWW.PDFTAMIL.COM

"புத்தம் புதுக் காலை பொன்னிற வேளை..."

அதிகாலை விடியலை பார்க்கும் போது தேவியின் மனதில் அந்தப் பாடல் அவளையும் அறியாமல் வந்து போனது. மெல்லிய புன்னகையுடன் காலை நடைப்பயிற்சி மேற்கொண்டிருந்தவளின் கண்ணில் வேலாயி பாட்டி விழுந்தார். அவரைக் கண்டதும் வேகமாய் அங்கே சென்றவள்,

"பாட்டி..." அவளின் அழைப்பில் நிமிர்ந்தவர் அவளை அடையாளம் கண்டு கொண்டதன் பொருட்டு நட்பாகச் சிரித்தார்.

வேலாயி பாட்டிக்கு வயது எழுபதாகிறது. இந்த வயதிலும் உடல் தளர்ந்து சோர்ந்து போகாமல் சுறுசுறுப்பாய் இருக்கும் அவருக்குத் தேவி பரமவிசிறி. அந்தத் தெருவில் இருக்கும் முப்பது வீடுகளுக்கும் வாசல் தெளித்துக் கோலம் போடும் பணி தான் அவர் பார்ப்பது. ஒரு நாளைக்கு ஒரு கோலத்திற்கு ஐந்து ரூபாய் வீதம் மாசம் ஒரு வீட்டில் அவருக்குக் கிடைக்கும் தொகை நூற்றியம்பது ரூபாய். முப்பது வீடுகளிலும் சேர்த்து மாதம் அவருக்கு நாலாயிரத்து ஐநூறு ரூபாய் கிடைக்கும்.

தேவி தங்கியிருக்கும் அடுக்குமாடி குடியிருப்பின் கீழ் பகுதியில் உள்ள பழைய பொருட்கள் போடுவதற்கு என்றிருந்த சிறிய அறையில் தான் அவர் தங்கியிருக்கிறார். அவருக்கு நான்கு பிள்ளைகள். யாருக்கும் அவரைக் கவனிக்க நேரமில்லை... பணவசதியும் இல்லை... தாய்க்குச் செய்ய வேண்டும் என்ற எண்ணமும் அவர்களுக்கு இல்லை.

ஓரளவு வசதி படைத்தவர்கள் வசிக்கும் அந்தக் குடியிருப்பில் ஏழையான வேலைக்காரியான வேலாயி பாட்டியை தங்க வைப்பதற்கு முதலில் ஆட்சேபம் தெரிவித்தனர் குடித்தனக்காரர்கள். நாகா என்ற பத்திரிக்கையாளன் தான் அவருக்கு ஆதரவு அளித்து

PDF தமிழ் .com

அங்கே தங்க வைத்தான். ஒரு நாள் இரவு உடல்நிலை சரியில்லாமல் அழுத குழந்தைக்குக் கை வைத்தியம் செய்து குழந்தையின் சுகவீனத்தைப் போக்கி அந்த இளம் தாயின் முகத்தில் சிரிப்பை வரவழைத்த வேலாயி பாட்டி ஒரே நாள் இரவில் ‘சூப்பர் ஹீரோயின்’ ஆகிவிட்டார்.

அதிலிருந்து எந்தக் குடித்தனக்காரர்களும் அவரை ஒன்றும் பேசியதில்லை. அவர் யாரிடமும் கையேந்த மாட்டார். தன் வருமானத்தில் அவர் நிறைவாய் வாழ்ந்தார். யாராவது பண்டிகை நாளில் தின்பண்டங்களை அன்போடு கொடுத்தால் மறுக்காமல் வாங்கிக் கொள்வார். இதெல்லாம் தேவிக்குத் தெரியாது... ஏனெனில் அவள் இங்கே வந்து ஒரு மாதமே ஆகிறது. அவளின் பக்கத்து வீட்டுப் பெண் சனா கூறி தான் அவளுக்கு இதெல்லாம் தெரியும்.

"வா... கண்ணு.. நடந்துட்டு வந்திட்டியா...?" கேள்வி அவளிடம் இருந்தாலும் அவரின் கவனம் போட்டுக் கொண்டிருந்த கோலத்தின் மீது இருந்தது.

"பாட்டி இந்தப் பனிக்காலத்தில் மப்ளர் இல்லாமல் வர கூடாதுன்னு சொல்லியிருக்கேன் இல்லையா... அப்படியிருந்தும் நீங்க அதையே தான் செய்றீங்க..." என்றவள் தான் அணிந்திருந்த மப்ளரையும், ஸ்வெட்டரையும் கழட்டி அவரிடம் நீட்டினாள்.

"அழுக்காயிருந்ததுன்னு துவைச்சுப் போட்டேன் கண்ணு... அது காயல... நான் என்ன செய்ய...?" என்றவர் அவள் நீட்டியதை வாங்க மறுத்தவர்,

"எனக்கு வேணாம் கண்ணு... நீ போட்டுக்கோ... எனக்கு வேலை முடிஞ்சது..."

"இன்னும் பத்து வீடு இருக்கு பாட்டி... குளிர் ஒத்துக்காம உங்களுக்கு உடம்பு படுத்தினா... நாளைக்கு யார் கோலம் போடுறது...?" அவள் சொன்னதற்குப் பலன் இருந்தது.

"அதை மறந்தே போயிட்டேன் கண்ணு... இருந்தாலும்... வேலைக்காரி நான் எப்படிக் கண்ணு உன்னதைப் போட..." அவர் தயங்க... வலுக்கட்டாயமாய் அவருக்கு அணிவித்தவள்,

"எதுவும் பேச கூடாது... மூச்..." என்றவள், "இதை நீங்களே வச்சுக்கோங்க பாட்டி..." என்றதும் சந்தோசமாய்த் தலையாட்டினார் அவர்.

தன்னிடம் அன்பாய் இருக்கும் தேவியை அவருக்கு நிரம்பப் பிடிக்கும்... ஆதலால் அவள் சொன்னதை அவர் கேட்டார்.

"ஆமாம் பாட்டி... இன்னைக்கு என்ன நேரமே கோலம் போடுறீங்க...? உங்க டைம் ஐந்தரை தானே...?" கேள்வி கேட்டுக் கொண்டே அவருக்கு உதவியாய் கோலத்தில் கம்பியை இழுத்தாள்.

"டீச்சரு பொண்ணு நீ போய் இதெல்லாம் செய்யலாமா கண்ணு... எந்திரி நான் போடறேன்..." என்றவர்,

"இன்னைக்கு நாகா தம்பி ஆஸ்பத்திரில இருந்து டிஸ்சார்ஜாகி வீட்டுக்கு வருது... அதான் அதோட வீட்டை துப்பரவு பண்ணி வைக்கலாம்ன்னு... நேரத்தோட இந்த வேலையை ஆரம்பிச்சிட்டேன்..."

பாட்டி சொல்லும் நாகாவை அவள் பார்த்தது இல்லை. ஆனால் அவன் தான் பாட்டியை இங்கே தங்க வைத்ததில் முக்கியக் காரணகார்த்தா என்று மட்டும் தெரியும்.

"ஓ..." என்றவள் அதற்கு மேல் அவனைப் பற்றிச் சிந்திக்கவில்லை. பாட்டிக்கு உதவி விட்டு அவரையும் அழைத்துக் கொண்டே தங்கள் குடியிருப்புக்கு வந்தாள்.

வீட்டிற்கு வந்தவள் நேரே சமையல் கட்டிற்குத் தான் சென்றாள். மதியத்துக்குத் தேவையான எலுமிச்சை சாதம் செய்து டப்பாவில் அடைத்தவள், இட்லி மாவை தட்டில் ஊற்றி அடுப்பில் வைத்தாள். அடுத்த அடுப்பில் வாணலியை வைத்து எண்ணெய் சிறிது தாராளமாய்

PDF தமிழ் .com

விட்டு தக்காளியை வதக்கினாள். தயாரான தக்காளி தொக்கை கிண்ணத்தில் எடுத்து வைத்தவள், அதற்குள் வெந்திருந்த இட்லியை எடுத்து ஹாட் பாக்ஸில் அடைத்தாள். இது இரவு வரை அவளுக்குப் போதும்.

எல்லாவற்றையும் உணவு மேஜையில் எடுத்து வைத்தவள் குளிக்கச் சென்றாள். தேவி வயது இருபத்திமூன்று... தனியார் பள்ளி ஒன்றில் ஆசிரியராய் இருக்கிறாள். அம்மா, அப்பா கிடையாது. ஒரே ஒரு அக்கா மட்டுமே... அவளுக்குக் கல்யாணமாகி விட்டது. அவளைத் தொந்திரவு செய்ய மனம் வராததால் இவள் தனியே வீடு எடுத்து தங்கியிருக்கிறாள்.

பள்ளிக்கு தயாராகி வெளியில் வந்தவள் அங்குப் பொதுப் பால்கனியில் இருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சனாவின் அருகில் சென்றாள்.

"சனா இங்கே என்ன பண்ற...? காலேஜ் போகலையா...?"

"இனி மேல் தான் போகணும்..." பேச்சு இவளிடம் இருந்தாலும் சனாவின் கண்கள் கீழே பார்த்து அலைபாய்ந்து கொண்டிருந்தது. சனாவின் பார்வையைத் தொடர்ந்து கீழே பார்த்தவள்,

"என்ன சனா பார்க்கிற...?" அவளின் கேள்வியில் திடுக்கிட்டு திரும்பிய சனா... பின் முகம் மலர,

"உங்க கிட்ட மறைக்க என்ன இருக்குக்கா..." என்றவள் திடீரென்று வெட்கப்பட்டுக் கொண்டே,

"அவர் இன்னைக்கு வர்றார்... அதான் அவரைப் பார்த்திட்டு போகலாம்ன்னு..."

"அவர்..." புரியாமல் இழுத்தாள் தேவி.

"அதான்க்கா... போர்த் ப்ளோர்ல இருக்காரே... நாகா... அவரைத் தான் சொல்றேன்..." கன்னம் சிவந்து சொன்னவளை விசித்திரமாய்ப் பார்த்தவள்,

"சரி நான் போய்ட்டு வர்றேன்..." என்றவள் படிகளிலிருந்து இறங்கினாள். அவள் இருப்பது இரண்டாவது தளம் அதனால் கூடுமானவரை மின்தூக்கியை பயன்படுத்துவதைத் தவிர்ப்பாள்.

வேகமாக இறங்கி கீழ் தளத்தை அடையும் போது அதே நேரம் இளைஞன் ஒருவன் வேகமாய் வந்து மேலே ஏற படியில் கால் வைத்தான். இருவரும் ஒருவர் வருவதை மற்றவர் கவனிக்கவில்லை. அவன் மோதிய வேகத்தில் மல்லாக்க கீழே விழ போனவளை சட்டென்று அவனின் வலிமையான கரங்கள் தாங்கியது.

"ஹேய் பார்த்து..." என்றவனின் கரங்கள் அவளைத் தாங்குவதற்காகக் கொஞ்சம் அழுத்தமாய் அவளின் இடை மீது பதிந்தது. அதில் கோபமுற்றவள் தன் கையை இடியென அவனின் கன்னத்தில் பதித்தாள்.

அவளின் செயலில் அவனின் கண்களில் கொலைவெறியேறியது... கண்கள் சிவக்க கோபத்துடன் அவளைப் பார்த்தவன் அவளின் வலது கையை எடுத்து முறுக்கியபடி,

"இந்தக் கை தானே என்னை அடித்தது... இதை உடைக்காமல் விட்டால்... நான் ஆம்பளையே இல்லைடி..." என்றவன் கையை முறுக்கியதில் அவளுக்கு வலியெடுத்தது.

ஆனாலும் அதைக் காட்டி கொள்ளாமல் கம்பீரமாய் அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவளையும் மீறி அவளின் கண்கள் அந்த வலியை பிரதிபலித்து விட... அதைக் கண்டு என்ன நினைத்தானோ... சட்டென்று அவள் கையை உதறியவன்...

"கீழே விழ போன உன்னை விழுந்துவிடாமல் தடுப்பதுக்குத் தான் உன்னைத் தொட்டேன்... உன் கூட டூயட் பாடுறதுக்கு இல்லை..." வார்த்தைகளை அவன் கடித்துத் துப்பும் போதே அங்கே வந்து சேர்ந்தார் வேலாயி.

PDF தமிழ் .com

"ராசா... எப்போய்யா வந்த...?" அவனின் கன்னம் நெட்டி முறித்துப் பாசத்துடன் கேட்க... அதில் மனம் நெகிழ்ந்தவனாய் தன் முகப் பாவனையை நொடியில் மாற்றியவன்,

"இப்போ தான் ஆயா... நீங்க எப்படியிருக்கீங்க...? இப்போ கால் வலி தேவலையா...? கால்வலி மருந்தை முத்தையா கிட்ட கொடுத்து விட்டேனே... கொண்டு வந்து கொடுத்தானா...?"

"கொடுத்தான் ராசா... அதனால தான் என்னால நடமாட முடியுது..." என்றவர், "ஆமா ராசா... இப்படி ஒரு மாசமா... ஆஸ்பத்திரில போய்ப் படுத்துக்கிட்டியே... இப்போ உடம்பு எப்படியிருக்கு ராசா...?"

"அதை நீங்களே பார்த்து சொல்லுங்களேன் ஆயா..." தன்னைச் சுற்றி வட்டமடித்துக் காட்டியவனைக் கண்டு தேவிக்கும் மண்டை குடைந்தது.

'பார்க்க நல்லா கல்லு குண்டு கணக்காயிருக்கான்... இவனுக்கு என்ன கேடு வந்ததுன்னு ஹாஸ்பிட்டல்ல இருந்தானாம்...' மனதுக்குள் அவனைத் திட்டினாள்.

"ஒண்ணுந் தெரியலியே ராசா..." வெகுளியாய் அவனை மேலும் கீழும் பார்த்தார் மூதாட்டி...

"அதைத் தான் நானும் சொல்றேன்... எனக்கு ஒண்ணுமில்லைன்னு... ஐயம் பெர்பெக்ட்லி நார்மல்..." என்றவன் அவரை அன்பாய் அணைத்துக் கொண்டான்.

அப்போது தான் வேலாயி பாட்டி தேவியைப் பார்க்க... "கண்ணு நீ இங்க தான் இருக்கியா...?" என்றவர் அவளை அவனுக்கு அறிமுகப்படுத்தினார்.

"ராசா... இது தான் நம்ம அப்பார்ட்மெண்டுக்குப் புதுசா குடி வந்திருக்கிற பொண்ணுப்பா... பேரு தேவி..." அதே போல் அவனையும் அறிமுகப்படுத்தி வைத்தார்.

"கண்ணு நான் சொல்வேன்ல்ல நாகா தம்பி... இது தான்..."

சிறியவர்கள் இருவரும் எடை போடும் பார்வை ஒன்றை மற்றவர் மீது செலுத்தினர். அவனின் பார்வை சுவாரஸ்யமாய் அவள் மீது பதிந்தது என்றால்... அவளின் பார்வை ஆராய்ச்சியாய் அவன் மீது பதிந்து மீண்டது. ஏனெனில் அவனைப் பற்றிக் கேள்விப்பட்டு இருந்தது எல்லாம் நல்லவையே... ஆனால் நேரில் அவனைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை என்பது தான் அவளின் ஆராய்ச்சி பார்வைக்கான காரணம்.

"ஹாய் நாகா..." ஆர்ப்பாட்டமாய்க் கேட்டபடி அங்கே வந்தாள் சனா.

"ஹாய் சனா... ஹவ் ஆர் யூ...?" அவனும் பதிலுக்கு உற்சாகமாய்க் கேட்டான்.

அதைக் கண்டு தேவி முகம் சுளிக்க... தேவியின் முகம் போன போக்கை பார்த்து அவன் தன் ஒற்றைப் புருவத்தைத் தூக்கி என்ன என்பது போல் பார்க்க... அவள் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவளின் திருப்பலில் அவனின் கண்கள் மின்னியது... இதழில் கேலி புன்னகை உதயமானது.

"என்ன நாகா இது... இப்படியா ஒரு மாசமா ஹாஸ்பிட்டல்ல போய்ப் படுத்துக்குவீங்க... உங்க ஆர்ட்டிக்கிள் இல்லாததால இந்த ஒரு மாசமா நான் உங்க பத்திரிக்கையைப் படிக்கிறதே இல்லை தெரியுமா...?" கொஞ்சினாள் சனா.

"அப்படியா சனா... அதான் போன மாசம் பேப்பர் சர்க்குலைசன் குறைஞ்சியிருந்ததா எடிட்டர் சொன்னாரா...? அது நீ வாங்காமல் போனதால் தானா... இது எனக்குத் தெரியாதே..." சிரியாமல் கேலி பேசியவனின் தோளில் செல்லமாய்த் தட்டிய சனா,

"போங்க நாகா... நீங்க எப்பவுமே இப்படித்தான்..."

"என்ன சனா... காலேஜ்க்கு நேரமாகலையா...? ஓடு... ஓடு..." அவன் சனாவை கிளப்ப... தேவியின் கண்கள் தன்னையும்

PDF தமிழ் .com

அறியாமல் கைக்கடிகாரத்தைப் பார்த்தது. அதைக் கண்டவன் ஏளன சிரிப்புடன்,

"சனா... அவங்களும் உன் காலேஜ் தானா...?" சனா பதில் சொல்லும் முன்...

"நான் ஒண்ணும் ஸ்டூடண்ட் இல்லை... நான் ஸ்கூல் டீச்சர்..." கடுகடுத்தாள் தேவி...

"ஓ... டீச்சரா..." என்றவன் அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில் "அழகான டீச்சர்..." என்றான் அர்த்தம் பொதிந்த பார்வையுடன். அதைக் கண்டவள் ஒரு வெட்டும் பார்வையை அவன் புறம் செலுத்தியவள்,

"பாட்டி நான் வர்றேன்..." வேலாயியிடம் விடைப்பெற்று செல்ல... அவளைத் தொடர்ந்து சனா, வேலாயி பாட்டியும் தங்கள் வேலையைப் பார்க்க செல்ல... தனித்து விடப்பட்டான் நாகா.

தொலைவில் நடந்து போய்க் கொண்டிருந்த தேவியைப் பார்த்த நாகா, "வெரி இன்ட்ரஸ்ட்டிங் கேர்ள்..." அவனின் வாய் முணுமுணுத்தது.

ஆனாலும் அவள் தன்னை அடித்ததை நினைத்து அவன் மனதில் கோபம் இருக்கத் தான் செய்தது. அதையும் மீறி அவளின் அழகு அவன் மனதை தாக்க தான் செய்தது.

நாலாவது தளத்தில் இருந்த தனது வீட்டிற்குச் சென்றவன் மடிகணினியில் சிறிது நேரம் வேலை பார்த்தவன் பின் அவசரமாய்க் குளித்துவிட்டு வேறு உடை அணிந்து தனது அலுவலகத்திற்குக் கிளம்பினான்.

நாகா வயது இருபத்தியெட்டு... சென்னையிலுள்ள பிரபல பத்திரிக்கையில் நிருபராய் வேலை பார்க்கிறான். தொழில் நிமித்தமாய்க் குடும்பத்தைப் பிரிந்து தனியே வசிக்கிறான். அவனின் ஆபத்துக் குடும்பத்தைப் பாதிக்கக் கூடாது என்ற நல்ல எண்ணமே அதற்குக் காரணம்.

நெருப்பு சுடும் என்று தெரிந்திருந்தும் மிகவும் ஆபத்தான வேலைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வான்... இளரத்தம் அல்லவா... தைரியமும், துணிச்சலும் அவன் கூடப் பிறந்திருந்தது. அவனின் பத்திரிக்கையாசிரியருக்கு கூட அவனிடத்தில் பயமும் உண்டு... அதே சமயம் தனி மரியாதையும் உண்டு...

*******************************************

அலுவலகம் வந்த நாகா நேரே ஆசிரியரின் அறைக்குச் சென்றான். அவன் அப்படித்தான் யாரிடமும் அனுமதி கேட்டு காத்துக் கொண்டிருக்க மாட்டான். அவனின் திறமை கண்டு ஆசிரியரும் ஒன்றும் சொல்ல மாட்டார். ஏனெனில் அவனின் திறமை அவரின் பத்திரிக்கைக்கு அவசியம் தேவையல்லவா...

"வாப்பா... நாகா..." அவனை அன்பாய் வரவேற்றார் சேஷாத்திரி.

அவர் தான் "திராவிடர் காவலன்" பத்திரிக்கையின் உரிமையாளர். அவரின் தந்தை பஞ்சாபிகேசன் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது இந்தப் பத்திரிக்கை. அன்று முதல் இன்று வரை தமிழ்நாட்டின் முன்னணி பத்திரிகையாய் அது திகழ்கிறது என்றால் அதற்கு மூலக்காரணம் இன்றளவும் பஞ்சாபகேசனின் வழிகாட்டுதல் தான்... இன்றும் அவருக்கு என்று தனியறை உண்டு. எல்லோரையும் போல் அவரும் நேரம் காலம் பார்க்காமல் உழைப்பார்.

"குட்மார்னிங் சார்..." என்றவன் தன் கையில் வைத்திருந்த பென்ட்ரைவை எடுத்து அவர் முன் வைத்தான்.

"என்னது...?" கேட்டுக் கொண்டே அதை எடுத்தவர் தன் மடிகணினியில் சொருகினார். கணினியில் அதிலிருந்த கோப்பை பார்த்தவர் கண்கள் வியப்பில் விரிந்தது.

"குட்... குட்... நாகா... இதை நான் எதிர்பார்க்கவே இல்லை..." என்றவரை புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

PDF தமிழ் .com

சென்னையிலிருந்த அந்தப் பிரபல தனியார் மருத்துவமனையில் நடக்கும் ஊழல்கள், சதிகள் பற்றி அவன் திரட்டிய தகவல்கள் ஆதாரத்துடன் அந்தக் கணினியின் திரையில் மின்னி கொண்டிருந்தது.

சதி தொடரும்...

மருத்துவத் தொழில் மிகவும் புனிதமான தொழில்... மருத்துவர்களை நாம் அந்தத் தெய்வத்துக்கு அடுத்து கையெடுத்து வணங்குகிறோம்... ஆனால் ஒரு சிலர் செய்யும் தவறுகளால் ஒட்டு மொத்த மருத்துவர்களும் தவறாகச் சித்தரிக்கப்படுகிறார்கள். தங்கள் கைக்காசு கொண்டு நோயாளிகளுக்கு மருத்துவம் பார்க்கும் மருத்துவர்கள், கிராமங்களில் தங்கி இலவசமாய் மருத்துவச் சேவை செய்யும் மருத்துவர்கள் என அதில் நல்லவர்களும் இருக்கத் தான் செய்கிறார்கள்.

இதில் புல்லுருவி போல் ஒரு சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். அந்த மாதிரி ஒருவரை முதன்மை மருத்துவராகக் கொண்டு இயங்குவது தான் இந்தத் தனியார் மருத்துவமனை. ஆனால் இதன் நிர்வாகி வேறு... அமைச்சர் ஒருவரின் மனைவி தான் இதற்கு நிர்வாகி... அதிகார பலம் இருப்பதால் பல ஊழல்கள், சதிகள் சத்தமில்லாமல் தைரியமாக அங்கே நடக்கின்றது.

ஊழல் : 1
தங்களைச் சுற்றியுள்ள சிறிய மருத்துவமனை வைத்திருக்கும் மருத்துவர்களுக்கு ஒரு நோயாளியை அனுப்பி வைத்தால்... ஒரு நோயாளிக்கு இவ்வளவு என்று குறிப்பிட்ட தொகையைத் தரகு கட்டணமாகத் தருகின்றனர். இது அந்த மாவட்டத்தையும் தாண்டி தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் உள்ள மருத்துவர்களைத் தங்கள் கைக்குள் போட்டுக் கொண்டு இந்த ஆட்டத்தை இன்றளவும் ஆடி வருகின்றனர். இந்தத் தரகு தொழில் ஜாம் ஜாமென்று நடப்பதை பார்த்தால் இவர்கள் மருத்துவர்களா இல்லை... தரகர்களா என்று தெரியவில்லை.

ஊழல் : 2
அங்கீகரிக்கப்படாத மருந்து தொழிற்சாலையின் மருந்துகளை அதன் தயாரிப்பாளர்கள் பெரும் லஞ்சத்தை இந்த மருத்துவமனைக்கு அளித்து... அவர்களிடம் வரும் நோயாளிகளைப் பரிசோதனைக் கூட எலியாக மாற்றும்

PDF தமிழ் .com

அவலநிலை இப்போதும் நடந்து கொண்டு தான் இருக்கிறது. இதில் பலருக்கு வாந்தி, பேதி, மூச்சடைப்பு, ஒவ்வாமை எனப் பல தொந்தரவுகள் ஏற்பட்டு அவர்கள் மீண்டும் மீண்டும் அங்கே படையெடுத்த வண்ணம் இருக்கின்றனர். அதில் பலர் இறந்தும் போயிருக்கின்றனர்.

ஊழல் : 3
அதே போல் சில தனியார் மருந்து தயாரிப்பாளர்கள் அவர்களின் மருந்துகளை மட்டுமே நோயாளிகளை வாங்க செய்யுமாறு மருத்துவர்களிடம் பரிந்துரை செய்யச் சொல்லினர். அதுவும் அதிக விலை கொடுத்து வாங்க செய்தனர். சாமான்ய மனிதனுக்குக் கட்டுப்படியாகாத தொகை அது...

ஊழல் : 4
தங்களிடம் வரும் நோயாளிகளிடம் இருந்து அவர்களுக்குத் தெரியாமல் அவர்களின் உடல் உறுப்பைத் திருடி விற்பது... அங்கு நடக்கும் தொழில்களில் இது தான் மிகவும் லாபகரமானதும் கூட...

ஊழல் : 5
குறைந்தபட்சம் பத்தாயிரம் ரூபாய் இல்லாமல் அந்த மருத்துவமனைக்குள் யாரும் நுழைந்துவிட முடியாது.

ஊழல் : 6
மருத்துவர்களின் அலட்சியம்... அதனால் பறி போன உயிர்களின் எண்ணிக்கை ஏராளம்.

இப்படி வரிசை வாரியாக அதிலிருந்ததைப் படித்த சேஷாத்திரியின் முகம் கோபத்தின் சாயத்தைப் பூசியது.

"ச்சே... இவங்க எல்லாம் மனுசங்க தானா...? உயிர் காக்கிற தொழிலை செய்ற இவங்க மனசுல இத்தனை அசுத்தங்களா...? தெய்வத்திடமே குறை இருந்தால் யாரிடம் போய் மன்றாடுவது... அது போல் கடவுளை ஒத்த இவர்களே இப்படி என்றால்... இதை யாரிடம் போய்ச் சொல்வது... எல்லாம் பணமும், பதவியும் கொடுக்கும் தைரியம் தான்... முதல்ல அதை இல்லாமல் பண்ணணும்... அப்போ தான்

இவங்க கொட்டம் அடங்கும்... நாளைக்குப் பேப்பர்ல ப்ரென்ட் பேஜில் கொட்டை எழுத்துல நாம இதைப் போடறோம்..." ஆத்திரமாய் வந்தது அவரின் வார்த்தைகள்.

"இதை அங்கே வேலை செய்ற என் டாக்டர் பிரெண்ட் தான் என் கிட்ட சொன்னான். அரசாங்கம் அங்கீகரிக்காத மருந்துகளை யூஸ் பண்ணி நிறையப் பேர் இறந்து போனதை பார்த்துச் சந்தேகம் வந்து... அவன் விசயங்களைத் தோண்ட... அது என்னடான்னா அனுமார் வால் போல் நீண்டு கிட்டே போகவும் தான்... பயந்து போய் என்னிடம் சொன்னான். அதான் உடம்பு சரியில்லாத மாதிரி அங்கே தங்கியிருந்து இதையெல்லாம் கண்டுப்பிடிச்சேன்... அவ்வளவு சீக்கிரம் இதைக் கண்டுப்பிடிக்க முடியல... அந்தளவுக்கு நம்பகமான ஆட்களை வைத்து ரொம்பச் சீக்ரெட்டா இதைச் செய்றாங்க சார்..." தான் சேகரித்த விசயங்களைச் சற்றும் ஜீரணிக்க முடியாத குரலில் கூறி முடித்தான் நாகா.

"இந்த விசயத்தை நாம போடுறதால... அரசியல்வாதி, அந்த மெடிசின் தயாரிக்கிற பிசினெஸ் மேன், இவங்களுக்கு இடையே செயல்படுற இடைத்தரகர்கள்ன்னு மூன்று விதமானவங்க மாட்ட போறாங்க... ஏற்கெனவே அந்த அரசியல்வாதி பத்தி போன மாச பேப்பரில் அளவுக்கு அதிகமா சொத்து சேர்த்து இருக்கார்ன்னு ஆதாரத்தோட நிரூபிச்சிருந்தோம்... இப்போ இதையும் போட்டா... அவருக்கு எதிரான குற்றங்கள் ஸ்ட்ராங்கா இருக்கும்... ஒருவேளை அவர் தன் பதவியைக் கூட இழக்க நேரிடலாம்..." சொன்ன சேஷாத்திரி நிறுத்திவிட்டு அவனைப் பார்த்தவர்,

"உன் பேரை அவசியம் போடணுமா நாகா...? மொட்டையா நியூஸ் போட்டா பத்திரிக்கை மேல மட்டும் தான் கோபமிருக்கும்... உன் பேரை போட்டா தேவையில்லாம உனக்குத் தான் பிரச்சினை வரும்..."

"சார்... வாழ போற நாட்கள் கொஞ்சம்... அதுல எதையாவது சாதிச்சிட்டு சாகணும்... உயிருக்கு பயந்து என்னை நான்

மாத்திக்க முடியாது... ஜர்னலிஸ்ட் வாழ்க்கையில் இதெல்லாம் சகஜம் சார்... மூட்டைப்பூச்சிக்கு பயந்துட்டு வீட்டை கொளுத்த முடியுமா என்ன...? அதனால என் பெயரை கொட்டை எழுத்தில் போடுறீங்க... இல்ல நான் தர்ணாவுல இறங்குவேன்..."

"நீ செஞ்சாலும் செய்வே நாகா..." என்று சொல்லிவிட்டு சிரித்தவர்,

"உனக்கு ஏதாவது ஒண்ணுன்னா உன் அம்மாவுக்கு யார் பதில் சொல்றது... ‘உங்களை நம்பி தானே என் பையனை அனுப்பிச்சேன்னு’ என் கிட்ட சண்டை போட போறா..."

"அப்படிச் சண்டை போட மாட்டாங்க... போட்டாலும் சமாளிக்க உங்களுக்கா தெரியாது... இத்தனை நாள் எப்படிச் சமாளிச்சீங்களோ... அப்படியே இதையும் சமாளிங்க... சரி சார்... நான் கிளம்பறேன்... விவேக்கை என்னோட கூட்டிட்டு போறேன்..."

"அடுத்த வேலையா... கொஞ்சம் ரெஸ்ட் எடுத்திட்டுப் போகக் கூடாதா நாகா...?" கரிசனையுடன் கேட்டார் அவர்.

"சார்... ஹாஸ்பிட்டல்ல ஒரு மாசமா என்ன பண்ணிட்டு இருந்தேன்னு நினைச்சீங்க... ஃபுல் ரெஸ்ட் தான்..." சிரித்தபடி எழுந்தவனைப் பார்த்து,

"நாகா... ஐயா உன்னைப் பார்க்கணும்ன்னு சொன்னாரு..."

"பெருசா... ஐயோ... இப்போ அது கிட்ட போய் மாட்டிட்டு யார் திட்டு வாங்கிறது...? அதையும் நீங்களே சமாளிங்க..." என்றவன் அடுத்த நொடி அங்கிருந்து மாயமாய் மறைந்துவிட்டான். அவனின் செயலில் சேஷாத்திரிக்குச் சிரிப்பு பீறிட்டது.

"வாடா ஹீரோ... என்ன ஆளையே காணோம்... ஏதாவது ஹீரோயிசம் பண்ணிட்டு வந்திருப்பியே..." நாகாவின் வயிற்றில் செல்லமாய்க் குத்தியபடி வரவேற்றான் விவேக்.

"அது நாளை காலை பேப்பரில்..." விளம்பரபாணியில் சொல்லியவன்... "டேய் விவேக்... என் கூடக் கிளம்புடா..."

"போடா உன் கூட வந்தா ஒரே போர்டா... நான் காசி கூட டிவி சீரியல் நடிகை மேரேஜ்க்குப் போகப் போறேன்..."

நாகாவுடன் சென்றால் நியாயம், நீதி என்று ரொம்ப வறட்சியாக இருக்கும்... இதே இது காசியுடன் சென்றால் கண்ணுக்கு குளிர்ச்சியாய் பல பெண்களைப் பார்க்கலாம் என்ற நப்பாசையில் விவேக் நாகாவுடன் செல்வதை மறுத்தான்... விதி வலியது என்று விவேக்குக்குத் தெரியாமல் போய்விட்டது.
"நாகா... எப்படிப்பா இருக்க...?" என்றபடி அங்கே வந்து சேர்ந்தான் காசி.

"நல்லாயிருக்கேன்டா..." நாகா பதில் சொல்லும் போதே... காசி விவேக்கை பார்த்து,

"விவேக் வர்றியா... போகலாமா...?" என்று கேட்க...

"அதுக்குத் தான் மச்சான் வெய்ட்டிங்..." என்று ஜொள்ளு விட்டபடி கிளம்ப ஆயத்தமானான்.

"விவேக்... நான் இன்னைக்குக் கவர்ச்சி நடிகை சிமியை பேட்டி எடுக்கப் போறேன்... அதுவும் இன்னைக்கு ஸ்விம்மிங் சீன் வேறயாம்... ஏற்கெனவே அவங்க கவர்ச்சி தான்... இதில் ஸ்விம்மிங் ட்ரெஸ்ன்னா கேட்கவே வேணாம்... உனக்குக் கிடைச்ச அதிர்ஷ்டம் அவ்வளவு தான்... சரி நீ அந்தச் சீரியல் நடிகை மேரேஜுக்கே போ..." நாய்க்கு எலும்பு துண்டை போடுவது போல் கவர்ச்சி என்ற வார்த்தையை வீசி விவேக்கிற்கு வலை விரித்தான் நாகா.

விவேக் மனக்கண்ணில் ஸ்லோமோசனில் கவர்ச்சி கன்னி சிமி நீச்சல் உடையில் ஓடி வருவது போல் கற்பனை விரிய... அவன் உடல் சிலிர்த்து அடங்கியது.

"வாடா மச்சான்... போகலாம்..." ஜொள்ளியவாறு அவன் நாகாவுடன் கிளம்பத் தயாரானான்.

தமிழ் நாவல்

"அப்போ நீ என் கூட வரலையா..." காசி பரிதாபமாய்க் கேட்க...

"எனக்கு என் டாலி சிமி தான் முக்கியம்..." கண்களில் மயக்கத்துடன் கூறியவனைக் கண்டு தலையில் அடித்துக் கொண்டான் காசி.

"முதல்லயே சொல்லி தொலைச்சிருக்கலாமல்ல... இப்போ ஃபோட்டோ பிடிக்க யாரை கூட்டிட்டு போறது..." காசி அலுத்துக் கொண்டான்.

"நம்ம நாதன் சார் ப்ரீ தான் காசி... அவரைக் கூட்டிட்டு போ..." நாகா காசி பிரச்சினையைத் தீர்க்க... விவேக் அவனுடன் ஜொள்ளுவிட்டுக் கொண்டு கிளம்பினான்.

****************************

"டேய்..." விவேக் அலறிய அலறலில் அடித்துப் பிடித்துக் கொண்டு திரும்பி பார்த்தான் நாகா.

"என்னடா...?" பதட்டமாய் அவன் கேட்க...

"சிமியை பார்க்க போகாம இங்கே ஏண்டா கூட்டிட்டு வந்திருக்க...?" அவனின் பதிலில் பல்லை கடித்தான் நாகா.

"கத்தி மானத்தை வாங்காதேடா பரதேசி... கலெக்டர் பிரஸை கூப்பிட்டு இருந்தாரு அதான் இங்கே வந்திருக்கோம்..."

"அப்போ சிமி..." பரிதாபமாய்க் கேட்டான் விவேக்.

"அவங்க இப்போ சுவிஸ்ல ஹீரோ கூட டூயட் பாடிட்டு இருக்காங்களாம்..." சிரியாமல் சொன்னவனைக் கொலைவெறியுடன் பார்த்தான் விவேக்.

"உனக்கு என் மேல ஏண்டா இப்படியொரு காண்டு...? நீயெல்லாம் வாழ்க்கையில் ரொம்ம்ம்ம்ம்ப நல்லா வருவடா..." விவேக் கடுப்புடன் கூறும் போதே மாவட்ட ஆட்சியர் திவாகர் அங்கே வந்தார்.

நாகாவை கண்டதும் அவனை அருகில் வர சொல்லி கையசைக்க... முகத்தில் விரிந்த புன்னகையுடன் நாகா அவரை நோக்கி நடந்தான்.

"குட்மார்னிங் கலெக்டர் சார்..."

"டேய் இதெல்லாம் கொஞ்சம் ஓவரா தெரியல... என் பிரெண்ட் நீ... நீ என்னைச் சார்ன்னா கூப்பிடற... மவனே சார்ன்னு சொன்ன அவ்வளவு தான்..." திவாகர் நாகாவை செல்லமாய் மிரட்டுவதை ஆவென்று பார்த்துக் கொண்டிருந்தான் விவேக்.

"அதெல்லாம் வெளியில் சார்... இப்போ நீங்க ட்யூட்டில இருக்கீங்க சார்..." என்றவனை என்ன செய்வது என்று தெரியாமல் பார்த்த திவாகர்,

"உன்னை எல்லாம் திருத்த முடியாது..." என்றவன் விவேக்கிடம் திரும்பி,

"எப்படி இவனை வச்சு சமாளிக்கிறீங்க...?" என்று கேட்க...

'நீங்க சொல்லிட்டீங்க சார்... என்னால வாய்விட்டு சொல்ல முடியல...' மனதில் நினைத்த விவேக் வெளியில்,

"ஹி... ஹி..." என்று சிரித்து வைத்தான்.

"சார் என்ன விசயமா வர சொன்னீங்க...?" நாகா கேட்கவும்...

"அது என்னன்னு ஸ்பாட்ல தெரிஞ்சுக்குவீங்க மிஸ்டர். நாகா... என் காரை ஃபாலோ பண்ணி வாங்க..." ஆட்சியர் மிடுக்குடன் சொல்லிவிட்டு திவாகர் காரில் ஏற... அதைப் புன்னகையுடன் பார்த்திருந்தான் நாகா.

'கலெக்டர் வச்சான்டா ஆப்பு...' மனதுக்குள் குதூகலித்த விவேக் வெளியில் பாவம் போல் முகத்தை வைத்துக் கொண்டு நாகாவை பார்த்தான்.

"பாலாறு ஓடுது... உன் நடிப்பை கொஞ்சம் நிப்பாட்டு ராசா..." என்ற நாகா தன் இருசக்கர வாகனத்தில் ஏறி

அதைக் கிளப்பினான். விவேக்கும் அவனுடன் தொற்றிக் கொள்ள... ஆட்சியர் காரை பின் தொடர்ந்தனர் இருவரும்.

ஊருக்கு வெளியே தனித்துச் சென்ற சாலையிலிருந்த அந்தச் சோதனை சாவடியில் எல்லோரும் காத்திருக்க... அரை மணி நேரம் காக்க வைத்த பின் அங்கே மணல் லாரி ஒன்று வந்தது. சோதனை சாவடியில் காவலர்கள் தலைகளைக் காணவும் அது நிக்காமல் செல்ல... அதை இரண்டு கிலோ மீட்டர் தொலைவு விரட்டி சென்று பிடித்தனர். அதிலிருந்த மணலுக்குக் கீழ் பதுக்கி வைக்கப்பட்டிருந்த கோவில் சிலைகளைப் பார்த்தும் அனைவரும் திகைத்து போயினர். அத்தனையும் கோடிக்கணக்கில் மதிப்புடையது.

"இப்போ உங்க எல்லோருக்கும் புரிஞ்சியிருக்கும்... நான் ஏன் உங்களை எல்லாம் வர சொன்னேன்னு... இதை நான் தனியே பிடிச்சியிருந்தா... அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்த விசயத்தை வெளிவராம செய்திடுவாங்க... அதனால தான் இந்த விசயத்தை உங்க பார்வைக்குக் கொண்டு வந்தேன்... உங்க பேனாவின் முனை மட்டும் கூர்மை இல்ல... உங்க எழுத்துக்களும் கூர்மை வாய்ந்தது தான்... நீங்க இதை மக்கள் பார்வைக்குக் கொண்டு சென்றாலே போதும்... அடுத்தக் கட்ட வேலைகள் மளமளவென நடந்துவிடும்... உண்மையான குற்றவாளிகளை விரைவில் கைது செய்வோம்..." என்று திவாகர் கூற... அத்தனை பத்திரிக்கையாளர்களும் அவரைப் புகைப்படம் எடுத்து கொண்டனர்.

"விவேக்... சிலைகளை நல்லா கவர் பண்ணி எடு..." நாகா சொல்லவும்... விவேக் அந்தச் சிலைகளைப் பரிதாபமாய்ப் பார்த்தான்.

அவன் மனக்கண்ணில் சிமி நீச்சல் உடையில் ஸ்லோமோசனில் பின்னோக்கி ஓடி கொண்டிருந்தாள். அவனையும் அறியாமல் அவனிடமிருந்து பெருமூச்சு கிளம்பியது. பின் கடமை அவனை அழைக்கத் தன் வேலையில் மூழ்கி போனான்.

"சார்... நாங்க கிளம்பறோம்..." என்ற நாகாவை கண்டு பல்லை கடித்த திவாகர்...

"இங்கே தான் யாரும் இல்லையே... அப்புறம் என்ன சார்...?"

திவாகரின் கடுப்பை உணர்ந்த நாகா... அடுத்த நொடி, "மாப்பிள்ளை..." என்று கட்டிப்பிடித்துக் கொள்ள... விவேக் 'ஆஹா... ஆரம்பிச்சிட்டாங்கய்யா... ஆரம்பிச்சிட்டாங்க...' மனதில் புலம்ப ஆரம்பித்தான்.

**********************************

மாலையில் வீடு திரும்பிய நாகாவுக்குப் பொழுது போகாமலிருக்க மேலே மொட்டை மாடிக்குச் சென்றான். கொஞ்ச நேரம் காற்றில் உலாவியது போலாச்சு... நாளைய வேலையைப் பற்றிச் சிந்தித்தது போலவுமாச்சு... என்று தான் அவன் மாடிக்கு வந்தது. கொஞ்ச நேரம் அவன் நடந்து கொண்டிருக்கும் போது,

"ஹாய் நாகா சார்..." சனாவின் குரல் கேட்டதும் திரும்பி பார்த்தான்.

சனாவை கண்டதும் அவன் முகம் மாறியது. அவன் மீதான அவளின் அதிகப்படியான ஆர்வத்தை அவன் அறிந்தே இருந்தான். அது அவனுக்கு அவ்வளவாய் பிடித்தம் கிடையாது தான். இருந்தாலும் அதைப் பற்றிப் பேசி அவள் மனதை நோக செய்வதில் அவனுக்கு விருப்பமும் இல்லை.

"ஹாய்..." என்றவன் அவள் கையிலிருந்த புத்தகத்தைக் கண்டுவிட்டு,

"படிக்க வந்தியா...?" அவள் ஆம் என்பது போல் தலையசைக்க...

"சரி நீ படி சானா... நான் கீழே போகிறேன்..." அவன் அப்படிச் சொன்னதும் அவள் முகம் வாடி போனது. கீழே செல்வதற்காகத் திரும்பியவன் கண்ணில் தேவி விழ... அவன் இதழில் விசம புன்னகை வந்தமர்ந்தது. வேண்டுமென்றே சனாவின் பக்கம் திரும்பியவன்,

"அப்புறம் சனா..." என்று பேச்சை ஆரம்பிக்க... அதில் சனாவின் முகம் மலர்ந்தது என்றால்... தேவியின் முகம் கடுகடுத்தது.

'இவனை விடப் பத்து வயது குறைவான சின்னப்பெண் சனா... அவளைக் கூட விட்டு வைக்க மாட்டானா... ஏதோ பொண்ணு கிடைத்தால் போதும் உடனே ஜொள்ளு விட்டுட்டு பேச வந்திர வேண்டியது...' மனதில் அவனை அர்சித்தபடி... அங்கே வந்தவள்...

"சனா..." என்று கூப்பிட... அதைக் கேட்டு இருவரும் திரும்பி பார்க்க... 'இவன் பேரா சனா... திரும்பி பார்க்கிறதை பாரு...' மனதுக்குள் அவனை வைதபடி...

"உங்கம்மா கூப்பிட்டாங்க... நீ போ..."

"அப்படியா... எதுக்குக்கா..."

"தெரியல..."

"சரிக்கா நான் போறேன்... சார் நான் வர்றேன்..." சனா கீழேயிறங்கி செல்ல... தேவி தன் கையிலிருந்த வாளியில் இருந்து துவைத்த போர்வையை எடுத்து அங்கிருந்த கொடியில் காயப் போட்டாள்.

"சனா என் கிட்ட பேசுறது பிடிக்காம தானே... அவ அம்மா கூப்பிட்டதா... நீ பொய் சொன்ன...?" காதுக்கருகில் திடுமென ஒலித்த குரலில் திடுக்கிட்டவள் அதிர்ந்து போய்த் திரும்பி பார்த்தாள். அவளுக்கு மிக அருகில் நின்றிருந்த நாகாவை அச்சத்துடன் அவள் பார்த்தாள்.

இருள் கவிழ்ந்து வரும் அந்த அந்தி மாலை வேளையில் அழகோவியமாய் நின்றிருந்தவள் அழகு அவனின் மனதை சலனப்படுத்துவதாய்... அவள் தன்னை அடித்தது கூட அவன் மறந்துவிட்டான். தான் ஆண்... அவள் பெண் என்றெண்ணம் மட்டும் அவன் மனதை வியாப்பித்திருக்க... அவன் விழிகள் ரசனையுடன் அவளைத் தழுவியது. ஏனோ அவளைச் சீண்டி பார்க்க அவனின் ஆசை கொண்ட மனம் விழைந்தது.

"என்ன என் கிட்டயிருந்து சனாவை காப்பாத்திட்டன்னு நினைப்பா...? அப்படி எத்தனை நாளைக்குக் காப்பாத்துறன்னு நானும் பார்க்கிறேன்...?" சவால் விட்டவனைப் பயத்துடன் விழியகல பார்த்தவள் வேகமாய் அங்கிருந்து ஓடி விட்டாள்.

"ஏங்க துணி காயப் போடலையா...? பக்கெட் வேணாமா...?" அவனின் எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லாமல் போனவளை கண்டு அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

மறுநாள் விடியல் பரபரப்பாய் விடிந்தது... தெருமுனை நாயர் கடை முதல் காபி கஃபே வரை நாகா எழுதிய மருத்துவ ஊழல் தான் பேசப்பட்டது. மொத்தத்தில் தமிழ்நாட்டில் பெரும் பரபரப்பை கிளப்பியது என்றால் மிகையில்லை.

அதே நேரம் அந்தச் செய்தி பிரகாஷின் கண்களில் விழுந்து அவனின் கோபத்தை அதிகப்படுத்தியது. அவன் அந்தப் பத்திரிக்கையை ஆத்திரத்துடன் கிழித்துத் தூரயெறிந்தான்.

"நாகா..." அவனின் உதடுகள் வன்மத்துடன் நாகாவின் பெயரை உச்சரித்தது.

சதி தொடரும்...!!!

தமிழ் நாவல்

எரிச்சலுடன் அமர்ந்திருந்த பிரகாஷின் முன் மற்றொரு திராவிடர் காவலன் பத்திரிக்கை நீண்டது. ‘ம்ப்ச்’ இயலாமையும், கோபமும் போட்டி போட அதையும் ஆத்திரத்துடன் கிழித்தெறிய எண்ணி அவன் அதைக் கைப்பற்ற வர... அதை அவன் கைக்கெட்டாத வண்ணம் தள்ளி பிடித்துக் கொண்டார் அவனின் தந்தை ஜனார்த்தனன்.

"இப்போ எதுக்குடா இவ்வளவு கோபம்...?" தன்னுடைய கோபத்திற்கான காரணம் அறிந்தும் தன்னைப் பார்த்துக் கேள்வி கேட்ட தந்தையைக் கொலைவெறியுடன் பார்த்தான்.

"ஏன்... எதுக்குன்னு... உங்களுக்குத் தெரியாது...?" அடிக்குரலில் உறுமியவனின் துவேசம் கண்டு அவர் யோசனையாய் பார்த்தார்.

"அந்த நாகாவை... பேசாம அவனை ஆள் வச்சு போட்டு தள்ளிரட்டுமாப்பா..." பல்லை கடித்தான் அவன்.

"உன்னால முடிஞ்சா செஞ்சு பாரு..." அசால்ட்டாய் சொன்னவர் அங்கிருந்த சோபாவில் அமர்ந்து செய்தித்தாளை பிரித்தார்.

"அப்பா... அப்போ என்னால முடியாதுன்னு சொல்றீங்களா...?" கோபம் கொப்பளிக்க அவன் கேட்டான்.

"நிச்சயமா உன்னால முடியாது பிரகாஷ்... நாகா மேல கையை வைக்க ஆனானப்பட்ட பெரியாளுங்களே யோசிக்கிறப்போ... நீ என்ன பெருசா கிழிச்சிற போற... அதிலயும் அந்த நாகாவுக்குத் தற்காப்புக் கலைகள் அத்தனையும் அத்துப்பிடி... ஒருத்தன் ஆபத்தான காரியங்களில் ஈடுபடும் போதே அவன் எந்தளவுக்குத் தயாரா இருப்பான்னு... நாம தான் புரிஞ்சிக்கணும்... இன்னமும் நீ நாகாவை புரிஞ்சிக்கல... நீ அவனைப் பழிவாங்குறேன்னு கிளம்பாம... அவனை மாதிரி எப்போ

மாறப் போறன்னு யோசி... ம்... எனக்கு அந்த நாகாவை போல் ஒரு மகனும் இல்லை... அவனைப் போல் வேலை செய்வனும் இல்லை... எல்லாம் நான் வாங்கி வந்த வரம் அப்படி..." சலிப்புடன் சொன்னார் அவர்.

ஜனார்த்தனனும் பத்திரிக்கை தொழில் தான் உள்ளார். சேஷாத்திரி போல் பரம்பரையாய் இந்தத் தொழிலில் ஈடுபடாமல் அவர் தான் முதன்முறையாய் இந்தத் தொழிலில் காலடியெடுத்து வைத்தார். அவர் நடத்தும் "நம் தேசம்" நாளிழதலுக்கும் "திராவிடர் காவலன்" நாளிதழுக்கும் பெரும் போட்டி உண்டு. அது தொழிலில் மட்டும் இருந்த ஆரோக்கியப் போட்டியாகத் தான் இருந்தது. குடும்பமளவில் இரு குடும்பங்களும் நெருங்கிய நட்புடன் தான் பழகி வந்தனர். பஞ்சாபகேசனின் அறிவுரை ஜனார்த்தனனுக்கு இன்றும் தேவை.

இரு குடும்பங்களின் நட்புக்கிடையில் விரிசலை உண்டாக்கியது நாகாவின் வரவு. ஜனார்த்தனன் என்னமோ இதைச் சாதாரணமாகத் தான் எடுத்துக் கொண்டார். ஆனால் பிரகாஷால் அப்படிச் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியவில்லை. நாகாவால் தான் திராவிடர் காவலன் பத்திரிக்கையின் விற்பனை அதிகரிப்பதாக அவன் எண்ணம். நாகா இருக்கும் வரை அவர்களை ஒன்றும் செய்ய முடியாது என்று அவன் மனதில் உறுதியாய் தோன்றிப் போனது. அதில் நாகாவின் மேல் அவனின் வன்மம் ஏறிக் கொண்டே போனது.

"ஏன் இல்லை... நான் இல்லையா உங்களுக்கு...?" என்றவனைத் துச்சமாய்ப் பார்த்தவர்,

"உயிருக்கு ஆபத்துன்னு தெரிஞ்சும் தைரியாம இந்த மாதிரி காரியங்களில் அவன் இறங்கிற மாதிரி நீ இறங்குவியா...?" அவர் கேட்டதற்கு அவனால் பதில் சொல்ல முடியவில்லை. தலையைக் குனிந்து கொண்டான்.

"உன்னால பேச முடியாது பிரகாஷ்... அதுக்கெல்லாம் தில் வேணும்... அவனைப் பார்த்துப் பொறாமை படாம... அவன் மாதிரியாக முயற்சியாவது பண்ணு... பொறாமை

தமிழ் நாவல்

பொல்லாத நோய்..." மகனுக்கு அறிவுரை கூறும் போதே அவரின் மனைவி... பிரகாஷின் அன்னை கோமளம் காபி தம்ளருடன் அங்கே வந்தார். கோமளம் நீட்டிய காபியை வாங்கிக் கொண்டே,

"கோமளா... உன் பையனுக்குக் காபி கொடு..." என்றார் அவர்.

"இப்பத்தானே கொடுத்தேன்..." கோமளம் புரியாமல் அப்பாவையும், மகனையும் பார்த்தார்.

"ரொம்ப டயர்டா பீல் பண்றான்னு சொன்னேன்... சொன்னதைச் செய் கோமளா..." மனைவி உள்ளே சென்றதும் மகனை பார்த்து,

"பொங்கல் வர போகுதே... பாரதிக்கு பொங்கல் சீர் அனுப்ப சொன்னேனே அனுப்பிட்டியா...?"

"ரெண்டு நாள் முன்னாடி அனுப்பிட்டேன்ப்பா... முடிஞ்சா இங்கே வந்திட்டுப் போகச் சொன்னேன்..." என்ற மகனை பெருமையாய் பார்த்தார்.

"நீ ஒரு நல்ல அண்ணன் பிரகாஷ்..." முகத்தில் பெருமை பொங்க அவனின் தோளில் தட்டினார். அதைக் கண்டு அவன் உள்ளம் குளிர்ந்தது. சற்று முன் நாகாவால் எழுந்த மனஸ்தாபம் கூட மறைந்துவிட்டது.

"அப்புறம் சின்னக் குட்டியை பொங்கலுக்காவது வீட்டுப் பக்கம் வந்துட்டுப் போகச் சொல்லு... வேலைக்குப் போனதிலிருந்து ஆளை கண்ணில் பார்க்க முடியல..." முகத்தில் கனிவுடன் அவர் கூற... அவனுக்கும் அந்தச் சின்னக் குட்டி வைஷ்ணவி நினைத்து இதழில் புன்னகை வந்தது.

"இப்பவே ஃபோன் பண்ணி சொல்றேன்ப்பா..." என்றவன் அலைப்பேசியில் வைஷ்ணவியை அழைத்தான்.

அவள் அழைப்பில் இணைந்ததும் அப்பாவிடம் கொடுக்க அவர் உற்சாகமாய் அவளிடம் பேச துவங்கினார். கோமளம்

அங்கே வர அவரும் பேச... மீண்டும் பிரகாஷின் கையில் அலைப்பேசி வர அரைமணி நேரமானது.

"வைஷூ... சொல்லும்மா... எப்படியிருக்க...?" என்று பேசி கொண்டே பெற்றோர் காது கேட்காத தொலைவுக்கு வந்ததும்...

"வைஷூ... நாம போட்ட திட்டப்படி எல்லாம் சரியா தானே போய்ட்டு இருக்கு..." என்றான் தீவிரமான குரலில்.

மறுபுறம் பதில் வந்ததும், "நீ நினைச்சதை சாதிப்பேன்னு எனக்கு நல்லா தெரியும்மா... நாம நினைச்சது மட்டும் நடந்தது... அந்த நாகாவோட நிருபர் வாழ்க்கைக்கு ஒரு முடிவு கட்டிறலாம்..." என்றவனின் வார்த்தையில் இருந்தது வன்மம்... வன்மம்... வன்மம் மட்டுமே....

*****************

"கண்ணு..." வேலாயி பாட்டியின் குரலில் நின்ற தேவி சுற்றும் முற்றும் பார்த்தாள். அவருடைய அறையிலிருந்து வந்தவர்,

"இந்தா... இந்தப் பூவை வச்சுக்கோம்மா..." தன் கையால் தொடுத்த பூவை அவளிடம் கொடுக்க... அதை ஆர்வமாய் அவள் வாங்கிக் கொண்டாள்.

"தேங்க்ஸ் பாட்டி..." என்றபடி அவள் பூவை தலையில் வைக்கும் போது... எங்கிருந்து தான் மூக்கு வியர்க்குமோ சரியாக நாகா அங்கே வந்து சேர்ந்தான்.

"என்ன ஆயா... காலையில் பூ வியாபாரம் எல்லாம் பண்றீங்க போலிருக்கு...?" தேவியைச் சோம்பலாய் பார்த்துக் கொண்டே கேட்டான்.

"அய்ய... நானாவது பூ வியாபாரம் பண்றதாவது... சும்மா கீழே விழற பூவை கண்ணுக்காகக் கட்டி கொடுத்தேன்... சரி ராசா எனக்கு வேலையிருக்கு... நான் போறேன்..." அவர் கிளம்ப...

அதைத் தொடர்ந்து தேவியும் நகர்ந்தாள். அவள் திரும்பிய வேகத்தில் அவள் தலையிலிருந்த பூ நாகாவின் நாசியைத் தீண்டி சென்றது.

"ஹப்பா... என்ன ஸ்மெல்..." மூச்சை இழுத்து ரசித்துச் சொன்னவனின் பேச்சில் என்னவென்று அவள் திரும்பி பார்க்க...

"நான் பூவை சொன்னேன்..."

நமட்டு சிரிப்புடன் சொன்னவனை அவளால் முறைத்து மட்டுமே பார்க்க முடிந்தது. பின்பு விறுவிறுவென நடந்து சென்றாள். அவள் நடக்கும் போது அதற்கேற்ப நர்த்தனம் ஆடிய அவளின் பின்னல் போல் அவனின் மனமும் அவள் நினைவுகளில் ஊஞ்சலாடியது.

அவள் மீதான தன் நேசம் நாளுக்கு நாள் அதிகரிப்பது போல் தோன்றியது. ஆம்... நேசமே தான்... நேற்று மாலையில் கண்ட அவளின் அழகு முகம் அவனின் இரவு தூக்கத்தைக் கெடுத்து... அவனின் நிம்மதியை கெடுத்தது. அந்த நேரமே அவள் தன்னருகில் வேண்டும் போல் தாபம் எழ... அதில் அவன் சற்று அதிர்ந்து தான் போனான்...

'என்ன இது... சின்னப் பையன் மாதிரி...? டேய் நாகா அடங்குடா...' தனக்குத் தானே சொல்லி கொண்டவன் மனம் அவனுக்கு அடங்குவதாய் இல்லை. பின்பு மனம் போக்கில் செல்ல துவங்கினான்... அது அவனுக்குச் சந்தோசமாகத் தான் இருந்தது. எந்தப் புள்ளியில் அவள் மீதான ஈர்ப்புத் துவங்கியது என்று அவனுக்கு நிச்சயமாய்த் தெரியவில்லை.

அந்த ஈர்ப்பு காதல் தான் என்பதில் அவனுக்குச் சிறிதும் ஐயமில்லை. தன்னைப் பற்றித் தெரியாமல் முதன் சந்திப்பிலேயே தன்னை அடித்த பெண் மீது காதல் வருமோ... அது தகுமோ என்ற எண்ணம் ஒரு பக்கம் ஓடும் போதே... ஏன் வந்தால் என்ன தவறு? என்ற எண்ணமும் மறுபக்கம் ஓடியது. அடிக்கிற கை தான் அணைக்கும் என்று சும்மாவா சொல்லியிருக்கிறார்கள்.

'அடித்த அவளது கை அணைத்தால் எப்படியிருக்கும்...?' என்று நினைத்தவனுக்கு அந்த நினைவே தித்திப்பாயிருந்தது. மோதலுக்குப் பின் காதல் என்று மனதில் நினைத்தவன்... அன்றைய இரவு தூக்கத்தைத் தேவிக்குக் காணிக்கை செலுத்தினான்.

"தேவி... ஐ லவ் யூ..." முணுமுணுத்தவனுக்கு அதை அவளிடம் சொன்னதைப் போல் பரவசமாயிருந்தது.

வெளியில் வந்தவன் தன் இருசக்கர வாகனத்தை நோக்கி நடக்கும் போது அவனின் அலைப்பேசி அலைத்தது. ஏதோ தெரியாத எண்... அவனின் தொழிலில் அந்த மாதிரி அழைப்புகள் சகஜம்... அதனால் அதை உயிர்ப்பித்துக் காதில் வைத்தான்.

"நாகா... ஆழம் தெரியாமல் காலை விடற..."

எடுத்த எடுப்பில் அதிகாரமாய் ஒலித்த கட்டை குரலிலேயே அவனுக்குப் புரிந்து போனது... மருத்துவமனை ஊழலில் சம்பந்தப்பட்ட அரசியல்வாதியின் அல்லக்கைகளில் யாரோ ஒருவன் என்று...

"அப்படிங்களா அண்ணா... எவ்வளவு ஆழமிருக்கும்ன்னு கொஞ்சம் சொல்றீங்களா...?" என்றவனின் வார்த்தைகளிலிருந்த நக்கல் எதிராளியை பல்லை கடிக்க வைத்தது.

"திமிர்... உடம்பு முழுக்கத் திமிர்... என்ன தெனாவெட்டா...?"

"ஆமாண்டா... திமிர் தான்... தெனாவெட்டு தான்... பேரை சொல்லாம, யார் எவர்ன்னு சொல்லாம மொட்டை ஃகால் பேசுற உனக்கே இவ்வளவு திமிர்ன்னா... எனக்கு அதை விடத் திமிர் அதிகமா தான் இருக்கு..."

"டேய் நாகா... போன தடவையும் எங்க தலைவரை தான் வம்பிழுத்த... இந்தத் தடவையும் எங்க தலைவரை தான் வம்பிழுத்திருக்கிற... அநாவசியமா எங்க தலைவர் விசயத்தில் தலையிடாதே... அப்படி மீறி தலையிட்ட.. இந்த மாதிரி பேசிட்டு இருக்க மாட்டோம்..."

"எங்க தலைவர்... எங்க தலைவர்ன்னு சொல்றீயே பரதேசி... உன் தலைவர் யார்டா... தைரியமிருந்தா பேரை சொல்லுடா..."

"எங்க தலைவரு யாருன்னு தெரியாது உனக்கு... அவரு பேரை சொன்னாலே டெல்லியே அலறும்டா..." என்றவன் பெருமையாய் தன் தலைவர் பெயரை சொல்ல...

"அவரோடதா இதெல்லாம்... நான் கூட இதையெல்லாம் குறிப்பிட்டு சொல்லாம மொட்டையா தான் எழுதினேன்... ஆனா நீங்களே வலிய வந்து உங்க தலைவருக்கு எதிரா வாக்குமூலம் கொடுத்திட்டீங்களே அண்ணா... ச்சு.. ச்சு... வெரி சேட்..." போலியாய் பரிதாபப்பட்டவனின் வார்த்தையில் கொலைவெறியானான் அந்த அடிப்பொடி அல்லக்கை.

"டேய் என்னடா சொல்ற...?" பதறியது அவனது குரல்.

"ம்... சோத்துக்கு உப்பில்லைன்னு சொல்றேன்... லூசுப்பயலே நீ பேசியது எல்லாம் ரெக்கார்ட் பண்ணிட்டேன்டா... இதை நான் எல்லா டிவி சேனலுக்கும் கொடுத்தேன்னு வை... உன் தலைவர் பதவி ஸ்வாகா... ஆனா அதுக்கு நான் காரணமில்லைப்பா... அவரோட விசுவாசி நீ தான் காரணம்..." நாகா கூறியதை கேட்டு அவனுக்குப் பயத்தில் வியர்த்து வழிந்தது. ஆனாலும் அதை வெளிக்காட்டி கொள்ளமல்,

"டேய் அது வரைக்கும் நீ உயிரோட இருந்தா தானே...?" அவன் எக்காளமாய்ச் சிரிக்க...

"டேய் அடங்குடா பன்னாடை... நீயே இவ்வளவு யோசிக்கும் போது... நான் யோசிக்காம இருப்பேனா... இப்போ என்னை நீ போட்டு தள்ளினா உன் தலைவன் தான் என்னைப் போட்டான்னு... தமிழ்நாட்டிலுள்ள பச்சை குழந்தைக்குக் கூடத் தெரியும். அதுக்கப்புறம் உன் தலைவனுக்கு எதிரா எல்லாப் போராட்டமும் நடக்கும். ஊழலோட கொலைப்பழியும் விழுந்து உன் தலைவன் ஜெயில்ல போய்க் களி திங்க வேண்டியது தான்..." அதுவரை

கிண்டலுடன் பேசி கொண்டிருந்த நாகாவின் குரல் தீவிரத்துக்கு மாறியது.

"இந்தத் தொழிலுக்கு வரும் போதே உயிர் பயம் இல்லாம தான் வந்தேன்... நீ பயம் காட்டினா பயப்பட நான் என்ன சின்னப்பிள்ளையா...? நாகாடா... தைரியமான ஆம்பிளையாயிருந்தா நேருக்கு நேர் மோதி பாரு... இப்படி முகம் காட்டாம பயந்துட்டு பேசாம நேரே வா... நீயா நானான்னு பார்க்கலாம்..." நாகாவின் ஆக்ரோசத்தில் அவன் அலைப்பேசியை அணைத்துவிட்டான்.

"ராஸ்கல் யாருக்கிட்ட...?" அவனின் மீதிருந்த கோபத்தை நாகா தன் வண்டியின் மீது காட்ட... அது ஒரே உதையில் சமத்தாய் கிளம்பியது.

தேவி பள்ளிக்கு நுழைந்தது முதல் அவள் காதில் அதிகம் விழுந்த பெயர் நாகா. அவனின் வீர தீர செயல்களை எல்லோரும் பாராட்டி பேச அவளுக்குள் ஒரு குறுகுறுப்பு... அப்படி அவன் என்ன தான் எழுதியிருக்கிறான் என்று... ஓய்வு நேரம் கிடைத்த நேரத்தில் அவள் பள்ளி வளாகத்திலிருந்த நூலகத்துக்குச் சென்று திராவிடர் காவலன் பத்திரிக்கையை எடுத்து வாசித்தாள்.

நாகா அளித்திருந்த செய்தியை படித்தவளுக்கு அவனின் துணிச்சல், வீரம், தைரியம் எல்லாம் பிரமிப்பை ஏற்படுத்துவதாய்... அவன் எழுதிய கட்டுரையின் மீது தனி ஈர்ப்பு தோன்றிவிட... பழைய நாளிதழல்களைத் தேடி பிடித்துப் படித்துப் பார்த்தவள் மனதில் அவனைப் பற்றிய எண்ணங்கள் நல்விதையாய் விழுந்தது.

'ஹி இஸ் க்ரேட்...' நினைத்தவள் மனதில் அவனின் முகம் மின்னி மறைந்தது.

********************

"அண்ணா... எவ்வளவு விலைன்னாலும் பரவாயில்லை... எனக்கு இந்தப் பில்டிங் தான் வேணுங்கண்ணா..."

அந்த இடைத்தரகரிடம் பேசி கொண்டிருந்த நாகாவின் தோற்றமே மாறியிருந்தது. பட்டிக்காட்டு மைனர் தோற்றத்தில் இருந்தவனைச் சத்தியமாய் யாராலும் அடையாளம் காண முடியாது.

"உனக்கு இல்லாததா தம்பி... கட்டாயம் உனக்கே பேசி முடிச்சு தர்றேன்... அதுக்குக் கொஞ்சம் செலவாகுமே..." ஈயெனப் பல்லை இளித்தவன் தலையைச் சொரிந்தான். அவனின் கையில் ஒரு ஐயாயிரம் ரூபாயை வைத்தவன்,

"இப்போ இதை வச்சுக்கோங்க... டீல் முடிஞ்சதும் செமத்தியா கவனிக்கிறேன்..." என்ற நாகாவின் 'செமத்தியா'வுக்கு அர்த்தம் தெரியாதவனாய் சிரித்த அந்தத் தரகர் நாகாவிடம் விடைப்பெற்று செல்ல... அவன் போவதை கண்ட நாகாவின் இதழில் விசம புன்னகை பூத்தது.

நாகா சுட்டி காட்டிய கட்டிடம் அரசாங்கத்துக்குச் சொந்தமானது. இந்த மாதிரி தங்களுக்குச் சொந்தமில்லாத ஒன்றுக்கு போலி பத்திரம் தயார் செய்து ஏமாந்த இளித்தவாயன் தலையில் கட்டுவதைத் தங்கள் பிழைப்பாய் வைத்துக் கொண்டு ஒரு கும்பல் வலம் வருவதை அறிந்தவன் அதன் ரிஷிமூலத்தை அறிய இப்படிப் பட்டிக்காட்டு மைனர் வேடத்தில் வந்தான். அவன் யாரென்று தெரியாமல் அவன் விரித்த வலையில் வலிய ஒரு நரி வந்து சிக்கியுள்ளது... அதை வைத்து நரிக்கூடத்தைப் பிடிக்க அவன் முனைந்தான். இதையறியாத தரகரோ பணம் கிடைத்த சந்தோசத்தில் சென்றுவிட்டான்.

மாலையில் வீட்டிற்குத் திரும்பிய நாகா வழியில் தேவியைச் சந்தித்தான். அவளைக் கண்டதும் அவனின் கண்கள் மின்னியது. அவளிடம் பேச விழைந்த மனதின் விளைவால் அவள் புறம் அவன் ஒரு எட்டு எடுத்து வைக்க... என்னே ஆச்சரியம்... அவளே அவனை நோக்கி வந்தாள். அதைக் கண்டதும் அவன் கண்கள் ஒளிர அவளைப் பார்த்தவாறு அங்கேயே நின்றுவிட்டான். அவனருகில் வந்தவள்,

"சாரி... நான் உங்களைத் தப்பா நினைச்சு அடிச்சிட்டேன்..." அவன் முகம் பார்க்க வெட்கப்பட்டுக் கொண்டு தலை குனிந்தபடி அவள் சொல்ல...

"எந்த நியூஸ் சேனல்ல சொன்னாங்க...?" சம்பந்தமில்லாமல் பேசியவனை அவள் குழப்பத்துடன் நிமிர்ந்து பார்க்க...

"இல்ல... நான் நல்லவன்னு எந்தச் சேனல்ல சொன்னாங்கன்னு கேட்டேன்..." அவன் தன்னைக் கிண்டலடிப்பதை உணர்ந்தவள் முகம் கூம்பி போனது.

"இன்னைக்குத் தான் உங்களைப் பத்தி, உங்க ஆர்ட்டிக்கிள் பத்தி தெரிஞ்சுக்கிட்டேன்..."

"ஓ..." என்றவன் தாடையைத் தடவி கொண்டே...

"அதை வச்செல்லாம் நான் நல்லவன் முடிவு பண்ணிடாத... அதுவும் எந்த ஆம்பிளையும் தன் காதலியிடத்தில், மனைவியிடத்தில் நல்லவனாய் இருக்க முடியாது தேவி..." என்றவனின் புதிரான பேச்சிற்கு விடை தெரியாமல் விழித்தவள் அருகில் மேலும் நெருங்கி வந்தவன்,

"இதை நான் ஏன் உன்னிடத்தில் சொல்றேன்னா... உன்னிடம் என்னால் நல்லவன் வேசம் போட முடியாது..."

அவன் பேசியது முதலில் புரியாமல் குழம்பியவள்... பின் புரிந்ததும் முகம் அந்திவானமாய்ச் சிவக்க... அவனை ஏறெடுத்து பார்க்க முடியாமல் அவள் வேகமாய் அங்கிருந்து ஓட...

"தேவி பதில் சொல்லிட்டு போ... ஏய் நில்லு..." அவனின் வார்த்தைகள் காற்றோடு கரைந்தது. அவளைப் பார்த்து கொண்டிருந்தவன் மனம் லேசாயிருந்தது.

வீட்டிற்கு வந்தவன் குளித்துவிட்டு வந்து தன் மடிகணினியை உயிர்பித்தான். தனக்கு வந்திருந்த மெயில்களைப் பார்வையிட தொடங்கியவன் வரிசையாய் பார்த்துக் கொண்டு வரும் போது... வைஷ்ணவி என்ற

பெயரில் வந்திருந்த மெயிலை திறந்தான். அவனின் வீர தீர செயல்களைப் பாராட்டி... அவனைச் சூப்பர் ஹீரோ போல் புகழ்ந்து எழுதியிருந்தது. இடைச்சொருகலாக "வாழ்த்துக்கள்" என்ற வாழ்த்து அட்டை வேறு...

"க்ரேசி கேர்ள்..." வாய்விட்டு சொல்லியவன்... நன்றி என்ற ஒற்றை வார்த்தையில் பதில் அனுப்பிவிட்டு... வாய் கொள்ளா சிரிப்புடன் அடுத்த மெயிலை பிரித்தான்.

வைஷ்ணவி என்ற பெயர் அவனை எந்தளவுக்கு நிம்மதியில்லாமல் செய்யப் போகிறது என்பது அவனுக்கு அப்போது தெரியவில்லை. தெரியும் போது இந்தச் சிரிப்பு அவன் முகத்தில் நிலைத்திருக்குமோ...???

சதி தொடரும்...!!!

"அஜூ... எப்படிடா இருக்க...? இந்த அம்மாவை வந்து பார்க்கணும்ன்னு உனக்குத் தோணவே இல்லையா?" தாயின் பாச குரலில் பதில் பேச தெரியாது சிறிது நேரம் மௌனம் காத்தான் அர்ஜூன்.

சேஷாத்திரி - துர்கா இவர்களின் ஒரே மகன் தான் அர்ஜூன். சுமார் இருபது வருடங்களுக்கு முன் சேஷாத்திரியை பழிவாங்குவதற்காக அவரால் பாதிக்கப்பட்ட ரௌடி ஒருவன் ஐந்து வயதான அர்ஜூனை கடத்தி கொண்டு போய் அவரை மிரட்ட... எப்படியோ பெரும் பாடுபட்டு அவனைக் காப்பாற்றியவர்...

அதன் பின் அமெரிக்காவில் இருக்கும் தன் தங்கை ரமாவிடம் அவனைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளச் சொல்லி ஒப்படைத்தார். ஐந்து வயதான அர்ஜூன் தாயை விட்டுப் பிரிந்திருக்க மாட்டேன் என்று அழ... துர்காவும் மகனை பிரிந்திருக்க முடியாது என்று அழ... இடையில் பஞ்சாபிகேசன் தலையிட்டு,

"சேஷூ ஏண்டா தாயையும் மகனையும் பிரிக்கிற... பாவம்டா குழந்தை..." தந்தை சொன்னதைச் சேஷாத்திரி காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை.

"அப்பா... எனக்கிருக்கிறது ஒரே பையன்... அவனை இழக்க நான் விரும்பல..." என்று கூறி தகப்பனாரின் வாயை அடைத்துவிட்டார். அவர் சொல்வது போல் துர்காவிற்குக் கர்ப்பப்பையில் பிரச்சினை ஏற்பட்டு அதை நீக்கிவிட அர்ஜூன் ஒரே குழந்தையாய் நின்றுவிட்டான்.

ஐந்து வயதில் அமெரிக்கா சென்ற அர்ஜூன் ஆரம்பத்தில் தன் தந்தையை அறவே வெறுத்தான். பின்பு வயது ஏற ஏற தந்தையின் பக்கமிருந்த நியாயம் புரிய... தனக்காகத் தானே அவர் அப்படி நடந்து கொண்டார் என்பதும் புரிய அவனின் கோபம் குறைந்து இப்போது முற்றிலும் காணாமல் போனது. அதற்கு அவனின் அத்தை ரமாவும், மாமா வெங்கட்டும் தான் முக்கியக் காரணம். அவர்கள்

தான் அவனின் தந்தையைப் பற்றி அவனுக்கு எடுத்து சொல்லி வளர்த்தனர்.

அவனுக்கு அமெரிக்கா வாழ்வு பிடித்துவிட இன்னொரு முக்கியக் காரணி மீரா. அவன் அங்குப் போகும் போது அவள் ஒரு வயது குழந்தை. பார்க்க பார்பி பொம்மை போல் அழகாயிருந்த அவளைக் கண்டதும் அவனுக்குப் பிடித்துப் போய்விட்டது. 'பேபி... பேபி...' என அவள் பின்னால் சுற்றிக் கொண்டு திரிந்தான்.

வளர்ந்தும் அவர்களின் உறவு இன்றும் மாறாமல் அப்படியே தான் இருந்தது. அது காதலா இல்லை நட்பா என்று இன்று வரை இருவரும் வாய் திறக்கவில்லை. ஆனால் இருவரையும் திருமணப் பந்தத்தில் இணைத்து வைக்க வேண்டுமென்ற எண்ணம் இரு வீட்டு பெற்றோரின் மனதிலும் இருந்தது.

"அஜூ... லைன்ல இருக்கியாப்பா...?" துர்காவின் குரல் பதறி ஒலித்தது.

"ஹேய் ஸ்ல்க்கி... நோ... டென்சன் நான் கேட்டுட்டு தான் இருக்கேன்..." மகனின் பேச்சில் முகத்தைச் சுளித்தார் துர்கா.

"ஏண்டா... அது என்னடா ஸ்ல்க் அது இதுன்னு...? கர்மம்... கர்மம்... அம்மான்னு வாய் நிறையக் கூப்பிடுடா...?" ஆதங்கத்துடன் வந்தது அவரின் வார்த்தைகள்.

"என் பட்டு அம்மாவை நான் அப்படித்தான் கூப்பிடுவேன்... உனக்கென்ன வந்தது மிஸஸ். சேஷாத்திரி...?" அம்மாவை வம்பிழுத்தான் அவன்.

"அஜூ..." பல்லை கடித்தார் அவர். அவரின் கோபம் புரிந்து அவன்,

"அம்மா..." பாசத்துடன் என்றழைக்க...

"இப்போ தான் உனக்கு இந்த அம்மாவை கண்ணுக்கு தெரிந்ததா...? முதல்ல தான் படிப்பு படிப்புன்னு

அமெரிக்காவுல இருந்த... இப்போ இந்தியாவில் தானே இருக்க... ஒரு எட்டு அம்மாவை வந்து பார்த்திட்டுப் போகக் கூடாதாப்பா...?"

அம்மாவின் கோரிக்கை நியாயமானது தான்... ஆனாலும் நேரம் காலம் பார்க்காமல் தன்னை அழைக்கும் வேலைப்பளுவில் அவன் வீட்டை மறக்கத்தான் செய்கிறான்.

"அம்மா... உழைக்கிற வயசில் உழைச்சா தான்ம்மா உண்டு. இப்போ கொஞ்சம் பிஸிம்மா... சீக்கிரம் வர்றேன்..."

"அப்பாவுக்குத் தப்பாத பிள்ளை... ரெண்டு பேரும் என் பேச்சை கேட்கிறதே இல்லை... என்னமோ போங்க..."

"சரிம்மா... நான் ஃபோனை வைக்கவா...?"

"டேய் இருடா... அத்தை ஃபோன் பண்ணியிருந்தா..."

"என்னவாம்...?" என்றான் ஆர்வமாக...

"மீராவுக்கும் உனக்கும் எப்போ கல்யாணம் வச்சுக்கலாம்ன்னு கேட்டா... உன் சம்மதம் தெரியாமல் பேச கூடாதுன்னு நாங்க யாரும் எதுவும் பேசல... நீ என்ன சொல்ற அஜூ... உனக்கு விருப்பமா...?" ஆர்வமாய்க் கேட்டார். ஒரு நொடி மௌனம் காத்தவன்,

"அம்மா... முதல்ல நான் உங்க கூட வந்து செட்டிலாகிக்கிறேன்... அதுக்குப்புறம் என் கல்யாணத்தைப் பத்தி பேசி முடிவு எடுக்கலாம்... இத்தனை நாள் உங்களை எல்லாம் நான் பிரிஞ்சியிருந்தது போதும்... இனியாவது நான் உங்களோட இருக்கணும்... அதுக்கு அப்பாவோட சம்மதத்தை வாங்குங்க..."

"அதை நான் பார்த்திருக்கிறேன் அஜூ..." சந்தோசமாய் அவர் சொல்ல... அங்கே நிம்மதியுடன் அலைப்பேசியை அணைத்தான் அர்ஜீன்.

மகனிடம் பேசிய துர்கா நேரே கணவனிடம் தான் சென்றார். "என்னங்க... அஜூ கூடப் பேசினேன்..." என்றவரை

கூர்மையாகப் பார்த்தார் சேஷாத்திரி.

"என்ன சொன்னான்...?"

"அவனுக்கு நம்ம கூட வந்திருக்கணும்ன்னு ரொம்ப ஆசைங்க... பாவம் குழந்தை... இத்தனை நாள் தனியே இருந்திட்டான்... இனியும் அப்படி இருக்கணும்ன்னு அவசியமில்லையே... அவனே அவனைப் பார்த்துப்பான்ங்க... நம்ம மீராவை கல்யாணம் பண்ணிக்கிறியான்னு கேட்டதுக்கு... முதல்ல என்னை வீட்டுக்கு கூப்பிடுங்க... அதுக்கப்புறம் கல்யாணம் பேசலாம்ன்னு சொல்றான்... நம்ம கூடச் சேர்ந்திருக்கனும்ன்னு அவனுக்கு ரொம்ப ஆசையாயிருக்குங்க..." மனைவியின் பேச்சில் சிறிது நேரம் யோசித்தவர் பின்,

"நான் அவனை எப்போ வீட்டுக்கு வர வேணாம்ன்னு சொன்னேன்... ஏதோ சின்ன வயசுல அவனுக்கு ஆபத்து வந்திரும்ன்னு அவனை அமெரிக்கா அனுப்பி வைச்சேன் தான் இல்லைங்கல்ல... ஆனா அதேயே சாக்கா வைச்சிட்டு அவன் அங்கேயே இருந்தா நான் என்ன செய்ய...? இப்போ அவனை அவனே காப்பாத்திக்கிற அளவுக்குத் தைரியமிருக்கு... அப்போ இங்கே வர வேண்டியது தானே. ஆனா அவன் வரமாட்டான்... ஏன்னா இப்போ சுத்தற மாதிரி கோவில் மாடு மாதிரி ஊரை சுத்த முடியாது இல்லையா... அதான் வர மாட்டேங்கிறான்... இதுல என்னை வேற இழுத்து விடுறானா...?" கோபமாய்த் தன் மனதில் உள்ளதை கொட்டியவரை ஆதரவாய் பார்த்தார் துர்கா.

தாய் என்பவள் தன் பாசத்தைத் தக்காளி செடி போல் தளதளவென வெளியில் காட்டி விடுகிறாள். ஆனால் தந்தை என்பவன் உருளைக்கிழங்கு பூமிக்கடியில் புதையுண்டு இருப்பது போல் தன் பாசத்தை மனதுக்குள் புதைத்து வைத்துக் கொள்கிறான். சில நேரங்களில் ஆண்களைப் பார்க்கும் போது மிகவும் பரிதாபமாகத் தான் உள்ளது.

"அப்பவோட எழுப்பத்தைந்தாவது பிறந்தநாள் வருது... அப்போ அவனை வந்து பத்திரிக்கைக்கு இன்ஜார்ஜ் எடுத்திட்டு அப்படியே வீட்டுக்கும் வர சொல்லு..." என்றவரை கண்டு துர்காவுக்குச் சிரிப்பு வந்தது.

"ஏன் நீங்களே உங்க மகன் கிட்ட சொன்னா என்ன...?"

"அவன் நான் சொன்னா எதைத் தான் கேட்கிறான்... இதைக் கேட்கிறதுக்கு..."

"என்னங்க... மாமா பிறந்தநாளுக்கு இன்னும் மூணு மாசமிருக்கே..." துர்காவின் மனநிலை புரிந்தவராய்,

"அவன் குடும்பஸ்தனாகும் போது அவன் கையில் பொறுப்பு கொடுக்கணும்ன்னு நான் நினைக்கிறேன். அவன் மீராவை கல்யாணம் பண்ணும் போது சாதாரண வேலை செய்பவனா இருக்கக் கூடாது... நாலு பேருக்குச் சம்பளம் கொடுக்கும் முதலாளியா அவன் இருக்கணும்ன்னு நான் நினைக்கிறது தப்பா துர்கா...?" கணவனின் பேச்சில் மனம் நெகிழ்ந்தவராய்,

"நீங்க சொல்றது தப்பே இல்லைங்க... இவ்வளவு நாள் பொறுத்துகிட்டேன்... ஒரு மூணு மாசம் பொறுக்கமாட்டேனா என்ன..." ஆறுதல் கூறிய மனைவியை வாஞ்சையுடன் பார்த்தார் சேஷாத்திரி.

**************************

"தம்பி நாளைக்கே பத்திர பதிவை வச்சுக்கலாம்..." என்ற தரகரை பார்த்து நாகா,

"ரெஜிஸ்டர் ஆபிசுக்கு எத்தனை மணிக்கு வரணும்ங்கண்ணா...?" அதைக் கேட்டு அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

"தம்பி... இப்படி அறியா பிள்ளையாய் இருக்கீங்களே... அந்த இடத்தை விக்கிறவரு என்ன சாதாரண ஆளுன்னா நினைச்சீங்க... இந்தச் சிட்டியில் பெரிய ஆளு தம்பி... அவர் நினைச்சா ரெஜிஸ்டாரரர் என்ன... சுப்ரீம் கோர்ட் ஜட்ஜையே

வீட்டுக்கு வரவழைப்பாரு... அதனால நீ நாளைக்கு இந்த அட்ரெஸுக்கு பணத்தோட வந்திரு... மத்தத நான் பார்த்துக்கிறேன்..." என்றவன் முகவரி எழுதிய தாளை நாகாவிடம் கொடுத்தான்.

"ரொம்ப... ரொம்பத் தேங்க்ஸ்ங்கண்ணா..." குழைந்து கும்பிடு போட்ட நாகாவை அவனுக்கு மிகவும் பிடித்துப் போயிற்று.

"நமக்குள்ள தேங்க்ஸ் எல்லாம் எதுக்குத் தம்பி... ஏதோ நம்மளால முடிஞ்ச சேவையை இந்தச் சமூகத்துக்கு நான் செய்றேன்..." என்றவன் விடைப்பெற்று செல்ல...

'சேவையாடா செய்ற நாதாரி... அடுத்தவன் பணத்துல உட்கார்ந்து சாப்பிடற நீ சமூகச் சேவையைப் பத்தி பேசறயா... பேசு ராசா பேசு... இன்னைக்கு ஒரு நாள் தான்டி உனக்கு... நாளையிலிருந்து நீ பேசவே முடியாது...' மனதுக்குள் கருவிய நாகா அங்கிருந்து கிளம்பி சென்றான்.

மறுநாள் அவன் சொன்னது போல் அங்கே சென்ற நாகா அங்கே அமர்ந்திருந்த உண்மையான பத்திர பதிவாளரை கண்டு அதிர்ந்து தான் போனான். அவரும் இதற்கு உடந்தை என்பதை அறிந்தவனுக்குச் சற்று அதிர்ச்சியாக இருந்தது.

அந்நேரம் அவனிடம் கட்டிடத்தை விற்க வந்தவன் அங்கு வந்தான். அவனைக் கண்டதும் நாகாவுக்குப் புரிந்து போனது... அவன் மருத்துவமனை ஊழலில் சம்பந்தப்பட்ட இடைத்தரகர் என்று... இப்போது நாகாவுக்கு நன்கு புரிந்து போனது... இந்தக் காரியம் யாரின் தயவால் நடக்கிறது என்று...

"என்னப்பா தம்பி நீ தான் இடத்தை வாங்குறவனா... ரொம்ப ராசியான இடம் தம்பி... அதை வாங்கிற நேரம் நீ ஓகோன்னு எங்கேயோ போகப் போற..." அவன் பேசியதை கேட்டு நாகாவுக்குக் கோபமாய் வந்தது.

'ஓகோன்னு போகப் போறேன்னா... உண்மையில் உன் கிட்ட வாங்கினவங்க எல்லாம் இப்போ தெருக்கோடியில் நிக்கிறாங்களாமே... அதே மாதிரியா? இன்னும் கொஞ்ச நேரத்தில் உன்னை நான் தெருவில் நிறுத்தறேன்டா...' மனதில் கோபப்பட்டவன் சற்று நேரத்தில் அங்கு வர போகும் காவல்துறைக்காகக் காத்திருக்க ஆரம்பித்தான்.

"என்ன தம்பி ஆரம்பிக்கலாமா..." என்றவாறு அந்தத் தரகர் பத்திரத்தில் கையெழுத்து போட...

அடுத்து நாகா கையெழுத்து போடுவது போல் பாவ்லா செய்யும் போது அங்குக் காவல்துறை அதிரடியாய் உள்ளே நுழைந்தது. அங்கிருந்த அனைவரையும் கைது செய்து ஜீப்பில் ஏற்றியது.

"நாகா... ரொம்பத் தேங்க்ஸ்... இவங்களைக் கண்டுப்பிடிக்க நாங்க எவ்வளவோ முயற்சி செய்தும் எங்க கையில சிக்கவே இல்லை... நீங்க அவங்களைக் கண்டுப்பிடிக்க உதவியதுக்குத் தேங்க்ஸ்..." காவல்துறை அதிகாரி பாராட்டி பேசினார்.

"டேய் நீ தான் நாகாவாடா... உன்னைச் சும்மா விட மாட்டேன்டா..." தரகர் கொதித்துப் போய்க் கத்தினான். அவனைப் பார்த்து கேலியாய் சிரித்த நாகா அங்கிருந்து கிளம்பினான்.

*******************

"ஏண்டா... உனக்கு மனசுல பெரிய போலீசுன்னு நெனப்போ... உன்னை யாருடா இந்த மாதிரி துப்பறிர வேலையைச் செய்யச் சொன்னது... இதெல்லாம் செய்யப் போலீஸ் இருக்கு... உனக்கு எதுக்கு வேண்டாத வேலை..." திட்டி கொண்டே வந்த பஞ்சாபிகேசனை கண்டு நாகா விவேக்கின் பின் மறைந்து கொண்டான்.

"பெருசு இருக்குன்னு நீ ஏண்டா சொல்லல..." நண்பனின் காதில் முணுமுணுத்தான் நாகா.

"ஐயா... இவன் உங்களைப் பெருசுன்னு சொல்றான்..." பள்ளி மாணவன் போல் நண்பனை போட்டுக் கொடுத்தான் விவேக்.

"டேய்... எட்டப்பா... துரோகி..." விவேக்கை பார்த்து பல்லை கடித்தான் நாகா.

"டேய் அவனை ஏண்டா திட்டற... நீ முன்னாடி வாடா படவா..." அவர் அதட்ட... வேறுவழியின்றி நாகா முன்னால் வந்தான்.

"நான் கேட்டதுக்குப் பதில் சொல்லுடா..."

"கண்ணுக்கு முன்னாடி தப்புச் செஞ்சா தட்டி கேட்கணும்... கோழை மாதிரி பயந்துட்டு ஓட கூடாது..." மெல்லிய குரலில் முணுமுணுத்தாலும் அது பெரியவர் காதில் விழ தான் செய்தது.

"இளரத்தம் அதான் துள்ளுறிங்களோ..." நக்கலாய் ஒலித்த அவரின் குரலில் எரிச்சலடைந்தவன்,

"ஆமாம் அதுக்கென்ன... இப்போ துள்ளாம... பின்னே உங்க வயசிலயா துள்ள முடியும்..." அவரை விட நக்கலாய் பதிலளித்தான்.

"நான் அன்னைக்குத் துள்ளுனதுக்குக் கிடைத்த பரிசு தான் இது..." தன் வலது கையின் முழுக்கை சட்டையைத் தூக்கி விட்டவர், அதில் பொருத்தியிருந்த செயற்கை கையைக் காட்டினார்.

"உன்னை மாதிரி ஆவேசப்பட்டு எழுதியதுக்குக் கிடைத்த பரிசு இது..."

அவரைக் கண்டு எல்லோருக்கும் கண்கள் கலங்கியது. ஏன் நாகாவுக்குமே தான். அப்போது தான் அவர்களுக்குப் புரிந்தது... அவர் இடக்கையில் எழுதும் ரகசியத்திற்கான காரணம்.

"ஐயா..." நாகாவுக்குக் குரல் கமறியது.

"நாகா... உன் நல்லதுக்குத் தான்டா சொல்றேன்... இந்தப் பத்திரிக்கைக்குக் கிடைச்ச மிகப் பெரிய சொத்துடா நீ... உன்னை இழக்க கூடாதுன்னு தான் நான் சொல்றேன்..." அவர் கூறியதும் தான் தாமதம் நாகா,

"ஐயா..." என்றழைத்தபடி அவரைக் கட்டி கொண்டான். சிறிது நேரம் நெகிழ்ச்சியில் சென்றது.

"இனிமேல் ஆபத்துகளில் விளையாடாதே நாகா..." பெரியவர் உருக்கமாய்ச் சொல்ல... அவர் அணைப்பிலிருந்து விலகியவன்...

"அது கொஞ்சம் கஷ்டம் பெரிசு..." என்க...

"டேய் படவா... என்னையாடா பெருசுங்கிற... உன்னை..."

அவர் அவனை அடிக்கக் கை ஓங்க... அவர் கையில் அகப்படாமல் அவன் அங்கிருந்து ஓட... அதை மனம் நிறைந்து பார்த்துக் கொண்டிருந்தார் பஞ்சாபிகேசன். தன் சிறுவயது பஞ்சாபியை அவன் உருவில் பார்த்தார் அவர்.

*****************

"இதுக்கு மேலயும் என்னால் பொறுத்துக்க முடியாது..." கொதித்தார் மயில்வாகனம். தமிழ்நாட்டின் பிரபல தொழிலதிபர்.

"கொஞ்சம் பொறுமையாயிருப்பா... உன்னை மாதிரி எனக்கும் கோபமில்லாமலா இருக்கு... அவனைக் கண்டந்துண்டமா வெட்டணும் போலத் தான் இருக்கு... ஆனாலும் நான் பொறுமையா இல்லை..." அவரை அடக்கினார் மந்திரி மேகநாதன். இருவரும் தொழில் நிமித்தமாய்க் கூட்டணி போட்டுக் கொண்ட சந்தர்ப்பவாதிகள்.

ஊழல் நடந்த மருத்துவமனை மேகநாதனின் மனைவி பெயரில் இயங்கி வருவது. அந்த மருந்து தயாரிப்பாளர் தான் தொழிலதிபர் மயில்வாகனம். இவர்களோடு கூட்டு சேர்ந்த இடைத்தரகர் செல்வம் சிறையில் இருக்கிறான்.

"இன்னும் என்ன பொறுமையா இருக்கிறது... செல்வம் உள்ளே போயிட்டான்... அடுத்து நான்... அதுக்கடுத்து நீ... இது தான் நடக்கப் போகுது... நீ வேணா உன் பதவிக்குப் பயந்திட்டு பேசாமயிரு... ஆனா நான் அந்த மாதிரி இருக்கணும்ன்னு எந்த அவசியமில்லை... நான் யாருன்னு அவனுக்குக் காட்டல... என் பேரு மயில்வாகனம் இல்லை..." மேகநாதன் பேசும் முன் விருட்டென்று கிளம்பி சென்றார் மயில்வாகனம். அவர் போகும் வேகத்தைக் கண்டு தலையில் கை வைத்தபடி அமர்ந்து விட்டார் மேகநாதன்.

"டேய்... இங்கே தான்டா அவன் இருந்தான்..." அந்த ரௌடி கும்பல் தலைவன் தன் கண்களை நாலாப்பக்கமும் சுழற்றினான்.

இதை அருகிலிருந்த பெட்டி கடையின் பக்கவாட்டில் ஒளிந்து கொண்டு பார்த்துக் கொண்டிருந்தான் நாகா. இரவு உணவு முடித்து அவன் தன் இரு சக்கர வாகனத்தைக் கிளப்பும் போது... அந்தக் கும்பல் அவனைச் சுற்றி நின்றது. அப்படியிருந்தும் அவர்களைச் சமாளித்த நாகாவால் அவர்கள் கையிலிருந்த ஆயுதங்களைக் கண்டு இதற்கு மேல் போராட முடியாது என்று புரிய அங்கிருந்து ஓட துவங்கினான். பல மைல் தொலைவு ஓடிய போதும் அவர்கள் தொடர்ந்து வருவதை நிறுத்தவில்லை.

அவர்கள் கண்ணை வேறு புறம் திருப்பவும் நாகா அந்தக் கடையிலிருந்து மறுபடியும் ஓட ஆரம்பித்தான். அதைக் கண்ட ஒருவன், "அவன் அங்கே ஓடுறான்..." என்று கையைக் காட்ட எல்லோரும் அவன் பின் ஓடினர். சிறிது நேரம் அவர்களுக்குப் போக்கு காட்டியவன், அங்குச் சிக்னலில் நின்று கொண்டிருந்த ஆட்டோ ஒன்றில் சட்டென்று ஏறினான்.

"டேய்... யாருடா நீ... சவாரி இருக்கும் போது உள்ளே ஏறி உட்காருற..." ஆட்டோ ஓட்டுநர் சத்தம் போட...

"அவர் தெரிந்தவர் தான் சார்... ஒண்ணும் பிரச்சினையில்லை..." என்ற குரலில் முகம் பரவசமாகத் திரும்பியவன்,

"ஹேய்... தேவி நீயா...?" ஆச்சிரியமாய் அங்கு அமர்ந்திருந்த அவளைப் பார்க்க... ஆம் அந்த ஆட்டோவினுள் அமர்ந்திருந்தது தேவி தான்.

"நீங்க எப்படி இங்கே...?" தயக்கமாய் வந்தது அவளின் வார்த்தைகள்.

"நேத்து நீ பதில் சொல்லாம போயிட்டல்ல... அதான் பதிலை தெரிஞ்சிட்டு போக வந்திருக்கேன்..." கூலாகச் சொன்னவன் மனதுக்குள்,

'உயிருக்கு போராடும் போது கூட உனக்கு ரொமான்ஸ் கேட்குதா நாகா... ம்... கலக்குடா காதல் தலைவா...' தன்னைத் தானே மெச்சி கொண்டான்.

அவன் சொன்னதைக் கேட்டு அவள் அச்சத்தில் கண்கள் விரிய அவனை இமைக்காமல் பார்த்தாள்.

சதி தொடரும்...!!!

"நீங்க என்ன சொல்றீங்க...?" தேவியின் குரல் அவளின் மனதை போலவே திணறியது. அவளையும் அறியாமல் அவளின் கண்கள் ஆட்டோ ஓட்டுநரின் மீது படிந்து மீண்டது.

'உங்களைப் போல நிறையக் கேஸை பார்த்தவன் நான்... இதெல்லாம் எனக்கு ஜுஜுபி...' என்பது போல் ஓட்டுநரின் கண்கள் சிக்னலை பார்த்துக் கொண்டிருந்தது.

"நான் என்ன சொல்றேன்னு உனக்கு நிஜமாவே புரியலையா...?"

அவளின் கண்களுக்குள் உற்று பார்த்து கேட்ட நாகாவின் கண்களிலிருந்த பளபளப்பு... தெருவோரம் இருந்த கடைகளின் மின்விளக்குகள் உமிழ்ந்த வெளிச்சத்தில் அவளுக்கு நன்கு தெரிந்தது. அவன் கண்கள் உணர்த்திய செய்தியில் அவளின் மனம் சிக்குண்டு... அவன் பால் அவள் மனதை மேலும் மேலும் சாய்த்தது.

"புரியுது..." மெல்லிய குரலில் கூறியவளின் பதிலில் உற்சாகமடைந்தவன்,

"ஹப்பாடி... உனக்குப் புரிய வைக்கக் கஷ்டப்படணுமோன்னு நினைச்சேன்... பரவாயில்லை நீ என்னை மாதிரி புத்திசாலியா இருக்கியே..."

அவளைப் பாராட்டுவது போல் சந்தடி சாக்கில் தன்னைத் தானே பாராட்டி கொண்டவனைப் பார்த்தவளின் விழியில் அழையா விருந்தாளியாய் வியப்பு வந்து குடியேறியது. அவனின் தற்பெருமைக்கு ஒரு குட்டு வைக்க எண்ணியவளாய்,

"அப்போ... அந்தச் சனாவை என்ன பண்ண போறீங்க...?"

அவனை ஆழ்ந்து பார்த்தவளின் முகத்திலிருந்து அவனால் ஒன்றும் கண்டுப்பிடிக்க முடியவில்லை.

"ஓ... நம்ம ரெண்டு பேருக்கிடையில் அவள் எங்கே இருந்து வந்தாள்...?"

"நீங்க தானே சொன்னீங்க... உங்க கிட்டயிருந்து சனா தப்ப முடியாதுன்னு... அப்போ அதுக்கு என்ன அர்த்தம்...?" கோபத்துடன் சொன்னவள் முகத்தைத் திருப்பிக் கொண்டு,

"நீங்க இப்படி இருப்பீங்கன்னு நான் நினைச்சு கூடப் பார்க்கல... உங்களை விடச் சின்னப் பெண் சனா... அவளைப் போய்... ச்சே..." அவள் முகம் அருவருப்பில் சுளித்தது.

"என்னவொரு பொறாமை..." அவன் வாய்விட்டு சிரிக்க...

அதைக் கேட்டு அவன் புறம் திரும்பியவள் கண்களில் மெல்லிய நீர்படலம்...! அதைக் கண்டவன் சிரிப்பு துணி கொண்டு துடைத்தார் போன்று சுத்தமாய் நின்று போனது.

"சாரி... உன்னை ஹர்ட் பண்ணியிருந்தா... ஐயம் ரியலி சாரி..." என்றவன்,

"இங்கே பார் தேவி... சனா எனக்குத் தங்கை மாதிரி..." அவனின் பேச்சில் அவளது கண்கள் ஆனந்தத்தைப் பிரதிபலித்தது.

"ஆனா..." அவள் சொல்லும் முன் குறுக்கிட்டவன்,

"சனா அப்படி நினைக்கல... அதைத் தானே சொல்ல வர்ற... அவளோட எண்ணங்கள் எனக்குப் புரியது... ஆனா நான் அவளிடம் இதைப் பத்தி பேசி அவள் மனதை நோகடிக்கணுமான்னு தான் அமைதியா அவளை அவாய்ட் பண்ணிட்டு போறேன்..." என்றவனை அவள் முறைத்து பார்க்க...

"ஹேய்... அன்னைக்கு உன்னை வெறுப்பேத்த தான் அவள் கிட்ட நின்னு பேசினேன்... மத்தப்படி வேறொரு காரணமும் இல்லை... அது தப்பு தான் இனி மேல் அது மாதிரி நடக்காது என்ன...? நாளைக்கே அவள் கிட்ட சொல்லிறேன்... நான்

தேவியைத் தான் காதலிக்கிறேன்... அவளைத் தான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு..."

"நான் இன்னும் பதில் சொல்லலன்னு நினைக்கிறேன்..." அவள் கூறியதை கேட்டு அவனின் குறும்பு கூத்தாடியது.

"அப்படியா... சரி பதில் சொல்லுங்க மேடம்..."

அவன் கேட்கும் போதே அவனைத் துரத்திய ரௌடி கும்பல் அவனை ஒவ்வொரு வாகனமாகத் தேடி கொண்டு இவர்களின் அருகில் வந்துவிட்டனர்.

"எங்கடா மாயமா போனான்... அவனைப் போடலைன்னா மேலிடத்துக்குப் பதில் சொல்ல முடியாதே... நம்மளுக்கே போக்கு காட்டுறானே... அவன் மட்டும் கையில் கிடைக்கட்டும்... மவனே அப்போ இருக்கு அவனுக்கு..." கோபத்துடன் சொன்ன அந்த ரௌடிகளின் தலைவன் இவர்களுக்குப் பக்கத்தில் இருந்த காரின் கண்ணாடியை தட்டி கொண்டிருந்தனர்.

அவர்கள் பேசியதை கேட்டுக் கொண்டிருந்த தேவி கலக்கத்துடன் நாகாவை பார்த்தாள். அவனோ அதைக் கண்டு கொள்ளாதவனாய் அவளைக் காதலோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

"அவங்க உங்களைத் தானே சொல்றாங்க..." கண்களின் அச்சத்துடன் கேட்டவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது. ஆமென்பது போல் புன்னகையுடன் தலையாட்டியவனைப் பார்த்து அவளுக்கு அதிசயமாய் இருந்த அதே நேரம் அவனின் தைரியம் பயத்தையும் விளைவித்தது.

அதற்குள் அந்த ரௌடி கும்பல் இவர்கள் இருந்த ஆட்டோ பக்கம் வர... தேவி சட்டென்று நாகாவின் தலையைப் பிடித்துத் தன் தோளில் சாய்த்து கொண்டாள். அவள் அவனின் தலையைச் சாய்க்கவும் ரௌடி ஆட்டோவிற்குள் எட்டி பார்க்கவும் சரியாக இருந்தது.

"அது யாரம்மா...?" அவன் அவளை அதட்டினான்.

"என் ஹஸ்பென்ட் சார்..." அவள் எந்தவித தயக்கமும் இல்லாமல் பதிலளிக்க...

"ஏன் படுத்திருக்கிறாரு...?"

"உடம்பு சரியில்லை... ஹாஸ்பிட்டலுக்குக் கூட்டிட்டு போறேன்..." அவள் பதிலளிக்கும் போதே...

"ஆமாம் சாரு... அந்தப் பொண்ணு சொல்றது கரிக்ட்டு சாரு..." அந்த ஓட்டுநர் பதிலளித்தவன், "சாரு... சிக்னல் விழுந்தருச்சு பாரு சாரு..." என்க... அந்த ரௌடி,

"சரி தான் போ... போ..." என்றவன் வாகன நெரிசலை தாண்டி நடைப்பாதையை நோக்கி சென்றான்.

சிறிது தூரம் சென்றதும் தேவி, "எழுந்திருங்க..." நாகாவின் தோளில் தட்ட...

"எழுந்துக்கணுமா...?" போலி சோகத்துடன் சொன்னவாறு தலையைத் தூக்கியவன்,

"நீ இப்படித் தோளில் சாய்ச்சிக்கிறதா இருந்தா எத்தனை தடவை வேணும்னாலும் ஆபத்தை வரவழைக்கலாம் போலிருக்கே..." கேலியாய் சொன்னவன் அவளின் முகத்திலிருந்த கலக்கம், உடலிலிருந்த நடுக்கம் கண்டு கேலி பேச்சை கைவிட்டவன் யோசனையாய் அவளைப் பார்த்தான்.

பின்பு என்ன நினைத்தானோ... அவளின் நடுங்கிய கையைத் தன் ஒரு கையால் பற்றி மறுகையால் அதைத் தட்டி ஆறுதல் படுத்தினான். அங்கு மௌனம் மட்டுமே ஆட்சி செய்ய... காதல் வயப்பட்ட இருவரின் மனமும் வேறு வேறு பாதையில் பயணித்தது.

அவனின் கை அவளை ஆறுதல் படுத்தினாலும்... அவனின் மனமோ அவளின் அருகாமையில், அவளின் ஸ்பரிசத்தில் தன்னைத் தொலைத்துக் கொண்டிருந்தது. அதன் மயக்கத்திலிருந்து அவனின் மனம் விடுபட விரும்பவில்லை. அவளின் மனமோ அவனுக்கு வந்த

ஆபத்தில் அதிர்ச்சியில் உறைந்து போயிருந்தது. என்ன தான் சமயோசிதமாய் யோசித்து அவள் செயல்பட்ட போதும்... அவனுக்கு வந்த ஆபத்தின் வீரியம் அவளுக்குக் கிலியை ஏற்படுத்தியது.

நிருபர் வேலை என்பது ஆபத்தான வேலை தான் என்றாலும்... கண் முன் அவள் கண்ட நிதர்சனம் அந்த உண்மையை அவள் முகத்தில் அறைந்தார் போல் எடுத்துக் காட்டியது. அவளையும் அறியாமல் அவளது மற்ற கை அவனின் ஆறுதல் சொன்ன கை மீது அழுத்தி படிந்தது. அந்த அழுத்தத்தை உணர்ந்தவன் அவளைத் திரும்பி பார்த்தான். ஆனால் ஒன்றும் பேசவில்லை.

வீடு வந்ததும் அவன் இறங்க... அவனைத் தொடர்ந்து இறங்கியவள் தன் கைப்பையிலிருந்து பணத்தை எடுத்துக் கொடுக்கப் போனாள். அதைத் தடுத்து அவன் ஆட்டோ ஓட்டுநரிடம் பணத்தைத் தர... அவள் ஒன்றும் பேசாது நின்றாள்.

"போலாமா..." என்று கேட்டவனிடம் இணைந்து நடந்தவள்,

"இனி இது போல் ஆபத்துக்களைக் குறைச்சிக்கக் கூடாதா...?"

அவளின் பேச்சில் ஏதோ சொல்ல வாயை திறந்தவன் அவள் கண்ணில் கண்ட கலக்கத்தில் கப்பென்று வாயை இறுக மூடி கொண்டான். ஏனெனில் பெற்றோர் சொல்லியே கேட்காதவன் அவன்... அவள் சொல்லியா கேட்க போகிறான். ஆனாலும் அவள் கண்ணிலிருந்த ஏதோ ஒன்று அவனை அவளுக்குச் சார்பாய் பேச விழைந்தது.

"சரி... உனக்காகக் குறைச்சிக்கிறேன்..."

அவன் ஏன் அப்படிச் சொன்னான் என்று அவனுக்கே தெரியவில்லை. அந்த நேரம் அவளின் கலக்கத்தைப் போக்க வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே அவனின் மனதிலிருந்தது.

அதில் முகம் மலர்ந்தவள், "தேங்க்ஸ்..." என்றபடி மின்தூக்கியினுள் செல்ல முயன்றாள்.

"எப்பவும் படியில் தானே போவ... இன்னைக்கு ஏன்...?" கேள்வியாய் கேட்டவனின் கையைப் பிடித்து உள்ளே இழுத்து... நான்காம் தளத்துக்கான பொத்தானை அழுத்தியவள்... அவனின் கையை இறுக பற்றியபடி அவனின் தோளில் சாய்ந்து,

"இதுக்குத் தான்..." அவனை நிமிர்ந்து பார்த்தவள் முகத்தைக் கண்ணிமைக்காமல் பார்த்தவனின் மனம் சந்தோச வானில் சிறகடித்துப் பறந்தது.

"அப்படியா..." என்றவனின் கை அவளின் தோள் மீது அழுத்தமாய்ப் படிந்து அவளைத் தன்னுடன் இறுக்கமாய் அணைத்துக் கொண்டது.

அதில் முகம் சிவந்தவள் தலையைக் குனியும் போது அவனின் தளம் வந்துவிட... அவள் பதற்றமாய் அவனை விட்டு தள்ளி நிற்க... அவனோ சிரித்துவிட்டு மின்தூக்கியின் கதவை மீண்டும் மூட... அவள் கேள்வியாய் அவனைப் பார்த்தாள்.

"இதுக்குத் தான்..." அவளைப் போல் சொல்லி காட்டியவன் அவளின் தளமான இரண்டாம் எண்ணை அழுத்திவிட்டு அவளின் தோள் மீது கை போட்டு நெருங்கி நின்றான்.

நான்காம் தளத்தில் இருந்து இரண்டாம் தளம் வர எவ்வளவு நேரமாகும்... ஐந்தே நொடிகளில் அவளின் தளம் வந்தடைய அவன், "ச்சே..." என்றபடி இயலாமையுடன் மின்தூக்கி சுவற்றில் கையைக் குத்தினான். அவனின் செய்கையில் அவளுக்குச் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. அதை அடக்கி கொண்டு அவள் வெளியேற... அவனோ போகாமல் 'ஹோல்ட்' பொத்தானை அமுக்கிவிட்டு தன் இரு கைகளையும் கட்டி கொண்டு அவளையே பார்த்தான்.

"என்ன...?" அவள் கேட்டதற்குத் தன் சுட்டு விரலை ஆட்டி அவளை உள்ளே அழைத்தான் அவன்.

அவளோ அச்சத்துடன் சுற்றும் முற்றும் பார்க்க... அவனோ அழுத்தமாய் அவளைப் பார்த்தான். அவர்களின் நல்ல நேரம் அங்கு யாருமில்லை. பயந்து கொண்டே உள்ளே வந்தவளை வேகமாய்த் தன்னருகில் இழுத்தவன் அவள் முகம் பற்றி அவளின் இதழ் நோக்கி குனிய போக... அவசரமாய் அவன் முகம் மீது கை வைத்து அவனைத் தடுத்தவள்,

"இதெல்லாம் கல்யாணத்துக்கு அப்புறம்..."

"ச்சு..." எரிச்சல் பட்டவன் அவளை விடுவிக்க... களுக்கென்று சிரித்தவள் வெளியில் வந்தாள். ஏனோ அவளுக்கும் அவனை விட்டு போக மனம் வரவில்லை.

"உங்க கேள்விக்குப் பதில் வேண்டாமா...?" என்றவளை பார்த்தவனுக்கு அத்தனை நேரமிருந்த எரிச்சல் மறைந்து சிரிப்பு வந்தது.

"அதான் அந்த ரௌடிக்கிட்ட சொன்னியே என் ஹஸ்பென்ட்ன்னு.... அந்தப் பதில் போதாதா..." அவனின் கேலி பேச்சில் அவள் முகம் சிவந்து போனது.

"அவன் கிட்ட சொன்னது உண்மை தானே...?" அவனின் கேலியில்,

"இதிலெல்லாம் யாராவது பொய் சொல்வாங்களா...?" என்றவளின் பதில் கேள்வியில் அவனுக்கு வேண்டிய பதில் கிடைத்துவிட அவன் உரத்த குரலில் சிரித்தான்.

அந்நேரம் மூன்றாம் மாடியிலுள்ள தாத்தா ஒருவர் மூச்சிறைக்கப் படியிலேறி வந்தவர், "ஏற்கெனவே ஒரு லிப்ட் வேலை செய்யல... இன்னொரு லிப்ட்டை எந்தப் பிரகஸ்பதி என்ன செய்தானோ தெரியல... அதுவும் வேலை செய்ய மாட்டேங்குது... நாளைக்குக் காலையில முதல் வேலையா செக்ரட்டரி கிட்ட கம்ப்ளையிண்ட் கொடுக்கணும்..." அலுத்த குரலில் சொல்லி கொண்டே மாடியேற...

அதைக் கேட்ட நாகா அவளிடம், "பை..." என்றவன் மின்தூக்கி கதவை அவசரமாய் மூடினான். அவனின் செய்கையில் பொங்கி வந்த சிரிப்பை அடக்கியபடி அக்கம் பக்கம் பார்த்தவள் வேகமாய் நடந்து தன் வீட்டின் கதவை திறந்து உள்ளே சென்றாள்.

அன்றும் நாகா மின்னஞ்சலை பார்வையிட்டுக் கொண்டிருக்கும் போது அவன் ஆன்லைனில் இருப்பதை உணர்ந்து வைஷ்ணவி அவனைச் சாட்டில் அழைத்தாள். ஆண் பெண் என்று நட்பில் வேறு பாடு கொள்ளும் அளவுக்குப் பிற்போக்குச் சிந்தனை உடையவன் அவன் கிடையாது என்பதால் சிறிதும் தயக்கமில்லாமல் 'ஹாய்' என்றான். ஹாய் என்ற வார்த்தையில் ஆரம்பித்த பேச்சு வார்த்தை முடியும் போது தங்களின் ரசனைகளைப் பரிமாறி கொள்ளுமளவுக்கு வந்திருந்தது. நாகாவிற்கு வைஷ்ணவியின் புத்திசாலித்தனமான பேச்சு மிகவும் பிடித்திருந்தது. அவளின் நட்பும் மிகவும் பிடித்திருந்தது. ஆனால் அவளின் நட்பு அவனின் தரத்தை எந்தளவுக்கு இறக்க போகிறது என்பதை அவன் அக்கணம் உணரவில்லை.

மறுநாள் அலுவலகம் வந்த நாகாவை விவேக்கின் அலப்பறை தான் வரவேற்றது. விசயம் வேறுவொன்றுமில்லை... இன்று ஐடி நிறுவனம் ஒன்று அன்பு முத்தம் என்ற நிகழ்ச்சியை நடத்தவிருக்கிறது. அதற்குத் தான் அவன் காசியுடன் இணைந்து கிளம்பி கொண்டிருந்தான்.

"மச்சான்... நானும் அந்தக் கட்டிப்பிடி வைத்தியத்தில் கலந்துக்கப் போறேன்... எத்தனை பிகர்... எத்தனை கிஸ்..." கண்களில் மயக்கத்துடன் கூறியவன்,

"என்னை வாழ்த்தி அனுப்புடா..." நாகா முன் தலையைக் குனிய, அவன் தலையில் ஓங்கி ஒரு குட்டு வைத்தான் நாகா.

"ஏண்டா குட்டுன... துரோகி... ஒரு சின்னப் பையனை இப்படி வலிக்க வலிக்கக் குட்ட உனக்கு எப்படிடா மனசு

வந்தது பரதேசி..." தலையைத் தேய்த்துக் கொண்டே விவேக் நாகாவிடம் பாய்ந்தான்.

"உன்னையெல்லாம் கொல்லணும்டா... குட்டோட விட்டு வைச்சேனேன்னு சந்தோசப்படு..." என்று சொன்ன நாகாவின் முகத்தில் கொலைவெறி மின்னியது.

"நாகா..." விவேக் அவனின் தோளில் கை வைக்க... நாகா படபடவெனப் பொரிந்தான்.

"என்னடா இது கல்சர்... இதுக்குப் பேரு அன்பு முத்தமா... எனக்கு வர்ற கோபத்துக்கு... வாயில வேற வார்த்தை வந்துற போகுது..." என்றவனின் வாயை வேகமாய் வந்து பொத்திய விவேக்...

"நோ மச்சான்... சென்சார்... சென்சார்..." என்று சொல்ல... அதில் நாகாவுக்குச் சிரிப்பு வந்தது.

"நீ வேற நேரம் காலம் தெரியாமல் விளையாண்டுட்டு..." என்றவன், "என்ன காசி... நீயுமா இவன் கூடச் சேர்ந்திட்டு... நாட்டுல எவ்வளவோ பிரச்சனையிருக்கு... அதைப் பத்தி எழுதாம... நம்ம கலாச்சரத்தை கெடுக்கிற இதைப் பத்தி நீங்க கட்டாயம் எழுதணுமா...? நாமளே அவங்களுக்குப் பப்ளிசிட்டி தேடி தரணுமா...?"

"இல்லை நாகா... எல்லாப் பத்திரிக்கையிலிருந்தும் அதைக் கவர் பண்ண ஆட்கள் போறாங்க... அதான் நம்ம பத்திரிக்கை சார்பா நானும், விவேக்கும் போகலாம்ன்னு..."

"வேண்டாம் காசி... நம்ம பத்திரிக்கைக்கு இந்த நியூஸ் அவசியமில்லை... நீங்க போக வேணாம்..."

"இல்லை நாகா... விசயம் கேள்விப்பட்டு சார் திட்டினா..." காசி யோசிக்க...

"சார் கிட்ட நான் பேசிக்கிறேன்... இந்த மாதிரி விசயத்தில் இனிமேல் கான்சர்ன்ட்ரேட் பண்ணாதீங்க..." என்றவன் விவேக்கிடம் திரும்பி,

"இன்னைக்கு நைட் நாம ஒரு பார்ட்டிக்கு போறோம்... ரெடியாயிரு..."

"ஏன் மச்சான்... அது மட்டும் நம்ம கலாச்சரத்தை பாதிக்கிறது இல்லையா... அதை மட்டும் ஏன் கவர் பண்ணனும்...?" விவேக்கிற்கு வந்த எரிச்சலில் நாகாவை பார்த்து அப்படிக் கேட்டுவிட்டான்.

"தானே போய்க் குழிக்குள் விழுறதுக்கும்... குழிக்குள் பிடிச்சு தள்ளி விடுறதுக்கும் நிறைய வித்தியாசமிருக்கு..."

"என்னவோ போ... நீ சொல்றது... செய்றது எதுவும் எனக்குப் பிடிபட மாட்டேங்குது..." அலுத்துக் கொண்டான் விவேக்.

"நீ சொன்னது... அவங்களே குழின்னு தெரிஞ்சு அதில் போய் விருப்பத்துடன் விழுறாங்க. நான் சொன்னது... சில பெண்களுக்குப் போதை பொருளை வலுக்காட்டாயமாய்க் கொடுத்து தங்களோட ஆசையைத் தீர்த்துக்கிற ஆண்கள் யார் யார்ன்னு தோளுரித்துக் காட்ட தான் நாம போகப் போறோம்... இப்போ புரிஞ்சதா நான் சொன்னது..."

"ம்... புரிஞ்சது... புரிஞ்சது..." விவேக் ஒரு மார்க்கமாய்த் தலையை ஆட்ட... அதை விட மார்க்கமாய்ப் பார்த்துக் கொண்டு அங்கிருந்து நகன்றான் நாகா.

அப்போது நாகாவிற்குத் தெரியவில்லை.... தானும் அதே போல் கனவிலும் நினையாத ஒரு கலாச்சாரச் சீர்கேடை செய்துவிட்டு தப்பும் மார்க்கம் தெரியாமல் விழிக்கப் போவதை...

"காசி... இந்த நாகா என்ன சொன்னாலும் நம்ம சார் கேட்டுக்கிறாரே... உனக்கு ஏதாவது தோணுதா...?"

"நாகா நல்ல திறமையானவன்... அதான் அவன் சொல்றதை அவர் கேட்டுக்கிறார்..." காசி பதிலளிக்க...

"இல்ல காசி... வேற ஏதோ இருக்கு..."

"வேற ஏதோன்னா..." புரியாமல் விவேக்கை பார்த்தான் காசி.

"அது தெரிஞ்சா நான் சொல்ல மாட்டேனா..." காசியிடம் எரிந்து விழுந்தவன்,

"கண்டுப்பிடிக்கிறேன்... கண்டுப்பிடிக்கலன்னா நான் விவேக் இல்ல..." என்று சூளுரைத்துக் கொண்டான் விவேக்.

"லூசு மாதிரி உளறாம வேலையைப் பாருடா..." என்றபடி காசி அங்கிருந்து நகர... விவேக்கின் மனம் மட்டும் நாகாவின் பின்னணியில் இருக்கும் மர்மம் பற்றி யோசிக்க ஆரம்பித்தது.

**********************

"நாகா... உன் கால் எங்கேடா..." வெளி வாயிலை பார்த்து ஆவென்று வாயை பிளந்த விவேக் நாகாவிடம் கேட்க...

"எதுக்குடா...?" கேள்வி நண்பனிடம் இருந்தாலும் அவனின் கண்கள் நாலாப்புறமும் அலசியது.

"இப்படியொரு சொர்க்கத்தைக் காண்பித்த உனக்கு என்னாலான நன்றி மச்சான்..." விவேக் சொல்லும் போதே அவனின் கையைப் பற்றிக் கொண்டு உள்ளே அழைத்துச் சென்றான் நாகா. அப்போது அங்கு மது கோப்பைகளை ஏந்தியவாறு பேரர் வர... அதை ஆசையுடன் எடுக்கப் போன விவேக்கின் கையைப் பற்றித் தடுத்த நாகா அவனை முறைத்தான்.

"வந்த வேலையைப் பார்க்காம... என்ன இது...?" வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான்.

"போடா... நீயும் என்ஜாய் பண்ண மாட்ட...என்னையும் என்ஜாய் பண்ண விட மாட்ட..." விவேக் செல்லமாய்க் கோபித்தாலும் கடமை தவறாதவனாய் அவனின் கண்கள் அந்த விருந்தை நோட்டமிட்டது.

"என்ன நாகா இது...? இப்படி இருக்கும்ன்னு நான் நினைச்சு கூடப் பார்க்கல..." அதிர்ச்சியாய் ஒலித்தது விவேக்கின்

குரல். ஜொள்ளு மன்னனான அவனுக்கே அங்கு நடப்பது சற்று வரம்பு மீறிய காரியமாய்த் தெரிந்தது.

அங்கு ஆணும், பெண்ணும் தங்களை மறந்து உரக்க இசைத்த ஆங்கிலப் பாடலுக்கேற்ப தங்களது உடலை வளைத்தும், நெளித்தும், ஒட்டி கொண்டும் ஆடி கொண்டிருந்தனர். அதிலும் ஒரு சில ஜோடிகள் ஆடல் என்ற ஒன்றை மறந்தது போல் தங்கள் படுக்கையறை காட்சிகளை மற்றவர்கள் கண்ணுக்கு விருந்தாக்கி கொண்டிருந்தனர். அதை மற்றவர்கள் பார்த்து ஆர்ப்பரித்ததுடன் தாங்களும் அது போல் அடுத்தக் கட்டத்திற்குச் செல்வதற்கான முயற்சி எடுத்ததைக் கண்டு விவேக் தலையில் அடித்துக் கொண்டான்.

"இந்தியா எதில் ஒளிர்கிறதோ இல்லையோ... இதில் சூப்பரா ஒளிர்கிறது..." நொந்து போன குரலில் கூறியவனை உணர்ச்சியில்லாமல் பார்த்த நாகா,

"எல்லாத்தையும் உன் ஃபோனில் கவர் பண்ணு..." என்றவாறு தானும் சில காட்சிகளை அலைப்பேசியில் எடுத்தான். பலரும் அலைப்பேசி கையுமாய் இருந்ததால் யாரும் அவர்களைக் கண்டு கொள்ளவில்லை.

இந்த விருந்து நகரத்தில் பெரிய விஐபியின் மகன் தான் கொடுக்கிறான். வார கடைசியில் நடக்கும் இந்த விருந்திற்கு வர இளசுகளுக்கிடையில் பெரிய போட்டியே நடக்கும். ஆனால் குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமே அனுமதி உண்டு. அது வாரா வாரம் வேறுபடும். நாகாவும் அவனின் தொழில் நண்பன் உதவியுடன் தான் இங்கு வந்திருக்கிறான்.

இந்த விருந்தால் அந்த விஐபியின் மகனுக்குப் பெரிய புள்ளிகளின் தொடர்பு கிடைப்பதோடு மட்டுமில்லாமல்... அவன் சுவைக்கவும் விதவிதமாய்ப் பெண்கள் கிடைப்பதும் கூடுதல் ஆதாயம். நாகாவிற்கு இந்த விருந்தை பற்றி ரொம்ப நாளாகவே சந்தேகம் இருந்து வந்தது. அது என்னவென்றால் இந்த விருந்திற்கு வரும் பெண்களுக்கு

அவர்களை அறியாமல் போதை பொருள் கொடுக்கப்படுகிறதோ என்று...

அதை மெய்பிக்கும் வண்ணம் அந்த மிகப்பெரிய ஹாலை அடுத்து இருந்த சிறிய அறையில் ஒரு பெண் போதையில் கண்கள் சொருக படுத்திருக்க... அவளின் அங்கங்களைக் காமவெறியுடன் பார்த்துக் கொண்டிருந்தது மனித மிருகம் ஒன்று. ஏதேச்சையாய் அந்தப் பக்கம் வந்த நாகாவின் கண்ணில் இந்தக் காட்சி ஒருக்களித்துச் சாத்தப்பட்ட கதவிடுக்கு வழியாக விழுந்தது. அப்போது அந்த ஆண் அந்தப் பெண்ணின் முகத்தைப் பற்றித் தன் புறம் திருப்பினான்.

அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்த்த நாகா உயரமுத்த மின்சாரம் தாக்கியது போல் அதிர்ச்சியடைந்தான்.

சதி தொடரும்...

போதையில் கண்கள் சொருக படுத்திருந்த பெண் சனாவாய் இருப்பாள் என்று நாகா கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அவள் அருகில் அமர்ந்திருந்த ஆண் அவளின் ஆடையில் கை வைக்க முனைந்த போது சட்டென்று சுதாரித்த நாகா மின்னல் வேகத்தில் அறைக்குள் நுழைந்து தன் கைகளைக் கொண்டு அவனின் பின்னந்தலையில் ஓங்கி அடித்தான்.

நாகாவின் நல்ல நேரமோ என்னமோ ஏற்கெனவே போதையில் இருந்த அவன் நாகாவின் கராத்தே அடியில் சுருண்டு கீழே விழுந்துவிட்டான். கீழே மல்லாக்க விழுந்தவனைக் கண்ட நாகா அதிகமாய் அதிர்ந்து போனான். ஏனெனில் அவன் நகரத்தின் முக்கியப் புள்ளி... அந்நேரம் மெல்லியதாய் முனங்கிய சனாவின் குரலில் அவள் புறம் திரும்பியவன் அவளருகே வேகமாய்ச் சென்றவன்,

"சனா... சனா..." என்று அவள் கன்னம் தட்ட...

"ம்... ம்..." என்ற வார்த்தையே பதிலாக வர...

எப்படி அவளைக் காப்பாற்றுவது என்று அவனுக்குத் தெரியவில்லை. உடனே விவேக்கிற்கு அழைத்தான். விவேக் எடுத்ததும் தான் இருக்கும் அறையை அடையாளம் சொன்னவன் அவனை அங்கே வர சொன்னான். அறைக்குள் நுழைந்த விவேக் அங்கே கண்ட காட்சியைக் கண்டு,

"யாருடா இந்தப் பொண்ணு இப்படி மட்டையாகி இருக்கு... ஒருவேளை இவள் அந்த மாதிரி பெண்ணா இருப்பாளோ என்னமோ...?" விவேக்கின் பேச்சுல் அவனை முறைத்த நாகா... அவளைப் பற்றிச் சொல்லியவன்,

"சனா அந்த மாதிரி பெண் இல்லைடா... எனக்கு அவளைப் பத்தி நல்லா தெரியும்... முதல்ல இவளை இங்கிருந்து

காப்பாத்தணும்டா..." கோபமாய்ச் சொன்ன நாகாவின் தோளில் கை வைத்த விவேக்,

"சாரிடா... நான் தப்பா நினைச்சிட்டேன்" நண்பனுக்குத் தெரிந்த பெண் என்றதும் உடனே மன்னிப்பு கேட்டான் விவேக். பிறகு,

"அந்தளவுக்குச் செக்யூரிட்டி டைட்டா இருக்கிற மாதிரி தெரியல... அதனால இவளை ஈசியா வெளியில் கொண்டு போயிடலாம்..."

ஆம்... விவேக் சொன்னது போல் மிகவும் தெரிந்தவர்களுக்கு மட்டுமே அனுமதி என்பதால் பாதுகாப்பு கெடுபிடி ஒன்றும் அவ்வளவு பெரியதாக இல்லை. ஒருவேளை பணம், அதிகார பலம் எல்லாம் இருப்பதால் யார் என்ன செய்துவிட முடியம் என்ற அலட்சியமும் கூட ஒரு காரணமாக இருக்கலாம்.

இருவரும் சேர்ந்து சனாவை தூக்குவதற்கு முயலும் போது திடீரென நினைவு வந்தவனாய் நாகா,

"ஒன் மினிட் விவேக்..." என்று கூறிவிட்டு தன் அலைப்பேசியில் கீழே விழுந்து கிடந்தவனைப் புகைப்படம் எடுத்துக் கொண்டான். அப்போது தான் கீழே விழுந்திருந்தவனைக் கண்ட விவேக்,

"டேய் இவனாடா இப்படி... நம்ப முடியலையே மச்சான்..." அவனின் குரல் ஆற்றாமையில் ஒலித்தது. நாகா ஆமென்பது போல் தலையசைத்தவன் அடுத்து ஒரு நிமிடம் கூடத் தாமதிக்காமல் சனாவை அங்கிருந்து அப்புறப்படுத்தும் வேலையில் இறங்கினான்.

இருவரும் அவளைக் கைத்தாங்கலாய் வெளியில் அழைத்து வந்தவர்கள் தாங்கள் வந்திருந்த காரின் பின் இருக்கையில் அவளைப் படுக்க வைத்தனர். இந்த மாதிரி இடங்களுக்குக் காரில் போவது தான் மரியாதை என்று விவேக் தன் தந்தையின் காரை எடுத்து வந்திருந்தான். அது

இப்போது பெரும் உதவியாய் போயிற்று. விவேக் காரை கிளப்ப... நாகா முன்புறம் ஏறிக் கொண்டான்.

வாயிலில் நின்றிருந்த காவலாளி எதுவும் பேசாமல் வணக்கம் வைத்தவாறு கதவை திறந்துவிட்டான். அவனின் பணி அது மட்டும் தான். அங்கு வருபவர்கள் பணக்கார வீட்டு இளசுகள்... யாரையும் கேள்வி கேட்கவும் முடியாது, கேட்கவும் கூடாது... அது தான் அவனுக்கு விதிக்கப்பட்ட கட்டளை... கதவு திறந்த அடுத்த நொடி கார் அந்தப் பங்களாவை விட்டு வெளியில் சீறிப் பாய்ந்தது...

"ம்ப்ச்... இந்தச் சனாவால எதையும் கண்டுப்பிடிக்க முடியாம போச்சு... இங்கே வர்றதுக்கு எவ்வளவு கஷ்டப்பட்டேன் தெரியுமா...?" கொஞ்சம் கவலையுடன் சொன்ன நாகாவை பார்த்து,

"யாமிருக்கப் பயமேன் மச்சான்... இதைப் பாரு..." என்ற விவேக் தன் அலைப்பேசியை எடுத்து நாகாவிடம் நீட்டினான்.

அவனை ஆச்சிரியமாய்ப் பார்த்த நாகா அதைப் பிடுங்காத குறையாய் வாங்கிப் பார்த்தான். அதில் குளிர்பானத்தில் ஊசி குத்தும் சாதனம் மூலம் போதை பொருளை கலப்பதும், அதை எடுத்துக் கொண்டு வந்து அங்கு வந்த பெண்களிடத்தில் கொடுப்பதும் என்று ஒவ்வொரு காட்சியும் தெளிவாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. இதை ஏற்பாடு செய்த விஜபியின் மகன்கள் மற்றும் அங்கு வந்திருந்த பெரிய இடத்து வீட்டு பிள்ளைகளை அழகாய் தன் அலைப்பேசியில் பதிவு செய்திருந்தான் விவேக். இவ்வளவு போதாதா இவர்களை மாட்ட வைப்பதற்கு...!!!

"சூப்பர்டா மச்சான்... டன் அ க்ரேட் ஜாப் டா..." விவேக்கை பாராட்டினான் நாகா.

"நாங்க எல்லாம் கொஞ்சம் அப்படி இப்படித்தான்... ஆனா காரியத்தில் கண்ணாய் இருப்போம்ல..." காலரை தூக்கிவிட்டுக் கொண்டான் விவேக். அதற்குள் நாகா குடியிருக்கும் குடியிருப்பு வந்துவிட்டது.

"எப்படிடா இவளை இவள் வீட்டில் கொண்டு போய்ச் சேர்க்க போற...?" பின்னால் படுத்திருந்த சனாவை பார்த்து விவேக் கேட்டான்.

"கொஞ்சம் இரு விவேக்..." என்ற நாகா தேவிக்கு அழைத்தான். அவளை உடனே கீழே வரும்படி பணித்து விட்டு அலைப்பேசியை அணைத்தான். சிறிது நேரத்தில் அங்கே வந்த தேவியைக் கண்டு காரில் இருந்து இறங்கினான் நாகா.

"என்ன நாகா இந்த நேரத்தில் கூப்பிட்டு இருக்கீங்க... யாராவது பார்த்தா...?" படபடப்புடன் கேட்டவளின் கண்கள் சுற்றிலும் அலைப்பாய்ந்தது.

"ஏன் நான் கூப்பிட கூடாதா...?" என்றவன் அவளை ஆழ்ந்து பார்க்க... அவன் பார்வையில் முகம் சிவந்தவள்,

"கூப்பிட்டது நீங்கங்கிறதால தான் வந்திருக்கேன்..." வெட்கப்பட்டுக் கொண்டு கூறியவளை ரசனையுடன் அவன் பார்க்கும் போதே...

"க்கும்..." விவேக் தொண்டயை கனைத்தான். அவன் செறுமலில் நாகா நியாபகம் வந்தவனாய்,

"தேவி... நீ சனா வீட்டில் போய் அவளோட அம்மாவை கூட்டிட்டு வர்றீயா...?" என்றவனைக் கேள்வியாய் பார்த்தவளிடம் காரின் பின்புற இருக்கையில் படுத்திருந்த சனாவை காட்டினான். அவள் படுத்திருந்த விதம் ஏதோ விபரீதத்தை உணர்த்த,

"இதோ கூட்டிட்டு வர்றேன்..." என்ன ஏது என்று கூடக் கேட்காமல் ஓட்டமாய் உள்ளே ஓடினாள் தேவி.

"எப்போ மச்சான் கல்யாணம்...?" விவேக்கின் குரலில் திடுக்கிட்டு போய் அவனைப் பார்த்தான் நாகா.

"எப்படிடா கண்டுப்பிடிச்ச...?" ஆச்சிரியமாய்க் கேட்டான் நாகா.

"ம்க்கும்... இதுக்கெல்லாம் ஜேம்ஸ்பாண்டையா வர சொல்ல முடியும்? அதான் மொச புடிக்கிற மூஞ்சியைப் பார்த்தாலே தெரியுதே... நீ தங்கச்சி கிட்ட வழியறதும்... அவங்க உன் கிட்ட உருகுறதும்... அப்பப்பா... கண் கொள்ளா காட்சி தான் போ..."

"இப்போ கொஞ்ச நாளா தான்..." நாகா வெட்கப்பட்டுக் கொண்டே சொல்ல...

"அட நாகாவுக்குக் கூட வெட்கம் வருதோ..." என்று அவனைக் கிண்டலடித்த விவேக்... "யார் கிட்டேயும் மயங்காத நீ சிஸ்டர் கிட்ட ஏன் மயங்கினேன்னு இப்ப புரியுது..." என்றவனைப் புரியாமல் நாகா பார்க்க...

"ஒரு பொண்ணோட ராத்திரி நேரம் வந்திருக்க... அப்படியிருந்தும் அதைப் பத்தி ஒரு வார்த்தை கேட்காம... உன்னைச் சந்தேகமும் படாம... நீ சொன்னதைக் கேட்டு அந்தப் பொண்ணோட அம்மாவை கூப்பிட ஓடுறாங்களே... ஷி இஸ் க்ரேட் மச்சான்... உண்மையில் நீ கொடுத்து வச்சவன்..."

விவேக் சொன்னதைக் கேட்டு நாகாவுக்குப் பெருமையாய் இருந்தது. அதே நேரம் தேவி தன் மேல் வைத்திருக்கும் நம்பிக்கை கண்டு அவன் உள்ளம் சிலிர்த்தது.

அதற்குள் சனாவின் அம்மா கலக்கத்துடன் அங்கே வந்தார். "தம்பி என் பொண்ணுக்கு என்ன ஆச்சி...?"

"பயப்படும்படியா ஒண்ணுமில்ல ஆன்ட்டி..." என்ற நாகா காரின் பின் கதவை திறந்துவிட்டான்.

தன்னை மறந்த நிலையில் படுத்திருந்த மகளைக் கண்டதும் அவரின் பெற்ற வயிறு துடித்தது. என்ன தான் நாகா தெரிந்த பையன் என்றாலும் அந்நிய ஆடவர் இருவர் முன் தன் மகளிருந்த நிலை அந்தத் தாயின் மனதை அவமானத்தில் கூனி குறுக செய்தது. "அய்யோ... சனா என்னடி காரியம் பண்ணி வைச்சிருக்க..." தலையிலடித்துக் கொண்டு அழுதவரை,

"ஆன்ட்டி... உங்க சத்தம் கேட்டு செக்யூரிட்டி என்ன ஏதுன்னு விசாரிக்கப் போறான்... வாங்க ஆன்ட்டி யாருக்கும் தெரியாம சனாவை வீட்டுக்கு கூட்டிட்டு போவோம்... மத்ததை வீட்டில் போய்ப் பேசிக்கலாம்..." தேவி அவரைச் சமாதானப்படுத்தியவள் சனாவை கைத்தாங்கலாகப் பிடிக்க...

சனாவின் அம்மாவும் மற்றொரு பக்கம் வந்து மகளைப் பிடித்துக் கொள்ள இருவரும் சேர்ந்து அவளை மின்தூக்கிக்கு அழைத்துச் சென்றனர். இது ஏதுமறியாத சனாவோ இன்னமும் போதையில் தான் இருந்தாள்.

"தேங்க்ஸ்டா விவேக்..." நண்பனுக்கு மனமாற நன்றி சொன்ன நாகா, "விவேக்... இதைப் பத்தி யாரிடமும்..." அவன் முடிக்கும் முன் குறுக்கிட்ட விவேக்,

"நானும் அக்கா, தங்கைகளுடன் பிறந்திருக்கிறேன் நாகா... யார்கிட்டேயும் எதையும் சொல்ல மாட்டேன்... நீ நிம்மதியாயிரு... குட்நைட்..." என்றபடி விடைப்பெற,

"குட் நைட் டா... நீ எடுத்த ஃபோட்டோஸை எனக்கு மெயில் பண்ணிரு விவேக்... நைட் ஆர்ட்டிக்கிள் எழுதி முடிச்சு பிரஸ்க்கு அனுப்பிட்டு தான் தூங்கணும்..." நாகா சொல்ல சரியென்பது போல் தலையசைத்த விவேக் காரை கிளப்பினான்.

நாகா நேரே சனாவின் வீட்டை நோக்கி தான் சென்றான். அவன் நினைத்தது போல் தேவி அங்கே தான் இருந்தாள். அவனைக் கண்டதும் சனாவின் அம்மா புலம்ப ஆரம்பித்துவிட்டார்.

"பிரெண்ட் வீட்டுல பார்ட்டின்னு தான் சொல்லிட்டு போனா... சரின்னு நம்பி அனுப்பி வச்சேன்... இவ்வளவு நேரம் வராமல் இருக்கவும் பயம் பிடிக்க ஆரம்பிச்சது. இவ அப்பா வேற ஊரில் இல்லை... யார் கிட்ட கேட்கிறது... எங்கே போய் விசாரிக்கிறது தெரியாம முழிச்சிட்டு இருந்தேன். பார்த்தா நீங்க கூட்டிட்டு வந்திருக்கீங்க... இவளை எங்கே தம்பி பார்த்தீங்க... குடிச்சியிருக்காளா...?" கவலையுடன் கேட்ட

தாய்க்கு என்ன பதில் சொல்வது என்று நாகாவுக்குத் தெரியவில்லை.

"அது வந்து ஆன்ட்டி..." கொஞ்சம் தயங்கியவன், பின் சொல்லித்தானாக வேண்டும் என்று எண்ணி எல்லாவற்றையும் அவரிடம் சொன்னான்.

"ஆன்ட்டி... பார்ட்டிக்கு அனுப்பறது தப்புன்னு சொல்லல... ஆனா எந்த மாதிரி பார்ட்டி... எந்த நேரத்தில்... எந்த இடத்தில்... இதை எல்லாம் நல்லா விசாரச்சிட்டு அனுப்பணும்... இதுக்குப் பதில் சொல்ல முடியாம கொஞ்சம் தயங்கினா கூட அவளை நீங்க அனுப்ப கூடாது... அப்படி அவள் சொல்ல தயங்கற இடம் எப்படிப்பட்ட இடம்ன்னு நீங்க தான் அவளுக்கு எடுத்து சொல்லணும்... சனான்னு இல்ல இன்னைக்குப் பல டீன்ஏஜ் பொண்ணுங்க இப்படித்தான் இருக்காங்க... நல்ல நேரத்தில் நான் போனேன்... இல்லைன்னா அந்த விபரீதத்தை என்னால் நினைச்சு கூடப் பார்க்க முடியல..."

அவன் சொல்லும் போதே அந்த விபரீதத்தை எண்ணி பார்த்த சனாவின் அம்மா... தன் மகள் எப்படிப்பட்ட ஆபத்தில் இருந்து தப்பித்திருக்கிறாள் என்பது புரிய கண்களில் நீர் வழிய நாகாவை பார்த்து கையெடுத்து கும்பிட்டு,

"என் மகள் மானத்தைக் காப்பாத்திய நீ தெய்வம் தம்பி..." என்க...

"என்ன ஆன்ட்டி இது...?" பதறியவனாய் அவரின் கையைப் பிடித்துக் கீழே இறக்கியவன்,

"நாளைக்குக் காலையில் வந்து சனாவை பார்க்கிறேன்..." என்று அவரிடம் விடைப்பெற்றவன் கண்களால் தேவி வெளியே வருமாறு அழைத்தான். தேவியும் அவரிடம் விடைப்பெற்றவள் வெளியில் வந்தாள்.

"தேங்க்ஸ் நாகா..." என்றவள்,

"சரி நான் போகட்டுமா...?" என்றவளை பார்த்து மறுத்து தலையசைத்தவன் அவளின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு மின்தூக்கியை நோக்கி சென்றான்.

"என்ன நாகா இது...?" அவள் சலித்தாலும் அவன் இழுத்த இழுப்பிற்குச் செல்ல தயங்கவில்லை.

மின்தூக்கியில் நுழைந்ததும் நாகா கண்களை மூடி கொண்டு சுவற்றில் சாய... அவனின் மனநிலை அவளுக்குப் புரியவில்லை என்றாலும் அவனின் இந்த நிலை அவளை ஏதோ செய்ய... அவனின் அருகில் வந்து அவனின் கையை இறுக பற்றிக் கொண்டாள். அதில் கண் திறந்தவன் அவளைப் பார்த்து புன்னகைத்து தானும் அவளின் கையைப் பற்றி இறுக்கி கொண்டான்.

தன்னை அழைத்துக் கொண்டு மொட்டை மாடிக்கு வந்த நாகா... இருளை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்க... தேவி அவனைப் புரியாமல் பார்த்தவள்,

"நாகா..." அவன் தோளை தொட... அடுத்த நொடி அவனின் இறுகிய அணைப்பில் அவள் இருந்தாள். முதலில் அவள் உடல் விறைத்தாலும் அவனின் மனநிலை கண்டு அவனுக்கு அடங்கி நின்றாள்.

"இன்னைக்குச் சனாவை அந்தக் கோலத்தில் பார்த்ததும் எனக்கு ஷாக் அடிச்ச மாதிரி இருந்தது... நான் மட்டும் சரியான நேரத்துக்குப் போகலைன்னா..." அந்த நிகழ்வை நினைத்தானோ என்னமோ அவன் உடல் ஒரு நொடி சிலிர்த்து அடங்கியது. அங்கு நடந்ததை அவளிடம் ஒன்றுவிடாமல் சொல்லியவன்,

"ஏன் தேவி இப்படிப் பண்றாங்க...? ஒரு சின்னப் பொண்ணைப் போய்... இவங்க எல்லாம் மனுசங்க தானா?" கோபமும், ஆதங்கமும் சேர்ந்து ஒலித்தது அவனது குரலில். தேவியால் ஒன்றும் பேச முடியவில்லை. இதைக் கேள்விப்பட்டதும் அவளுக்குமே சற்று ஒரு மாதிரியாக இருந்தது. அப்போது தான் தேவியைத் தான்

அணைத்திருப்பதை உணர்ந்தவன் அவசரமாய் அவளை விடுவித்தவன்,

"சாரி தேவி... சாரிம்மா..." அவளிடம் மன்னிப்பு வேண்ட...

"என்னால உங்களுக்கு அமைதியை தர முடியுதுன்னா... இதுக்காக நீங்க வருந்த தேவையில்லை..." என்றவளின் கையைப் பிடித்தவன்,

"தேங்க்ஸ்..." என்றான் மனப்பூர்வமாக...

அவள் அவனைப் பார்த்து புன்னகைக்க... அதில் அவனின் மனசஞ்சலம் எல்லாம் மாயமாய் மறைந்து போவதை அவன் நிறைவாய் உணர்ந்தான். காதலிலும் கண்ணியம் காக்கும் அவன் மேலும் தீரா பழிச் சொல்லை ஒரு பெண் சுமத்த போவதை பாவம் அந்நேரம் அவன் உணர்ந்திருக்கவில்லை.

மறுநாள் காலையில் சனாவின் வீட்டிற்கு நாகா சென்ற போது அழுதழுது வீங்கி போன முகத்துடன் சனா அமர்ந்திருந்தாள். அவனைக் கண்டதும் அவன் கண் நோக்க முடியாமல் தலையைக் குனிந்து கொண்டவள் கண்ணிலிருந்து ஆறாய் கண்ணீர் பெருகி வழிந்தது.

"சனா..." அவன் கூப்பிட்டும் அவள் நிமிரவில்லை.

"இப்போ அழுது என்ன பிரயோஜனம்... இந்த அறிவு முதலிலேயே இருந்திருக்கணும..." அவளின் அம்மா சனாவை கடிந்தார்.

"ஆன்ட்டி... பாவம் அவளே நொந்து போயிருக்கா... இந்த நேரத்தில் தான் நீங்க அவளுக்கு ஆறுதலாய் இருக்கணும்... நீங்களே இப்படிப் பேசினா எப்படி ஆன்ட்டி...?" அவன் பேசியது கேட்டு மெல்ல தலையை உயர்த்தி அவனைப் பார்த்தாள் சனா.

"சனா... ஒரு அண்ணனா நான் சொல்ற அட்வைசை கேட்ப தானே..." அவன் தன்னைச் சகோதரன் என்று சொன்னதும்... அவள் கண்ணில் இனம் புரியாத ஒரு

உணர்வு வந்து போனது. அதன் பின் அவள் கண்ணில் கண்ணீர் நிற்காமல் வழிந்தது.

"நீ எப்படி அங்கே போன...?" அவன் கேட்டதும்...

"என் பிரெண்ட் ஒருத்தன் பார்ட்டிக்கு வான்னு கூப்பிட்டான்... நான் இதுவரை பார்ட்டி பார்த்தது இல்லை... அதான் எப்படியிருக்குன்னு பார்க்கலாம்ன்னு போனேன்..." தேம்பியபடி சொன்னவளை கண்டு அவனுக்கு இரக்கம் சுரந்தது.

"நீ பார்ட்டிக்குப் போனது தப்பில்லை... ஆனா யார் கூட... எங்கே போறோம்ன்னு யோசிக்க வேணாம்... பாரு உன்னோட ஆர்வக்கோளாறு எங்கே கொண்டு வந்து நிறுத்தியிருக்குன்னு... இனிமேலாவது பிரெண்டசை செலக்ட் பண்ணும் போது பார்த்து பண்ணு... உனக்குச் சொல்லி தெரிய வேண்டியதில்லை... இந்த வயசு எல்லாத்தையும் அறிஞ்சிக்கத் துடிக்கிற வயசு தான்... ஆனால் அது எந்த மாதிரி தேடல் என்பதில் ஒரு வரைமுறை வச்சுக்கிட்டேன்னா... எந்த ப்ராப்ளமும் இல்லை..." அவன் சொன்னதைக் காது கொடுத்து கேட்டவள்... தன் அன்னை அந்தப் பக்கம் நகர்ந்ததும்,

"நான் கெட்ட பொண்ணுங்கிறதால தான் என்னைச் சிஸ்டராக்கிக்கிட்டீங்களா...?" அறியாமையுடன் கேட்டவளை கண்டு அவனுக்குக் கோபம் வரவில்லை. மாறாகச் சிரிப்பு வந்தது.

"உனக்கு என்ன வயசு... எனக்கு என்ன வயசு...? ம்..." என்று கேட்டவனுக்கு அவளால் பதில் சொல்ல முடியவில்லை.

"நான் போய் உன்னை எப்படிக் காதலிக்க முடியும்...? நீ சொன்னாலும் சொல்லாவிட்டாலும் எனக்கு நீ சின்னத் தங்கை தான்... உனக்கு ஒரு விசயம் தெரியுமா...? நான் கூடிய சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்... பொண்ணு யார் தெரியுமா... உங்க தேவிக்கா தான்..." அவன் முதலில் சொன்னதைக் கேட்டு மனம் வாடியவள்... அடுத்து அவன் சொன்னதைக் கேட்டு முகம் மலர்ந்தாள்.

"ஐய்... தேவிக்காவா...? குட் சாய்ஸ்..."என்று குதூகலித்தவளை வாஞ்சையுடன் பார்த்தவன் மனதில், 'இவள் சின்னப் பெண் இல்லாமல் வேறென்ன...' அவளை நினைத்து இரக்கம் சுரந்தது. அந்த நேரம் பார்த்துத் தேவி அங்கே வர,

"அண்ணி..." என்று சனா அவளைப் பார்த்து கூவ... தேவியோ ஒன்றும் புரியாமல் நாகாவை பார்க்க... அவனோ குறும்பாய் அவளைப் பார்த்தவன் யாருக்கும் தெரியாமல் அவளைப் பார்த்துக் கண்ணடித்தான்.

"அண்ணியா..." புரியாமல் விழித்தவள் சனாவை பார்க்க...

"நாகா சார் எனக்கு அண்ணான்னா... நீங்க எனக்கு அண்ணி தானே..." உற்சாகமாய்ப் பேசிய சனாவை ஆச்சிரியமாய்த் தேவி பார்க்க... அப்போது அங்கே வந்த சனாவின் அம்மா,

"ஓஹோ... அதான் நேத்து தம்பி உன்னைக் கூப்பிட்டுச்சா...?" என்று கிண்டலடித்தவர்,

"ரெண்டு பேருக்கும் ஜோடி பொருத்தம் ரொம்ப நல்லாயிருக்கு..." அதில் முகம் சிவந்த தேவி ஓரக் கண்ணால் நாகாவை பார்க்க அவனும் அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

இவர்களின் காதல் கதையில் சனா செய்த தவறு பின்னுக்குத் தள்ளப்பட்டு விட அங்குச் சந்தோசம் மட்டுமே குடி கொண்டது. சிறிது நேரம் பேசிவிட்டு நாகாவும், தேவியும் கிளம்பி வெளியில் வந்தனர்.

"என்ன நாகா இது... உடனே நம்ம விசயத்தை எல்லார் கிட்டேயும் சொல்லிறணுமா...?" செல்லமாய்ச் சிணுங்கினாள் அவள்.

"ஏன் என்னை விட்டு ஓடி போகும் எண்ணமிருக்கா..." அவனின் வார்த்தையில் திடுக்கிட்டவள் அவனைப் பாவமாய்ப் பார்த்தாள்.

"ஐய்யோ என்ன நாகா இது..." என்றவளின் கண்ணில் கண்ணீர் நிறைந்தது.

"அப்புறம் என்ன? என்னைக்கு இருந்தாலும் தெரிய வேண்டியது... இப்போ தெரிஞ்சி போச்சு அவ்வளவு தான்..." அசால்ட்டாய் தோளை குலுக்கியவனைக் கண்டு பயமாய் இருந்தது தேவிக்கு.

"எனக்கு உங்க வேகம் பார்த்து பயமாயிருக்கு..."

"இதுக்கே இப்படின்னா... மத்ததுக்கு...?" கண்ணைச் சிமிட்டியவன் கூறியதன் அர்த்தம் புரிந்தவள் முகம் குங்குமமாய்ச் சிவந்தது.

அன்றைய தினமே அவர்களின் காதல் அந்தக் குடியிருப்பு முழுவதும் பரவியது. முதலில் அவர்களை வாழ்த்தியவர் நம் வேலாயி பாட்டி தான். தன்னைப் போல் தனிமையில் தவிக்கும் அந்த இளங்குருத்து இரண்டும் ஜோடி சேர்ந்ததில் அவருக்கு மிகவும் சந்தோசமாயிருந்தது.

அதே தினத்தில் அவனின் பத்திரிக்கையில் வெளியான பண்ணை வீட்டு விருந்தை பற்றிய தகவல் கண்டு நேர்மையான காவல் துறை ஆணையர் அதை விசாரிக்கத் தனிப்படையை அமைக்க... அந்தப் படை உடனே சென்று அந்தப் பண்ணை வீட்டை முற்றுகையிட்டது.

இரவு நடந்த களியாட்டத்தின் சோர்விலும், மது, மாது போதையிலும் அங்கேயே தங்கியிருந்தவர்களை அள்ளி கொண்டு சென்றது அந்தப் படை. அந்த விஜபியின் மகன் மேகநாதனின் சீமந்திர புத்திரன் தான். மயில்வாகனத்தின் மகன் அவனுக்கு உடந்தை.

விசயம் கேள்விப்பட்டு மேகநாதன் விரைந்து சென்று இருவரையும் காப்பாற்ற நினைக்க... அதற்குள் செய்தியாளர்கள் அவர்கள் இருவரையும் புகைப்படம் எடுத்து தள்ளிவிட்டனர். நிலமை கை மீறி போய்விட்டதை உணர்ந்தவரால் ஒன்றும் செய்ய முடியாமல் போனது. இதைக் கேள்விப்பட்ட கட்சி மேலிடம்,

"என்னய்யா இது... அவன் உன்னைப் பத்தி ஒண்ணு மாத்தி ஒண்ணு எழுதறான்... அவன் வாயை அடைக்க உன்னால் ஒண்ணும் பண்ண முடியலையா...? இப்போ பாரு கட்சிக்கு தேவையில்லாத கெட்ட பேரு... முதல்ல நீ பதவியை ராஜினாமா பண்ணு..."

"அய்யா..." மேகநாதன் பதற...

"இப்போ இருக்கிற நிலமையில் நீ இதைச் செய்யலைன்னா... அப்புறம் உன்னால எப்பவுமே தேர்தல்ல ஜெயிக்க முடியாது... கொஞ்ச நாள் போகட்டும்... வேற பிரச்சினையில மக்கள் இதை மறக்கட்டும்... நானே அமைச்சரவை விரிவு பண்றேன் இதை விடப் பவர்புல் போஸ்ட் உனக்குத் தர்றேன்..."

மேலிடம் சொல்லவும் தான் மேகநாதனுக்கு மூச்சு வந்தது. தலைவருக்கு நன்றியுரைத்துவிட்டு வெளியில் வந்த மேகநாதனின் மனதில் நாகாவின் மீதான பழியுணர்ச்சியே அதிகமாயிருந்தது. மயில்வாகனத்தை அலைப்பேசியில் அழைத்தவர்,

"டேய் மயில்... அந்தப் பயலை ஒரேடியாய் தூக்கணும்டா... நம்ம ரெண்டு பேரை மட்டுமில்லாமல் நம்ம பசங்க பத்தியும் எழுதிய அவன் கையை உடைச்சு... அவன் கைவிரல்களை ஒவ்வொண்ணா வெட்டி... சித்ரவதை செஞ்சு அவனைச் சாகடிக்கணும்டா..." ஆத்திரத்தில் அவர் பொரிய தொடங்கவும்...

"நாதா... சொல்லிட்டேல்ல... அவனை நான் பார்த்துக்கிறேன்... இதுல நீ தலையிட வேணாம்... உன் பதவி தான் எனக்குப் பாதுகாப்புக் கவசம்... நீ ஒதுங்கியிரு... நான் பார்த்துக்கிறேன்..." என்ற மயில்வாகனம்... நாகாவை போட்டுத் தள்ளுவதற்கான திட்டத்தைத் தீட்ட ஆரம்பித்தார்.

********************

"நாகா... எங்கே போறோம்ன்னு சொல்லுங்களேன்...?" கேட்டபடி தேவி நாகாவின் மோட்டார் சைக்கிளின் பின்புறம் ஏறியமர்ந்தாள்

"வழக்கமா லவ்வர்ஸ் எல்லாம் எங்கே போவாங்க பீச்சுக்கு தான்..."

தேவியின் கேள்விக்குப் பதிலளித்தவாறு தன் மோட்டார் சைக்கிளை கிளப்பியவன் தன் வேகத்தை அதிகப்படுத்தினான். அவனின் வேகத்தில் நிலைக்குலைந்து தடுமாறிய தேவி பயத்தில் அவனின் தோளை இறுக பற்றிக் கொண்டாள். அதைக் கண்டு தனக்குள் சிரித்தபடி இன்னமும் வேகத்தை அதிகப்படுத்தினான் அந்தக் காதல் கள்வன்.

அவளும் அவனும் காதலிக்க ஆரம்பித்துப் பத்து நாட்களாகியிருந்தது. அதைக் கொண்டாட அவளைக் கடற்கரைக்கு அழைத்து வந்திருந்தான். இந்த இடைப்பட்ட தினத்தில் அவனின் காதல் வளர்ந்த அளவு வைஷ்ணவியுடனான அவனின் நட்பும் வளர்ந்திருந்தது. அவனின் நட்பு தேவிக்கும், அவனின் காதல் வைஷ்ணவிக்கும் நன்கு தெரியும். இதில் ஒளித்து மறைக்க வேண்டிய அவசியம் ஏதுமிருப்பதாய் அவனுக்குத் தோணவில்லை.

கடற்கரையில் வந்து அமர்ந்தவர்களுக்குப் பேசுவதற்கு நிறைய விசயங்கள் இருந்தது. அதில் முக்கியமானது அவர்களின் எதிர்கால வாழ்க்கை. கண்கள் மின்ன கனவுகளுடன் அவளுடன் தான் வாழ போகும் வாழ்க்கையை அவன் கூற...

அவளோ மனதில் விரிந்த கற்பனையில் அந்த நொடி அவனோடு வாழ்ந்து கொண்டிருந்தாள். கணவன், மனைவி ஆகாமலேயே மனதால் அதை உணர்ந்தவர்கள் மனம் நிம்மதியிலும், சந்தோசத்திலும் நிறைந்திருந்தது. அதே மகிழ்ச்சியுடன் கடற்கரை மணலிலிருந்து எழுந்தவர்கள் தங்கள் வாகனத்தை நோக்கி நடந்தனர். வாகனம் அருகில் செல்லும் போது தான் அந்த விபரீதம் நடந்தது.

எங்கிருந்தோ மோட்டார் சைக்கிளில் வந்த இருவரில்... பின்புறம் அமர்ந்திருந்தவன் தன் கையிலிருந்த கத்தியை கண்ணிமைக்கும் நேரத்தில் சாலையோரம் நின்றிருந்த நாகாவின் முதுகில் பாய்ச்சினான். காதலில் மூழ்கியிருந்த நாகாவும் தனக்கு வந்த ஆபத்தைப் பற்றிக் கொஞ்சமும் சிந்திக்கவில்லை. கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்து முடிந்தது அந்தக் கொலை சதி...

"நாகா..." என்று அலறிய தேவியின் குரலில்...

மண்ணில் சரிந்து விழுந்து கொண்டிருந்த நாகாவின் கண்கள் அவள் மீது நிலைத்தது. அவள் கண்களில் வழிந்த கண்ணீரை துடைக்க அவனின் மனம் துடித்தது. ஆனால் அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை...

"தேவி..." என்று முணுமுணுத்தவனின் கண்கள் இருட்டி கொண்டு வர அவன் அப்படியே வேரற்ற மரம் போல் மண்ணில் சரிந்தான்.

நாகாவின் கண் தான் மூடியிருந்ததே தவிர அவனின் இதயம்... அதில் குடி கொண்டிருப்பவளுக்காக... அவளின் கண்ணீரை துடைப்பதற்காக... அவளோடு நூறாண்டு வாழ வேண்டுமென்ற ஆசையில் நிற்காமல் துடித்துக் கொண்டிருந்தது. தேவியுடனான கனவு வாழ்க்கை நனவாகாமல் கனவாகவே போய்விடுமோ என்ற அச்சத்தில் அவன் மரணத் தேவனுடன் மரணப் போராட்டம் நடத்தி கொண்டிருந்தான். இறப்பிற்குப் பயப்படாத அவனின் உயிர் முதன்முறையாகத் தன்னவளுக்காக உயிர் வாழ ஆசை கொண்டது.

“நிலையில்லாத வாழ்வு
என்று தெரிந்திருந்தும்...
நிலைக்கச் சொல்லி
துடிக்கிறதே என் நெஞ்சம்...!
கோதையவள் கோலவிழிகள்
கார்கால மேகமாய் மாறியதை...
கண்ட பின்னும் என்னுயிர்
என்னை விட்டு பிரியுமோ...!

என்னுயிரான உன்னைத் தேடி
நான் மீண்டும் மீண்டு வருவேன்...!
என்னுயிர் சுமந்து உன்னுயிராய்...
உன்னுள் சரணடைவேன் அன்பே...!
காத்திருப்பாயா கண்மணியே...?
நான் உயிர்த்தெழும் நாளுக்காக...!!!"

சதி தொடரும்...!!!

அதிகாலை இருளை வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்த தேவியின் மனதில் பலவித உணர்ச்சி போராட்டங்கள் அடுத்தடுத்து எழும்பி அவளை நிலைக்குலைய செய்தது. தான் தோற்றுவிட்டோமோ என்ற எண்ணமே அவளை உயிரோடு கொன்றது. அவள் மனம் முழுதும் நாகாவை பற்றிய எண்ணங்களே...

அன்று கத்தி குத்துப்பட்டுச் சுயநினைவு இல்லாமல் இருந்தவனை மருத்துவமனையில் சேர்த்து... அவனுக்கு ஆபத்து இல்லை என்று தெரிந்த பின்பு தான் அவளால் நிம்மதியாக இருக்க முடிந்தது. கொலையாளி போகிற போக்கில் அவசரமாகக் கத்தியை சொருகியது ஆழமாய் அவனுள் இறங்கவில்லை... ரத்த சேதம் கொஞ்சம் அதிகம் தான்... ஆனால் அவனின் உயிர்க்கு எந்தவித ஆபத்துமில்லை.

அதன்பின் அவனின் வீட்டிற்குத் தெரியப்படுத்த வேண்டுமென்றால் அவனின் வீடு எங்கிருக்கிறது... அங்கு யார் யார் இருக்கிறார்கள் என்ற விபரங்கள் எதுவும் அவளுக்குத் தெரியாது. நாகாவும் இதுவரை அது எதையும் சொல்லவில்லை... அவளும் அதைப் பற்றி அவனிடம் கேட்கவும் இல்லை.

அவளின் நினைவில் இருந்தது நாகா மட்டும் தான். அவன் வேலை செய்த பத்திரிக்கை அலுவலகத்துக்குத் தொலைப்பேசியில் அழைத்தவள் அன்று நாகாவுடன் வந்தவன் பெயரை நினைவு கூர்ந்து விவேக்கை அழைத்துப் பேசினாள். தகவலை கேள்விப்பட்டதும் தான் விரைந்து வருவதாக அவன் கூறினான்.

சொன்னது போல் அங்கே வந்து சேர்ந்த விவேக் நண்பனின் நிலை கண்டு திகைத்துப் போனான். உடனே சேஷாத்திரியை அழைத்து விசயத்தைச் சொல்லிவிட்டான். அவனுக்குமே நாகாவின் குடும்ப விபரங்கள் ஏதும்

தெரியாது. ஒருவேளை சேஷாத்திரிக்குத் தெரிந்திருக்கும் என்றும் தான் அவருக்கு அவன் சொன்னது.

"நீங்க அவர் கூடக் கொஞ்சம் இருங்க... நான் வீட்டுக்கு போயிட்டு வந்துடறேன்..." என்ற தேவியைப் பார்க்க விவேக்கிற்குப் பரிதாபமாக இருந்தது.

"நீங்க போங்க சிஸ்டர்... நான் அவனைப் பார்த்துக்கிறேன்... என்னோட நம்பரை சேவ் பண்ணி வச்சுக்கோங்க சிஸ்டர்..." விவேக் தன் எண்ணை அவளிடம் கொடுக்க...

அதைக் குறித்து வைத்து கொண்டாள். கிளம்பும் முன் நாகாவை ஒரு முறை பார்த்துவிட்டு அங்கிருந்து கிளம்பினாள். அது தான் அவள் அவனைக் கடைசியாகப் பார்த்தது.

வீட்டிற்கு வந்து குளித்துவிட்டு வேலை செய்யும் பள்ளிக்கு சென்று விடுப்பு சொல்லிவிட்டு அவள் மருத்துவமனை வந்தடைந்த போது... நாகா என்ற ஒரு நோயாளி அங்கே இருந்ததுக்கான சுவடே இல்லை. ஆம்... அவன் அனுமதிக்கப்பட்டு இருந்த அறையில் வேறு நோயாளி இருந்தார்.

வரவேற்பறையில் நாகா என்ற பெயரில் யாரும் அனுமதிக்கப்படவில்லை என்று உறுதியாக மறுத்தார்கள். தான் தானே கொண்டு வந்து சேர்த்தோம்... அதற்குள் எப்படி அவன் காணாமல் போக முடியும்...? திரும்பத் திரும்ப அழுத்தி கேட்டவளை பைத்தியம் போல் அவர்கள் பார்க்க... அவளுக்குக் கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போலிருந்தது. உடனே விவேக்கிற்கு அழைத்தாள்...

"அண்ணா... அவர் எங்கேண்ணா...?" கேட்ட விதத்தில் அது தேவி என்று அவனுக்குப் புரிந்து போக...

"என்னம்மா சொல்ற... ஹாஸ்பிட்டல்ல இல்லையா...?"

"இல்லைண்ணா... எனக்குப் பயமாயிருக்கு..." அவளின் பதிலில் அவனும் குழம்பி தான் போனான்.

"நீ வீட்டுக்கு போம்மா... நான் விசாரிச்சிட்டு உனக்கு ஃபோன் பண்றேன்..."

"அண்ணா... உங்களைத் தான் மலை போல் நம்பியிருக்கேன்..." அவளின் குரல் அவன் நெஞ்சை அறுத்தது. அவளைச் சமாதானப்படுத்தியவன் நேரே தன் அலுவலகத்திற்கு வண்டியை செலுத்தினான்.

சேஷாத்திரி வந்ததும் அவர் வசம் நாகாவை ஒப்படைத்துவிட்டு அவன் ஒரு முக்கிய வேலையாய் வெளியில் கிளம்பினான். அதன் பின் தான் நாகா காணாமல் போயிருக்கிறான். சிறிது நேரம் யோசித்தவனுக்கு இப்போது தான் புரிந்தது அந்த வேலை தானாய் வரவில்லை...

வேண்டுமென்றே அவனுக்குக் கொடுக்கப்பட்டது என்று. அலுவலகத்தில் வண்டியை நிறுத்தியவன் புயல் வேகத்தில் சேஷாத்திரி இருந்த அறையை நோக்கி சென்றான். அங்கே எதையோ எழுதி கொண்டிருந்த அவர் அவனின் வரவு கண்டு நிமிர்ந்து பார்த்தார். அவனின் முகம் கண்டு அவர் முகம் யோசனையில் ஆழ்ந்தது.

"நாகா எங்கே சார்...?" நேரிடையாய் விசயத்திற்கு அவன் வந்தான்.

"சேர்க்க வேண்டிய இடத்தில் சேர்த்துட்டேன்... பாதுகாப்பா, பத்திரமா அவன் இருக்கான்..." கொஞ்சமும் அலட்டி கொள்ளாமல் அவர் கூற... நாகாவிற்கு ஒன்றுமில்லை என்றதும் அவன் சற்று ஆசுவாசமடைந்தான்.

"எனக்கு அவனைப் பார்க்கணும்..."

"இப்போ அவனை யார் பார்க்கவும் அனுமதி கிடையாது..." திட்டவட்டமாய் மறுத்தவரை கூர்ந்து பார்த்தவன்,

"சார்... நீங்க அவன் விசயத்தில் ரொம்பத் தலையிடுறீங்கன்னு நினைக்கிறேன்... உங்களுக்கும் அவனுக்கும் என்ன தொடர்புன்னு கண்டுப்பிடிக்கிறேன் சார்..." என்றவன்,

"ப்ளீஸ் சார்... அவனுக்காக..." தேவியைப் பற்றிச் சொல்ல வாயெடுத்தவன் பின்பு அதைக் கைவிட்டான்.

ஏனெனில் நாகா சொல்லாமல் அவனின் காதலை பற்றித் தான் கூறுவது சரியில்லை என்று வாயை இறுக மூடி கொண்டான்.

"அப்போ அவன் இருக்கிற இடம் சொல்ல மாட்டீங்க..." கடைசியாய் ஒருமுறை கேட்டான் அவன்.

"ம்ஹூம்... சொல்ல மாட்டேன்... நீ இவ்வளவு கேட்கிறதால ஒண்ணு மட்டும் சொல்றேன்... அவன் அப்பா, அம்மாவோட தான் இருக்கான்... அதனால அவனைப் பத்தி நீ கவலைப்படாதே... உன்னளவுக்கு அவன் மேல் எனக்கும் அக்கறை இருக்கு..."

"எல்லாம் சரி தான் சார்... அதை ஏன் நீங்க மர்ம நாவல் போல ரொம்பச் சீக்ரெட்டா செய்றீங்கன்னு தான் எனக்குத் தெரியல..."

"இது அவனோட ஆர்டர்ப்பா... அவன் சம்பந்தப்பட்ட எந்த விசயமும் யாருக்கும் தெரிய கூடாதுன்னு கண்டிசன் போட்டுட்டு தான் வேலைக்குச் சேர்ந்தான்... இதில் என் தப்பு எதுவுமில்லை..." அவரின் பதிலில் ஒன்றும் பேசாமல் வெளியில் வந்தவன் தேவிக்கு அழைத்தான். விசயத்தைக் கூறியவன்,

"அவன் உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லைம்மா... ஆனால் அவனைச் சுத்தி நடக்கிற விசயங்கள் தான் ஒண்ணுமே புரிய மாட்டேங்குது..." அதைக் கேட்ட தேவியால் அழ தான் முடிந்தது.

"நீ அழாதேம்மா... ஆனா ஒண்ணு மட்டும் என்னால் உறுதியா சொல்ல முடியும்... அவன் ரொம்ப நல்லவன்... அவனுக்கு உடம்பு கொஞ்சம் சரியானா கூட அவன் உன்னைத் தேடி வந்துடுவான்... அதனால கவலைப்படாதே..."

விவேக்கின் நம்பிக்கை அவளுக்குச் சற்று தெம்பளிக்க... அன்றிலிருந்து அவனின் வரவிற்காகக் காத்திருந்தாள். இன்றோடு பதினைந்து நாட்கள் ஓடிவிட்டது. ஆனால் அவளின் நம்பிக்கை மட்டும் கொஞ்சமும் குறையவில்லை.

வீட்டின் அழைப்புமணி ஓசையில் தன் யோசனை கலைந்தவள் கதவை திறக்க சென்றாள். வேலாயி பாட்டியாய் இருக்கும் என்று எண்ணி கதவை திறந்தவள் அங்கே புன்னகையுடன் நின்றிருந்த நாகாவை அவள் சத்தியமாய் எதிர்பார்க்கவில்லை. அவனைக் கண்ட சந்தோசத்தில் கால்கள் இரண்டும் தொய்ந்தது போல் நிற்க முடியாமல் கதவின் மேல் சாய்ந்தவள் கண்களில் கண்ணீர் மழை.

"தேவி..." அவனுக்கும் அவளைப் பார்க்காத தவிப்பு இருந்ததோ என்னமோ அத்தனை காதலாய் ஒலித்தது அவனது குரல்.

அவள் பதில் பேசாமல் அவன் உள்ளே வருவதற்கு ஏதுவாய் வழிவிட்டு நின்றவள்... அவன் உள்ளே வந்ததும் கதவை அடைத்து தாள் போட்டவள்... அந்தக் கதவின் மீதே சாய்ந்து நின்று தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.

"தேவி..." மறுபடியும் அவன் அவளை அழைக்க... அடுத்த நொடி அவள் அவனைக் காற்று கூடப் புகாதபடி இறுக தழுவியிருந்தாள்.

தேவியின் இத்தகைய செயலை நாகா கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. இத்தனை நாள் பார்க்க வராததற்குத் தன்னிடம் கோபப்படுவாள், திட்டுவாள், முகம் திருப்பிக் கொள்வாள் என்று பல கற்பனையில் அவன் வந்திருக்க... அவளின் இந்த அழுகையையும், தழுவலையும் கண்டு திகைத்து தான் போனான்.

"ஏன் இப்படிச் சொல்லாம கொள்ளாம காணாம போனீங்க...? ஒரு ஃபோன் கூடவா பண்ண கூடாது... நான் எப்படி எல்லாம் தவிச்சுப் போயிட்டேன் தெரியுமா...?" தன்

கண்ணைப் பார்த்துக் கேட்டவளிடம் என்ன பதில் கூறுவது என்று அவனுக்குத் தெரியவில்லை...

அவனுக்குக் கொலை முயற்சி நடந்ததைக் கேள்விப்பட்டு வந்திருந்த அவனின் அன்னை அவனைத் தன்னோடு அழைத்துக் கொண்டு போய்விட்டார். அவனுக்கு அலைப்பேசி கூட மறுக்கப்பட்டது.

"போதும்டா... நீ கோவில் மாடு மாதிரி ஊரை சுத்தியது... இப்போ எனக்கு மகனா... சமத்தா வீட்டில் இரு... அது போதும்..."

கட்டளையிட்டு விட... தாயின் பேச்சை தட்ட முடியாதவனாய் இவ்வளவு நாள் இருந்தவன்... ஓரளவு உடல் குணமடைந்ததும் தேவியைப் பார்க்க வேண்டும் என்ற ஏக்கத்தில் அவரைச் சமாளித்து அவளைக் காண இங்கே வந்துவிட்டான். இங்கே வந்தவன் அவளின் காதலில் சிக்குண்டு தவித்தான்.

அவன் வாழ்க்கையில் வந்த இரு பெண்களும் ஏதோ ஒரு விதத்தில் அவனை ஆட்டுவித்தனர். ஆனால் அதுக்கு எல்லாம் மூலக்காரணம் அன்பு தான்... தாயின் பாசத்துக்குக் கட்டுப்பட்டது போல்... தன்னவளின் நேசத்துக்கும் அவன் கட்டுப்பட்டான். ஆனாலும் அன்னையைப் பற்றி அவளிடம் சொல்லவில்லை.

"சாரிம்மா... வெரி வெரி சாரிம்மா... உன்னை ரொம்பத் தவிக்க விட்டுட்டேனோ..." தவிப்புடன் கேட்டவனின் தவிப்பு அவளை ஏதோ செய்தது.

"ம்... ரொம்ப..." என்றவள் எதிர்பாராதவிதமாய்த் தன் இரு கரம் கொண்டு அவனின் முகத்தைத் தன் அருகில் இழுத்தவள் அவன் முகம் முழுவதும் முத்த மழை பொழிந்தாள்.

அதில் முதலில் அதிர்ந்தவன் பின் அவள் விருப்பம் போல் அவளின் கையில் அடங்கி நின்றான். காதலிப்பதை விடக்

காதலிக்கப்படுவது எவ்வளவு சுகம் என்பதை அந்த நேரம் அவனுக்கு அவள் உணர்த்தினாள்.

"ப்ளீஸ் தேவி போதும்..." அவன் குரல் ஒரு மாதிரியாய் ஒலித்தது. அவளோ அதை உணரவில்லை. இத்தனை நாள் தன் தவிப்பை அவனுக்கு உணர்த்துவதில் குறியாய் இருந்தவள் அவனின் தவிப்பை உணர தவறிவிட்டாள்.

"சொன்னா கேட்க மாட்டியா தேவி... காதலில் நான் அவ்வளவு நல்லவன் கிடையாது தேவிம்மா..." என்றவன் அவளின் முகத்தைத் தன் இரு கரத்தில் ஏந்தி அவளின் இதழை நோக்கி குனிந்தான்.

இருவருமே சிறிது எல்லை மீறும் போது... வீட்டின் அழைப்புமணி இசைக்க... திடுக்கிட்டார் போல் இருவரும் விலகி நின்றனர். தேவியின் முகம் அவனின் முத்தத்தில் சிவந்ததா... இல்லை அவளின் வெட்கத்தில் சிவந்ததா என்று தெரியவில்லை. அந்தளவுக்குச் சிவந்து அழகாய் மின்னியது.

"நீ உள்ளே போ... நான் யாருன்னு பார்க்கிறேன்..." அவளைச் சீர்படுத்திக் கொள்ள உள்ளே அனுப்பியவன் தானே கதவை திறந்தான். அங்கே வேலாயி பாட்டி தான் நின்றிருந்தார். அவனைக் கண்டதும் திகைத்தவர் பின் மகிழ்ச்சியாய்,

"ராசா எப்படிய்யா இருக்க... இப்படியா ஒரு தகவலும் இல்லாமல் இருப்ப... பாவம் கண்ணு உன்னைக் காணாம சரியா உண்காம, உறங்காம ரொம்பக் கஷ்டப்பட்டுப் போச்சு ராசா..."

"அதான் வந்துட்டேனே ஆயா... எனக்கு மட்டும் அவளைப் பார்க்காம நல்லாவா இருந்தது... நானும் கஷ்டம் தான் பட்டேன்..." என்றவனின் வார்த்தையில் இருந்த கவலையை அந்த மூதாட்டி மனம் உணர்ந்தது.

"சரி ராசா... போனதை விடு.. இனி தேவிம்மாவை தவிக்க விட்டுறாதே... கூடிய சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கோ..."

அவரின் வார்த்தை கேட்டு அவன் முகம் மலர்ந்தது.

"கூடிய சீக்கிரம் அது நடக்கும் ஆயா..." என்றான் மனப்பூர்வமாக... அதைக் கேட்டபடி அங்கே வந்த தேவியின் முகம் தீவிரத்தில் ஆழ்ந்தது.

அவனின் வருகையை அறிந்து அங்குக் குடியிருப்பவர்கள் ஒவ்வொருவராய் வர துவங்க... நாகா அவனின் வீட்டிற்குச் சென்றுவிட்டான். தேவியும் அவனுடன் அவன் வீட்டிற்குச் சென்றாள். இருவரும் ஒருவரை ஒருவர் காதலித்தாலும் இருவருமே மற்றவர் வீட்டிற்கு ஒரு நாளும் போனதில்லை. இன்று தான் நாகாவும் முதன்முறையாய் தேவியின் வீட்டிற்கு வந்திருந்தான். அதே போல் தேவியும் இன்று தான் நாகா வீட்டினுள் முதல் தடவையாய் அடியெடுத்து வைக்கிறாள்.

"என்ன தேவி... வேலைக்குப் போகலையா...?" எல்லோரும் சென்ற பின் ஓய்வாய் சோபாவில் அமர்ந்தவன் அருகில் வந்தமர்ந்தவள் அவனை இமைக்காமல் பார்த்தாள். அவளின் பார்வையின் அர்த்தம் புரியாமல் அவன் கேள்வியாய் பார்க்க...

"எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு நாகா..." என்றபடி அவனின் தோளில் சாய்ந்தாள். அவளின் குரலில் அவளின் மனதின் பயத்தை அவன் உணர்ந்தானோ என்னமோ... அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்து கொண்டவன்,

"என் தேவிம்மாவுக்கு என்ன பயம்...?"

"நம்ம ரெண்டு பேரையும் யாராவது பிரிச்சிருவாங்களோன்னு பயமாயிருக்கு... பேசாம இன்னைக்கே நாம கல்யாணம் பண்ணிக்கிட்டா என்ன...?" என்றவளின் முகத்தைக் குனிந்து பார்த்தவன்,

"நம்ம கல்யாணம் எப்படி நடக்கணும்ன்னு நான் எப்படியெல்லாம் கற்பனை பண்ணி வச்சிருக்கேன் தெரியுமா... நீ என்னடான்னா திருட்டுக் கல்யாணம்

பண்ணிக்கச் சொல்ற... அது எனக்குப் பிடிக்கல தேவிம்மா..."

தன் விருப்பமின்மையை எடுத்துச் சொன்னான். ஒரு சில நொடி எதுவும் பேசாமல் தலை குனிந்து அமர்ந்திருந்தவள் பின் அவனை நிமிர்ந்து பார்த்து,

"உங்களைக் காணாம நான் தவிச்ச தவிப்பு இன்னமும் அடங்கல... இப்போ கூடப் பாருங்க என் இதயம் பயத்தில் எப்படி வேகமா துடிக்குதுன்னு..." என்றவள் சட்டென்று அவன் கையை எடுத்து தன் நெஞ்சில் வைக்கப் போக... அவன் பதறி போய்த் தன் கையை உருவி கொண்டான்.

"நான் உன்னை நம்பறேன் தேவி..." என்றவனைத் தீர்க்கமாய்ப் பார்த்தவள்,

"நீங்க நம்பினா மட்டும் போதாது... இன்னைக்கு என் தவிப்பை போக்கியே ஆகணும்... இனி ஒரு நொடி கூட என்னால் உங்களைப் பிரிஞ்சியிருக்க முடியாது..." என்றவளை அவன் புரியாமல் பார்க்க...

"எனக்கு நீங்க வேணும்..." என்றவள் சற்று எம்பி அவனின் இதழில் தன் இதழை பொருத்தினாள். அவள் வார்த்தை புரிய வைக்காததை அவளின் செயல் அவனுக்குப் புரிய வைத்துவிட... வலுக்கட்டாயமாய் அவளை விலக்கியவன்,

"வேணாம் தேவி... இதெல்லாம் முறைப்படி தான் நடக்கணும்..." அவன் வார்த்தையில் இருந்த மறுப்பு அவனின் குரலில் இல்லை. அது பலகீனமாய் நலிந்து ஒலித்தது.

"ப்ளீஸ் நாகா... உங்களைப் பிரிஞ்சி உங்களுக்கு என்னாச்சோ ஏதோச்சோன்னு பயந்து வாழ்ந்தது எனக்கு மட்டும் தான் தெரியும்... இனியும் உங்களை விட முடியாது... எனக்கு நீங்க வேணும்... உங்க குழந்தை வேணும்... நீங்க எப்போ கல்யாணம் பண்ணிக்கணும்ன்னு நினைக்கிறீங்களோ அப்போ நாம கல்யாணம் பண்ணிக்கலாம்..." என்றவள் அவன் நெஞ்சில் சாய்ந்து

அவனை இறுக அணைத்து கொண்டாள். அவளின் வார்த்தையில் அவன் அதிர்ந்து போய்விட்டான்.

"தேவிம்மா... உன் தவிப்பு புரியுது... இன்னும் ரெண்டு மாசம் பொறுத்துக்கோ... அதுக்கப்புறம் நாம கல்யாணம் பண்ணிக்கலாம்... நீ நினைச்ச மாதிரி நாம சந்தோசமா வாழலாம்..." அவன் அவளைச் சமாதானப்படுத்த...

"அப்போ உங்களுக்கு உங்க விருப்பம் தான் பெரிசு... நான் முக்கியமில்லை என்ன..." கோபமாய்க் கேட்டவளை பார்த்து அவனுக்குச் சிரிப்பு வந்தது.

"ஏய் என்ன இப்படியெல்லாம் பேசிட்டு இருக்க... பொதுவா ஆம்பிளைங்க தான் உன்னை மாதிரி பேசுவாங்க... பொம்ளைங்க தான் என்னை மாதிரி பேசுவாங்க... ஆனா நம்ம கதையில் எல்லாம் உல்டாவா இருக்கே..." என்றவனின் கேலியில் அவனை முறைத்து பார்த்தவள்...

"பேச்சை மாத்தாதீங்க... நான் சொல்றதை செய்ய முடியுமா முடியாதா...?" தீர்க்கமான குரலில் அவள் கேட்க...

"முடியாது..." அவன் தீர்மானமாய் மறுத்தான். அவனை ஒரு பார்வை பார்த்துவிட்டு அவள் வெளியில் செல்ல... அவனோ தோளை அசால்ட்டாய் குலுக்கியவன்,

"க்ரேசி கேர்ள்..." முணுமுணுத்தவன் எந்த நினைவையோ விரட்டுபவன் போல் தலையைப் பலமாய் இருபுறம் அசைத்தவன் பின்பு குளிக்கச் சென்றான்.

அடுத்த அரைமணி நேரத்தில் அவன் முன் வந்து நின்றவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது. "வாங்க மேடம்... உங்க கோபம் போயிருச்சா..." என்றவன் முன் தன் உள்ளங்கையை விரித்து அதிலிருந்த மஞ்சள் கயிற்றைக் காண்பித்தாள்.

"ஏய்... என்ன இது...?" பதட்டத்துடன் அவன் சோபாவிலிருந்து எழுந்தான்.

"தெரியல தாலி..." கிண்டலாய் சொன்னவளை இமைக்காமல் பார்த்தவன்,

"அப்போ நீ என்னை நம்பல..."

"நம்பிக்கை இல்லைன்னு சொல்லல... இது என் மன திருப்திக்காக... இதனால் நீங்க எனக்கு மட்டும் தான் சொந்தம்... என்னை விட்டு போக மாட்டீங்கன்னு என் மனசில் எனக்கு நானே நம்பிக்கை கொடுத்துக் கொள்வதற்கு ஒரு காரணம் அவ்வளவு தான்..." அவள் தன் நிலையில் பிடிவாதமாய் நின்றாள்.

"என்னைப் பெத்தவங்களுக்குத் தெரியாமல் திருட்டுக் கல்யாணம் பண்ணிக்க என்னால் முடியாது தேவி... ஐயம் சாரி..." என்றவன் அவள் முகம் பார்க்காமல் திரும்பி நிற்க... ஒரு நிமிடம் மௌனத்தில் கரைந்தது. அவள் அசையாமல் இருக்க... அவன் தான் மனம் தாங்காமல் அசைந்தான்.

"ப்ளீஸ் தேவி... புரிஞ்சுக்கோம்மா..." அப்போதும் அசையாமல் நின்றவளை கண்டு அவனுக்குக் கோபமும், ஆற்றாமையும் சேர்ந்து எழுந்தது.

"அழுத்தம்... அழுத்தம்... நெஞ்சழுத்தம் உனக்கு அதிகம் தேவி..." அவன் அவளைத் திட்ட அதற்கும் அவள் அசையாமலிருந்தாள். கடைசியில் அவன் தான் தன் நிலையிலிருந்து கீழிறங்கினான்.

"இப்போ என்ன உனக்கு நான் வேணும் அவ்வளவு தானே..." என்றவன் தன் கைகளைக் கொண்டு அவளைத் தூக்கியபடி படுக்கையறைக்குள் நுழைய... அவள் அவனைக் கண்ணிமைக்காமல் பார்த்தாள்.

படுக்கையில் கிடத்தியவன், "காதலி கிட்டேயும் மனைவி கிட்டேயும் ஒருவனால் நல்லவன் வேசம் போட முடியாது... இப்போ எனக்குள் இருக்கும் கெட்டவனை நீ பார்க்க போற..." என்றவனின் கைகளும், இதழ்களும் முரட்டுத்தனமாய் அவளை முற்றுகையிட்டது. அவளின்

முரட்டுத்தனத்தில் அவள் தான் திக்குமுக்காடி போனாள். மூச்சு காற்றுக்கு அவனைத் தள்ளிவிட்ட போது,

"இதுக்குத் தானே ஆசைப்பட்ட... அப்போ அனுபவி..." என்றவனின் வேகம் நொடிக்கு நொடி கூடி கொண்டு போனது. ஒரு கட்டத்திற்கு மேல் முன்னேற முடியாமல் அவளை விட்டு விலகியவன்,

"வேணாம் தேவி... இது சரியில்லை..." என்றவனின் கையைப் பிடித்து இழுத்தவளின் இழுப்பிற்கு வந்தவன்,

"அந்தத் தாலியை எடுத்துட்டு வரவா..." மீண்டும் அவன் எழ போக...

"இந்த நிலைமையில் தாலி எடுக்கப் போகணுமா..."

அவள் சொன்னதும் தான் அவனுக்கு இருவரும் இருக்கும் நிலை புரிந்தது. அவன் முகத்தில் டன் கணக்கில் அசடு வழிந்தது. ஆனாலும் அவளை ஆள அவனின் மனம் ஒப்பவில்லை. பாவை அவளே வலிய வந்த போதும் அவனின் கண்ணியமான வளர்ப்பு அவனை மேலும் முன்னேற விடவில்லை. ஒரு நொடி யோசித்தவன் தன் கழுத்திலிருந்த மெல்லிய சங்கிலியை கழட்டி அவள் கழுத்தில் அணிவித்தபடி,

"இப்போ நாம கந்தர்வ கல்யாணம் பண்ணிக்கிட்டோம்..." என்றவன் அவளின் நெற்றியில் தன் இதழை அழுந்த பதித்தான்.

தன் கழுத்தில் தவழ்ந்த சங்கிலியை பார்த்த தேவி, "இதென்ன 'என்' என்ற எழுத்தும் 'ஏ' என்ற எழுத்தும் பின்னி பிணைஞ்சுட்டு இருக்கு..." அதைக் கேட்டு அவன் முகம் மாறியது. நொடியில் சமாளித்துக் கொண்டு,

"அது நாகாவில் வர்ற 'என்'னும், 'ஏ'வும்..."

"ஓ..." என்றவளின் குவிந்த இதழ்களைக் கண்டவன் பார்வை மாறியது. அதன் பின் அவளை ஆள்வதில் அவனுக்கு எந்த மனத்தடையும் எழவில்லை. அங்கு

நிகழ்ந்த இந்த அழகிய தவறுக்கு இருவருமே மனமுவந்து பொறுப்பாயினர்.

"ஸ்வீட்டி..." தன் முகத்தில் ஆள்காட்டி விரலால் கோலம் போட்டவனை ஆச்சிரியமாய்ப் பார்த்தாள் தேவி.

"அதென்ன ஸ்வீட்டி... புதுசாயிருக்கு..."

"ம்... எல்லாமே புதுசா தான் இருக்கு..." மயக்கத்துடன் கூறியவன்,

"இப்போ தானே தெரிஞ்சது... நீ எவ்வளவு ஸ்வீட்டுன்னு..." அவளைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டினான்.

"பார்த்து ரொம்பத் திகட்டிற போறது..." குறும்பு குரலில் கூறியவளின் முகம் மீது தன் முகம் வைத்து,

"எவ்வளவு சாப்பிட்டாலும் திரும்பத் திரும்பக் கேட்கும் திகட்டாத ஸ்வீட் இது..." என்றவன் அவளின் இதழ் மீது தன் இதழை வைத்து வெகு நிதானமாய் அதே சமயம் அழுத்தமாய் முத்தமிட... அவளோ அதில் மயங்கி கிறங்கி அவனுடன் ஒன்றினாள்.

**********************

அன்று பத்திரிக்கையில் போடுவதற்கான செய்திகளைப் பார்த்துக் கொண்டிருந்த நாகாவின் கண்களில் அந்தச் செய்தி விழுந்து அவனின் கவனத்தை ஈர்த்தது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் காவேரிப்பட்டணத்தில் உள்ள ஒரு தனியார் பள்ளி விவசாயத்தை ஒரு பாடமாகப் போதிக்கும் பணியைச் செவ்வனே செய்து வருவதை அறிந்து அவனுக்குச் சுவாரஸ்யம் கூட அதை முழுவதுமாய் வாசித்தான். இயற்கை உரங்கள் எப்படித் தயாரிப்பது, அதை எப்படிப் பயன்படுத்துவது என்பதை முக்கியப் பாடமாக அங்குச் சொல்லி கொடுக்கின்றனர். அதிலும் ஒரு மாணவன் சொன்ன கருத்து அவனை மிகவும் கவர்ந்தது.

"இயற்கை உரங்களைப் பத்தி இங்கதான் பாக்குறேன். பாக்கறது மட்டுமில்லாம அத எப்படித் தயார் பண்றதுன்னும்

கத்துக்கிட்டேன். இலை, தளைகள் வெச்சு தொழுவுரத்த தயாரிக்கிறதும், சாணம், கோமியம், நெய், பால், தயிர், வெல்லம், பழங்கள வெச்சு பஞ்சகவ்யத்த தயாரிக்கிறதையும் கத்துக்கிட்டேன். 1 லிட்டர் பஞ்சகவ்யாவை 100 லிட்டர் தண்ணில கலந்து தெளிச்சு வந்தா பயிர்களுக்கு மைக்ரோ நியூட்ரிஷியன் சத்துக்கள் கிடைக்குது. செடிகளும் நல்லா வளர்றத பாத்திருக்கேன். இந்த இயற்கை உரத்த பத்தி அப்பாகிட்ட சொல்லி ரசாயன உரத்த போடறத நிறுத்த சொல்ல போறேன்"

'ம்... வருங்காலத்தில் இவன் ஒரு நல்ல விவசாயியாய் வருவான்...' என்றவன் மனம் பஞ்சம் பட்டினி தாங்க முடியாமல் தற்கொலை பண்ணிக் கொள்ளும் விவசாயிகளிடத்தில் இரக்கம் கொண்டது.

'பேசாமல் விவசாய நிலங்களை அரசாங்கம் கையகப்படுத்தினால் என்ன... அரசாங்கமே விவசாயத்தை ஊக்குவிக்கும் போது... யாரும் விவசாயத்தைக் கைவிடவும் மாட்டார்கள்... அதைக் கேவலமாகப் பார்க்கவும் மாட்டார்கள்... நாள் முழுதும் வெயிலில் உழைக்கும் இவர்களுக்கு ஐடியில் வேலை பார்ப்பவர்களுக்குக் கொடுக்கும் சம்பளத்தை விட அதிகமாய்க் கொடுக்க வேண்டும்... அதுக்கப்புறம் எவனாவது ஐடி பக்கம் தலை வச்சு படுப்பான்...' ஐடி இளைஞர்கள் எல்லோரும் கையில் ஏர் கலப்பையுடன் நிற்பது போல் கற்பனை பண்ணி பார்த்தவனுக்குச் சிரிப்பு வந்தது.

அவன் மனதில் நீண்ட நாள் ஆசை... ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பின் கிராமத்தில் போய் நிம்மதியாய் வாழ வேண்டும் என்பது. அவனும் தேவியுமாய் அமைதியான, காதலான வாழ்வை வாழ வேண்டும். தேவியைப் பற்றி நினைக்கும் போதே அவனின் முகத்தில் புன்னகை வந்து ஒட்டி கொண்டது. அன்று அவளின் விருப்பதிற்கு இணங்கிய பின் அவனுள் இது வரை இருந்த பரபரப்பு, வேகம் எல்லாம் குறைந்து ஒருவித நிதானம், அமைதி குடிவந்து விட்டதை அவனே உணர்ந்திருந்தான். அவளின் அன்பிற்குக் கட்டுப்பட்டு அவன் இப்போது எல்லாம் மிகவும்

மாறியிருந்தான். ஆனால் ஆபத்தான பணிகளைச் செய்வது மட்டும் குறையவில்லை. ஆனால் அது அவளுக்குத் தெரியாமல் பார்த்துக் கொண்டான்.

நாளை அவளுக்குப் பிறந்தநாள்... அவளுக்குப் பிடித்ததை வாங்கிக் கொடுத்து அவளுடனே இருக்க வேண்டும் என்று திட்டமிட்டான். அதன்படி அன்றிரவு பன்னிரெண்டு மணிக்கு அவளின் அலைப்பேசிக்கு பல தடவை அழைத்ததில் கடைசி முறை தான் அவள் எடுத்தாள்.

"ஏய் தூங்கு மூஞ்சி... எவ்வளவு நேரம் தான் கூப்பிடறது... உன் வீட்டு முன்னால் இருக்கேன்... கதவை திற..." அவனின் குரலில் அடித்துப் பிடித்து எழுந்தவள் ஓடி வந்து கதவை திறந்தாள்.

"ஹேப்பிப் பர்த்டே மை டியர் ஸ்வீட்டி..." கையில் கேக்குடன் நின்றிருந்தவனைக் கண்டு அவள் கண்ணில் கண்ணீர் மல்கியது.

"தேங்க்ஸ்..." என்று முணுமுணுத்தவள்... அவன் கைப்பற்றி உள்ளே இழுத்தாள்.

"நானே வர்றேன்டா..." அவள் இழுத்ததில் தட்டுத் தடுமாறிபடி உள்ளே வந்தான்.

கேக்கை அவளை வெட்ட செய்து... அவளுக்குத் தான் ஊட்டிவிட்டு... அதே போல் அவளையும் தனக்கு ஊட்ட செய்தான். பின் கையோடு கொண்டு வந்திருந்த மோதிரத்தை அவள் விரலில் அணிவித்தவன் அதில் தன் உதட்டை பதித்தான்.

"பர்த்டே பேபிக்கு இதெல்லாம் வேணாமாம்..." என்றவளின் பேச்சில் நிமிர்ந்து பார்த்தவன்,

"வேறென்ன வேணுமாம்..." கொஞ்சும் குரலில் அவன் கேட்டதும்... அவளின் வலது கை அவனைச் சுட்டி காட்டியது.

"தெரியும் ஸ்வீட்டி... உனக்கு நான் தான் வேணும்ன்னு..." என்றவனின் குரலில் அவ்வளவு கர்வம் இருந்தது.

அடுத்த நொடி தன் காதலியின் விருப்பத்தை நிறைவேற்ற ஆரம்பித்தான். முதன்முதலில் இருந்த தயக்கம் இப்போது அவனிடத்தில் இல்லை. ருசி கண்ட பூனையின் மனநிலையில் அவன் இருந்தான். அவனுக்குமே அவளின் அருகாமை மிகவும் தேவைப்பட்டது.

"பை... இதுக்கு மேல் இங்கிருப்பது அவ்வளவு நல்லதல்ல..." விடியலின் தருவாயில் கிளம்பியவனைக் கண்டு மௌனமாய்த் தலையசைத்து விடை கொடுத்தாள் அவள்.

"இன்னும் ஒன்றரை மாசம் தான்... அதுக்கு அப்புறம் நீயே நினைச்சாலும் என்னை விட்டு பிரிய முடியாது..." அவள் கன்னம் தட்டி சொல்லவிட்டு போனவனை வெறித்துப் பார்த்தவாறு அமர்ந்திருந்தாள் அவள்.

அடுத்த வந்த நாட்கள் ஒருவித வேகத்தில் கழிய சரியாகக் காதலர் தினத்துக்கு முதல் நாள் மாலை நாகா தேவியைச் சந்தித்தான்.

"ஸ்வீட்டி... நாளைக்கு எல்லாருக்கும் காதலர் தினம்... ஆனால் நமக்கு அது மறக்க முடியாத ஒரு நாள்... ஆமாம் ஸ்வீட்டி... நாளைக்கு நம்ம கல்யாணத்தைப் பத்தி அப்பா, அம்மா கிட்ட சொல்லி சம்மதம் வாங்க போறேன்..." என்றவனைப் பார்த்து,

"ஆமாம்... ஆமாம்... நாளைக்கு முக்கியமான நாள் தான்..." அவளும் ஒருவிதமான குரலில் கூற... அதை அவன் கவனிக்கவில்லை.

"அப்புறம்..." ஏதோ சொல்ல வந்தவன்,

"ம்ஹூம்... அதை இப்போ சொல்லமாட்டேன்... நாளைக்கு நீயே தெரிஞ்சுப்ப..." என்றவன் அவளிடம் விடைப்பெற்று செல்ல... அவன் செல்வதை உணர்ச்சியில்லாத பார்வையால் பின் தொடர்ந்தாள் அவள்.

*************************

"என்னடா இவன் வீட்டுக்கு போக விடாமல் நம்ம கழுத்தை அறுக்கானேன்னு நீங்க எல்லோரும் நினைக்கிறது எனக்குப் புரியுது..."

மேடையில் நின்றிருந்த சேஷாத்திரி தான் அவ்வாறு பேசினார். அவருடன் அவரின் குடும்பத்தினர் அமர்ந்திருந்தினர். அவரின் தங்கை ரமாவின் குடும்பமும் அங்கு அமர்ந்திருந்தது. அவர் முன்னே பத்திரிக்கையில் வேலை செய்யும் அனைத்து ஊழியர்களும் அமர்ந்திருந்தனர். பஞ்சாபகேசனின் எழுபத்தைந்தாவது பிறந்தநாள் விழாவிற்குத் தான் அங்கு எல்லோரும் குழுமியிருந்தனர்.

"இப்பவாவது அவர் பேசுறது கழுத்தை அறுக்கிற மாதிரி இருக்குன்னு ஒத்துக்கிட்டாரே..." விவேக் நாகாவின் காதை கடிக்க...

நாகா அவனைப் பார்த்து ஒரு மார்க்கமாய்ச் சிரித்தான். அவனின் சிரிப்பின் அர்த்தம் புரியாமல் மண்டை காய்ந்தான் விவேக்.

"இது நம்ம ஐயாவோட எழுபத்தைந்தாவது பிறந்தநாள் விழா மட்டுமல்ல... என் மகன் அர்ஜூன் இன்னைக்குத் தான் இந்தப் பத்திரிக்கை பொறுப்பை ஏற்க போகிறான்... அர்ஜூன் வாப்பா..." சேஷாத்திரி குரல் கொடுக்கக் கூட்டம் ஆர்வமாய் அந்த அர்ஜூனை தேடியது.

"இல்லாத அர்ஜூனை கூப்பிட்டா எங்கிருந்து வருவான்..." விவேக் சொல்லும் போதே அவன் அருகில் அமர்ந்திருந்த நாகா எழுந்திருக்க...

"டேய் நீ ஏன்டா எழுந்திருக்க... அந்த ஆள் கத்த போறான்..." விவேக் அவன் கையைப் பிடித்து அமர வைக்கப் போக...

"இவர் தான் என்னோட ஒன்லி சன்... உங்களோட நாகா... என்னோட அர்ஜூன்... நம்மளோட நாகார்ஜூன்..."

அவர் சொல்லவும் கூட்டத்திலிருந்து கைத்தட்டல் பலமாய் ஒலித்தது. விவேக் கைத்தட்ட மறந்தவனாய் ஆவென்று

வாயை பிளந்தபடி அமர்ந்திருந்தான்.

"டேய் விவேக்..." மறுபுறம் அமர்ந்திருந்த காசி அவனை உலுக்கவும் தான் அவன் சுயநினைவு அடைந்தான்.

"விவேக்... நீ என்னமோ சொன்ன... நாகாவுக்கும் சாருக்கும் இடையிலுள்ள ரகசியத்தைக் கண்டுப்பிடிக்கிறேன்னு... நீ கண்டுப்பிடிச்ச லட்சணம் இது தானா...?" காசி அவனைக் கிண்டலடிக்க...

"டேய் காசி... என்னோட அறிவுக்கு இதெல்லாம் ஜுஜுபி மேட்டர்டா... என்னை மாதிரி ஜூனியஸ் எல்லாம் வேற மாதிரி கேஸ்களைத் தான் ஹண்டில் பண்ணுவோம்... உதாரணத்துக்கு அந்த மூன்றெழுத்து நடிகையின் காதலர்கள் எத்தனைன்னு உனக்குத் தெரியுமா...?" காசி காதில் ரகசியமாய்க் கேட்டான்.

"தெரியாதுடா... யாரெல்லாம் விவேக்...?" ஆர்வத்துடன் கேட்ட காசியிடம்,

"அது அவங்க பெயரிலுள்ள எழுத்தை விட அது அதிகம்டா... இது ஊர் அறிந்த ரகசியமாச்சே... இது உனக்குத் தெரியாது... டூ பேட்..."

போலியாய் அங்காலாய்த்தவனைக் கொலைவெறியுடன் பார்த்தான் காசி. அதற்குள் நாகா என்றழைக்கப்பட்ட நாகார்ஜூன் தன் பேச்சை தொடங்கினான். அதனால் விவேக் காசியிடமிருந்து தப்பித்தான்.

"ஹாய் பிரெண்ட்ஸ்... அர்ஜூனாகிய நான் நாகாவாய் மாறி உங்களுடன் ஐக்கியமாகி ஐந்து வருடங்களாகிறது. எனக்கு ஆசிரியர் பதவியை விட... உங்களில் ஒருவனாய் நிருபராய் வேலை செய்யத் தான் ஆசையாயிருக்கு... அதனால் நான் உங்களில் ஒருவன்... உங்கள் நண்பன் நாகா" அவன் பேசியதை கேட்டு,

"நண்பேன்டா நீ..." என்ற விவேக்கின் விசில் ஒலி காதை கிழித்தது.

"உங்களுக்கு எல்லாம் ஒரு சந்தேகம் வந்திருக்குமே... என்னடா முதலாளி இவன் எதுக்குத் தொழிலாளியா இருந்தான்... இல்லையில்ல நடிச்சான்னு... அதுக்குக் காரணம் என் அப்பா தான்... அவரோட பயம் அப்படின்னு சொல்றதை விட ஒரே பையனான என் மேலுள்ள பாசத்தால் அவர் என்னை இங்கே வரவே விடல. அமெரிக்கா படிப்பு முடிஞ்சதும் நான் கிளம்பி வந்தது இங்கே தான்."

"என்னுடைய வேர் இங்கே தான் இருக்கு... நான் ஏதாவது சாதிக்கணும்ன்னு நினைச்சா... அதுவும் இங்கே தான் முடிவு பண்ணினேன்... அப்பா முதல்ல சம்மதிக்கல... அதனால முதலில் என் அடையாளம் ஏதுமில்லாமல் வேலைக்குச் சேர்ந்தேன்... போகப் போக எனக்கும் வேலை பிடிச்சு போயிருச்சு... அதனால என் ஆபத்து என் குடும்பத்தைத் துரத்துமோன்னு குடும்பத்தை விட்டு விலகியிருந்தேன்... ஆனா இப்போ அம்மவோட ஆசை அதான் பொறுப்பான பையனா அம்மா சொல்றதை கேட்கலாம்ன்னு முடிவு பண்ணி உங்கள் முன் வந்து நிற்கிறேன்..."

நாகாவின் குடும்பம் பற்றிய தகவல்கள் மறைக்கப்பட்டதற்கான காரணம் தெரிந்ததும் விவேக்கின் மனம் நெகிழ்ந்தது. காரணமில்லாமல் நண்பனிடமும், சேஷாத்திரியிடமும் தான் கோபப்பட்டதை எண்ணி மனதுக்குள் வருந்தினான்.

நாகா பேசி முடித்ததும் அவன் அருகில் வந்த சேஷாத்திரி மைக்கை அவனிடமிருந்து வாங்கி... "இப்போது இன்னொரு முக்கியமான விசயம் சொல்ல போறேன்... என் மகன் அர்ஜூனுக்கும், என் தங்கை மகள் மீராவுக்கும் திருமணம் செய்யலாம் என்று முடிவு பண்ணியிருக்கோம்... விரைவில் கல்யாணச் சாப்பாடு போடப்படும்..." சிரித்தபடி சொன்னவர்... நாகாவின் தலையில் நெருப்பை அள்ளி கொட்டினார்.

அவன் திகைப்பாய் தந்தையைப் பார்த்தவன் அடுத்து தன் அன்னையைப் பார்த்தான். அவரோ சிரித்தபடி அவனைப்

பார்த்தார். அவனின் கண்கள் அவனையும் அறியாமல் மீராவை பார்த்தது. அவளோ அவனை வெட்கத்துடன் ஓரக் கண்ணில் பார்க்க... அவன் நொந்து போய்விட்டான்.

'என்னைக் கேட்காமல் இவங்களே எல்லாத்தையும் முடிவு பண்ணுவாங்களா... நான் என்ன எல்கேஜி பாப்பாவா' மனதில் குமைந்தவனுக்கு உடனே தேவியைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. ஆனால் அவனால் உடனே போக முடியவில்லை.

விழா முடிந்ததும் அவன் அவசரமாய்த் தேவியைத் தேடி ஓடினான். அங்குச் சென்றால் அவளின் வீடு பூட்டியிருந்தது. அவளின் அலைப்பேசிக்கு முயற்சித்தவனுக்குத் தோல்வியே கிட்டியது. மீண்டும் மீண்டும் முயற்சித்தவனுக்கு மீண்டும் மீண்டும் தோல்வியே பதிலாகக் கிடைத்தது.

'ச்சே... இவ வேற நேரம் காலம் தெரியாமல் படுத்துறா...' மனதுக்குள் முனங்கியவன் தன் வீட்டுற்கு செல்ல பிடிக்காமல் அந்த அடுக்குமாடி குடியிருப்பு வீட்டிலேயே தங்கினான். நாளைய செய்தித்தாளை படித்துவிட்டு அவனது தேவிம்மா அவனைத் தவறாக எண்ணிவிடக் கூடாதே என்று நினைத்து தான் அங்குத் தங்கினான். ஆனால் காலம் வேறு கணக்கு போட்டது...

*******************

"அண்ணா... நான் கொடுத்த நியூசை போட ராமாமிர்தம் அங்கிள் யோசிக்கிறார்... நீங்களே அவர் கிட்ட பேசிக்கோங்க..." வைஷ்ணவி சொல்ல...

"அவர் கிட்ட ஃபோனை கொடும்மா... நான் பேசிக்கிறேன்..." என்ற பிரகாஷ், அவர் கைக்குத் தொலைப்பேசி மாறியதும்,

"அங்கிள் வைஷு கொடுக்கிறதை அப்படியே போடுங்க... நான் ஒரு முக்கியமான வேலையா பெங்களூர் வந்திருக்கேன்... நான் வர நாளையாகிடும்... இது

நாளைக்கு மார்னிங் வர வேண்டிய முக்கியமான நியூஸ்... சோ அவள் சொன்னதைச் செய்யுங்க..."

"தம்பி... அப்பாவுக்குத் தெரிஞ்சா..." அவர் பயத்துடன் இழுக்க...

"அதான் அவர் திருப்பதி போயிருக்கார்ல்ல... அவருக்கு எதுவும் தெரியாது... அப்படியே தெரிஞ்சாலும் அதை நான் பார்த்துக்கிறேன்... நீங்க நான் சொல்றதை மட்டும் கேளுங்க..."

"தம்பி... இதுல பாப்பாவும்..."

"வைஷு பேர் வராம நான் பார்த்துக்கிறேன்..." முடிவாய் கூறியவன் அலைப்பேசியை வைக்க... வேறுவழியின்றி அந்தச் செய்தியை ராமாமிர்தம் தங்கள் நாளிதழின் முதல் பக்கத்தில் வருமாறு போட செய்தார்.

மறுநாள் விடியல் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாய் விடிந்தது. 'திராவிடர் காவலன்' நாளிதழின் முதல் பக்கத்தில் நாகார்ஜூன் ஆசியர் பொறுப்பு ஏற்றுக் கொண்டதும், அவனின் திருமணச் செய்தியும் முக்கியச் செய்தியாகப் போடப்பட்டிருந்தது.

அதே நேரம் 'நம் தேசம்' பத்திரிக்கையின் முதல் பக்கத்தில் தேவி என்கிற வைஷ்ணவிதேவியைத் திராவிடர் காவலன் பத்திரிக்கையின் இளைய வாரிசு நாகா என்கிற நாகார்ஜூன்... திருமணம் செய்து கொள்வதாகக் கூறி ஏமாற்றிவிட்டதாகக் கூறப்பட்டிருந்தது.

"அவரின் வாரிசு என் வயிற்றில்... அவர் என்னை ஏமாற்றிவிட்டார். எனக்கு நீதி வேண்டும்..." என்று கண்ணீருடன் தேவியின் உருக்கமான பேட்டி வந்திருந்தது அவளின் புகைப்படத்தோடு... அவனின் அருமை காதலி காதலர் தினத்திற்கு அவனுக்கு மறக்க முடியாத பரிசை கொடுத்திருந்தாள்...!!!
சதி தொடரும்...!!!

"என்னவளே அடி என்னவளே... என் இதயத்தைத் தொலைத்துவிட்டேன்..." அலைப்பேசி விடாமல் அடித்ததில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த நாகார்ஜூன் சோம்பலுடன் கண்களைத் திறந்தான். கை கால்களை உதறியவனுக்கு அப்போது தான் உறைத்தது... தான் நாற்காலியில் அமர்ந்த நிலையில் உறங்கிவிட்டது.

நேற்று தேவியைப் பற்றிய சிந்தனையில் யோசித்துக் கொண்டு நாற்காலியில் முடங்கியவன் அப்படியே உறங்கியும் போய்விட்டான். அவனின் யோசனையைக் கலைப்பது போல் மீண்டும் அலைப்பேசி ஒலித்தது. தந்தையிடமிருந்து வந்த அழைப்பு என்றதும் உடனே உயிர்ப்பித்துக் காதில் வைத்தான்.

"அஜூ..." வெகுநாட்களுக்குப் பின் தந்தையின் "அஜூ" என்றழைப்பில் மனம் நெகிழ்ந்தவன் அந்த வார்த்தை உண்டான தாக்கத்தை அமைதியாய் ரசித்தான்.

"அஜூ... லைன்ல தான இருக்க...?" சேஷாத்திரி குரலில் சற்று கடுமையிருந்ததோ...?

"சொல்லுங்கப்பா..."

"முதல்ல வீட்டுக்கு கிளம்பி வரும் வழியைப் பாரு..." அவரின் கடுமையில் அவன் சிறிது தயங்கினான்.

"அப்பா... ஒரு முக்கியமான வேலையிருக்கு... முடிச்சிட்டு..." தேவியை மனதில் வைத்து சொன்னவனை முடிக்கவிடாமல் அவரின் குரல் தடுத்து நிறுத்தியது.

"அதைப் பிறகு பார்க்கலாம்..." என்றவர்,

"எப்போயிருந்து அஜூ... இப்படி எதிர்த்து பேச பழகினே...?" அவரின் வார்த்தையில் அவன்,

"கிளம்பிட்டேன்ப்பா..." என்ற வார்த்தையுடன் முடித்துக் கொண்டவன் அலைப்பேசியை அணைத்துவிட்டு தன்

வீட்டிற்குக் கிளம்பினான்.

படியில் கடகடவென இறங்கியவன் இரண்டாம் தளம் வந்ததும் அவனின் கால்கள் அவனையும் அறியாமல் தேவியின் வீட்டு முன்பு வந்து நின்றது. அவன் கண்களில் பூட்டியுருந்த அவளின் வீடு தென்படவும் அவன் மனதில் மெல்லிய எரிச்சல் வந்து போனது.

'எங்கே போனாள்...? இப்படியா சொல்லாமல் கொள்ளாமல் போவது... சரி அப்படியே போனாலும் ஃபோன் எடுக்கக் கூடாது என்ற சட்டமிருக்கிறதா என்ன...? என் அழைப்பை எடுத்தால் தான் என்னவாம்...?' மனதில் ஒரு புறம் சலிப்புடன் அவன் நினைக்கும் போதே... மறுபுறம் அவளுக்கு ஏதுமாகியிருக்குமோ...? என்ற மெல்லிய பதட்டமும் வந்து அவனிடத்தில் ஒட்டி கொண்டது.

அவனின் கைகள் அலைப்பேசியை எடுத்து அவளின் எண்ணுக்கு அழைத்தது. ம்ஹூம்... அவள் அலைப்பேசி அணைத்து வைக்கப்பட்டிருந்தது. அடுத்து அவனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அவள் வேலை செய்யும் பள்ளியில் விசாரிக்கலாம் என்றால்... இந்தக் காலை நேரத்தில் அது திறந்திருப்பதற்குச் சாத்தியமில்லை. முதலில் வீட்டிற்குச் சென்று தந்தையிடம் பேசிவிட்டு அதன் பின் தேவியைப் பற்றி விசாரிக்கச் செல்லலாம் என்று முடிவு பண்ணியவன் நேரே தன் வீட்டிற்குச் சென்றான்.

வீட்டின் வரவேற்பறையில் கூடியிருந்த ஒட்டுமொத்த குடும்பத்தையும் கண்டவன் உற்சாகமாய் உள்ளே நுழைந்தான். அங்கிருந்த சோபாவில் அமர்ந்தவன்...

"அம்மா... காபி..." தன் அன்னையைப் பார்த்து சொல்லும் போது தான் அவரின் அழுத முகம் அவன் கண்ணில் பட்டது. அதில் துணுக்குற்றவன் அவரருகில் சென்று,

"என்னம்மா... காலையில் ஏன் இப்படி முகம் வீங்குற அளவுக்கு அழுதிருக்கீங்க...?" என்று அவரைக் கேட்டவன் தன் தந்தையைப் பார்க்க... அவரின் முகம் இறுகி

போயிருந்தது கண்டு எல்லோரையும் நோக்கி தன் பார்வையை ஓட்டினான். எல்லோரின் முகத்திலும் தெரிந்த கலக்கத்தில் அவனும் முகம் யோசனையைத் தத்தெடுத்தது. அதிலும் மீராவின் முகம் அழுது கலங்கியிருந்ததைக் கண்டவனுக்கு விசயம் புரிந்து போனது.

நேற்று தான் சொல்லாமல் கொள்ளாமல் வெளியில் தங்கியதை கண்டு அவனின் மனதை எல்லோரும் ஓரளவிற்கு விசயத்தை ஊகித்துவிட்டதை எண்ணி சற்று நிம்மதி அடைந்தான். தேவியைக் காதலிப்பதை, அவளைத் தான் தான் திருமணம் செய்து கொள்ளவிருப்பதைச் சொல்ல இனி எந்தத் தடையுமில்லை என்பதை உணர்ந்தவனின் மனம் இறகை போல் லேசானது.

"அப்பா..." அவன் விசயத்தை ஆரம்பிக்கும் முன் சேஷாத்திரி செய்தித்தாளை எடுத்து அவன் முன் நீட்டினார்.

குழப்பத்துடன் அதை வாங்கியவன் அதிலிருந்த செய்தியை படித்ததும் உயரழுத்த மின்சாரம் பாய்ந்தது போல் அதிர்ந்து போய் எழுந்து நின்றான். அவனின் மூளை தன் செயல்பாட்டை நிறுத்தி அவனை ஸ்தம்பிக்கச் செய்தது.

"அஜூ... இது உண்மையா...?" தந்தையின் கடுப்பான வார்த்தையில் தன்னிலை அடைந்தவன்,

"அது வந்துப்பா..." அவனுக்குமே என்ன சொல்வது என்று தெரியவில்லை.

நான்கு சுவற்றுக்குள் நிகழ்ந்த அழகிய தாம்பத்தியத்தை நாலு பேர் பார்க்க, படிக்க இப்படி அம்பலப்படுத்துவாள் அவன் காதலி என்று அவன் கனவிலும் நினைத்து பார்க்கவில்லை.

'என் தேவிம்மாவா இப்படிச் செய்தாள்...?' அவன் மனம் அவளை நினைத்து நினைத்து மருகியது.

இன்னமும் அவள் தான் இதைச் செய்தாள் என்று அவனால் ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை... நம்பவும்

முடியவில்லை. அதையெல்லாம் விட அவளின் வயிற்றில் தன் வாரிசு வளர்கிறது என்பதை அறிந்த அவனின் மனநிலையை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. தந்தையானது குறித்து ஒரு பக்கம் சந்தோசம் என்றால்... அவளின் துரோகம் நினைத்து மறுபக்கம் துக்கம் என இருவிதமான வேறு வேறு மனநிலையில் அவன் இருந்தான்.

"அவள் வயிற்றில் வளரும் குழந்தைக்கு நீ தான் அப்பாவா...? அது உண்மையா இல்லையா...? அது மட்டும் சொல்லு..."

தந்தையின் விறைப்பான குரலில் அவனின் உடலும் விறைத்தது. பெற்றோர் முன் எத்தகைய தர்மசங்கடமான நிலையைத் தேவி அவனுக்கு அளித்துவிட்டாள் அதை எண்ணும் போதே மனதில் ஆத்திரம் அதிகரித்தது.

"ஆம்..." சொல்லியவன் தலை தானாகக் குனிந்தது.

'என் குழந்தை...' என்று பெருமையுடனும், கர்வத்துடனும் சொல்ல வேண்டிய செய்தியை இப்படித் தலை குனிந்து சொல்லும்படி செய்துவிட்டாளே என்று அவளின் மேல் கோபம் கோபமாய் வந்தது. அவனின் வார்த்தையில் சேஷாத்திரி அப்படியே சோர்ந்து போய்ச் சோபாவில் சாய்ந்துவிட்டார்.

"டேய் அஜூ... நீயாடா இப்படி...?"

தாயின் வார்த்தையில் அவன் உணர்வுகள் செத்து போய் உயிரற்ற உடல் போல் நின்றிருந்தான். வெளிநாட்டில் வளர்ந்த போதும் ஒழுக்கத்துடன் தான் வளர்ந்த விதம் அவன் மனக்கண்ணில் வந்து போனது. அப்படிப்பட்ட தான் எப்படித் தேவியிடத்தில் சறுக்கி போனாம் என்பதை அவனால் ஜீரணிக்க முடியவில்லை.

'க்கு...' மீராவிடமிருந்து வந்த விக்கல் சத்தத்தில் அவனின் கவனம் அவள் புறம் திரும்பியது. வாயில் கைவைத்து அழுகையை அவள் அடக்கி கொண்டு நின்றிருந்த விதம்

அவனைக் கவலை கொள்ளச் செய்தது. தேவையில்லாமல் சின்னப் பெண்ணின் மனதில் ஆசையை வளர்த்துவிட்டார்களே என்று பெரியவர்களிடத்தில் கோபம் கோபமாய் வந்தது.

தேவி அவனுக்குத் துரோகம் செய்திருந்தாலும் அவனால் அவளை மறந்துவிட்டு மீராவை கைப்பிடிப்பது என்பது இயலாத காரியம். அந்தளவிற்குத் தேவி அவன் மனதில் சிம்மாசனமிட்டு அமர்ந்திருந்தாள். அந்தளவுக்கு அவன் அவளைக் காதலிக்கிறான். காதல்... அந்த வார்த்தையை நினைக்கும் போதே அவன் மனம் கசந்தது.

"கடைசியில் என் வளர்ப்பு இப்படியாகிவிட்டதே... என்ன தான் நான் உயிரை கொடுத்து வளர்த்தாலும் நான் உன்னோட அம்மா இல்லையில்ல அஜூ..."

அத்தை ரமாவின் கண்ணீர் அவனின் இதயத்தைக் கனக்க செய்தது. அன்னையின் அன்பை அவன் உணர்ந்ததை விட அத்தையிடம் தான் அவன் தன் அன்னையைக் கண்டான். அத்தை மடி மெத்தையடி என்பது போல் அவர் மடியில் தான் அவன் உண்டு, உறங்கிய நாட்களே அதிகம்.

"அப்படியெல்லாம் இல்லத்தை... நான் மனசறிஞ்சு எந்தத் தப்பும் பண்ணல... அவளைக் காதலித்ததைத் தவிர... நானே உங்க எல்லோர் கிட்டேயும் சொல்லி எங்க கல்யாணத்தை ஊரறிய நடத்தணும்ன்னு நினைச்சேன்... அதுக்குள்ள அவள் முந்திக்கிட்டாள்... இப்பவும் உங்க எல்லோருக்கும் ஒண்ணை மட்டும் சொல்ல விரும்பறேன்... நான் அவளைத் தான் காதலிக்கிறேன்... கல்யாணம் பண்ணிக்கணும்ன்னு நினைச்சேன்... அது சத்தியமான உண்மை... ஆனால் தேவி இந்தளவுக்கு என்னைக் கேவலப்படுத்துவதுக்கு என்ன நோக்கம் தான்னு எனக்கு இன்னமும் புரியல..." என்றவன் அடுத்து என்ன பேசுவது... என்ன சொல்லி சமாதானப்படுத்துவது என்று தெரியாமல் வாய் மூடி ஊமையானான்.

ஏனெனில் அவன் செய்த செயலை சமாதானத்தாலோ இல்லை மன்னிப்பாலோ அதை நியாயப்படுத்த முடியாது.

அன்று தன் உயிரானவளுக்காக அவன் செய்த ஒரு செயல் அவனை இந்தளவுக்குக் கீழிறக்கும் என்று அவன் ஒரு போதும் நினைத்ததில்லை.

"இப்போ என்ன நடந்து போச்சுன்னு இப்படி ஆளாளுக்கு அவனைக் கேள்வி மேல் கேள்வி கேட்டு துளைக்கிறீங்க..." மற்றவர்களைப் பார்த்துச் சத்தம் போட்ட பஞ்சாபிகேசன் நாகார்ஜூனிடம் திரும்பி,

"சரிப்பா நீ சொல்றதை நாங்க நம்பறோம்... நீ காதலிச்ச... ஏதோ சின்ன வயசு உங்களுக்குள்ள தப்பு நடந்து போச்சு..." இதை அவர் சொல்லும் போது அவன் மீண்டும் தலை குனிந்தான்.

"ஆனா... நீ காதலிச்ச பொண்ணு உன்னை ஏம்ப்பா இப்படிக் கேவலப்படுத்தணும்...? உண்மையில் அந்தப் பொண்ணு உன்னைக் காதலிச்சாளா இல்லை ஏதாச்சும் பழிவாங்கன்னு இப்படிப் பண்ணிட்டாளா...? நல்ல குடும்பத்து பொண்ணு இப்படித் தன் கற்பை நாலு பேருக்கு தெரியற மாதிரி ஏலம் போட மாட்டாள். இவளை பார்த்தா நல்ல குடும்பத்து பெண்ணாய் தெரியலைப்பா. அவள் பேசியிருப்பதைப் பார்க்கும் போது அவளோட எண்ணம் எல்லாம் உன் பணத்தின் மீது தானோன்னு எனக்குச் சந்தேகம் தோணுது. அவள் உனக்கு வேணாம்... அவள் கேட்டதைக் கொடுத்துட்டு... இத்தோடு சனியன் ஒழிந்ததுன்னு தலையை முழுகு..."

தாத்தாவின் வார்த்தையில் பேரனின் முகம் இறுகி போனது. என்ன தான் இருந்தாலும் தேவி அவன் காதலி அல்லவா... பேரனின் எண்ணவோட்டத்தை அறியாத தாத்தாவோ தன் பேத்தி மீராவிடம்,

"ஏம்மா மீரா... இதனால உன் அத்தான் மேல் உனக்கு வெறுப்பாயிருக்கா... எங்களை எல்லாம் விட உனக்குத் தான் அவனைப் பத்தி நல்லா தெரியும். சரி அவனை விடு இந்தக் கிழவனுக்காகவாவது அவனை நீ கல்யாணம் பண்ணிக்கிறியா...?" தாத்தாவின் வார்த்தையில் அவன் தான் அதிகமாய் அதிர்ந்து போனான்.

பேபி... பேபி என்று கூப்பிட்டுச் சின்னக் குழந்தையாக எண்ணியவளை போய்த் தான் திருமணம் பண்ணுவதா...? முடியவே முடியாது... மனதுக்குள் நினைத்தவன் தன் முடிவை தெரிவிக்கும் முன் மீரா தன் வாயை திறந்தாள்.

"நீங்க சொல்ல வேண்டிய அவசியமே இல்லை தாத்தா... அத்தானை பத்தி எனக்கு நல்லா தெரியும். அவர் அந்தப் பெண்ணை உண்மையா காதலிச்சிருக்கிறாரு... ஆனா அவள் இவரைப் பழிவாங்கணும்ன்னு காதலிச்சியிருக்கா... இதில் அத்தானோட தவறு ஒண்ணுமில்லை... அவர் நல்லவர்ன்னு எனக்குத் தெரியும்... நான் அவரை முழுசா நம்பறேன்..." என்றவளின் வார்த்தைகளைக் கேட்டு ஒரு நிமிடம் அவன் உறைந்தான்.

எந்த மாதிரியான அன்பு இது... ஒருத்தி அவனை அயோக்கியன் என்று கேவலப்படுத்துகிறாள்... இன்னொருவளோ அவனை நல்லவன் என்று கூறி அவனின் தரத்தை உயர்த்துகிறாள். இரு பெண்களையும் தராசில் வைத்து பார்த்தவனுக்கு மீரா இருந்த தட்டே தாழ்ந்து... அவளின் குணத்தை உயர்த்திக் காண்பித்தது.

ஆனாலும்... ஏதோ ஒன்று குறைகிறதே என்று யோசித்தவனுக்கு விடையாக வந்தது... அவனின் காதல்... அவளின் காதல் பொய்யாய் இருக்கலாம்... ஆனால் அவனின் காதல்...? அது உண்மையன்றோ... அவனின் நேசம் பொய்யில்லையே... அந்தக் காதல் அவன் நெஞ்சை நிறைக்க... தான் ஏமாற்றுப்பட்டு விட்டதை அவன் அறிவு ஏற்றாலும் அவனின் மனம் அதை ஏற்றுக் கொள்ளாமல் தவிக்க...

"ப்ளீஸ்... என்னைக் கொஞ்சம் தனியா விடுங்க... நான் பண்ணியது தப்பு தான்... இனிமேல் என்னன்னு நான் முடிவு பண்ண... யோசிக்க எனக்குக் கொஞ்சம் டைம் கொடுங்க..." என்றவன் யாரையும் நிமிர்ந்து பார்க்காமல் மாடியேறி தன்னறைக்குச் சென்றான்.

"மாப்பிள்ளை... அவன்..." சேஷாத்திரி வெங்கட்டின் கையைப் பிடித்துக் கொண்டு மன்னிப்பு கேட்கும்

பாவனையில் பேச, அவரைத் தடுத்து பேசிய வெங்கட்,

"அஜூ நான் வளர்த்த பையன்... மீரா மாதிரி தான் நானும் யோசிக்கிறேன்... இது ஏதோ அவனைச் சுற்றிப் பின்னப்பட்ட சதின்னு நினைக்கிறேன்... எனக்கு அவன் மேல் முழு நம்பிக்கையிருக்கு... மீராவை அவனுக்குக் கொடுப்பதில் எனக்கு முழுச் சம்மதம்..." சொன்னவரை கண்கலங்க பார்த்த சேஷாத்திரி அவரை அன்போடு அணைத்துக் கொண்டார். இந்த மாதிரியான துன்பமான நேரங்களில் தான் உறவுகளின் அருமை தெரிகிறது.

"மீரா... அஜூ குழந்தை பத்தி தெரிஞ்சும் நீ..." துர்கா அவளைப் பார்த்து கேட்க...

"அத்தை எனக்குக் குழந்தைகள்ன்னா ரொம்பப் பிடிக்கும்... அதிலும் அத்தானோட குழந்தைன்னா கசக்குமா...? அதை என் குழந்தையா ஏத்துக்குவேன்... நீங்க கவலைப்படாதீங்க... அந்தப் பொண்ணுக்கு தான் அத்தானோட வாழ கொடுத்து வைக்கல..." என்றவளின் தெளிவான பேச்சில் துர்கா சற்று முகம் தெளிந்தார்.

ரமாவுக்குமே பெண்ணை நினைத்து சற்றுப் பெருமையாக இருந்தது. நன்றாக அலசி ஆராயாமல் எடுத்தோம் கவிழ்த்தோம் என்று முடிவு பண்ணாமல் நன்கு யோசித்து முடிவு பண்ணிய மகள் மேல் அவருக்கு மரியாதை வந்தது. அதே சமயம் அவள் தன் மகள் என்பதில் சற்று பெருமையாகவும் இருந்தது. இருவருமே அவரின் குழந்தைகள் அல்லவா...!!!

அங்கே அறைக்குள் நுழைந்தவனின் நிலையோ மிகவும் பரிதாபமாகயிருந்தது. தான் எப்படி ஏமாந்தோம்... அதுவும் காதல் என்ற பெயரில் ஒரு பெண்ணிடத்தில் ஏமாந்தது அவனால் சற்றும் ஜீரணிக்க முடியவில்லை. 'ச்சே...' என்று கையை உதறியவனின் கையிலிருந்த செய்தித்தாள் தூர போய் விழுந்தது. ஏதோ தோன்ற அவசரமாய் அதைப் போய் எடுத்தான்.

கொட்டை எழுத்தில் இருந்த அவளின் பெயர் வைஷ்ணவிதேவி... அவனுள் சந்தேக விதையைத் தூவ... அந்தச் செய்தியை ஆழ்ந்து படித்தான். அவன் வைஷ்ணவியுடன் சாட்டில் பேசியதை ஒரு சாட்சியாக அவள் சொல்லியிருந்ததைப் படித்த போது அவனுக்கு எல்லாம் புரிந்து போனது... தான் திட்டமிட்டு ஏமாற்றப்பட்டதை... வைஷ்ணவியும், தேவியும் ஒன்று தான் என்பதை உணர்ந்தவனுக்கு... தான் ஏமாற்றப்பட்டது எதனால், ஏன், எதற்காக என்பது மட்டும் தெரியவில்லை... புரியவில்லை...

"தேவி..." ஆத்திரத்துடன் முணுமுணுத்தான்.

'எப்படிடி என்னை ஏமாத்த உனக்கு முடிஞ்சது... என் மேல் அப்படியென்ன பழிவெறி... உன்னைக் காதலிச்சதை தவிர நான் வேறு எந்தப் பாவமும் பண்ணவில்லையே... இதுக்கு நீ என்னைக் கத்தி எடுத்து நேருக்கு நேர் குத்தி இருக்கலாமே.. இப்படி அணு அணுவாய்ச் சாகாமல் என் உயிர் ஒரேடியாய் போயிருக்குமே...' என்று மனதுக்குள் புலம்பியவன் நிற்க மாட்டாமல் அப்படியே தோய்ந்து போய் நாற்காலியில் அமர்ந்தான். அவன் மனக்கண்ணில் அவனும் அவளும் காதலித்த நினைவுகளே ஓடி அவனை உயிரோடு வதைத்தது.

அவளைச் சந்தித்த மறுநாள் தன் காதலை உணர்ந்து அதற்கு அடுத்த நாள் காதலை சொல்லி அவளிடம் சம்மதம் வாங்கி... என்று யோசித்துக் கொண்டிருந்தவனுக்கு அப்போது தான் ஒன்று உறைத்தது. அவன் காதலை சொல்லியதும் அவள் உடனே சம்மதம் சொல்லியது. அன்று தன்னைப் போல் அவளும் கண்டவுடன் காதலில் விழுந்துவிட்டாள் என்றெண்ணி பூரித்துப் போனவனுக்கு...

இன்று எல்லாமே தவறாகத் தெரிந்தது. அவள் ஒரு நாளும் தன்னைக் காதலித்ததாய் சொல்லவில்லை என்பது மிகத் தாமதமாய் அவன் மூளைக்கு உறைத்தது. அன்று அவனின் காதலை ஏற்றுக் கொண்டதும் நாடகம்... அதே போல் ஒரே

மாதத்தில் தன்னோடு குடும்பம் நடத்தியவள் மீது அப்போது தோன்றாத சந்தேகம் இப்போது தோன்றியது.

ஒருத்தி காதலில் வேண்டுமானால் நடிக்கலாம்... ஆனால் ஒருவனிடத்தில் தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் பணயம் வைத்து கூடும் கூடலில் கூடவா பொய்மை இருக்கக் கூடும்... அதில் கூடவா நடிக்க முடியும்? மனதுக்குப் பிடிக்காத ஆணின் கைப்பட்டால் மனமும், உடலும் அருவருப்பில் சுருங்கும் பெண்களைத் தான் அவன் கேள்விப்பட்டிருக்கிறான்.

அவள் தன்னுடன் கூடிய கூடலை நினைத்து பார்த்தவனுக்கு அவள் எந்தவிடத்திலும் அருவருப்பு அடையவும் இல்லை... அவனை விலக்கி தள்ளவுமில்லை. மாறாக அவன் வேண்டுமென்ற தாபம் மட்டுமே அவளிடத்தில் கொழுந்துவிட்டு எரிந்ததை அவனால் இப்போதும் உணர்ந்து கொள்ள முடிந்தது. அது கொடுத்த தாக்கம் இப்போது அவள் வேண்டுமென்று என்ற உணர்வு அவன் மனதில் பேயாட்டம் போட... தன்னிலை கண்டு அவனுக்கே இரக்கமாயிருந்தது.

அவள் மேலிருந்த ஆத்திரம் போய் இப்போது அவள் அவனுக்கு அளித்த காதல் பரிசான துரோகத்தை எண்ணி வேதனையில் ஆழ்ந்தான். காதல் இந்தளவுக்கு வலிக்கச் செய்யும் என்பதை உணர்ந்த அவன் அந்த வலியில் துடிதுடித்துப் போனான். அவளைக் காண வேண்டும்... அவள் துரோகத்துக்கான காரணத்தை அறிய வேண்டும்...

‘ஏன் இப்படிச் செய்தாய்?’ என்று அவளைக் கேட்க வேண்டும் என்று எண்ணியவன் மனம் முழுவதும் வலி... வலி... வலி மட்டுமே...

********************************

பிரகாஷ் விட்ட அறையில் வைஷ்ணவிதேவியின் கன்னம் மிளகாயை வைத்து அரைத்தது போல் எரிந்தது. கன்னத்தில் கையை வைத்தபடி அவனை அதிர்ச்சியாய் பார்த்தாள் அவள்.

"அண்ணா..." அவளின் வார்த்தையில் அவளின் அதிர்ச்சி பிரதிபலித்தது.

"அப்படி என்னைக் கூப்பிடாதே... அந்த வார்த்தைக்கு அர்த்தம் புரிஞ்சியிருந்நிருந்தா நீ இப்படியொரு காரியம் பண்ணிட்டு என் முன்னால் வந்து இவ்வளவு தைரியமாய் நிற்கமாட்ட... அப்பா, அம்மா வந்து கேட்டா நான் என்ன சொல்லுவேன்... உன் தங்கச்சியை நீயே அவனுக்குக் கூட்டி கொடுத்தியான்னு கேட்டா... நான் என்ன பதில் சொல்வேன்..." ஆத்தரமாய்க் கத்தியவனின் வார்த்தையில் மனம் உடைந்தவள்,

"அண்ணா... அப்படியெல்லாம் பேசாதீங்க... நீங்க அப்படியெல்லாம் இல்லை... அது எனக்குத் தெரியும்... ப்ளீஸ் இன்னொரு முறை உங்களை நீங்களே இப்படித் தாழ்த்தி பேசாதீங்க..." அவனின் கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள் அவள்.

"நீ பண்ணியிருக்கிற வேலைக்கு ஊர் எப்படிப் பேசும்... இப்படித்தான் பேசும்..." என்றவனின் முகத்தில் அவ்வளவு வேதனை...!

"இல்லை... இது முழுக்க முழுக்க நான் சம்பந்தப்பட்டது... உங்களுக்கும் இதுக்கும் சம்பந்தமில்லைன்னு நான் அப்பா, அம்மா கிட்ட சொல்லிடறேன்... இதுக்குப் போய் நீங்க வருத்தப்படக் கூடாதுண்ணா... இப்போ நீங்க சந்தோசமாயிருக்கிற நேரம்... நீங்க நினைச்ச மாதிரி அவனைப் பழிவாங்கியாச்சு இல்ல... இது அவன் கேரியர்ல மிகப் பெரிய ப்ளாக் மார்க்..." அவனை மகிழ்விக்க என்று அவள் கூறிய வார்த்தைகள் அவனை இன்னமும் வேதனையில் ஆழ்த்தியது.

"அவனை எனக்குப் பிடிக்காது தான்... அவனைப் பழிவாங்கணும்ன்னு நினைச்சேன் தான் இல்லைங்கல்ல... ஆனா அதுக்கான விலை... என் தங்கை இல்லை... அவளின் கற்பு இல்லை..." மனம் நொந்து சொன்னவன் வேதனையில் ஆழ்ந்தான்.

"அண்ணா..." சிறு சங்கடத்துடன் இடைவெளி விட்டவள்,

"இதில் எனக்கு எந்தக் குற்றவுணர்வும் இல்லை... நானா மனமுவந்து தான் செய்தேன்... உங்களுக்கு ஒண்ணு தெரியுமா...? இப்போ தான் என் மனசு ஆழ் கடல் போல் அமைதியாயிருக்கு... நிம்மதியாயிருக்கு... எனக்காகப் பார்த்து பார்த்து செய்யும் உங்களுக்காக என்னால் முடிஞ்ச சிறு உதவி அவ்வளவு தான்..."

மிக எளிதாகப் பேசியவளை கண்டு அவன் கொஞ்சம் அதிர்ந்து தான் போனான். தன் செயலுக்கு இந்தச் சிறிய பெண்ணைத் துணைக்கு அழைத்தது தவறோ என்று அந்தக் கணம் மனதிலெழுந்த குற்றவுணர்வில் தாங்கமாட்டாமல் தவித்தான்.

"வைஷூ உன் கிட்ட நான் என்ன சொன்னேன்... நீ என்ன செய்துட்டு வந்திருக்க..." அவன் கேட்ட போது அவனின் முகம் பார்க்க முடியாமல் அவளின் தலை தானாகத் தாழ்ந்தது.

"வேறொரு பெண்ணை வைத்துச் செய்யச் சொன்னீங்க..." முணுமுணுப்பாய் பதில் வந்தது அவளிடமிருந்து...

"காசுக்காக இதைச் செய்யப் பல பெண்கள் இருக்க... இதை நீயேன் செய்தே... நாளைக்கு உனக்குக் கல்யாணம் என்றால் இந்த நியூஸ் உன் வருங்கால வாழ்க்கையைப் பாதிக்காதா...? உன் வாழ்க்கை இப்படியே அழிந்து போவதை பார்ப்பதற்கா இந்த அண்ணன் உயிரோடு இருக்கேன்... என்னயிருந்தாலும் நீ செய்தது தப்பு தான்ம்மா..." பிரகாஷின் குரல் வேதனையுடன் ஒலித்தது.

"காசுக்காகச் செய்பவளை விட நான் என்ன மட்டம்...? உங்களுக்காக உயிரையும் கொடுப்பவள் நான்... அப்போ இதை நான் செய்தால் தான் நன்றாகயிருக்கும்..."

அழுத்தம் திருத்தமாய்ச் சொன்னவளின் முகத்தில் தவறு செய்துவிட்டதற்கான தவிப்பு ஏதுமில்லை. அதைக் கண்டவன் மனம் துணுக்குற்றது. 'இவள் தெரிந்து

பேசுகிறாளா.. இல்லை தெரியாமல் பேசுகிறாளா...?' சந்தேகமாய் அவன் அவளைப் பார்த்தான்.

"வைஷூ... உன் வயிற்றில் வளரும் குழந்தை... உன் கல்யாணம்..."

அவனால் கோர்வையாய் பேச முடியவில்லை. தொண்டைக்குழியில் ஏதோ முள் சிக்கி கொண்டது போல் அவனுக்குப் பேச்சு வராமல் சதி செய்தது.

"கல்யாணம்..." விரக்தியாய் சொன்னவளின் முகம் கல் போல் இறுகியிருந்தது.

"எனக்குக் கல்யாணத்தில் நம்பிக்கையில்லை... அதிலும் ஆண்களிடத்தில் சுத்தமாய் நம்பிக்கை இல்லை..." தன்னோட வார்த்தையில் அண்ணனின் முகம் மாறுவதை உணர்ந்தவள்...

"அப்பாவும், நீங்களும் விதிவிலக்கு அண்ணா..." என்று கூறியவள் அவனைப் பார்த்து சிரித்தாள். அதில் ஜீவனில்லை என்பதை நொடியில் கண்டு கொண்டான் அவன்.

"அப்போ இந்தக் குழந்தை..." அவனின் கேள்வியில் அவளின் புன்னகை விரிந்தது.

"நான் செய்த பாவத்திற்கு எனக்குக் கிடைத்த தண்டனை... பெற்று வளர்க்க வேண்டியது தான்..." கேலி போல் சொல்லி பேச்சை மாற்றினாள்.

"வைஷூ... நீ அவனை விரும்பறியா...?" யோசனையுடன் கேட்டான்.

"ச்சே... ச்சே... அப்படியெல்லாம் இல்லைண்ணா... இது ஒரு கமிட்மென்ட்... வேலை முடிஞ்சதுக்கு அப்புறமும் உரிமை கொண்டாடுவதில் அர்த்தம் இல்லை..."

"அவன் உன்னை விட மாட்டேன்னு சொன்னா...?" அவனின் இந்தக் கேள்வியில் அவள் உடல் அதிர்ந்தது. எல்லாம் ஒரு கணம் தான் தன் தயக்கத்தை விட்டொழித்தவள்,

"ஆண்களில் அவன் மட்டும் விதிவிலக்கா என்ன...? இந்நேரம் விசயம் கேள்விப்பட்டு... என் மேல் கொலைவெறியில் இருந்தாலும் ஆச்சிரியப்படுவதற்கு இல்லை..." வாய்விட்டுச் சிரித்தவளை ஒரு மாதிரியாய் பார்த்த பிரகாஷ்,

"எனக்கு என்னமோ நீ அவன் கூடச் சேர்ந்து வாழ்றது தான் சரியாப்படுது... நான் வேணும்ன்னா அவன் கைக்காலில் விழுந்தாவது உன்னை அவன் கூடச் சேர்த்து வைக்கிறேன்..." என்றவனைத் தடுத்து மறுப்பாய் தலையசைத்தவள்,

"இது என் வாழ்க்கை நான் பார்த்துக்கிறேன்..." என்றவளுக்குப் பதிலாக...

"எது உன் வாழ்க்கை... இப்படிக் கெட்டு சீரழிவதா...?" அடிக்குரலில் உறுமிய ஜனார்த்தனின் பேச்சில் திகைத்துப் போய்த் திரும்பியவள்,

"அப்பா... அம்மா..." அதிர்ச்சியில் பேச்சற்று போய் நின்றாள். ஆம்... விசயம் கேள்விப்பட்டுத் திருப்பதியில் சாமி தரிசனம் கூடப் பண்ணாமல் ஜனார்த்தனன் மனைவியுடன் உடனே சென்னைக்குக் கிளம்பி வந்துவிட்டார்.

"அந்த நினைப்பு உன் மனசிலிருந்தா இப்படியொரு காரியத்தை நீ பண்ணியிருப்பியா...?" கேட்டுக் கொண்டு வந்த கோமளம் அவளை அடி மேல் அடிக்க... ஜனார்த்தனன் வந்து அவரைத் தடுத்தார்.

"விடுங்க என்னை... அவளை..." பல்லை கடித்த மனைவியை, "கோமளா..." ஒரு அதட்டல் போட்டு அடக்கியவர்,

"அடிக்கிறதா இருந்தா உன் புள்ளையை அடி... அவன் தான் இது எல்லாத்துக்கும் காரணம்... எப்போ பாரு அந்த நாகா மேல பொறாமையை வளர்த்துட்டே போனா... ஒரு நாள்

இல்லை ஒரு நாள் இது போல் தான் நடக்கும்..." என்று பொருமியவர் மகனின் சட்டையைக் கொத்தாகப் பிடித்து...

"ஏண்டா... உன் பழிவெறிக்கு என் பொண்ணு தான் கிடைத்தாளா...?" என்று கேட்டுக் கொண்டே... அவனின் கன்னத்தில் சராமாரியாக அடிக்க...

"அப்பா... அண்ணா மேல் எந்தத் தப்புமில்லை.... இதுக்கு எல்லாம் நான் தான் காரணம்... அண்ணாவை அடிக்காதீங்க..." என்று தடுக்க முனைந்த தங்கையைப் பார்த்து,

"நீ இதில் தலையடாதே... அவர் அடிக்கட்டும்... எனக்கு வேண்டிய அடி தான் இது..." அசையாமல் நின்றவனைக் கண்டு அவளுக்குக் கண்ணீர் வந்தது.

அவர் அடித்து ஓய்ந்ததும் அவர் காலில் விழுந்தவன், "அப்பா என்னை மன்னிச்சிருங்க... வைஷூ வாழ்க்கையை நேர் பண்ற பொறுப்பு என்னோடது..."

"நீ பண்ணிய காரியத்துக்கு உன்னை வெட்டி போட்டால் தான் என் மனசு ஆறும்... நீயென்னடா அவள் வாழ்க்கையை நேராக்குறது... என் மகள் வாழ்க்கையை எப்படி நேர் செய்யணும்ன்னு எனக்குத் தெரியும்..." என்றவர்,

"கோமளா... நீ வைஷூவை கூட்டிட்டு கிளம்பு..."

கணவரின் வார்த்தைக்கு எதிர்பேச்சுப் பேசாமல் மகளைக் கூட்டிக் கொண்டு கிளம்பினார் கோமளம். வைஷ்ணவியும் தந்தையை எதிர்க்க முடியாமல் அவர்களோடு மனமே இல்லாமல் கிளம்பினாள். அவர்கள் நேரே சென்ற இடம் நாகார்ஜூன் வீடு...

விடாமல் அழைத்த அலைப்பேசியை ஒருவித சலிப்புடன் எடுத்துக் காதில் வைத்தான் நாகார்ஜூன். அவனுக்கு இருக்கும் மனநிலையில் யாரிடமும் பேச விருப்பமில்லை. காலையில் அறைக்குள் முடங்கியவன் தான்... இதோ இப்போது மதியமாகிய போதும் அறையை விட்டு

வெளியில் வர விருப்பமில்லாதவனாய் அங்கேயே முடங்கிவிட்டான்.

"சொல்லுங்கப்பா..." சுரத்தில்லாமல் ஒலித்தது அவனது குரல்...

"அவங்க வந்திருக்காங்க அஜூ..." உணர்ச்சியற்ற குரலில் உரைத்த தந்தையின் பேச்சில் அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"எவங்க...?" புரியாமல் கேட்டான் மகன்.

"அதான் பேப்பரில் நியூஸ் போட்ட அந்தப் பொண்ணும்... அவங்க அப்பா, அம்மாவும்..." அவரின் வார்த்தையில் அவன் மின்னலெனத் துள்ளி எழுந்தான்.

"தேவியாப்பா..." அவனின் குரலில் தெரிந்த அதிகப்படியான ஆர்வத்தில் சேஷாத்திரியின் முகம் இறுகியது.

"ம்..." என்றபடி அவர் அழைப்பை துண்டிக்க... அவன் உற்சாகத்துடன் அறைக் கதவை திறந்து வெளியில் வந்தான்.

"சேஷூ... என் பொண்ணு ஏதோ தெரியாம இப்படிப் பண்ணிட்டா... அவளை மன்னிச்சு உங்க வீட்டு மருமகளா ஏத்துக்கணும்..." ஜனார்த்தனனின் குரலில் நாகார்ஜூனும், வைஷ்ணவியும் உடல் விறைக்க நின்றிருந்தனர்.

தனக்காகத் தனது தந்தை அடுத்தவரிடம் கெஞ்சும் நிலைக்குத் தான் ஆளாக்கி விட்டோமே என்று அவள் உடல் விறைக்க நிற்க... அவனோ அவளின் துரோகத்தை மறந்து அவள் மீதான காதலில் தன்னை மறந்து அவளைப் பார்க்க மகிழ்வுடன் கிளம்பிய தன்னிலையை அறவே வெறுத்தான்.

அதனால் மனதில் ஏற்பட்ட சுணக்கத்தில் மெதுவே படியிறங்கினான். அவனின் பார்வை முழுவதும் தேவியின் மீதே இருந்தது. அவனது வரவு உணர்ந்து எல்லோரும் அவனையே பார்க்க... அவள் மட்டும் அவனைத் திரும்பி

பார்க்காமல் வேறு எங்கோ பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள்.

"இதோ என் மகனே வந்துட்டான்... நீங்க கேட்ட கேள்விக்கு அவனே பதில் சொல்வான்... ஏன்னா பாதிக்கப்பட்டவன் அவன் தானே..." மகனை கை காட்டிவிட்டு தந்தை அமைதி காத்தார்.

அவன் யாரையும் கண்டு கொள்ளாமல் நேரே அவளருகில் வந்தவன்... அவளின் கையைப் பற்றினான். அவள் திகைத்து போய் அவனைப் பார்க்க... அவனோ பதில் பேசாமல் அவளின் கையைப் பிடித்துத் தன்னோடு அழைத்துச் சென்றான். ஏனோ அவளும் அவனின் பிடியிலிருந்து திமிறவும் இல்லை... விலகவும் இல்லை. அவன் இழுத்த இழுப்பிற்கேற்ப இசைந்து கொடுத்தாள்.

நேரே தன்னறைக்குள் அவளை அழைத்து வந்தவன் கதவை தாளிட்டுவிட்டு அவளை நேருக்கு நேராய் பார்த்தான். அவனுக்குக் கொஞ்சமும் சளைக்காத பார்வையைப் பார்த்தவள் தன் இரு கைகளையும் நெஞ்சுக்கு குறுக்கே கட்டி கொண்டு அழுத்தமாய் நின்றிருந்தாள். அதையெல்லாம் விட அவனைப் பார்த்த அவளின் அந்நிய பார்வையில் அவனின் காதல் கொஞ்சம் கொஞ்சமாய்ச் செத்துக் கொண்டிருந்தது.

"ஏன் இப்படிப் பண்ணின... தேவி...?" குரலில் கடுமை காட்ட முயன்று தோற்றான். அவளைக் கண்டதும் அவனின் ஆத்திரம், கோபம் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மாயமாகி போனதை அவன் உணர்ந்தே இருந்தான்.

"நாலு சுவத்துக்குள் நடந்த புனிதமான தாம்பத்தியத்தை நீ நாலு பேருக்கு எடுத்து சொல்லிட்டு வந்துட்ட... ஆனா நான் உனக்கும் எனக்குமான பேச்சுவார்த்தை கூட அடுத்தவங்களுக்குத் தெரியாமல் நாலு சுவத்துக்குள்... அதுவும் என்னறைக்குள் இருக்கணும்ன்னு நினைச்சு உன்னை இங்கே கூட்டிட்டு வந்திருக்கேன்... அப்படிப்பட்ட என்னைக் கேவலப்படுத்த உனக்கு எப்படி மனசு வந்துச்சு... அப்படி நான் உனக்கு என்ன கெடுதல் பண்ணினேன்

தேவி...? நான் உன்னை ஏமாத்தினேனா...? என்னைப் பார்த்தால் அப்படி ஏமாத்துபவன் மாதிரியாயிருக்கு...?" என்றவனின் குரல் துக்கத்தில் உள்ளே போனது.

அதற்கும் பதில் பேசாது தன்னை வெறித்துப் பார்த்து கொண்டிருந்தவள் அருகே வந்தவன், "பதில் சொல்லுடி... ரோட்டுலே போற ரோக் மாதிரி... ஏதோ காமுகன் மாதிரி என்னைச் சித்தரிச்சு பேசியிருக்கியே... அதுக்குக் காரணம் என்னடி...? காதல் இல்லாமலா என் கூடச் சேர்ந்து வாழ்ந்த...? அப்போ உன் கண்ணில் நான் கண்ட காதல் பொய்யா...? உன் காதல் பொய்யா...? சொல்லுடி... என்ன தான் உனக்குப் பிரச்சினை...?”

“இவ்வளவு தூரம் என்னை நீ தரம் தாழ்த்திய பிறகும்... எனக்குத் துரோகம் இழைச்ச உன் கிட்ட நான் விளக்கம் கேட்டுட்டு இருக்கேன்னா... அதுக்குக் காரணம் நான் உன் மேல் வச்ச காதல்... உன் காதல் வேணும்ன்னா பொய்யாயிருக்கலாம்... ஆனா என் காதல் உண்மை... இப்போ கூட இதைச் செய்தது நீ தான்னு என்னால் நம்ப முடியலை... என் தேவி இப்படியொரு காரியம் பண்ணினா... அதுக்கு ஏதாவது தகுந்த காரணமிருக்கும்ன்னு என் உள்மனசு சொல்லுது... சொல்லு தேவி... நீ ஏதோ விளையாட்டாய் தானே இதைச் செய்தே..." அவன் மேலே பேசும் முன்,

"இல்லை... இல்லை... அதைச் செய்தது நான் தான்... வேணும்ன்னே தான் நான் இதைச் செய்தேன்... எனக்கு உங்க மேல் காதலும் கிடையாது... எந்தக் கருமமும் கிடையாது..." ஏறக்குறைய கத்தியவளை திகைத்துப் போய்ப் பார்த்தவன் சட்டென்று தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"ஏன்...?" அந்த ஒற்றை வார்த்தையில் ஏமாற்றம், வேதனை, கழிவிரக்கம், எல்லாம் கலந்து ஒலித்தது அவனது குரலில்.

"பிரகாஷ்..." அவளும் ஏனென்ற காரணத்தை ஒற்றை வார்த்தையில் அவனுக்கு உணர்த்திவிட்டாள்.

"காட்..." தன் தலை முடியை அழுந்த கோதி கொண்டவனுக்கு இதை நம்பத்தான் முடியவில்லை.

"அவர் என் அண்ணா..." என்றாள் கூடுதல் தகவலாக...

"ஓ..." என்றவன் அவளைக் கூர்ந்து பார்த்தவன்,

"பிரகாஷுக்கும் எனக்கும் எந்தவித பிரச்சினையும் கிடையாது... தொழில் முறையில் போட்டி உண்டு தான் இல்லைங்கல்ல... அதுக்காக நீ இப்படியெல்லாம் பண்ணுவியா...? அவன் தான் முட்டாள் மாதிரி என்னை எதிரியா பார்த்தா... நீ என்ன ஏதுன்னு அலசி ஆராய்ஞ்சு பார்க்க மாட்டியா...? அவனுக்காக உன்னையே பணயம் வைக்கிற அளவுக்கு... ச்சு... எப்படி உன்னால் முடிந்தது..." அவனால் இன்னமும் அவள் சொன்னதை நம்ப முடியவில்லை.

"செஞ்சோற்று கடன் தீர்க்க அந்தக் கர்ணன் துரியோதனன் பக்கம் நின்ன மாதிரி நான் என் அண்ணனுக்காக இதைச் செய்தேன்... நான் நியாயம், தர்மம் இதுக்கெல்லாம் அப்பாற்பட்டவள்... என்னைப் பொருத்தவரைக்கும் நன்றி கடனை திருப்பிச் செலுத்த வந்த சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்திக் கொண்டேன். என் மனசில் எந்தவித குற்றவுணர்வும் இல்லை..."

என்னத்தான் நிமிர்வாய் அவள் சொன்னாலும் அவள் கண்ணில் கொஞ்சமே கொஞ்சம் பிரதிபலித்த வலியை அவனது காதல் கொண்ட உள்ளம் கண்டு கொண்டது. அவளை ஆராய்ச்சியாய் பார்த்தவன்...

"இப்படிச் செய்றதால என்னைப் பழிவாங்கிட்டதா நினைப்பா... இல்லை இதனால் என் கேரியர் பாதிக்கப்படும்ன்னு நினைக்கிறியா...?" அவளைப் பார்த்து கூர்மையுடன் அவன் கேட்க,

"சொன்னாலும் சொல்லாவிட்டாலும் உங்க வாழ்க்கையில் நான் வந்தது ஒரு அழிக்க முடியாத கரும்புள்ளி தான். இதை நீங்களே நினைச்சாலும் மாத்த முடியாது... அந்தளவில் என்

அண்ணாவுக்கு வெற்றி தான்..." என்றவளின் இறுமாப்புப் பதிலில் அவனுக்குப் பிரகாஷ் மேல் கோபம் கோபமாய் வந்தது.

"உன் முடிவு என்ன...?"

"உங்க வழியில் நீங்க போங்க... என் வழியில் நான் போறேன்..."

"அப்போ உன் வயித்தில் வளரும் நம்ம குழந்தை...?"

"என் குழந்தை..." அவனின் வார்த்தையைத் திருத்தியவள்... "அதை எப்படி வளர்க்கணும்ன்னு எனக்குத் தெரியும்..."

"அதன் தகப்பன் நான்..." அவன் விடாப்பிடியாய்ப் பேசினான்.

"என் குழந்தைக்கு அம்மா மட்டும் போதும்... அப்பா தேவையில்லை..." என்றவளை கண்டு அவனுக்கு ஆயாசமாயிருந்தது.

"நாளைக்கே உனக்கு வேறு கல்யாணமானால்... என் குழந்தை..." என்று பாதியில் நிறுத்தியவன் அவளைக் கூர்ந்து பார்த்தான்.

"என் குழந்தை இது... அப்புறம் நான் யாரையும் கல்யாணம் பண்ணிக்கப் போவதில்லை... எனக்கு ஆண்களைக் கண்டாலே வெறுப்பாயிருக்கு... உங்களையும் சேர்த்து தான் சொல்கிறேன்..." என்றவளின் பதிலில் அவனுக்குத் தேவையான பதில் கிடைத்துவிட... அவள் அருகே இன்னமும் நெருங்கி வந்தவன்,
"உனக்குத் தான் ஆண்களைக் கண்டால் பிடிக்காது... ஆனால் எனக்குப் பெண்கள்ன்னா ரொம்பப் பிடிக்கும்... அதுவும் என் ஸ்வீட்டி என்றால் ரொம்ப ரொம்ப இஷ்டம்..." என்றவன் நொடி நேரம் கூடத் தாமதிக்காமல் அவள் முகம் பற்றி இழுத்து அவளின் இதழில் தன் இதழை அழுத்தமாய்ப் பதித்தான்.

அவனின் மனதிலுள்ள வேதனை, காயத்திற்கு வேண்டிய மருந்தை அவளின் இதழொற்றலில் அவன் தேடினான். வெகுநேரம் நீடித்த அந்த முத்தத்தில் அவள் தான் சுவாசிக்கக் காற்றுக் கிடைக்காமல் திணறினாள். அவனிடமிருந்து வலுக்கட்டாயமாய்த் தன் உதடுகளைப் பிரித்தெடுத்தவள்,

"நான் உங்களைக் கேவலப்படுத்தியவள்... அவமானப்படுத்தியவள்... உங்களுக்குத் துரோகம் செய்தவள்... அப்படிப்பட்ட என்னிடம் இப்படி நடந்து கொள்ள உங்களுக்கு வெட்கமாயில்லை... காதலில்லை என்று சொல்பவளிடம் நீங்க இப்படி நடந்து கொள்ளும் முறை கொஞ்சமும் சரியில்லை..." என்றவளை மீண்டும் தன்னருகில் இழுத்தவன்,

"நீ செஞ்ச தப்பை எப்படிச் சரி செய்யணும்ன்னு எனக்குத் தெரியும்... எனக்கு ஏற்பட்ட கேவலத்தை, அவமானத்தை எப்படித் துடைக்கணும்ன்னு எனக்குத் தெரியும்... உன் துரோகத்தை எப்படிக் காதலாய் மாத்துவதுன்னு எனக்குத் தெரியும்... அப்புறம் என்ன சொன்ன எனக்கு வெட்கமாயில்லையான்னு தானே கேட்ட... நிச்சயமாயில்லை... என் மனைவிக்கு முத்தம் கொடுப்பதற்கு நான் ஏன் வெட்கப்படணும்...? ம்..." ஒற்றைப் புருவத்தை உயர்த்தி அவளைப் பார்த்து வினவியவனைக் கண்டு அவள் திகைத்து போய் நிற்க...

"உனக்கு ஆண்களைக் கண்டால் பிடிக்கலன்னு சொன்ன... அது ஏன்னு நான் கேட்க போறதில்லை... ஆனா இந்த ஆணை அதாவது இந்த நாகார்ஜூனை உனக்குக் கண்டிப்பா பிடிக்கும்... பிடிக்க வைப்பேன்... பார்க்கலாம்டி உன் துரோகம் ஜெயிக்குதா... இல்லை என் காதல் ஜெயிக்குதான்னு...? இந்த நாகா தோத்ததா சரித்திரமில்லை... அதை நீ மாத்தி எழுத நினைச்சா நான் விட்டுவிடுவேனா என்ன...? என் காதல் உன் காதலை ஜெயிக்கும்... உன்னையும் ஜெயிக்கும்... உன் வாயால் நாகா ஐ லவ் யூன்னு சொல்ல வைக்கிறேன்டி..." என்றவன் மீண்டும் அவள் இதழை நோக்கி குனிய...

"விடுங்க..." என்று திமிறியவளை கொஞ்சமும் லட்சியம் செய்யாமல் அவள் இதழ் நோக்கி குனிந்தவன் முன்பை விட அழுத்தமாய் அவளின் இதழில் கவிதை பாட... அவளோ தனக்குள் இறுகி போய் நின்றிருந்தாள். அதை அவன் கொஞ்சமும் கண்டு கொள்ளாமல் தன் காரியத்தில் கண்ணாயிருந்தான். காதலில் தான் கடமை தவறாத நல்ல காதலன் என்பதை அவன் அவளுக்கு நிரூபித்தான்.

சதி தொடரும்...!!!

நாகார்ஜூன் தன்னவளின் இதழ்ப்பூவின் தேனை பருகுவதில் நாட்டம் கொண்டவனாய் அதில் மயங்கியிருந்தவன்... சுற்றுப்புறத்தை மறந்தான்... இவ்வளவு ஏன் அவன் தன்னையே மறந்தான்... அவன் நினைவில் நின்றது எல்லாம் அவன், அவள் மட்டுமே...

வெகுநேரம் சென்றும் தன்னை விடுவிக்கும் எண்ணம் சிறிதுமில்லாமல் இருந்தவனை என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்த தேவி... பின்பு தன் பலம் அத்தனையையும் திரட்டி கொண்டு அவனிடத்திலிருந்து விடுபடப் போராடினாள். அவளின் போராட்டத்தை உணர்ந்தோ இல்லை... அவளின் நிலையை உணர்ந்தோ என்னமோ அவன் சிரித்தபடி அவளை விடுவித்தான்.

"தேங்க்ஸ் ஸ்வீட்டி..." மயக்கமாய் ஒரு மார்க்கமாய்ச் சிரித்தவனைக் கண்டு அவளுக்குப் பத்தி கொண்டு வந்தது.

"ச்சீ..." என்றவள் அவனை முறைத்துக் கொண்டு கதவை நோக்கி செல்ல... ஒரே எட்டில் அவளருகில் வந்தவன்...

"இனிமேல் நீ எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் என் அனுமதியில்லாமல் எடுத்து வைக்க முடியாது... நீ செய்யப் போற ஒவ்வொரு செயலின் பின்னாலும் நான் தான் இருப்பேன்..." முகம் இறுகி அடிக்குரலில் கூறியவன்... நொடியில் தன்னைச் சரி செய்து கொண்டு அவளின் கையைப் பிடித்து,

"இப்போ போகலாம் வா..." அவளோ அவன் கூறியதை கண்டு கொள்ளாமல்,

"நான் என்ன உங்களுக்கு அடிமையா...?" என்று கத்த... அவளை இமைக்காமல் பார்த்தான்.

"ச்சே... ச்சே... நீ எனக்கு அடிமையா... அப்படிச் சொன்னா அவனுக்குக் கண்ணில்லை... நல்லா யோசிச்சு சொல்லு... யாருக்கு யார் அடிமைன்னு..." அவன் சொன்னவிதத்தில்

அவனைப் பார்த்தவளுக்கு அவனின் முகத்தில் தெரிந்த பாவத்தில் என்ன சொல்வது என்று தெரியாமல் வாயடைத்துப் போனது.
"நான் தான் உன்னிடத்தில் அடிமையாயிருக்கேன்... அந்தளவுக்கு நீ என்னை மயக்கி வச்சியிருக்கே..." கிறக்க குரலில் கூறியவனைப் பார்க்க பிடிக்காமல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள் அவள்.

மேற்கொண்டு எதுவும் பேசாமல் அவன் அவளை அழைத்துக் கொண்டு நடக்க... அவளோ பலியாடு போல் அவனுடன் இணைந்து நடந்தாள். ஏனோ அவனை மீறிச் செல்லும் துணிவு அவளுக்கு இல்லை... அவளை அழைத்துக் கொண்டு தன் பெற்றோர் முன் வந்து நின்றவன்,

"அப்பா... அம்மா... நான் தேவியைத் தான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்..." உறுதியான குரலில் கூறியவனை இருவரை தவிர அதிர்ச்சியாய் பார்த்தனர் அனைவரும்.

அந்த இருவர் வேறு யாருமில்லை ஜனார்த்தனனும், கோமளமும் தான். அவர்கள் இருவர் மட்டுமே அவனின் வார்த்தையில் மகிழ்ந்தனர். மற்ற எல்லோரையும் விட அதிகமாய் அதிர்ந்தது தேவி தான்.

'இவனுக்குப் பைத்தியம் ஏதும் பிடித்துவிட்டதா...' என்று சந்தேகமாய் அவனைப் பார்த்தாள் அவள்.

அவன் எல்லாவற்றையும் மாற்றிக் காட்டுவேன் என்று சவால் விட்டதன் பின்னணியில் இந்தத் திருமணம் இருக்கும் என்று அவள் நினைத்து கூடப் பார்க்கவில்லை. தன்னையும் அறியாமல் தன்னைச் சுற்றி வலைப் பின்னப்படுவதை அவள் அறிந்தாள். அதுவும் மீளவே முடியாத வலை என்பதை உணர்ந்தவளுக்கு அடுத்து என்ன செய்வது என்று தெரியவில்லை.

"டேய் அஜூ... நீ கல்யாணம் பண்ண போயும் போயும் வீட்டு வேலைக்காரி பொண்ணு தான் கிடைத்தாளா... நம்ம குலம்

என்ன... கோத்திரம் என்ன... அவள் குலம் என்னவோ... கோத்திரம் என்னவோ...? வேணாம்டா... அவள் உனக்கு வேணாம்... இதுக்கு நான் ஒருபோதும் சம்மதிக்க மாட்டேன்... நீ மீராவை தான் கல்யாணம் பண்ணனும்..."

துர்கா அலறிய அலறலில் அவளின் உடல் விறைத்து இறுகியது... அவமானத்தில் முகம் சிவந்து தலை குனிந்து நின்றாள். அன்னை சொன்ன செய்தி அவனுக்குப் புதிது... தேவியை ஜனார்த்தனனின் மகள் என்று நினைத்திருக்க... அன்னையோ வேறு ஒன்றையல்லவா சொல்கிறார்.

"அப்படி எல்லாம் சொல்லாதே தங்கச்சி... தேவி எங்க பொண்ணு தான்... உங்க கிட்ட உண்மையை மறைக்கக் கூடாது... நாளைக்கு யாராவது சொல்லி உங்களுக்குத் தெரிஞ்சா அது பிரச்சினையாகிடும்ன்னு தான் நானே சொன்னேன்... என் மகளுக்கு என்ன செய்ய வேண்டுமோ அந்தச் சீரை எந்தக் குறையுமில்லாமல் நான் செஞ்சிடுறேன்... அவளை உங்க வீட்டு மருமகளா ஏத்துக்குங்க..." இருகரம் கூப்பிக் கெஞ்சிய ஜனார்த்தனனை கண்டு தேவியின் மனம் அதிர்ந்தது.

"அப்பா... எனக்காக நீங்க யார் கிட்டேயும் கெஞ்ச வேண்டாம்..." அவரின் கூப்பிய கைகளை வம்படியாய் பிடித்து இறக்கினாள்.

"நீ சும்மாயிரு வைஷூ... நீ சின்னப் பெண்... உனக்கு ஒண்ணும் தெரியாது... பேசாமலிரு..." அவளை அடக்கினார் அவர்.

"ஆஹா... சின்னப் பெண்ணாம்ல சின்னப் பெண்... சின்னப் பெண் செய்ற காரியத்தையா இவள் செஞ்சிருக்கா... ஆம்பிளையை மயக்கி கைக்குள் போடற வித்தையைக் கத்து வச்சிக்கிறவ சின்னப் பெண்ணா..." துர்காவின் ஆவேச பேச்சில் நாகா,

"அம்மா..." என்று அலறினான்.

"துர்கா... பெண் பாவம் பொல்லாதது... வைஷூவை தேவையில்லாமல் பேசாதீங்க..." அழுகையை அடக்கி கொண்டு பேசினார் கோமளம்.

"அப்போ... ஆண் பாவம் பொல்லாதது இல்லையா...? என் மகனை உங்க வீட்டு வேலைக்காரி பெண் கேவலப்படுத்தியது மட்டும் சரியா... உங்களுக்கு இரண்டு பையன் மட்டும் தானே... அதுலயும் ஒருத்தன் ஆக்சிடெண்ட்ல இறந்து போயிட்டானே... அப்படியிருக்கும் போது பொண்ணு எங்கே இருந்து வந்தான்னு நான் யோசிக்கத் தான் செய்தேன்... விசாரிச்சா தானே தெரியுது... அதன் வண்டவாளம்...." துர்கா கோமளாவின் வாயை அடைத்தவர் மகனிடம் திரும்பினார்.

"என்னடா அம்மா... முடிவா சொல்றேன் கேட்டுக்கோ... இந்த வேலைக்காரி மகள் உனக்கு வேணாம்..." திரும்பத் திரும்பத் தன்னை வேலைக்காரி மகள் என்று குறிப்பிட்டதைக் கண்டு தேவியின் மனம் குன்றியது.

தன் கற்பை வேடிக்கை பொருளாய், காட்சிப் பொருளாயாக்கிய போது கூட அவள் இவ்வளவு அவமானம் அடையவில்லை. தன் தாயை பழிக்கும் இந்த வார்த்தை கேட்டு அவள் மனம் வெகுவாய் வெகுண்டது. தன் அன்னையின் உழைப்பை பழிக்க இவர் யார்? என்ற நினைவில் வழக்கம் போல் நிமிர்ந்து நின்றவள் அவனின் அன்னையை அழுத்தமாய்ப் பார்த்தாள்.

"என் அம்மா வீட்டு வேலைக்காரி தான்... இல்லைங்கல்ல... அதை நான் ஒண்ணும் அசிங்கமா நினைக்கல... என் அம்மா அடுத்தவங்களை ஏய்ச்சி பொழைக்கல... திருடி பொழைக்கல... உழைச்சு சம்பாதிச்சு தான் வாழ்ந்தாங்க... இன்னொரு தரம் என் அம்மாவை பத்தி ஏதும் பேசுனீங்க... நான் மனுசியாயிருக்க மாட்டேன்..." துர்காவை பார்த்து வீரமாய் முழங்கினாள்.

"உன் அம்மா அந்தப் பொழைப்பு பண்ணலன்னா என்ன... அதான் அதுக்கு மேலயும் செஞ்சுட்டு என்ன தெனாவெட்டா... தைரியமா எங்க முன்னாடி நீ நிக்கிறியே...

அது போதாதா..." துர்காவின் பார்வை அவளை மிகக் கேவலமாய்ப் பார்த்தது.

"நான் அப்படித்தான்... என்னைப் பத்தி நீங்க விமர்சனம் செய்யத் தேவையில்லை... நீங்க உங்க புள்ளைக்கு மீராவையோ இல்லை ஹீராவையோ யாரை வேணும்ன்னாலும் கல்யாணம் பண்ணி வைங்க..." என்றவள் தன் வளர்ப்புப் பெற்றோரிடம்,

"வாங்கப்பா... வாங்கம்மா..." என்றவள் மேலே நடக்கும் முன்... நாகா தன் கரம் கொண்டு அவளைத் தடுத்து நிறுத்தினான். அடுத்த நொடி அவளைத் தன் தோளோடு சேர்த்து அணைத்து கொண்டவன்,

"நான் சொல்றதை நல்லா கேட்டுக்கோங்க... தேவியைத் தான் நான் காதலிக்கிறேன்... தேவி தான் என் மனைவி அதில் எந்த மாத்தமும் கிடையாது..." அவனின் ஒவ்வொரு வார்த்தையும் அழுத்தம் திருத்தமாய் வெளிவந்தது.

"டேய்... உனக்கு உண்மையில் பைத்தியம் தான்டா பிடிச்சியிருக்கு... உன்னை அவமானப்படுத்தினவளை கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொல்றியே..." துர்கா அவனைச் சத்தம் போட...

"ஷ்... கொஞ்ச நேரம் பேசாமலிரு துர்கா..." பஞ்சாபிகேசன் மருமகளைப் பார்த்து அதட்ட... மாமனார் குரலில் சற்று அடங்கினார் அவர்.

மீரா, ரமா, வெங்கட் இவர்களின் நிலை தான் பரிதாபமாகயிருந்தது. மீரா நாகாவை எண்ணி மனம் வருந்த... அவளை நினைத்து அவளின் பெற்றோர் மனம் வருந்தினர். சேஷாத்திரி எதுவுமே பேச தோன்றாதவராய் அமர்ந்திருந்தார். ஒரே மகனின் வாழ்க்கை இப்படிச் சந்தி சிரிக்கும்படியாகி விட்டதே என்ற கவலை மட்டும் அவர் மனதை அரித்துக் கொண்டிருந்தது.

"அஜூ... இப்படிப்பட்ட பெண் உனக்கு வேணுமா..."

பேரனை பார்த்து கேட்ட தாத்தாவின் குரலில் 'அவள் உனக்கு வேண்டாம்' என்ற மறைமுகச் செய்தியிருந்ததை அங்கிருந்தவர்களால் புரிந்து கொள்ள முடிந்தது.

அவரின் வார்த்தையில் தேவியின் முகம் கன்றி சிவக்க... நாகாவின் பிடியிலிருந்து விலக முற்பட்டாள். அவனோ அவளை இழுத்துப் பிடித்துத் தன்னுடன் வைத்துக் கொண்டான்.

"விடுங்க என்னை... உங்க தாத்தா இப்படி மானங்கெட்ட பேச்சு பேசுவாரு... இதை நான் கேட்கணும்ன்னு எனக்கென்ன தலையெழுத்தா...?" அவனுக்கு மட்டும் கேட்கும் குரலில் அவள் உறுமினாள்.

"ரொம்பப் பேசுற... அப்புறம் பேசுற வாயை இழுத்து வைச்சு..." இடைவெளி விட்டவன், "ரூம்ல செஞ்சதை இங்கே செஞ்சுருவேன்..." என்றவனின் பேச்சில் திகைத்துப் போய்ப் பார்த்தவளை ஆதரவாய் பார்த்தவன்,

"நீ செஞ்ச வேலைக்குக் கோபப்படாம என்ன செய்வாங்க... பெரியவங்க ஏதோ கோபத்தில் பேசினா அதையெல்லாம் நாம கண்டுக்கக் கூடாது... உனக்குச் சப்போர்ட்டுக்கு நானிருக்கிறேன்..." என்றவன்,

"எனக்கு இவள் தான் வேணும் தாத்தா..." அவன் குரலில் இருந்த உறுதி தேவியின் கல் மனதையும் சற்று அசைத்து பார்க்க தான் செய்தது.

"இது உன் நிருபர் வேலையில்லை... சாகசம் பண்றேன்... சவால்ல ஜெயிக்கிறேன்னு சபதம் போடுறதுக்கு... இது உன் வாழ்க்கை அஜூ... நாளைக்கே இந்தப் பொண்ணை வெளியிடங்களுக்குக் கூட்டி கொண்டு போகும் போது நாலு பேர் நாலு விதமாய் உன் காதுபடப் பேசுவாங்க... இன்னைக்கு உனக்குச் சரியா தோணுற இந்த விசயம்... நாளைக்குத் தப்பா தோணலாம்... நல்லா யோசிச்சு முடிவெடு..." பேரனிடமே முடிவை விட்டு விட்டார் அவர்.

"நான் நல்லா யோசிச்சு தான் முடிவு பண்ணியிருக்கேன் தாத்தா... என் மேல் ஏற்பட்ட களங்கத்தை எப்படித் துடைக்கணும்ன்னு எனக்குத் தெரியும்... அதே சமயம் தேவியின் களங்கத்தையும் போக்க எனக்குத் தெரியும்... எங்க உறவை எப்படித் திருமணப் பந்தத்தில் புனிதமான உறவா இணைக்கறதுன்னும் எனக்குத் தெரியும்... எல்லாத்தையும் நான் பார்த்துக்கிறேன்... நீங்க எங்களுக்குச் செய்ய வேண்டியது ஒண்ணே ஒண்ணு தான்... எங்க உறவை ஊரார் அங்கீகரிக்கும் வண்ணம் ஊர் கூட்டி கல்யாணம் பண்ணி வைக்க வேண்டியது ஒண்ணு தான்..." தெள்ளத்தெளிவாகப் பேசியவனைக் கண்டு எல்லோரும் வியப்பாய் பார்த்தனர்.

"அப்போ பேசுறதுக்கு ஒண்ணுமில்லை... சேஷூ, துர்கா நீங்க என்ன சொல்றீங்க...?" மகன் மற்றும் மருமகளிடம் கேட்டார் பெரியவர். அவர்கள் வேறுவழியின்றிச் சம்மதம் என்பது போல் தலையசைத்தனர்.

"ஜனா... வர்ற முகூர்த்தத்தில இவங்க கல்யாணத்தை வச்சுக்கலாம்... நீ என்ன சொல்றப்பா...?" அவர் கேட்டதும் தான் தாமதம்,

"அய்யா... என் பொண்ணு வாழ்க்கையைக் காப்பாத்தியிருக்கீங்க..." என்று பெரிய கும்பிடாய் ஜனா போட... அதைக் கண்டு தேவி உள்ளம் வெறுத்தாள்.

"இப்போ இந்தக் கல்யாணம் அவசியம் தானா...?" என்றபடி அவனை முறைத்தவளை பார்த்து கூலாகச் சிரித்தவன்,

"இந்தக் கல்யாணத்துக்கு அவசியமில்லை தான்... ஏன்னா நமக்குத் தான் கல்யாணமாகிருச்சே..."

கண்ணடித்துச் சொன்னவனைப் பார்த்தவள் முகம் அவளையும் அறியாமல் சிவந்தது... அவன் திருமணம் என்று எதைக் குறிப்பிடுகிறான்... அன்று அவர்கள் இருந்த நிலை எல்லாம் அவள் மனக்கண்ணில் தோன்ற அவளால் அவன் முகம் காண முடியவில்லை... வேறு திக்கில் தன் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

"ஆனா இப்போ இந்தக் கல்யாணம் அவசியம்... ஏன்னா நீ என்னிடமிருந்து தப்பிக்காமல் இருப்பதற்காக..."

கொஞ்சம் கடுமையுடன் ஒலித்ததோ அவனின் குரல்... திடுக்கிட்டு போய் அவனைப் பார்க்க... அவன் முகத்திலிருந்து எதையும் கண்டுப்பிடிக்க முடியவில்லை.

ஜனார்த்தனன் தேவியுடன் விடைபெற... நாகா அவர்களைத் தடுத்து நிறுத்தினான். "மாமா... இன்னைக்கு ஈவினிங் பிரஸ் மீட் ஒண்ணு ஏற்பாடு பண்ணியிருக்கேன்... அதுக்கு நீங்க, அத்தை, தேவி அவசியம் வரணும்..." தேவி அவனுக்குப் பதிலளிக்கும் முன் ஜனா அவளை முந்தி கொண்டார்.

"கட்டாயம் மாப்பிள்ளை... தேவி வருவாள்... நாங்களும் வருவோம்..." உறுதியளித்துவிட்டு செல்ல... அவர்கள் போவதை பார்த்து கொண்டுருந்தவனுக்கு ஒன்று மட்டும் புரிந்தது... மேலும் மேலும் தன் வாழ்க்கையைத் தான் சிக்கலாக்கி கொண்டிருக்கிறோம் என்று...

"அம்மாடி மீரா..." என்ற தாத்தாவின் குரலில் அவன் மீராவை திரும்பி பார்த்தான்.

"அஜூ இல்லைன்னா என்னடா... அவனை விடத் திறமையானவான, அழகான, குணமான பையனா பார்த்து உனக்கு நான் கட்டி வைக்கிறேன்ம்மா..." தாத்தாவின் பேச்சில் அவர் அருகில் வந்த பேத்தி... அவர் கையைப் பிடித்துக் கொண்டு,

"அத்தானை விடத் திறமையான, அழகான, குணமான பையன் வேற யாரும் இருப்பாங்களான்னு எனக்குத் தெரியல... அப்படியொரு ஆளை நீங்க காட்டினா நான் கல்யாணம் பண்ணிக்கத் தயார்..." தன் துக்கத்தை மறைத்துக் கொண்டு தாத்தாவிற்காக ஆறுதலாய் பேசினாள் பேத்தி.

"உன் நல்ல மனசுக்கு அப்படி ஒருத்தன் கண்டிப்பா வருவான்..." அவர் மீராவை அணைத்துக் கொண்டார்.

இதைக் கண்ட எல்லோர் கண்களும் கலங்கியது.

"மீரா... ஐயம் சாரி பேபி..." நாகா அவள் முன் வந்து நின்றவன் மன்னிப்பு கேட்டான்.

"அய்யோ அத்தான்... நீங்க போய் என் கிட்ட மன்னிப்பெல்லாம் கேட்டுக்கிட்டு... உங்க திருமண வாழ்க்கைக்கு என் வாழ்த்துக்கள்... நீங்க ஏன் அந்தத் தேவியிடம் கவுந்தீங்கன்னு இப்ப தானே தெரியுது... அப்படியொரு அழகாயிருந்தா யாருக்கு தான் ஆசை வராது..." என்று கூறி சிரித்தவள் முன் அவன் கூனிக்குறுகி போனான்.

"ஆமா... ஆமா... பாம்பு கூட அழகாத்தான் இருக்கு..." என்று நொடித்துக் கொண்டார் துர்கா.

"அம்மா..." அவன் தாயை அதட்டியவன், "என்னயிருந்தாலும் அவள் என் மனைவிம்மா..."

"தாலியே இன்னும் கட்டல... அதுக்குள்ள மனைவியாம் மனைவி... சேர்ந்து குடும்பம் நடத்திட்டா எல்லாம் சரியாகிடுமா என்ன...?"

மிதமிஞ்சிய வெறுப்பில் வெளிவந்தது அவரின் வார்த்தைகள். அதற்குப் பதிலளிக்க முடியாமல் அன்னையை ஒரு பார்வை பார்த்துவிட்டு தன் மோட்டார் சைக்கிளின் சாவியை எடுத்துக் கொண்டு வெளியேறினான்.

"என்ன நெஞ்செழுத்தம் பாருங்க... எதுத்து பேசாத என் மகனை எதுத்து பேச வச்சிட்டாளே மகராசி... வீட்டுக்கு வர்றதுக்கு முன்னாடியே என்னையும் என் மகனையும் பிரிச்சிட்டா... இனி வந்ததுக்கு அப்புறம் என்னவெல்லாம் செய்யப் போறாளோ..." புலம்பியவரை சேஷாத்திரி,

"அவன் ஒண்ணும் சின்னப் பையன் இல்ல துர்கா... விடு அவன் வாழ்க்கையை அவன் பார்த்துக்குவான்..." என்று முற்றுப்புள்ளி வைக்க... எல்லோர் மனதிலும் அந்த

எண்ணம் இருந்ததாலோ என்னமோ ஒன்றும் பேசாது அமைதி காத்தனர்.

**************************

"சார் நீங்க என்னடான்னா அவங்களைக் காதலிக்கிறதா சொல்றீங்க... அவங்க என்னடான்னா நீங்க அவங்களை ஏமாத்திட்டதா சொல்றாங்க... எது தான் உண்மை...?" தன் முன் அமர்ந்திருந்த நிருபர்களில் ஒருவர் கேட்க... அதைப் பார்த்து நாகார்ஜூன் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

இதே போல் அவன் எத்தனை பேரை கேள்வி கேட்டு திணறயடித்து இருப்பான்... ஆனால் தன்னையும் இது போல் கேள்வி கேட்பார்கள் என்று அவன் கனவிலும் நினைத்து பார்த்தில்லை. அவனின் பார்வை தன் பக்கத்தில் தங்க பதுமை போல் அமர்ந்திருந்த தேவியைப் பார்த்தது. இளஞ்சிவப்பு நிறப் புடவையில் எந்தவித ஒப்பனையுமில்லாமல் அழகுற அமர்ந்திருந்தவளை திருட்டுத்தனமாய் ரசித்த அவனது கண்களைக் கஷ்டப்பட்டுத் திருப்பியவன் கேள்வி கேட்ட நிருபரை பார்த்துப் புன்னகைத்தான்.

"இரண்டுமே உண்மை தான்..." என்று பதில் சொல்லி அவரைத் திகைக்க வைத்தான்.

"இரண்டுமே உண்மையா...? அதெப்படி...?" குழப்பத்துடன் அவர் கேட்க...

"நாங்க காதலித்தது உண்மை... அதே போல் அவங்களை நான் ஏமாத்திட்டதா உங்க கிட்ட அவங்க நீதி கேட்டதும் உண்மை..." என்று இடைவெளி விட்டு அங்கிருந்த நிருபர்களின் இரத்த அழுத்தத்தைச் சற்று எகிற செய்தவன்,

"எனக்கு எங்க வீட்டில் என் அத்தை பெண்ணைத் திருமணம் பேசி முடிச்சதை தெரிஞ்சுக்கிட்ட தேவி... நான் அவங்களை ஏமாத்தியதா முடிவு பண்ணி அவசரப்பட்டுப் பேட்டி கொடுத்துட்டாங்க... இந்தத் திருமண நிச்சயம் எனக்குமே தெரியாத ஒண்ணுன்னு அவங்களுக்குத்

தெரிஞ்சிருக்க வாய்ப்பில்லை... இதுக்கு எல்லாம் காரணம் அவங்களோட பயம்... ஆம் பயமே தான்... என் மேலுள்ள அதீத காதலால் நான் அவங்களை விட்டு விலகி போய்விடுவேனோங்கிற பயத்தில் தான் இப்படிச் செஞ்சிட்டாங்க... இதனால எனக்கு அவங்க மேல கோபம் வரல... இன்னமும் காதல் தான் அதிகமாகுது... யெஸ் ஐ லவ் ஹர் ட்ரூலி... மேட்லி..." என்றவன் அவள் கையை வாஞ்சையுடன் பிடித்துக் கொள்ள...

'இவனால் மட்டும் எப்படி இப்படி எல்லாத்தையும் சமாளிக்க முடியுது...' மனதுக்குள் தேவியால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

"உங்க திருமணம், அவங்களோட பேட்டி இரண்டுமே ஒரே நேரத்தில் வெளிவந்திருக்கும் போது... அது இவங்களுக்கு முதல்லேயே தெரியும்ன்னு சொல்றது நம்பும்படியில்லை..." வேறு நிருபர் தன் சந்தேகத்தைக் கேட்க...

"உங்களுக்கு எல்லாம் எட்டப்பன் கதை நல்லா தெரியும்ன்னு நினைக்கிறேன்... அதே மாதிரி ஒரு எட்டப்பன் இதைப் போட்டு கொடுத்திருக்கணும்..." என்று பதிலளித்தவனை வீட்டு உறுப்பினர்கள் எல்லோரும் மெச்சுதலுடன் பார்த்தனர்.

"சரி உங்கள் சந்தேகங்களுக்கு எல்லாம் பதில் சொல்லியாச்சுன்னு நினைக்கிறேன்... வருகிற வெள்ளிக்கிழமை எங்களுக்குக் கல்யாணம் நடக்கவிருக்கிறது... அதுக்கு எல்லோரும் வரணும்..." என்றபடி அவன் எழ போகும் முன் ஒரு பெண் நிருபர் எழுந்து,

"மிஸ்டர். நாகா... நீங்க சமூகத்தில் பொறுப்புள்ள வேலையில் இருக்கிறவங்க... நீங்க இப்படி நடந்து கொண்டிருப்பது கொஞ்சம் வேதனையான விசயம் தான்... இதைப் பல இளைஞர்கள் முன் மாதிரியாய் எண்ணி கொண்டு செயல்பட்டால்... அதன் விளைவு விபரீதத்தில் கொண்டு போய் முடியும்... வருங்காலச் சந்ததியினருக்கு ஒரு மோசமான எடுத்துக்காட்டா நீங்க ரெண்டு பேரும்

இருக்கீங்கன்னு உங்களுக்குத் தெரியலையா...?" புதிராய் பேசிய பெண்ணை ஆராய்ச்சியாய் பார்த்தவன்,

"எதையும் நேரிடையாய்ச் சொன்னால் நல்லாயிருக்கும்..." என்றவன் கூர்ந்து அந்தப் பெண்ணைப் பார்த்தான்.

"அதான் திருமணத்துக்கு முன் நீங்க இருவரும் பெற்றோரானது குறித்து உங்கள் பதில் என்ன...?" என்றவளின் பதிலில் அவன் முகம் கறுத்து இறுகியது.

நாகா தன் கண் ஜாடையில் விவேக்கிடம் ஏதோ சொல்ல... விவேக் தன் கையிலிருந்த அந்தத் தாளை நண்பனிடம் நீட்டினான். அதை எடுத்து எல்லோரும் பார்க்கும்படி தூக்கி காட்டியவன்...

"இது எங்களது திருமணப்பதிவு சான்றிதழ்... தேவி சட்டப்படி எனக்கு மனைவியாகி இரண்டு மாதங்களுக்கு மேலாகிவிட்டது... அவள் வயிற்றில் வளரும் எங்கள் குழந்தைக்கு வயசு ஒன்றரை மாதம் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும்ன்னு நினைக்கிறேன்... நான் என் மனைவி கூடத் தான் குடும்பம் நடத்தினேன்... ரோட்டில் போற வார பெண்களுடன் அல்ல... நான் என்னையே அடையாளம் காட்டிக்காமல் இவ்வளவு நாள் வாழ்ந்தவன்... இதில் எப்படி நான் என் மனைவியை ஊருக்கு அடையாளம் காட்டுவேன்... என்னைத் துரத்தும் ஆபத்து அவளையும் பாதித்தால்...? அதுக்குத்தான் நான் திருமணமான விசயத்தை வெளியில் சொல்லவில்லை...”

“என்னை நான் அடையாளப்படுத்திய பின் என் மனைவியை அடையாளம் காட்டலாம்ன்னு எண்ணியிருந்தேன்... என் குடும்பத்தின் பாதுகாப்பில் அவளை விட்டு விட்டு நிம்மதியாய் என் வேலையில் கவனம் செலுத்தலாம்ன்னு நினைத்திருந்தேன்... அதற்குள் என்னென்னமோ நடந்துவிட்டது... இந்த விளக்கம் போதுமா மிஸ்...? எங்களைப் பார்த்து யாரும் கெட்டு போக வேண்டாம். எங்கள் வாழ்க்கையை யாரும் உதாரணமா எடுத்துக் கொள்ளும் அளவுக்கு நாங்க ஒண்ணும் பெரிய

விஜபி இல்லைங்க..." என்றவன் அத்துடன் பேச்சு முடிந்தது போல் எழுந்து நின்றான்.

அவனைத் தொடர்ந்து எழுந்து நின்ற தேவி அவனின் முகத்தைத் திரும்பி பார்த்தாள். அவனின் முகம் ஜிவு ஜிவு என்று கோபத்தில் சிவந்து காணப்பட்டது. அவனது முகத்தில் தெரிந்த அடக்கப்பட்ட கோபத்தில்... முதன்முறையாய் அவனிடத்தில் அவள் கண்ட கோபத்தில்... அவளுக்கு உள்ளுக்குள் குளிரெடுத்தது.

சதி தொடரும்....!!!

"அப்போ நாங்க கிளம்பறோம் மாப்பிள்ள..." இரு கரம் கூப்பியபடி விடைப்பெற வந்த ஜனார்த்தனனை கண்டு சட்டென்று தன் முகப் பாவனையை மாற்றிய நாகார்ஜூன்...

"சரி மாமா..." என்றபடி அவர்களின் காரருகே வரை நடந்து வந்து விடை கொடுத்தான்.

காரில் ஏறும் முன் அவன் புறம் திரும்பிய ஜனா, "மாப்பிள்ள... நீங்க என் பொண்ணு மானத்தைக் காப்பாத்திட்டீங்க... ரொம்ப நன்றி..." நா தளுதளுக்கச் சொன்னவரின் கையை ஆறுதலாகப் பிடித்தவன்,

"அவள் என் மனைவி மாமா... அவளுக்கு ஒண்ணுன்னா அது என்னையும் சேர்த்து தான் பாதிக்கும்..." என்றவன் அவருக்குக் கார் கதவை திறந்துவிட... அவர் நெகிழ்ச்சியுடன் காரிலேறி அமர்ந்தார்.

இவை அனைத்தும் கேட்டுக் கொண்டிருந்த தேவியின் தலை தானாகக் குனிந்தது. அதிலும் அவன் முகத்தில் பிரதிபலித்த கோபத்தைக் கண்டவள் மறந்தும் அவன் பக்கம் திரும்பவில்லை. கார் கிளம்பியதும் ஏதேச்சையாய் அவளின் கண்கள் அவனை நோக்கின. விவேக்கிடம் ஏதோ பேசி கொண்டிருந்தவன் அவளின் பார்வையை உணர்ந்தார் போல் அவளின் புறம் திரும்பினான். அவன் கண்களைச் சந்தித்த அந்தக் கணம் அவனின் பார்வையில் தெரிந்த ஏதோ ஒன்றில் அவளின் இதயம் படபடத்துப் போனது. சட்டென்று தன் பார்வையைத் தாழ்த்தி கொண்டாள்.

அவன் பார்வை உணர்த்திய செய்தியை உணர பாவையவள் மனம் கிடந்து தவித்தது. அவனின் பார்வையில் என்ன இருந்தது... கோபமா? குரோதமா? ஆத்திரமா? ஏமாற்றமா? வலியா? இல்லை எல்லாம் கலந்த கலவையான உணர்வா...? எதுவென்று அவளால் தனித்துப் பிரித்தறிய முடியவில்லை. எதுவாகயிருந்தாலும் அது அவளின் மனதை ஏதோ செய்தது மட்டும் உண்மை.

"என்னப்பா உன் பொண்டாட்டிக்குக் குடை பிடிச்சிட்டு வந்தாச்சா...?" நக்கலாகக் கேட்டப்படி அங்கே வந்தார் துர்கா உடன் சேஷாத்திரியும். அவர்களும் வீட்டிற்குக் கிளம்பி கொண்டிருந்தனர்.

"என்னம்மா இது...?" சலிப்புடன் ஒலித்தது அவனது குரல்.

"வீட்டில் போய்ப் பேசிக்கலாம்..." சேஷாத்திரியின் குரல் இடையிட்டு இருவரின் பேச்சுக்கும் முற்றுப்புள்ளி வைத்தது. அதன் பின் வீடு வரும் வரை யாரும் எதுவும் பேசவில்லை. அவரவர் தத்தம் நினைவுகளில் ஆழ்ந்திருந்தனர்.

வீட்டிற்குள் நுழைந்ததும் அறைக்குள் செல்ல முயன்ற அம்மாவின் கைகளைப் பிடித்துத் தடுத்திய நாகா, "அம்மா... சாரிம்மா..." என்க,

"அவள் உனக்கு வேணாம்... அவளை விட்டு விலகிடு... அப்போ நான் உன்னை மன்னிக்கிறேன்..." முகத்தை விறைப்பாக வைத்துக் கொண்டு பேசிய அன்னையைக் கண்டு அவனுக்குச் சலிப்பாகயிருந்தது.

"ப்ம்ச்... வேற ஏதாவது இருந்தா பேசுங்கம்மா..." அலுத்து கொண்டவனைக் கண்டு அவருக்குக் கோபம் கட்டுக்கடங்காமல் பொங்கியது.

"எனக்கு இதைத் தவிர வேற எதுவும் பேச தெரியாது... நீ நான் சொன்னதைச் செய்ய மாட்ட... நான் மட்டும் நீ சொன்னதை ஏன் செய்யணும்...?" அவனை எதிர் கேள்வி கேட்டவர் அவனின் பதிலை எதிர்பாராமல் உள்ளே செல்ல... அவன் தந்தையிடம்,

"அப்பா... நீங்களாவது சொல்ல கூடாதா...?"

"நீ நிறையப் போராட்டங்களைச் சந்திக்க வேண்டி வரும்... தயாராயிரு..." என்ற பதிலுடன் அவரும் அங்கிருந்து நகர... அவனோ செய்வது அறியாது அப்படியே நின்றான்.

வீட்டிற்கு வந்த தேவிக்கு நாகாவின் கோபமும், அவனின் பார்வையும் அச்சத்தை விளைவிக்க நேரே தன்

பெற்றோரிடம் வந்தாள்.

"அப்பா... இந்தக் கல்யாணம் எனக்கு வேணாம்ப்பா..." கெஞ்சியவளை உணர்ச்சியில்லாமல் பார்த்த ஜனா...

"நீ சொல்லி நாங்க கேட்டு நடக்கும் விதத்தில் நீ நடந்துக்கல... இனியாவது நாங்க சொல்ற பேச்சை கேட்டு நடந்துக்கப் பழகு..." என்று பதிலளிக்க... கோமளமும் கணவர் பதில் தான் தன்னதும் என்ற அர்த்தத்தில் அமைதி காத்தார்.

"அண்ணா... நீங்களாவது சொல்லுங்களேன்..." பிரகாஷிடம் கேட்டவளை பார்த்து,

"இனியும் அவன் பேச்சை கேட்டு நீ சீரழிவதை நாங்க அனுமதிக்க மாட்டோம்... இந்தக் கல்யாணம் நடந்தே தீரும்... போ... வேற வேலையிருந்தா போய்ப் பாரு..."

கோபத்தில் கத்திய ஜனார்த்தனனை கண்டு எதுவும் எதிர்த்து பேச தோன்றாமல் தன்னறைக்குள் சென்று முடங்கினாள். வெகுநேரம் மனதுக்குள் போராட்டம் நடத்தியவள் பின் ஒரே முடிவாக நாகாவிற்கு அழைத்தாள். அவள் அழைத்த மறு நொடி மறுபக்கம் அழைப்பை எடுத்தவன்,

"சொல்லும்மா..." அந்த ஒற்றை வார்த்தையில் தெரிந்த காதலில் தான் பேச வேண்டியதை மறந்து ஒரு கணம் செயலற்று போய் நின்றாள்.

"தேவிம்மா..." அவன் குரலில் பதற்றம் தோன்றியதோ...?

"ம்..." என்று தன் இருப்பை அவனுக்கு உணர்த்தியவள்,

"இந்தக் கல்யாணம் அவசியம் தானா...?" அவளின் வார்த்தையில் அவன் வேதனையுடன் தன் கண்களை மூடி ஒரு நொடி நின்றவன் பின் கண்களைத் திறந்து ஆழ மூச்செடுத்துத் தன்னைச் சமன் செய்து கொண்டு...

"எனக்கு அவசியம் தேவிம்மா..." 'எனக்கு' என்ற வார்த்தையில் அழுத்தம் கொடுத்துச் சொன்னான்.

"பிடிக்காத பெண்ணைக் கல்யாணம் பண்ணிட்டு என்ன பண்ண போறீங்க...? இதனால என் வாழ்க்கை மட்டுமில்லை... உங்க வாழ்க்கையும் சேர்ந்து தான் பாதிக்கப் போகுது"

"பிடிக்காத பெண்ணா... அப்படின்னு நான் உன்னைச் சொல்லவே இல்லையே... ஒருவேளை என்னைப் பிடிக்காத பெண்ணாய் நீ இருக்கலாம்..." அவன் நிறுத்த...

"அதைத் தான் நான் சொல்றேன்... உங்களை எனக்குப் பிடிக்காது... இதில் கல்யாணம்ன்னா... என்னால் யோசிச்சு கூடப் பார்க்க முடியல..." படபடவென அவளது குரல் ஒலித்தது.

"இவ்வளவு நாள் யோசிக்கலன்னா என்ன... இனி மேல் யோசிச்சு பாரு... என்னைப் பிடிக்கவும் சான்ஸ் இருக்கு..." அவன் நிதானமாய் ஒவ்வொரு வார்த்தையையும் தெளிவாய் அவள் தலையில் ஏறும்படி உச்சரிக்க... அவளோ என்ன பேசுவது என்று தெரியாமல் மௌனமானாள். பின் மெதுவே...

"நீங்க பழிவாங்க... அப்படி இப்படின்னு நினைச்சு தானே என்னைக் கல்யாணம் பண்றீங்க..." அவளது வார்த்தையில் அவனுக்குச் சிரிப்பு வந்தது. வாய்விட்டுச் சிரித்து விட்டான்.

"அப்படி இப்படின்னு நினைச்சு தான் கல்யாணம் பண்றேன்... ஆனா பழிவாங்க இல்லை..." என்றவன்,

"ஆமா... நான் உன்னைப் பழிவாங்க தான் கல்யாணம் பண்றேன்னு உனக்கு யார் சொன்னா...? எந்த அறிவாளி அப்படிச் சொன்னது...?" அவனின் ஒவ்வொரு வார்த்தையிலும் சிரிப்பு பொங்கி வழிந்தது.

"இல்லை... பிரஸ் மீட் அப்போ நீங்க கோபமா இருந்தீங்க... அதான்..." அவளின் வார்த்தையில் அவனின் கண்கள் பளபளத்தது.

"அப்போ என்னைக் கவனிச்சிருக்க... என் கோபம் உன்னைப் பாதிக்குது அப்படித்தானே..." என்றவனுக்குப்

பதில் சொல்ல அவளுக்குத் தெரியவில்லை.

"அது வந்து..."

"தேவிம்மா... இப்பவாவது யோசிக்க மாட்டியா...? என் கோபம் ஏன் உன்னைப் பாதிக்குதுன்னு...?" அவனின் அந்தக் குரல் அவளை ஏதோ செய்யப் படக்கென்று அலைப்பேசியை அணைத்துவிட்டாள்.

அவன் சொன்ன வார்த்தைகள் அவள் காதில் திரும்பத் திரும்ப ஒலிக்கக் கண்களை இறுக மூடி கொண்டாள். எதையும் யோசிக்கவோ ஆராயவோ அவள் விரும்பவில்லை. அப்படி யோசித்தாலும் கிடைக்கும் பதில் தனக்குச் சாதகமாய் இருக்காது என்பது அவளுக்கு நன்கு தெரிந்து தான் இருந்தது.

அவள் அலைப்பேசியை அணைத்ததை உணர்ந்தவன் முகத்தில் புன்னகை மலர்ந்தது. சிறிது நேரம் அலைப்பேசியைப் பார்த்து கொண்டிருந்தவன் முகம் அடுத்த நொடி சிரிப்பை தொலைத்து வேதனையைத் தத்தெடுத்தது. இந்தத் திருமணம் அவசியம் தானா? என்ற கேள்வி அவனுள் எழுந்து அவனை அலைக்கழிக்கத் தான் செய்தது. தன் எண்ணம் போகும் பாதையைத் தடுக்க முடியாமல் அதனோடு அவனும் பயணித்தான். ஏனெனில் அப்படியாவது தன் மனதின் வெம்மைக் குறையாதா என்று எண்ணினான்.

ஆம் வெம்மையே தான்... அது அவன் காதல் கொடுத்த ஏமாற்றம்... அதிலும் அவனுக்கும் அவளுக்குமான பந்தத்தை ஒரு காகிதத்தாள் தீர்மானிக்க வேண்டியிருந்த சோதனையான வேதனையை அவனால் தாங்க முடியவில்லை. எந்தவொரு அடியையும் பார்த்து வைக்கும் அவன் எப்படித் தான் அவளிடத்தில் சறுக்கினானோ அது அவனுக்கே தெரியவில்லை. தொழிலில் எல்லோரிடத்திலும் சந்தேகம் கொண்டவன் வாழ்க்கையில்... காதலில் சந்தேகம் கொள்ளாது இருந்தது தான் அவளுக்குச் சாதகமாகப் போய்விட்டது.

அன்றே அவளைப் பற்றி ஆதி முதல் அந்தம் வரை அவன் ஆராய்ந்திருந்தால் இந்தச் சதியிலிருந்து அவன் தப்பியிருப்பான். ஆனால் மனம் முழுக்க அவளை நிரப்பிக் கொண்டு அவனின் உயிராய் அவளை நினைத்து வாழ்ந்த அவனை முச்சந்தியில் நிற்க வைத்து செருப்பால் அடிப்பது போல் அவமானப்படுத்தி விட்டாள் அவள். அப்படியிருந்தும் அவன் மனம் அவளைத் தான் நாடுது... அவளைத் தான் மணம் புரிய விரும்புது.

அவனுக்கே அவனை நினைத்து வெட்கமாயிருந்தது. தான் அந்தளவுக்குப் பெண் பித்துப் பிடித்து அலைகிறோமோ... இல்லை அவளிடத்தில் மயங்கி கிடக்கிறோமோ... எதுவென்று அவனுக்கே தெரியவில்லை. ஏன் மற்ற ஆண்களைப் போல் அவனால் அவளிடத்தில் கோபப்பட முடியவில்லை? யோசித்துப் பார்த்தவனுக்கு ஒவ்வொன்றாய்ப் புலப்பட்டது.

அது... அவளிடத்தில் அவன் கண்ட காதல். ஆம்... காதலே தான். அவனோடு கூடிய நேரங்களில் அவள் கண்ணில் தெரிந்த காதல் பொய்யில்லை... அவன் தொடுகையில் அவள் தன்னை மறந்து உருகி குழைந்தது பொய்யில்லை... அதையெல்லாம் விட அன்று அவன் கத்தி குத்துப்பட்ட போது அவள் வடித்த கண்ணீர், கதறிய கதறல் பொய்யில்லை... பல நாட்கள் கழித்துத் தன்னைக் கண்ட போது அவள் முகம் மலர்ந்து தன்னை அணைத்தது, அந்த இறுகிய அணைப்பில் தெரிந்த நேசம் எதுவுமே பொய்யில்லை... எல்லாமே மெய் தான்...

பிரகாஷிற்காக அவள் இதைச் செய்தால் என்றாலும் அவள் முழுமனதாய் இதைச் செய்திருக்க வாய்ப்பில்லை என்று நூறு சதவீதம்... இல்லையில்லை இருநூறு சதவீதம் அவன் நம்பினான். அன்று கூடச் சொன்னாளே ஏதோ நன்றிக்கடன் என்று... அதைச் சொல்லும் போது அவள் கண்ணில் தோன்றிய வலியை நினைத்து பார்த்தவனுக்கு அந்த வலி அவனுக்கே உண்டானது போல் துடித்துப் போனான். ஆண்கள் இனத்தைப் பிடிக்காது என்று அவள் சொன்ன போது அவள் கண்ணில் தெரிந்த வெறுப்பை நினைவு

கூர்ந்தவனுக்கு ஒன்று மட்டும் புரிந்தது. அது... அவள் ஏதோ ஒருவிதத்தில் ஆண்களால் பாதிக்கப்பட்டு இருக்கிறாள் என்று. எல்லாவற்றையும் நினைத்து பார்த்தவனுக்கு இப்போது அவளை மணப்பதாகத் தான் எடுத்த முடிவு சரியே என்று தோன்றியது.

"ஸ்வீட்டி... என் மேல உனக்குக் காதலிருக்கு... அதை மீறி ஆண்களால் உண்டான காயமும் இருக்கு... உன் காயத்துக்கு என் அன்பால் மருந்து போட்டு என் காதலை உனக்கு உணர்த்துவேன்... நீ செய்த காரியத்துக்குப் பின்னாடி நன்றிக்கடன் இருப்பதாய் சொன்ன... நிச்சயம் அந்த நன்றிக்கடனுக்குத் தகுந்த காரணமிருக்கும்... அந்தக் காரணத்தை நீயா சொல்ற வரைக்கும் நான் பொறுமையா காத்திட்டிருப்பேன்" வாய்விட்டுச் சொன்னவனுக்கு முன்பிருந்த மனவலி கூட இப்போது இல்லை. அது அவளின் காதலை உணர்ந்ததாலா... இல்லை அவளை உணர்ந்ததாலா ஏதோ ஒன்று... அவனுள் நிம்மதி ஏற்பட்டது.

இது தான் நாகார்ஜூன்... எதையும் அலசி ஆராய்ந்து முடிவு எடுப்பவன்... என்ன காதலில் கொஞ்சம் சறுக்கிவிட்டான். மனம் சார்ந்த காதலுக்கு அறிவு தேவையில்லை என்று அவன் முடிவு பண்ணியதன் விளைவு இது. அவன் மனம் தேர்ந்தெடுத்த தேவி அவனின் காதலுக்கு உகுந்தவள் என்றதும் அந்தக் கவலையும் அவனை விட்டு அகன்றது. இதற்கு எல்லாம் காரணம் அவனின் அன்னை மற்றும் அத்தையின் வளர்ப்பு அப்படி. ஆம்... பெண்களைச் சக மனுசியாய் மதிக்கக் கற்றுக் கொடுத்தவர்களே அவர்கள் தான். அந்தக் கற்றலே அவனைத் தேவி விசயத்தில் இப்படிச் செயல்பட வைத்தது.

*******************

"நாகா... நாளைக்குக் கல்யாணத்தை வச்சிக்கிட்டு இங்கே என்ன பண்ணிட்டிருக்க...?" என்று கேட்டபடி அலுவலக அறைக்குள் நுழைந்தான் விவேக். அவனைப் பார்த்ததும் கையிலிருந்த தாளை கீழே வைத்தான் நாகா.

இருக்கும் மனக்குழப்பத்தில் சேஷாத்திரி அலுவலகம் வரவில்லை. தாத்தா அலுவலகம் வந்தாலும் அவராலும் முழு ஈடுபாட்டுடன் வேலை செய்ய முடியவில்லை. அதனால் பொறுப்பு முழுவதும் நாகா தான் பார்த்துக் கொண்டான். அதனால் அவனின் துப்பறியும் நிருபர் பணியை அவனால் செய்ய முடியவில்லை. அது அவனுக்குக் கொஞ்சம் வருத்தமாக இருந்தாலும் இன்னும் கொஞ்ச நாள் தானே... தந்தை வந்ததும் மீண்டும் நிருபர் வேலையைப் பார்க்க வேண்டியது தான் என்று மனதை தேற்றிக் கொண்டான்.

"நீ கிளம்பு நாகா... நான் பார்த்துக்கிறேன்..." என்ற விவேக்கை பார்த்து புன்னகைத்தவன், அவனை அமர சொன்னான்.

"இதோ முடிஞ்சிடுச்சு கிளம்ப வேண்டியது தான்... அப்புறம் விவேக்... காலையில் சீக்கிரமா வந்திரு... தேவிக்கு அண்ணன் நீ தானே..." அன்றைய நினைவில் முகம் மலர சொன்னவனைக் கண்ணிமைக்காமல் பார்த்த விவேக்,

"உன்னளவுக்கு எனக்குப் பெருந்தன்மை கிடையாது நாகா..." என்றவன் முகம் கடுமையாய் மாறியிருந்தது.

"என்னடா சொல்ல வர்ற...?" குழப்பமாய் அவனைப் பார்த்தான் நாகா.

"எப்படி நாகா உன்னால் இது முடியுது... நானாயிருந்தா தேவி பண்ணின துரோகத்துக்கு மன்னிச்சிருக்கவே மாட்டேன்... அவளை இன்னமும் நாறடிச்சிருப்பேன்..." என்று கோபத்துடன் சொன்ன விவேக்,

"அட்லீஸ்ட் ரெண்டு அடியாவது அடிச்சிருப்பேன்... ஆனா சத்தியமா உன்னை மாதிரி இப்படிப் புத்தன் மாதிரி இருக்க மாட்டேன்... எப்படிடா உன்னால சிரிச்சிட்டே எல்லாத்தையும் ஹண்டில் பண்ண முடியுது. அவளைப் பார்க்கும் போது உனக்குக் கொஞ்சம் கூடக் கோபம் வரல..." நண்பன் மேலுள்ள அக்கறையில் படபடவெனப் பொரிந்துவிட்டான்.

நாகா தன் நாற்காலியில் இருந்து எழுந்து வந்து, "ஈஸி மேன்... கூல்..." அவன் தோளில் கைப் போட்டு சமாதானப்படுத்தியவன்,

"இதெல்லாம் சொன்னால் புரியாதுடா... அனுபவிச்சா தான் உனக்குப் புரியும். எனக்குத் தேவியை நல்லா தெரியும்... ரொம்ப நல்ல பொண்ணு... இந்த மாதிரி செஞ்சதுக்கு ஏதாவது காரணம் இருக்கும்... அவளும் அப்படித்தான் சொல்றா..." என்றவனை இடையிட்டு தடுத்த விவேக்,

"அதுக்காக உன் வாழ்க்கையைப் பணயம் வைக்கணுமா? நாளைக்கே அவளால உனக்கு ஒரு ஆபத்து வந்தா..." என்றவனை நாகா ஆழ்ந்து பார்க்க...

"இல்லை நாகா... இன்னைக்குப் பிரகாஷுக்காக இதைச் செய்தவ... நாளைக்கு அவன் சொன்னான்னு உனக்கு விசம் வச்சா... சரி கொடுன்னு சந்தோசமா வாங்கிக் குடிச்சிருவியா...?" கோபத்துடன் வந்தது அவனது வார்த்தைகள்.

"நிச்சயம்... ஆனா அவளால் அதைச் செய்ய முடியாது விவேக்... ஏன்னா..." அவனைக் கூர்மையாய் பார்த்தவன்,

"அவள் என்னைக் காதலிக்கிறாள்டா... என் வாரிசை அழிக்க மனசில்லாமல் சுமந்து பெத்து வளர்ப்பேன் சொல்றவ... எப்படி என்னைக் கொல்வாள்...? இன்னைக்கு நன்றிக்கடனுக்காகப் பிரகாஷுக்காக இதைச் செய்தவள்... நாளைக்கு இந்த நாகாவுக்காக உயிரையும் கொடுப்பாள். எனக்கு அவள் மேல், அவள் காதல் மேல் நம்பிக்கையிருக்கு..." நம்பிக்கையுடன் கூறியவனை அவநம்பிக்கையாய் பார்த்த விவேக்,

"என்னமோடா உன் லாஜிக் எதுவும் எனக்குப் பிடிபடல..." அவனின் முகத்தில் கவலை எட்டிப்பார்த்தது.

"விவேக்... சிமி வெளிநாட்டு ஸூட்டிங் முடிச்சு வந்துட்டாங்களாம்... பேட்டி எடுக்கக் கூப்பிட்டிருக்காங்க..."

நாகா பேச்சை மாற்ற எண்ணி இவ்வாறு பேச... அவன் நினைத்தது போல் விவேக் முகம் மலர்ந்தது.

"அப்படியா நாகா..." ஜொள்ளுவிட்டுக் கொண்டு கேட்டவன் அடுத்த நொடி முகம் மாற... "வேணாம் நான் போகல... நீ வேற யாரையாவது போகச் சொல்லு..."

"என்ன மாதிரியான வாய்ப்பு இது... இதைப் போய் வேணாம்ன்னு சொல்றியே மச்சான்... ஆர் யூ ஆல்ரைட்?" பதற்றமாய்க் கேட்டபடி அவன் கழுத்தில் கை வைத்து நாகா பார்க்க... விவேக் பல்லை கடித்தான்.

"ஆமாம்டா... வாய்ப்பு கிடைச்சாலும் அதைத் தட்டி பறிக்கதுக்குன்னு எனக்கு நண்பன்ங்கிற பேரில் ஒரு துரோகி இருக்கானே... அவன் இந்த ஆபிசில் இருக்கும் வரை இந்த மாதிரியான வாய்ப்பெல்லாம் எனக்கு எட்டா கனி தான்..." அவன் பெருமூச்சுவிட,

"அப்படிப்பட்ட துரோகி யாருடா மச்சான்... சொல்லு... இப்பவே வேலையிலிருந்து தூக்கிடறேன்..." என்று சிரியாமல் சொன்ன நாகாவை பார்த்து,

"டேய்... அந்தத் துரோகியே நீதான்டா..." அவன் மேல் பாய...

"அப்படியா சொல்ற... நான் எப்போடா உன் வாய்ப்பை தட்டி பறிச்சேன்..." அறியாப்பிள்ளை போல் கேட்டவனைக் கொலைவெறியுடன் பார்த்தான் விவேக்.

"டேய் அப்படிப் பார்க்காதேடா... நாளைக்கு எனக்குக் கல்யாணம்டா..." பயந்தவன் போல் நாகா நடிக்க...

"பார்த்தியா... வந்த விசயத்தை மறந்திட்டு நான் பாட்டுக்கு பேசிட்டு இருக்கேன்... நீ கிளம்பு மச்சி..." விவேக் அவனைத் துரிதப்படுத்த...

"ம்... சரிடா... காலையில் வந்திரு..."

"அதெல்லாம் வந்திருவேன்... நான் வராமலா...?" கெத்தாய் சொன்ன விவேக் பின் பம்மியவனாய், "மச்சி... சிமி பேட்டி..." என்று இழுக்க...

"டேய் அடங்க மாட்டியா..." என்று சிரித்த நாகா, "இந்தத் தடவை சிமி பேட்டியை நீ தான் எடுக்கிற போதுமா..." அவன் தோளை விளையாட்டாய் தட்ட...

"போதுமாவா... இந்த ஜென்ம சங்கல்பம் பூர்த்தி அடைஞ்ச மாதிரி பூரிச்சு போய் நிக்கிறேன்டா... என்னால நம்ப முடியல..." என்றவனின் கையில் நறுக்கென்று நாகா கிள்ள... ஆவென்று அவன் கத்தினான்.

"இப்போ நம்புறியா..." சிரிப்புடன் கேட்ட நாகா அடுத்த நொடி அறையை விட்டு வெளியேற...

"துரோகி..." விவேக் கத்தியது காற்றோடு கரைந்தது.

******************************

"மாப்பிள்ள... உங்களை அய்யர் கூட்டிட்டு வர சொன்னார்..." அறை வாயிலில் வந்து நின்ற பிரகாஷை கண்டதும் நாகாவின் முகம் கோபத்தில் இறுகியது.

தேவியை மன்னித்த அவனால் பிரகாஷை மன்னிக்க இயலவில்லை. ஏதுமறியா சின்னப் பெண்ணை இந்த மாதிரி சின்னத்தனமான காரியத்துக்குப் பயன்படுத்தி இருக்கிறானே என்று அவன் மேல் கோபம் கோபமாய் வந்தது அவனுக்கு. அந்தக் கோபம் இன்னமும் அவனிடத்தில் இருந்து மறையவில்லை.

"விவேக் நீயும் தேவிக்கு அண்ணன் தானே... அப்போ நீயே என்னைக் கூட்டிட்டு போ..." என்றவன் விவேக்கின் கையைப் பற்றி இழுத்தபடி மணவறை நோக்கி நடந்தான்.

"டேய் மாப்பிள்ளையா லட்சணமா, அடக்க ஒடுக்கமா வெட்கப்பட்டுட்டு நீ வரணும்டா... இப்படி அடங்காத குதிரை மாதிரி நடக்கக் கூடாது... நான் உன்னைக் கூட்டுட்டு போறேனா... இல்லை நீ என்னைக் கூட்டிட்டு போறியான்னு தெரியல... இதுல மாப்பிள்ள யாருன்னு எல்லோருக்கும் சந்தேகம் வந்திற போகுது..." விவேக்கின் பேச்சில் நாகாவின் முகம் புன்னகையைத் தத்தெடுக்க... அவன் நடையின் வேகம் குறைந்தது.

"ம்... இது நல்ல புள்ளைக்கு அழகு..." மெச்சுதலாய் சொன்ன விவேக் அவனின் கரம் பற்றி அழைத்துச் சென்றான்.

நாகாவின் இந்தச் செயலில் பிரகாஷுக்கு எந்த வருத்தமும் இல்லை. ஏனெனில் தான் செய்த தவறும் அப்படிப்பட்டது என்பது அவனுக்குப் புரிந்து தானிருந்தது. எப்படியோ தங்கையின் திருமணம் நல்லபடியாக நடந்தால் சரியென்று இருந்தது அவனுக்கு.

தன்னருகில் வந்தமர்ந்த தேவியின் முகம் சிரிப்பை தொலைத்திருப்பதைக் கண்ட நாகா அவளின் காதுக்கருகில் குனிந்து, "முகத்தைச் சிரிச்ச மாதிரி வச்சுக்கோ... நாம காதல் கல்யாணம் பண்ணிக்கப் போறவங்க... கட்டாயக் கல்யாணமில்ல..." அவன் சொன்னதும் அவனை ஏறிட்டு ஒரு பார்வை பார்த்தவள் மறுபடியும் தலையைக் குனிய,

"ம்ஹூம்... நாங்க எல்லாம் மொத ராத்திரி அன்னைக்குத் தான் புருசன் முகத்தைப் பார்த்தோம்... இங்கே என்னடான்னா... எல்லாமே தலைகீழாயிருக்கு... ம்... அதான் மொத ராத்திரி எல்லாம் முடிஞ்சி போச்சே... அதான் வெட்கம், மானம் ஏதுமில்லை..." நாத்தனார் ரமாவிடம் சொல்வது போல் சொல்லி கொண்டிருந்த துர்காவின் வார்த்தைகள் தேவியின் செவியைச் சென்றடைய... அவள் ரோசத்துடன் மணவறையை விட்டு எழ போக... அவளின் கையை அவனின் கை யாருக்கும் தெரியாமல் அழுத்தத்துடன் பிடித்து இழுத்தது.

"இதுக்குத் தான் நான் சொன்னேன்..." அடிக்குரலில் அவள் சீற...

"எல்லாம் நான் பார்த்துக்கிறேன்..." அவனின் குரலில் இருந்த உறுதியா இல்லை அவன் கை கொடுத்த அழுத்தமா... ஏதோ ஒன்று அவளை அமைதியடையச் செய்ய மௌனமாய் அமர்ந்தாள்.

தன் அம்மாவை கண் ஜாடையில் அழைத்தவன் அவர் அருகில் வந்ததும், "என்னோட கல்யாணத்தைப்

பார்க்கணும்ன்னு எண்ணம் இருக்கா இல்லையா...?" கொஞ்சம் கடுமையுடன் கேட்டான்.

"அஜூ..." அவனின் வார்த்தையில் அவர் அதிர்ந்து தான் போனார்.

"அம்மா ப்ளீஸ் புரிஞ்சிக்கோங்க... நீங்க தேவியைக் கேவலப்படுத்தறதா நினைச்சு என்னையும் சேர்த்து தான் கேவலப்படுத்துறீங்க..." அந்த வார்த்தையில் அவர் கூறியதின் அபத்தம் அவருக்குத் தாமதமாய்ப் புரிய அப்படியே அமைதி காத்தார்.

தேவியின் கழுத்தில் மங்கலநாண் பூட்டும் போது அவன் அவளின் முகத்தையே ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். அவளின் கடைக்கண் விழி வீச்சிற்கு அவன் காத்திருக்க... அவளோ நிமிரும் வழியைக் காணோம். மஞ்சள் கயிற்றில் மூணு முடிச்சிடும் போது அவளின் சங்கு கழுத்தில் அவனின் வலிமை மிகுந்த கைகள் உரச... அதில் அவளின் கழுத்து மயிர்க்கால்கள் சிலிர்த்து எழும்பியது.

அவனின் அந்தச் சின்னத் தொடுகை அவளுள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்த அவளையும் அறியாமல் அவளின் விழிகள் அவனின் விழிகளைச் சந்தித்தது. அவளின் பார்வையைக் கண்டதும் அவனின் முகம் மலர்ந்தது. அவனின் மகிழ்ச்சி கண்டு அவளுள் ஒரு குற்றவுணர்வு எழ... அதை வெளிக்காட்டி கொள்ளாமல் தன் கண்களைத் தாழ்த்தி தன் உள்ளத்து உணர்வுகளை அவனுக்குக் காட்டி கொள்ளாமல் மறைத்து கொண்டாள்.

'கடவுளே... வாழ்க்கை முழுவதும் இவனுக்கு உண்மையாக நானிருப்பேனா... என்னைப் பத்தி எதுவும் தெரியாமல் கல்யாணம் பண்ணியிருக்கும் இவன்... என்னைப் பத்தி தெரிய வரும் போது என்ன செய்வான்... இதே காதலோடு இருப்பானா...? ம்ஹூம்... நிச்சயம் இருக்க மாட்டான்... எல்லா ஆண்களையும் போல் தானே இவனும்... இவன் மட்டுமென்ன விதிவிலக்கா...?' அவளின் மனம் கூக்குரலிட்டது.

'ஏன் அவன் விதிவிலக்கானவன்னு உனக்குத் தெரியாதா... விதிவிலக்கானவன் என்பதால் தான் உன்னைப் போன்ற ஒரு ஏமாத்துக்காரியை, நம்பிக்கைத் துரோகியை கைவிடாமல் கல்யாணம் பண்ணியிருக்கிறான்... நிச்சயம் நீ சொன்னாலும் சொல்லா விட்டாலும் அவன் நல்லவன் தான்...'

அவளின் மனசாட்சி அவளை இடித்துரைக்க... என்ன செய்வது என்று தெரியாமல் கண்களை இறுக மூடி கொண்டாள். அப்போது நாகா அவளின் கையைத் தொட... அவளோ ஏதோ நினைவில் பயந்து போய் விலக,

"என்ன தேவிம்மா... நான் தான்..." என்றவன்,

"மணவறையைச் சுத்தி வர சொல்றாங்க..." மெதுவே அவளிடம் சொல்ல... அவள் மறப்பேதுமின்றி அவன் பின்னே நடந்தாள்.

அதன் பின் ஒவ்வொருவராய் மணமக்களுக்களை வாழ்த்த, பரிசு பொருட்கள் கொடுக்க என்று வரிசையில் வந்தனர்... வேலாயி பாட்டி, சனா, அவளது அன்னை மற்றும் அடுக்குமாடி குடியிருப்பில் இருந்த அனைவரும் அவர்களை வந்து வாழ்த்திவிட்டு சென்றனர்... சனா இருவரையும் கிண்டல் அடித்துவிட்டு செல்ல தேவி தன் நினைவுகளை ஒதுக்கிவிட்டு முகத்தில் போலி புன்னகையை அணிந்து கொண்டு நின்றாள்.

அப்போது அவர்களை நோக்கி வந்தவனைக் கண்டு அவளின் முகம் வெளுத்தது. அவன் அருகில் வரவும் தன்னையும் அறியாமல் அவளின் கரம் ஆதரவு வேண்டி கணவனின் கரத்தோடு கோர்த்துக் கொள்ள... பயத்தில் கைக்கால்கள் எல்லாம் சில்லிட நிற்க முடியாமல் நின்றவள் பற்றுக்கோலாகக் கணவன் மீது சாய்ந்து கொண்டாள். அவளின் செயலில் வியப்புற்ற நாகா அவளைத் தன்னோடு அணைத்துக் கொண்டான். அவன் காதலில் உருகி கொண்டிருக்க... அவளோ பயத்தில் கரைந்து கொண்டிருந்தாள்.

சதி தொடரும்...!!!

'கடங்காரன் எப்படிப் பல்லை இளிச்சிக்கிட்டு வர்றான் பாரு...' தங்களை நோக்கி வந்து கொண்டிருந்தவனைக் கண்டு மனதுக்குள் குமைந்த தேவி,

'தப்பு செஞ்ச அவனே இவ்வளவு தெனாவெட்டா வரும் போது... தப்பு செய்யாத நான் ஏன் பயந்து சாகணும்...? அப்படி அவன் என்னை என்ன செஞ்சிட முடியும்...? இன்னமும் நான் என்ன பதினாறு வயது வைஷூன்னு நினைச்சிட்டு இருக்கானா...? வரட்டும்... வந்து என் கிட்ட வாலாட்ட நினைச்சா அந்த வாலை பிடிச்சி ஒட்ட நறுக்கிட வேண்டியது தான்...'

மனதில் எழுந்த தைரியத்துடன் அவனின் வருகையை எதிர் நோக்கி நின்று கொண்டிருந்தாள். அப்போது தான் நாகாவின் இறுகிய அணைப்பை உணர்ந்தவள்...

"ச்சு..." முகத்தைச் சுளித்தவளாய் அவனிடமிருந்து விலகினாள். அவளின் செய்கையை விசித்திரமாய்ப் பார்த்தவன் ஒன்றும் பேசாது தோளை குலுக்கி கொண்டான்.

"ஹாய் சகலை... நான் தான் வைஷூவோட அக்கா பாரதியோட கணவன் கோபால்..."

அட்டகாசமாய்ச் சிரித்தபடி தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டவனை அவள் அருவருப்புடன் பார்க்க... நாகாவோ யோசனையாய் பார்த்தான். ஏனெனில் தேவியின் குடும்பம் பற்றி முழுமையான தகவல்கள் அவனுக்கு எதுவும் தெரியாது. பின்பு சிரித்தபடி நாகா,

"ஹாய்..." என்று அவனோடு கைக்குலுக்க...

"முதல்ல அவன் கையை விடுங்க... அவனைத் தொட்டாலே அவன் பாவம் நம்மளை வந்து ஒட்டிக்கும்..." கடுப்புடன் அவனுக்கு மட்டும் கேட்கும்படி அவள் கூற...

முதன்முறையாக அவள் சொன்ன 'நம்' என்ற வார்த்தையில் மனம் குளிர்ந்தவன் அவள் சொன்னதைச் செய்தான். அவளின் உரிமைப் பேச்சில் தன் வசம் இழந்து நின்று கொண்டிருந்தவன் அவளின் பேச்சிலிருந்த உட்பொருளை உணர்ந்து கொள்ளத் தவறிவிட்டான். அதற்குள் அவனின் அலுவலக ஊழியர்கள் ஒவ்வொருவராய் வர... அவனின் கவனம் அங்கே சென்றது.

"என்ன குட்டி... பதினாறு வயசில் பார்த்ததை விட இப்போ ரொம்ப அழகாயிருக்க..." கோபாரினோ பார்வை அவளின் மேனி மீது ரசனையுடன் ஊர்ந்தது.

"இன்னொருத்தர் மனைவியைப் பத்தி இப்படி அசிங்கமா பேசிறியே... உனக்கு வெட்கமாயில்லை..." சீறும் குரலில் சொன்னவளை கண்டு உதடு பிரிக்காமல் சிரித்தவனின் சிரிப்பில் நக்கல் மட்டுமே அதிகமாயிருந்தது.

"நீ உன் புருசனை பத்தி அசிங்கமா பேசியதை விடவா... நான் அசிங்கமா பேசிட்டேன்... ஆனாலும் உன் அழகு என்னையே தலை சுத்த வைக்கும் போது... இவன் எம்மாத்திரம்... அதான் பைய நீ எப்படிக் கேவலப்படுத்தினாலும் நீ தான் வேணும்ன்னு ஒத்தை காலில் நின்னு கல்யாணம் பண்ணியிருக்கான்..."

“நானாயிருந்தா அனுபவிக்கிற வரைக்கும் அனுபவிச்சிட்டு கழட்டி விட்டிருப்பேன்... இவன் ஒரு ஏமாந்த சோணகிரி... பாம்புன்னு தெரிஞ்சும் பால் வார்க்கிறான்... என்னைக்கா இருந்தாலும் அது கொத்தாம விடாதுன்னு அவனுக்குத் தெரியல... முட்டாப்பய..." எகத்தாளத்துடன் பேசியவனின் குரல் அவளுக்கு மட்டுமே கேட்டது.

அவள் செய்த போது தெரியாத காரியத்தின் வீரியம் அவளின் அக்கா கணவன் கூறும் போது மிகவும் கேவலமாயிருந்தது. அவளின் பிறப்பு அவளுக்கே அருவருப்பாய் இருந்தது.

'கடவுளே இவன் சொல்வதும் உண்மை தானே... என் அழகை காட்டித்தானே நாகாவை ஏமாத்தினேன்... அதைப்

பயன்படுத்தித் தானே அவனை என் வலையில் விழ வைத்தேன்... கடைசியில் அவனை அவ்வளவு கேவலப்படுத்திய பின்பும் என்னை மணந்திருக்கிறான் என்றால்...???' யோசிக்கும் போதே அவளுக்குக் கண்ணை இருட்டியது.

அந்நேரம் பார்த்து, "டேய் நீ எங்கடா இங்கே வந்த...?" பிரகாஷின் குரலில் தன் நினைவு கலைந்தவள் அவனை நன்றியுடன் பார்த்தாள்.

அன்று அவள் மூச்சு முட்டி இறக்கும் நிலைக்குத் தள்ளப்பட்ட போது அவன் தான் அவளை ஆபத்பாந்தவனாய் வந்து காப்பாற்றித் தன்னுடன் அழைத்துச் சென்றான். அன்று அவன் மட்டும் அதைச் செய்யவில்லை என்றால் இதோ இந்தக் கயவனின் காமப்பசிக்கு இரையாகி போயிருப்பாள். அதன் பின் அவளின் வாழ்வு...? அதை நினைக்கும் போதே அவள் உடல் நடுங்கியது.

இதற்கு எல்லாம் உச்சக்கட்டம் அவளின் சகோதரி அதற்கு ஒத்து ஊதியது தான். அதிலும் பதினேழு வயது மூத்த ஒருவனின் உடல் தேவைக்குத் தன் சின்னத் தங்கையைப் பலியாக்குகிறோம் என்ற குற்றவுணர்வு அவளிடத்தில் கொஞ்சமும் இல்லாது போனது தான் அதிசயத்திலும் அதிசயம். அதற்குக் காரணக் காரியங்களைக் கோபால் எடுத்து அடுக்கி சொன்ன போது பாரதியாலும் பேச முடியாமல் போனது... அதுவே அவனின் ஆட்டம் அதிகரிப்பதற்குச் சாதகமாய்ப் போய்விட்டது.

அந்நேரம் அவளைப் பார்க்க வந்த பிரகாஷ் அவளின் முகத்தை வைத்தே அவளுக்கு ஏதோ துன்பமென்று புரிந்து கொண்டு அவளைத் தன்னுடன் அழைத்துச் செல்ல முற்பட்டான். அதற்குத் தடையாக நின்ற கோபாலிடம் பேச வேண்டியதை பேசி, கொடுக்க வேண்டியதை கொடுத்து அவளைத் தன்னுடன் அழைத்து வந்துவிட்டான். அன்று அவனால் ஏற்பட்ட நன்றிக்கடனை இன்று அவள் இந்த வழியில் திருப்பிச் செலுத்திவிட்டாள். இந்த ஒரு நன்றிக்கடன் மட்டுமா... இன்னும் எத்தனையோ அதில்

அடங்கியிருக்கு... அதை அவள் திருப்பிச் செலுத்த நினைத்தால் அவள் தன் உயிரை தான் ஜனார்த்தனனின் குடும்பத்துக்கு அளிக்க வேண்டும்.

"என்ன மச்சான்.... நீங்க அழைப்பிதழ் கொடுக்கலைன்னா எங்களுக்கு என்ன தெரியாமலா போயிரும்...?" நக்கலாய் பதில் பேசிய கோபாலை கொலைவெறியுடன் பார்த்தான் பிரகாஷ்.

"என்ன மாப்பிள்ளை கொழுந்தியா கல்யாணத்துக்கு இவ்வளவு லேட்டாவா வர்றது...? ஆமா பாரதி எங்கே...?" கோபாலை வரவேற்றபடி அங்கே வந்தார் ஜனார்த்தனன்.

"இப்படி அவசரமா கல்யாணத்தை வச்சா... எப்படி மாமா சீக்கிரம் வர்றது..." என்று குத்தி காண்பித்தவன்,

"பையனுக்கு அம்மை போட்டிருக்கு... அதான் பாரதி வரல..." பாரதி வராததற்கு வேறு காரணம் கூறினான்.

உண்மையில் மகனுக்கு அம்மை போட்டிருந்தது என்னவோ உண்மை தான். அது இப்போ பரவாயில்லை தான். ஆனால் அவள் வராததற்கு அவள் சொன்ன காரணம் வேறு மாதிரியாய் இருந்தது.

"இப்படிக் கல்யாண லெட்டரை முதல் நாள் வர்ற மாதிரி போஸ்ட் பண்ணியிருக்காங்க... ஒரு ஃபோன் பண்ணி கல்யாணத்துக்கு வான்னு கூப்பிட நாதியில்லை... என்னயிருந்தாலும் என் தாய், தகப்பன் மாதிரி வருமா... எடுத்து வளர்த்தாலும் என்ன தான் செஞ்சாலும் நான் வேலைக்காரி பொண்ணு தானே..." என்று மூக்கால் புலம்பியவள் திருமணத்துக்கு வர மறுத்துவிட்டாள்.

"பிரகாஷ்... உன்னை ஃபோன் பண்ணி சொல்ல சொன்னேனே... நீ சொல்லலையா..." ஜனா மகனை பார்த்து கேட்க... அவன் தான் வேண்டுமென்றே அழைப்பிதலை தாமதமாய் அனுப்பியது, தொலைப்பேசியிலும் அவர்களை அழைக்கவில்லை.

ஏனெனில் அந்தளவுக்கு அவர்களை வெறுத்தான். பாரதியிடம் பேச வேண்டும் கூறிய பெற்றோரிடத்தில் தானே பேசி கொள்வதாய்க் கூறி வேறு பேச்சு பேசி அதைத் திசை மாற்றிவிட்டவன் மறந்தும் அவர்களைப் பேச விடவில்லை. அதை நினைத்து பார்த்தவனுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. அந்நேரம் ஜனாவை வேறு யாரோ அழைக்க,

"இருந்து சாப்பிட்டுட்டு தான் போகணும்... கல்யாணம் முடிஞ்சதும் வீட்டுக்கு வாங்க..." கோபாலிடம் அவர் பணிவாய் வேண்ட, யாரோ பெற்ற பெண்ணின் கணவான தன்னிடம் இந்தளவுக்குப் பணிவுடன் பேசும் பெரிய மனிதரின் பேச்சிற்கு,

"இல்ல மாமா... நான் உடனே கிளம்பிடுவேன்..." என்று அவன் முறுக்கி கொள்ள...

"ஓ... சரி மாப்பிள்ளை... உங்க இஷ்டம்..." என்றவர் மகனிடம் திரும்பி, "மாப்பிள்ளையைக் கவனிச்சு அனுப்புடா... எப்பவும் இருக்கிற மாதிரி பொறுப்பில்லாம இருக்காதே..."

"நல்லாவே கவனிச்சு அனுப்பிடறேன்ப்பா... நீங்க உங்க வேலையைப் பாருங்க..." 'கவனிச்சு' என்ற வார்த்தையில் அவன் கொடுத்த அழுத்தத்தில் கோபாலுக்கு முகம் வியர்த்தது.

ஜனா சிரித்தபடி அங்கிருந்து நகர... நாகாவின் கவனம் தேவியிடம் வந்தது. அப்போது தான் கவனித்தான்... அவளருகில் நின்று கொண்டிருந்த பிரகாஷை... அவனைக் கண்டதும் நாகாவின் தாடை கோபத்தில் இறுகியது.

"உன் அண்ணன் எதுக்கு இங்கே நிக்கிறான்... முதல்ல அவனைக் கீழேயிறங்க சொல்லு..." வார்த்தைகளை அவளுக்கு மட்டுமே கேட்கும் வண்ணம் கடித்துத் துப்பினான். ஏற்கெனவே பிரகாஷிடம் நன்றிக்கடனில் நெகிழ்ந்திருந்த அவளது மனம்... கணவனின் வார்த்தையில் கோபம் கொண்டது.

"ஏன் உன் அண்ணனுக்கு என்ன குறைச்சல்...? இங்கே நிற்பதற்கான எல்லாத் தகுதியும் அவருக்கு இருக்கு..."

"தகுதி... அவனுக்கு...? நேருக்கு நேர் மோத தெரியாத கோழைக்கு என்ன தகுதிம்மா இருக்கு...?" கிண்டலும், கோபமும் சரியளவில் அவன் பேச்சில் கலந்திருந்தது.

"நாகா..." அவள் பல்லை கடிக்க...

அவளின் அந்த வார்த்தையில் தங்கையை நிமிர்ந்து பார்த்த பிரகாஷ் அவள் முகம் கோபத்தில் இருப்பதைக் கண்டு நாகாவின் முகத்தைப் பார்க்க... அவனோ இவனைத் தான் முறைத்துக் கொண்டிருந்தான். பிரகாஷூக்கு புரிந்து போனது தன்னால் தான் இருவரிடத்திலும் பிரச்சினை என்று...

"வைஷூ..." என்று தங்கையை அழைத்தவன் அவளின் கையை ஆதரவாய் பற்றி அழுத்திவிட்டு, கோபாலை அழைத்துக் கொண்டு அவன் மணமேடையை விட்டு கீழிறங்க... தேவியின் கண்கள் கணவனை ஆத்திரத்துடன் உறுத்து விழித்தது.

"எதுக்குக் கண்ணை உருட்டி உருட்டி முழிக்கிற... இதுக்கெல்லாம் நான் பயப்பட மாட்டேன்..." என்றவன்,

"உன் விசயத்தில் உன்னை நான் மன்னிச்ச மாதிரி... உன் அண்ணனை எல்லாம் என்னால் மன்னிக்க முடியாது..." கோபமாய் வந்தது அவனின் வார்த்தைகள்.

"என்னை மன்னிக்கச் சொல்லி நான் உங்களைக் கேட்டேனா... இல்ல உங்க காலில் விழுந்து கெஞ்சினேனா...?" பதிலுக்குக் கோபத்தில் படபடவெனப் பொரிந்தவளை பார்த்தவனின் பார்வை மாறியது.

"இந்தக் கேள்வியை மட்டும் நீ நாம தனியாயிருக்கும் போது கேட்டிருக்கணும்... அன்னைக்கு வாயடைச்ச மாதிரி அதிகமா பேசுற இந்த வாயை அடைச்சிருப்பேன்..." என்றவனின் பேச்சில் அவளுக்குக் குளிரெடுத்தது. அதற்கு மேல் அவள் எதுவும் பேசவில்லை... அவனும் பேசவில்லை.

இருவரிடத்திலும் ஆத்திரமும், ஆற்றாமையும், இயலாமையும் மட்டுமே மீதமிருந்தது.

*************************

இரவு அறைக்குள் நுழைந்த மனைவியை இன்முகத்துடன் வரவேற்றான் நாகா. அவளோ அவனின் வரவேற்பை கவனிக்கும் மனநிலையில் இல்லை. கட்டிலில் செய்யப்பட்டிருந்த அலங்காரத்தைக் கண்டவள் முகம் ஒரு கணம் சுருங்கியது. கையிலிருந்த பால் சொம்பை அங்கிருந்த மேசை மீது வைத்தவள் கட்டிலிலிருந்து போர்வையை எடுத்து கீழே விரிக்கப் போனாள். அத்தனை நேரம் அவளின் நடவடிக்கையை மௌனமாய்ப் பார்த்து கொண்டிருந்தவன் அவளின் இந்தச் செயலை கண்டு அவள் கைப்பிடித்துத் தடுத்து நிறுத்தினான். அதில் அவளின் அடக்கப்பட்ட கோபம் பீறிட்டு கிளம்பியது.

"இங்கே பாருங்க தாலி கட்டிட்டதால இப்படித் தொட்டு பேசும் உரிமையை நான் உங்களுக்குக் கொடுக்கல... அடுத்து ஒரு கணவனா மனைவி கிட்ட எதிர்பார்க்கிற எந்த உறவையும் என்னால் உங்களுக்குக் கொடுக்க முடியாது..."

படபடப் பட்டாசாய் பொரிந்தவளின் பிடித்திருந்த கையை அவன் விட்டுவிட... 'அது... அந்தப் பயம் இருக்கணும்...' என்றதோர் ஏளனப் பார்வையை அவன் மீது வீசியவள் கீழே படுக்க ஆயத்தமானாள்.

"எந்த நம்பிக்கையில் நீ இப்படியெல்லாம் பேசுற...?" அவனின் வார்த்தையில் திடுக்கிட்டு திரும்பினாள். கண்கள் சிவக்க ஆத்திரமாய் நின்றிருந்தவனைக் கண்டு அவளுக்கு மீண்டும் உள்ளுக்குள் குளிரெடுத்தது.

"இந்தளவுக்கு என்னைக் கேவலப்படுத்திய பின்னும் உன் உடம்பை நான் தொடுவேன்னு எப்படி நீ தப்புக்கணக்கு போடலாம்..." அவனின் வார்த்தைகள் அவளைக் குத்தி கிழித்தது.

"பார்த்தீங்களா இதுக்குத் தான் சொன்னேன்... இந்தக் கல்யாணம் வேணாம்ன்னு... என்னைப் பழிவாங்க தான் கல்யாணம் பண்ணியிருக்கீங்க... அப்புறம் எதுக்கு அப்படியெல்லாம் இல்லைன்னு பொய் சொன்னீங்க..."

"ஏண்டி என்னைப் பார்த்தா பழிவாங்கிற மாதிரி... தெலுங்கு பட வில்லன் மாதிரியா தெரியுது... இப்போ என்ன உன்னைக் கல்யாணம் பண்ணின காரணம் தெரியணும் அவ்வளவு தானே... சொல்றேன்..." என்றவன் அவள் முகம் பார்க்காமல் ஜன்னல் பக்கம் போய் நின்றான். திரைச்சீலையை விலக்கிவிட்டு தெருவை சிறிது நேரம் வேடிக்கை பார்த்தவன் பின் மெதுவே,

"உன் மேலுள்ள காதலால் தான்..." அவனின் வார்த்தைக்கு நேர்மாறாய் அவனின் உடல் இறுகியிருந்தது.

"திரும்பத் திரும்பப் பொய் சொல்லாதீங்க..." என்று கத்தியவளை திரும்பி பார்த்தவன்,

"இப்போ எதுக்கு இப்படிக் கத்துற...?" என்று அவளை அதட்டியவன்,

"நீ வேணா பொய் சொல்லியிருக்கலாம்... ஆனா நான் பொய் சொல்லல... நான் உன் மேல வச்ச காதல் உண்மையானது... உன்னால நான் ஏமாத்தப்பட்டப்போ என் மனசில் எழுந்த ஏமாத்தம், வலி அதுவும் நிஜமானது... அதை உன்னால் உணர முடியாது... விசயத்தைக் கேள்விப்பட்டதும் முதல்ல உன்னைக் கொல்லணும்ங்கிற வெறி தான் வந்தது. ஆனா யோசிச்சு பார்த்தப்போ உன் பக்கம் ஏதோ நியாயமிருக்கணும்ன்னு எனக்குத் தோணிச்சு... அதனால் விளைந்தது தான் இந்தக் கல்யாணம்... என்னைக் காதலிக்கலன்னு சொல்ற இதே வாய் ஒரு நாள் இல்ல ஒரு நாள் என் கிட்ட வந்து... 'நாகா... உங்களைக் காதலிக்கிறேன்... நீங்க இல்லாம நானில்லை'ன்னு சொல்ல வைக்கல நான் நாகா இல்லைடி... அதுவரைக்கும் நான் உன்னைத் தொட மாட்டேன்..."

“இது ஏதோ ஆத்திரத்தில், கோபத்தில் எடுத்த முடிவு இல்லை. இது ஏமாத்தத்திலும், வலியிலும் எடுத்த முடிவு... இந்த நாகா எப்போதுமே தன் தோல்வியை ஒப்புக்காதவன்... அதிலும் உன் விசயத்தில் நான் என் தோல்வியை ஒப்பு கொள்வதாய் இல்லை... நான் ஜெயிக்கப் பிறந்தவன்... உன்னை ஜெயிக்கப் பிறந்தவன்... அதைவிட என் காதல் மேல் எனக்கு நம்பிக்கையிருக்கு..."

அவனின் வார்த்தைகளைக் கேட்டு தன் பக்கம் ஏதோ காரணம் இருக்கும் என்பதைப் புரிந்து கொண்டானே என்று அவள் மனம் அவன் பால் ஒரு கணம் நெகிழ, மறுகணம் மனதை இரும்பாய் இறுக செய்தவளின் இதழ்கள் ஏளனத்துடன் வளைந்தது.

"பார்க்கலாம்... பார்க்கலாம்... யார் ஜெயிக்கிறாங்கன்னு..." என்று ஏளனமாய்ச் சொன்னவள், "அப்படி நான் ஜெயிச்சிட்டா எனக்கு நீங்க விடுதலை... ஐ மீன் டிவோர்ஸ் கொடுக்கணும்... ஓகேவா...?" திமிராய் கேட்டவளை கண்டு அவனுக்குக் கோபம் வருவதற்குப் பதில் சிரிப்பு வந்தது.

"டபுள் ஓகே..." அவன் சொன்னதும் அவள் கண்ணில் தோன்றிய உணர்வை அவனின் மனம் குறித்துக் கொண்டது, "யார் ஜெயிக்கப் போறாங்கன்னு இப்பவே டெஸ்ட் பண்ணி பார்த்திரலாமா...?" என்று கேட்டபடி அவளருகே அவன் வர... அவளோ,

"இப்போ எதுக்குக் கிட்டே வர்றீங்க...? பேச்சு பேச்சாயிருக்கணும்..." அவளின் வார்த்தைகள் பயத்தில் நடுங்கியது.

"எனக்குப் பேசி பழக்கம் இல்லை... செயலில் இறங்கி தான் பழக்கமிருக்கு..."

சுவரோடு சுவராய் பல்லி போல் ஒட்டி கொண்டு நின்றவளின் இருபுறமும் அணைவாய் தன் கைகளைக் கொண்டு வந்தவன்... அவள் கண்ணோடு கண் நோக்கினான். அவனின் கண்ணிலிருந்த காந்த சக்தியில் அவளின் மனம் ஈர்க்கப்பட்டதோ என்னமோ... அவனையே

வைத்த விழி வாங்காமல் பார்த்தாள் அவள். அவன் பார்வையிலிருந்த காதலா, தாபமா, நேசமா ஏதோ ஒன்று அவளை எங்கேயோ இழுத்துக் கொண்டு சென்றது. அதன் தாக்கம் தாங்க முடியாதவளாய்,

"நாகா... ப்ளீஸ்..." இருகரம் கூப்பியவளை கண்டு ஒரு நொடி புரியாமல் திகைத்தவன் மறுநொடி அவளின் கூப்பிய கையைக் கீழிறக்கி...

"என்ன இது தேவிம்மா...?" அவன் வார்த்தை கண்டிப்புடன் ஒலித்தது.

"உங்க காதல் உண்மையா இருக்கலாம்... நீங்க நல்லவங்களா இருக்கலாம்... ஆனா என் காதல் பொய்... நான் நல்லவளில்லை... பொய்யில் மெய்யை தேடாதீங்க... பொய்மானை உண்மைன்னு நம்பி ஏமாந்துறாதீங்க... உங்க நல்லதுக்குத் தான் சொல்றேன்... இப்ப கிடைச்ச ஏமாத்ததுக்கே உங்களுக்கு இந்தளவுக்குக் கோபம் வருதுன்னா... இனி வரப் போற ஏமாத்தங்களை உங்களால எப்படித் தாங்கிக்க முடியும்...? நீங்க எதையோ நினைச்சு என்னைக் கல்யாணம் பண்ணியிருக்கீங்க... ஆனா அது உங்களுக்குக் கிடைக்காது..." அதைச் சொல்லும் போது தான் அவளின் முகத்தில் எத்தனை வலி... அதைக் கொஞ்சமும் அவன் உணர்ந்து கொள்ளவில்லை என்றால் அவன் அவளைக் காதலித்ததற்கு அர்த்தமே இல்லையே...

"இப்போ எதுக்கு இப்படிப் பூடகமா பேசுற... அன்னைக்கும் அப்படித்தான் பேசின... உன் பிரச்சினை தான் என்ன...? என்னால் முடிஞ்சளவு தீர்த்து வைக்கிற பார்க்கிறேன்... எதையோ நினைச்சிட்டு உன்னையும் குழப்பி, என்னையும் குழப்பி மொத்தத்தில் நம்ம வாழ்க்கையையும் குழப்பி அதைக் கேள்விக்குறியாக்கிடாதே... ப்ளீஸ் சொல்லு தேவிம்மா..."

அவனின் காதல் அவனின் ஒவ்வொரு வார்த்தையிலும் தெரிந்தது. அது அவளைத் தாக்கியதோ என்னமோ சிறிது நேரம் அவனைக் கண்ணிமைக்காமல் பார்த்தவள்... பின் பெருமூச்சுவிட்டுத் தன்னைச் சமன் செய்து கொண்டு,

"பிரச்சினை..." விரக்தியாய் சிரித்தவள்,

"எனக்குப் பிரச்சினை நடந்து முடிந்து அதிலிருந்து நான் வெளியில் வந்து ரொம்ப நாளாகிவிட்டது... ஆனாலும் அதன் நிழல் என்னை விடாமல் துரத்துது... அது நான் சாகும் வரை என்னை விடாது... என்னாலும் அதிலிருந்து தப்பிக்க முடியாது..." வேதனையுடன் கண்களை மூடிக் கொண்டாள்.

அவளின் வேதனையைச் சும்மா கையைக் கட்டி பார்த்துக் கொண்டிருக்க அவனால் முடியவில்லை... அவ்வளவு நேரம் அவள் அவனை வார்த்தையால் காயப்படுத்தியிருந்த போதும் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் தன் கைகளை நீட்டி அவளைத் தன்னருகே இழுத்தவன்... அவளின் வேதனையைப் போக்கும் வண்ணம் அவளை ஆரத்தழுவி கொண்டான். இத்தனை நாள் அம்மா, அப்பா, அண்ணா என்று அனைவரும் அவளுக்கிருந்த போதும் தோள் சாய்ந்து அழ யாருமில்லாத அவளின் தனிமை ஏக்கத்தை அவனின் இறுகிய அணைப்புப் போக்கியது.

அத்தனை நாள் துக்கத்தையும் அவள் அவனின் நெஞ்சில் முகம் புதைத்து தேம்பி தேம்பி அழுவதைக் கண்டு அவனுக்கு என்ன ஆறுதல் சொல்வதென்று தெரியவில்லை. அவளின் தலையை ஆதரவாய் வருடி கொடுத்துக் கொண்டிருந்தான். கொஞ்ச நேரம் முன்பு வரை சண்டைக்கோழியாய் அவனிடத்தில் சிலிர்த்து கொண்டிருந்தவள் இப்போது அவனின் தொடுகையில் ஆறுதல் தேடி கொண்டிருந்தது விந்தையிலும் விந்தை... இது காதலில் மட்டுமே சாத்தியம் என்பதை அந்த முட்டாள் பெண் உணரவில்லை... உணரவில்லையா இல்லை உணர முற்படவில்லையா... அது அவளுக்கு மட்டுமே தெரிந்த ரகசியம்.

அவள் அழுவது இப்போதைக்கு நிற்பது போல் அவனுக்குத் தோன்றவில்லை. அதனால் வலுக்கட்டாயமாய்த் தன் நெஞ்சிலிருந்து அவளின் முகத்தை நிமிர்த்தியவன்... அவளின் கண்ணீரை துடைத்துக் கொண்டே,

"தேவிம்மா... நடந்து முடிந்ததை நம்ம ரெண்டு பேரும் மறந்துவிடுவோம்... இனி நடப்பதை மட்டும் பார்ப்போம்... எல்லாக் கணவன், மனைவி மாதிரி நாம் ஏன் வாழ கூடாது...?" அவனின் வார்த்தையில் அவளின் கண்ணீர் இன்னமும் பெருகி வழிந்தது.

'நான் இவ்வளவு சொல்லியும் காதலை யாசிக்கின்றாயே... என்னால் அதைத் தர இயலுமா...? தர இயலாத ஒன்றிற்காக நீ ஏன் இப்படி அடம்பிடிக்கிறாய்...?' என்ற குற்றச்சாட்டு அவளது விழியில் தெரிந்தது. அதை அவனும் உணர்ந்தானோ...

அவளின் முந்தானை சேலையை லேசாய் அகற்றி மெதுவே அவளது வயிற்றின் மேல் கை வைக்க... அவனின் தொடுகையில் அவளின் உடலில் எழுந்த சிலிர்ப்பை அவனால் உணர்ந்து கொள்ள முடிந்தது. அது அந்நேரம் அவனுக்கு எல்லையில்லா மனநிறைவை அளித்தது என்னவோ உண்மை...

"நம் குழந்தைக்காக நீ யோசிக்கக் கூடாதா... அப்பா நானிருந்தும் என் குழந்தை அப்பா இல்லாமல் வளரணுமா...? ஆண் குழந்தை என்றால் பரவாயில்லை... இதுவே பெண் குழந்தை என்றால்... கல்யாணம்ன்னு வரும் போது தகப்பன் இல்லாதிருந்தால் அது எத்தகைய ஏச்சுப் பேச்சுக்களை உண்டாக்கும் என்பதை நல்லா யோசிச்சு பாரு..."

உண்மையில் அவனின் பேச்சில் அவள் அதிர்ந்து தான் போனாள். அது அவன் கூறிய 'பெண் குழந்தை' என்ற வார்த்தையிலா இல்லை 'அப்பா' என்ற வார்த்தையிலா... எதிலென்று உறுதியாய் கூற இயலவில்லை.

"வேண்டாம்... என் குழந்தைக்கு அப்பா வேண்டாம்... அது பெண் குழந்தையா இருந்தாலும் சரி..."

அவனைப் பார்த்து ஆவேசமாய் உரக்க கத்தியவள் அப்படியே மடங்கி அமர்ந்து அழ ஆரம்பிக்க... அவனோ

என்ன சொல்லி தேற்றுவது என்று தெரியாமல் அவளை வேதனையுடன் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான்.

சதி தொடரும்...!!!

அதிகாலையில் எழுந்து குளித்து முடித்து அலுவலகத்திற்குத் தயாராகிக் கொண்டிருந்த நாகார்ஜூனின் கண்கள் துயில் கொண்டிருந்த மனைவியின் முகத்திலேயே லயித்து இருந்தது...

உறங்கும் போது நிர்மலமான முகத்துடன் உறங்குபவள் மனதில் அப்படி என்ன பெரிய துன்பம் வாட்ட போகிறது என்று அவனுக்குப் புரியவில்லை... ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாய்ப் புரிந்தது அவளுக்கு ஆண்கள் என்றால் அறவே பிடிக்காது என்பது... அதற்கான காரணம் தான் என்ன என்று அவனால் ஊகிக்க முடியவில்லை...

எத்தனையோ விசயங்களைத் துப்பறிபவனுக்கு அவளுடைய துன்பத்தையா துப்பறிந்து கண்டுபிடிக்க முடியாது...? நிச்சயம் முடியும்...

'ம்... அதற்குச் சிக்கலின் நுனியை தேட வேண்டும்...' என்று யோசித்தவனுக்கு அவள் தன் தந்தையைப் பற்றி வெறுப்பாய் பேசியது நியாபகத்தில் வந்தது... அதை மனதில் குறித்துக் கொண்டான்...

கிளம்புவதற்கு முன் வைஷ்ணவிதேவியின் அருகில் வந்தவன் கர்ப்பமாக இருக்கும் அவளை எழுப்புவதா, வேண்டாமா என்று மனதிற்குள் பட்டிமன்றம் நடத்தியவன் பின் வேறுவழியின்றி அவளை எழுப்பினான்...

"தேவி... தேவி..." அவனது அழைப்பில் பதறியடித்துக் கொண்டு எழுந்தவள் அருகில் இருந்த அவனது முகத்தைக் கண்டதும் பயத்தில் அலறினாள்...

"தேவி நான் தான்ம்மா..." அவளது தோள் பற்றி அவன் உலுக்க... அவளோ அனல் பறக்க அவன் கன்னத்தில் ஓங்கி கொடுத்தாள் ஒரு அறை...

திருமணநாளிற்கு மறுநாள் தன் மனைவியிடத்தில் இருந்து நாகா எதை எதிர்பார்த்தானோ இல்லையோ இந்த மாதிரியான ஒரு அறையை நிச்சயம் அவன்

எதிர்பார்க்கவில்லை... ஸ்தம்பித்துப் போனவனாய் கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு அவளைக் கொலைவெறியுடன் வெறித்தான்...

அவனது மனக்கட்டுப்பாடு, பொறுமை எல்லாம் அவனை மீறி எல்லை கடந்து சென்று கொண்டு இருந்தது...

"என்னடி நினைச்சிட்டு இருக்க உன் மனசுல...? நீ என்ன பண்ணினாலும் வாங்கிட்டு சும்மா இருப்பேன்னு நீ நினைச்சியா...? நீ பண்ணிய காரியத்துக்கு உன்னை..." அவளின் கழுத்தில் கையை வைத்து இறுக்கியவனின் முகமும் அதே போல் இறுகி இருந்தது...

அவனது செயலில் அவள் அச்சம் கொண்டாளோ இல்லை தான் எங்கிருக்கிறோம் என்று தெரியாத சூழ்நிலையில் ஒரு ஆண்மகனான கணவனின் அண்மையில் அச்சம் கொண்டாளோ ஏதோ ஒன்றில் அவள் கட்டிலோடு ஒடுங்கினாள்...

கைகளால் முழங்காலை கட்டி கொண்டு உடலை குறுக்கி கொண்டு அமர்ந்தவள் அவனை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை...

அவளின் அந்த நிலை அவனின் மனதை வருத்தியதோ என்னமோ, "ச்சே..." என்று எரிச்சலுடன் தன் கையை எடுத்தான்...

"நான் பாட்டுக்கு என் வேலை உண்டு நான் உண்டுன்னு நிம்மதியா இருந்தேன்... ஏண்டி என் கண் முன்னால வந்தே... என்னைக்கு உன்னைப் பார்த்தானோ அன்னைக்குப் பிடிச்சது எனக்கு ஏழரை... ஒவ்வொரு விசயத்திலும் என்னை ஏமாத்தி, எல்லார் முன்னாடியும் என்னை அவமானப்படுத்தி, கேவலப்படுத்திட்டே... சரி அதைக் கூட விட்டுறலாம்..."

“நீ பண்ணின காரியத்துக்குப் பின்னால் ஏதாவது சரியான காரணம் இருக்கும்ன்னு நினைச்சு தான் நம்பித்தான் நான் உன்னைக் கல்யாணம் பண்ணினேன்... இப்பவும் அதை

நான் நம்பறேன்... ஆனா இப்போ நீ என்னை அடிச்ச பாரு... இப்ப புரிஞ்சதுடி நீ என்னை அவமானப்படுத்த தான் வந்துருக்கன்னு... உனக்கு என்னத்தான்டி பிரச்சினை...? வாயை திறந்து பேசேன்..." அவனுக்கு வந்த கோபத்தில் கத்த தொடங்கினான்...

நல்ல புரிதல் உள்ள கணவன் கூட அவன் மனைவி இந்த மாதிரி ஒரு காரியம் செய்தால் பொறுத்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டான்... இதில் இரண்டு மாதத்துக்கு முன் காதலித்து நேற்று திருமணம் செய்து கொண்ட நாகா எம்மாத்திரம்...

தேவிக்கு மெல்ல சுற்றுப்புறம் உறைக்கத் தான் எங்கிருக்கிறோம் என்பது புரிய அவளது உடலில் இருந்த நடுக்கம் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறையலானது... ஏனோ கணவனது அந்தக் கோபம் கூட அவளுக்கு இதத்தை, ஒருவித பாதுகாப்பு உணர்வை கொடுத்தது... இனி அவள் தனி இல்லை... அவளுக்கு ஏதாவது ஒன்று என்றால் அவள் கூடவே அவள் கணவன் இருக்கிறான் என்கிற எண்ணமே நிம்மதி தந்தது...

மெல்ல கண்களை மலர்த்தி அவனை ஏறிட்டாள்... இன்னமும் கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு பேசி கொண்டு இருந்தவனைக் கண்டு அவளுக்கு இரக்கம் சுரந்தது... தன் முட்டாள்த்தனமான செயலை நினைத்து தன் மீதே அவளுக்குக் கோபம் வந்தது...

"சாரி..." என்றாள் கண்களில் கண்ணீர் மல்க...

"ஆ ஊன்னா சாரி சொல்லிடு... சாரி சொன்னா நீ அடிச்சது இல்லைன்னு ஆகிடுமா...? காரணமே இல்லாம ஏண்டி என்னை அடிச்ச...? உன் அண்ணங்காரன் சொல்லிவிட்டானா தினமும் என்னை அடிச்சு பழி தீர்த்துக்கச் சொல்லி...?" அவனிடத்தில் இன்னமும் கோபம் அடங்காமல் திமிறியது சண்டிக்குதிரை போல்...

பிரகாஷை அவன் சொன்னதும் அவளிடத்தில் அதுவரை இருந்த இணக்க நிலை போய் முணுக்கென்று கோபம்

வந்தது அவளுக்கு...

"என்னை என்ன வேணும்ன்னாலும் பேசுங்க... என் அண்ணாவை பேசற வேலை எல்லாம் இங்கே வேண்டாம்..." என்று வெடித்தவளிடம்,

"அவன் எல்லாம் ஒரு அண்ணன்... தங்கச்சியையே எனக்குக் கூட்டி கொடுத்து என்னை அழிக்க நினைத்த பொறுக்கி அவன்... அவனுக்கு நீ என்னடி வக்காலத்து வாங்குற... நீ அவனோட சொந்த தங்கச்சியா இருந்தா இப்படிச் செஞ்சிருப்பானா...?" பிரகாஷ் தனக்குப் பண்ணிய துரோகத்தின் தாக்கத்தில் நாகாவும் வார்த்தைகளைச் சூடாய்க் கொட்டினான்...

"நாகா..." கத்தியவளின் உடல் அப்படியே அதிர்ந்தது...

கணவன் சொல்வது போல் தன் சகோதரன் அப்படிப்பட்டவனா...? அவன் அவளுக்குச் செய்த உதவிக்கு இந்த ஜென்மத்தில் அவளால் அந்த நன்றிக்கடனை திருப்பிச் செலுத்த இயலாது... தாய்க்கும் தந்தைக்கும் மேலாய் இவ்வளவு ஏன் அந்தக் கடவுளுக்கும் மேலானவன் அவன்... அவளை இரட்சிக்க வந்த தேவதூதன் அவன்...

இன்று அல்லவா இந்த நாகா கணவனான பின் அவளுக்குப் பாதுகாப்பாய் இருக்கிறான்... ஆனால் அவன் அவளுடன் பிறக்காமலேயே உடன் பிறந்த சகோதரன் போல் அன்று பல முறை துன்பத்தில் இருந்து அவளைக் காத்து நின்றானே... அதை இவன் அறிவானோ...?

'மூடன் அறியாமையில் உறவுகளை எடுத்து எறிந்து பேசுவதைப் பார்...' மனம் கொந்தளிக்க அவள் அவனை முறைத்து பார்க்க அவனும் அவளுக்குக் கொஞ்சமும் சளைக்காமல் அவளை முறைத்துப் பார்த்தான்...

"என்னை அவமானப்படுத்தணும்ங்கிற குறிக்கோளோட தான் நீ இருக்கிற... ஆனா அதுக்கு எல்லாம் நான் விட மாட்டேன்டி..."

கோபத்தில் கர்ஜித்தவன் அவனுக்கு இருக்கும் ஆத்திரத்தில் அவளைத் திருப்பி அடித்துவிடுவோமோ என்று அஞ்சி அறையை விட்டு வெளியேறினான்... அது கூட அவளுக்காக இல்லை... அவளது வயிற்றில் வளரும் அவனது வாரிசுக்காக...

அவன் போவதை பார்த்துக் கொண்டிருந்த வஞ்சியவள் மனதில் சொல்லொண்ணா வலி எழுந்தது... கிட்டத்தட்ட பதிமூன்று வருடங்களாக அவள் மனதில் இருக்கும் இந்த வலி அவள் சாகும் வரை அவளை விட்டு போகாது...

கண்களை இறுக மூடி கொண்டவளின் மனக்கண்ணில் மசமசவென்று அந்தக் காட்சி தெரிந்தது... சுகமாய் உறங்கி கொண்டிருந்த அந்தப் பத்து வயது சிறுமியை நோக்கி அந்த நடுத்தர வயதுக்காரன் கண்ணில் வழிந்த காமத்துடன் அவளை ஆசையுடன் நெருங்கினான்...

அதற்கு மேல் நினைத்து பார்க்க முடியாமல் அவள் கண்ணில் இருந்து கண்ணீர் கரகரவென வழிந்தது...

'கடவுளே... அந்தக் காமுகனுக்கும் எனக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது...? கடைசியில் நானும் அந்தக் காமத்தை பயன்படுத்தித் தானே நாகாவை என் வலையில் விழ வைத்தேன்...' துயரத்துடன் நினைத்தவள் அப்படியே செயலிழந்து போய் நின்றிருந்தாள்...

காலை உணவு உண்ணாமல் சென்றுவிட்ட மகனை எண்ணி வருத்தத்துடன் இருந்த துர்கா அந்நேரம் வேலைக்குக் கிளம்பி வந்த தேவியைக் கண்டு அவருக்கு ஆத்திரம் தலைக்கேறியது...

"இது சத்திரமா...? சாவடியா...? உன் இஷ்டத்துக்கு இருக்கிறதுக்கு... காலையிலேயே எங்கே சீவி சிங்காரிச்சிட்டு கிளம்பியாச்சு...? அதான் என் பையனை மயக்கி கைக்குள் போட்டுக்கிட்டாச்சே... இனி யாரை மயக்க இந்த வேசம்...?" கத்தியின் கூர்மையாய் வந்தது அவரது வார்த்தைகள்...

எந்தவித ஒப்பனையும் இல்லாமல் சுடர் விடும் அழகோடு இருந்தவளின் தோற்றம் அவருள் பெரும் கொதிப்பை ஏற்படுத்தியது... இந்தக் கேடு கெட்ட அழகு தானே தன் மகனை மயக்கியது என்ற பெருங்கோபம் அவருள் கனன்றது...

"மன்னி... பாவம் அந்தப் பெண்..." ரமா தேவிக்குப் பரிந்து கொண்டு வந்தார்...

"உனக்கு ஒண்ணுந் தெரியாது ரமா... இவளை மாதிரியான ஆளுங்களை ஆரம்பத்திலேயே அடக்கி வைக்கணும்... இல்லை என் பையனை மாதிரியே என்னையும் இளிச்சவாயாய் நினைச்சிருவா..." துர்கா நாத்தனாரிடம் சொல்லி கொண்டு இருக்கும் போதே தேவி வாயிலை நோக்கி நகர...

அவ்வளவு தான் எங்கிருந்து தான் அவ்வளவு ஆங்காரம் வந்ததோ துர்காவிற்கு ஆவேசத்துடன் அவள் அருகில் சென்றவர் அவளைத் தடுத்து நிறுத்தி,

"நான் கேள்வி கேட்டுட்டு இருக்கேன் நீ பாட்டுக்கு கிளம்பி போய்ட்டு இருந்தா என்ன அர்த்தம்...?" என்றபடி தன் கையை ஓங்க...

தேவி சட்டென்று அவரது கையைப் பிடித்துத் தடுத்தவள், "உங்க மகன் கேட்ட கேள்விக்கே நான் பதில் சொன்னது இல்லை... இதில் அவரோட அம்மாவான உங்களுக்குப் பதில் சொல்வேன்னு நீங்க எப்படி எதிர்பார்க்கறீங்க...? என்னையவா அடிக்கக் கையை ஓங்குறீங்க... என்னை அடிக்கிறதுக்கு முன்னாடி எதுக்கும் உங்க மகனுக்கு ஒரு ஃபோன் போட்டு நான் எப்படிப்பட்டவள்ன்னு கேட்டுக்கோங்க... ஏன்னா இப்பத்தான் அவர் என் கிட்ட அடி வாங்கிட்டு போறார்..."

மகனை அடித்த கதையை மருமகள் பெருமையாய் கூறியதை கேட்டு அதிர்வுடன் துர்கா நிற்க அதைக் கண்டு கேலியாய் அவரைப் பார்த்த தேவி அவரது கையை உதறிவிட்டு அங்கிருந்து நகர்ந்தாள்...

இதைக் கண்டு கொண்டு இருந்த பஞ்சாபிகேசனும், சேஷாத்திரியும் மருமகளின் துணிவை கண்டு வியந்தார்கள்... இருந்தாலும் மாமியாரை எதிர்த்து பேசியதை கண்டு அவர்களுக்குச் சிறிது வருத்தமாகத் தான் இருந்தது... ஆனாலும் துர்கா பேசியதும் சற்று அதிகப்படியே என்பதால் மௌனம் காத்தனர்... மகன் மருமகளிடம் அடி வாங்கியதாய் அவள் சொன்ன போது ஏதோ நகைச்சுவையைக் கேட்டது போல் அவர்களுக்குள் சிரிப்புப் பொங்கியது... அடி வாங்காத கணவன் உலகத்தில் உண்டோ...

துர்கா கூறியது போல் தேவி ஒன்றும் ஊரை சுற்ற செல்லவில்லை... தனது வேலைக்குத் தான் கிளம்பி சென்றாள்... பள்ளிக்கு சென்றவளை சக ஆசிரியர்கள் சூழ்ந்து கொண்டு திருமணம் பற்றி விசாரிக்க அவர்களுக்குப் பதில் சொன்னவள் அடுத்தத் தனது வேலையில் மூழ்க நேரம் அவளைத் தத்தெடுத்துக் கொண்டது...

அங்கே அலுவலகத்துக்கு வந்த நாகாவோ மனைவியின் மீதிருந்த கோபம் கொஞ்சமும் குறையாமல் அமர்ந்திருந்தான்...

'இவள் மனதில் என்ன நினைத்து கொண்டிருக்கிறாள்...? எப்பவும் என்னைச் சீண்டிவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டு... ஒருத்தனை நல்லவனா இருக்க விட மாட்டாளே... இவளுக்கு எல்லாம் கன்னம் கன்னமாய் அறைந்து தள்ளுபவன் கணவனாய் வந்திருக்க வேண்டும்... அப்போ தெரியும் இந்த நாகாவோட அருமை...' மனதில் அவன் தேவியை நினைத்து பொருமி கொண்டு இருக்க...

அப்போது அங்கே அட்டகாச சிரிப்புடன் ஆர்ப்பட்டமாய் உள்ளே நுழைந்தான் விவேக்...

"நாதன் சார்... இன்னைக்கு எங்கே பேட்டி எடுக்கப் போறீங்க...? ஏதாவது குஜிலிகளைப் பேட்டி எடுக்கப் போறதா இருந்தா நானும் வர்றேன்... இன்னைக்கு இந்த

நாகா தொல்லை இல்லாமல் நிம்மதியா சைட் அடிக்கக் கிளம்பிட வேண்டியது தான்..."

கூறிக் கொண்டே வந்தவன் அங்கே நாகாவை கண்டதும் மாட்டி கொண்டவனாய் பேய் முழி முழித்தான்... மெல்ல அப்படியே பின்வாங்க முயன்றவனை நாகாவின் குரல் தடுத்து நிறுத்தியது...

"நான் உனக்குத் தொல்லையாடா...?" கடுப்புடன் அவன் கேட்க...

"ச்சே... அப்படி எல்லாம் உன்னைச் சொல்வேனா நாகா... சும்மா உலுலாய்க்கு சொன்னேன்..." என்று சமாளித்தவனை நாகா முறைத்து பார்க்க...

"டேய் நண்பா... என்னை அப்படிப் பார்க்காதேடா... சிஸ்டரை பார்க்கிற மாதிரி என்னைப் பார்க்காதே... எனக்கு வெட்கம் வெட்கமாய் வருது..." என்று விவேக் போலியாய் வெட்கப்பட...

"சகிக்கலைடா... நீ நார்மலாவே இரு..." என்று நாகா சொல்ல...

"என்ன நாகா இன்னைக்குப் போய் வேலைக்கு வந்திருக்க... இன்னைக்காவது சிஸ்டர் கூட ஜாலியா இருக்கக் கூடாதா...?"

"ஏன் இன்னைக்கு என்ன...? நம்மளை மாதிரி பத்திரிக்கைக்காரனுக்குக் காலம் நேரம் எல்லாம் ஏது...? போய் வேலையைப் பாருடா..." நாகா கடுப்படிக்க...

"உன் கடமை உணர்ச்சிக்கு அளவே இல்லையா நாகா... புதுசா கல்யாணம் முடிஞ்சவன் பொண்டாட்டியை கொஞ்சாம இப்படியா காகிதத்தைக் கொஞ்சுவ...? என்ன கொடுமை நாகா இது...?" கடைசி வாக்கியத்தை விவேக் இழுத்து சொல்ல...

"நாதன் சார்... நீங்களும் விவேக்கும் அந்தச் சாமியார் ஆசிரமத்துக்கு நியூஸ் கலெக்ட் பண்ண போங்க..." என்று

அவன் நாதனுடன் சேர்த்து விவேக்கிற்கும் வேலையைக் கொடுக்க…

"அந்தச் சாமியார் மடத்துக்கா…?" கேள்வி கேட்ட விவேக் கிட்டத்தட்ட மயக்க நிலைக்கே சென்றுவிட்டான்…

"ஏன் நாகா உனக்கு என் மேல் இத்தனை கொலைவெறி…? சிஸ்டர் உன்னைப் பட்டினி போட்டுக் கொல்லுமாறு நான் சாபம் கொடுக்கிறேன்…" என்று புகைந்தவனைக் கண்டு,

"ஆமாம் உன் சிஸ்டர் அப்படியே கொஞ்சிட்டாலும்…" முணுமுணுத்த நாகா விவேக்கை வெற்றுப் பார்வை பார்க்க…

"நாதன் சார் எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்குது…?" பாவம் போல் கேட்டவனைப் பார்த்து நாதனுக்குமே பாவமாக இருக்க…

"விவேக் தம்பி… நாம அங்கே போறதே அந்தச் சாமியார் பல பெண்களை மெஸ்மரிஸ் பண்ணி தன் கஸ்டடியில் வச்சிக்கிறதை பத்தி எழுதத்தான்… அதனால தைரியமா வாங்க… அது கோபிகைகள் நிறைந்த பிருந்தாவனம்…" என்று அவனின் காதை கடிக்க…

அவர் சொன்னதைக் கேட்டு விவேக் தன்னை அந்தக் கண்ணனாய் உருவகப்படுத்தியவன் அவன் புல்லாங்குழல் இசைத்துக் கொண்டிருக்கச் சுற்றிலும் கோபியர்கள் வண்ண மயமாய்க் கும்மியடிக்க அந்தக் காட்சியே அவனைப் பரவசப்படுத்த…

"தேங்க்ஸ் நாகா…" என்று நண்பன் கன்னத்தில் மின்னல் வேகத்தில் முத்தமிட்டவன் நாதனுடன் அவசரமாய் வெளியேறினான்…

விவேக்கின் நடவடிக்கை நாகாவிற்குச் சிரிப்பை வரவழைக்க அவன் தேவியை மறந்தவனாய் தனது வேலையில் மூழ்கினான்…

இரவு வரை வேலையில் மூழ்கியிருந்தவனை அவனது அலைப்பேசி அழைத்து அவனைக் கலைத்தது... அவனது அன்னை தான் அழைத்திருந்தார்... அதை உயிர்ப்பித்துக் காதில் வைத்தவன்,

"சொல்லுங்கம்மா..."

"என்னத்தடா சொல்ல சொல்ற... காலையில் போன உன் பொண்டாட்டி இந்நேரம் வரை வீட்டுக்கு வரலை... இந்த அநியாயத்தை நீ தான் கேட்கணும்டா..." துர்கா அழுது புலம்ப... அவரிடம் இருந்து தொலைப்பேசியைப் பறித்த சேஷாத்திரி,

"அஜூ... பதட்டப்படாம நான் சொல்றதை கேளுப்பா... காலையில் நீ போன பின்னாடி கிளம்பி போன தேவி இப்ப வரை வீட்டுக்கு வரலைடா... ஜனாவுக்கு ஃபோன் பண்ணி கேட்டுட்டேன்... அங்கேயும் வரலைன்னு சொல்றாங்க... வேற எங்கேயாவது போய் இருப்பாளாடா... அவ பிரெண்ட்ஸ் வீட்டுக்கு அந்த மாதிரி..."

தந்தை சொன்னது போல் அவள் தனது நண்பர்கள் வீட்டிற்குச் சென்று இருந்தாலும் அவர்கள் யார் எவர் என்று தெரியாத பட்சத்தில் அவன் யாரிடம் போய் விசாரிப்பான்...? அவனுக்கு யோசித்து யோசித்துத் தலைவலி வந்தது தான் மிச்சம்...

"சரிப்பா நீங்க கவலைப்படாதீங்க... நான் பார்த்துக்கிறேன்... எந்த ராத்திரி ஆனாலும் அவளைக் கூட்டிட்டு தான் வீட்டுக்கு வருவேன்..." என்றவன் அலைப்பேசியைத் துண்டித்துவிட்டு மனைவியின் அலைப்பேசிக்கு அழைத்தான்...

அந்தப் பக்கம் அவள் எடுக்கவே இல்லை... ஒருவேளை அவனது அழைப்பு என்று தெரிந்திருந்து வேண்டும் என்றே எடுக்கவில்லையோ என்னமோ... அடுத்து என்ன செய்வது என்று அவன் சிந்தனையில் ஆழ்ந்தான்...

*******************************

அதே நேரம் மயில்வாகனமும், மேகநாதனும் அந்த ஏகாந்த வேளையில் தங்கள் முன் இருந்த மதுவை புட்டி புட்டியாய் உள்ளே தள்ளி கொண்டு இருந்தனர்...

"டேய் மேகா... உன் பையன் செத்த இடத்துல புல்லு கூட முளைச்சிருச்சு... ஆனா நீ அந்த நாகாவை இன்னும் உயிரோட அலைய விட்டுட்டு இருக்கியே... இந்நேரம் நீ அவனைப் போட்டு தள்ளி இருக்க வேண்டாமா...? உன் மகனாவது ஒரேடியாய் போய்ச் சேர்ந்து உனக்கு ஏதோ ஒரு வகையில் நிம்மதியை கொடுத்துட்டான்... ஆனா என் மகன் இருந்தும் இல்லாத மாதிரி பைத்தியக்காரனா இருக்கான்டா... தினமும் அவனை அந்த மாதிரி பார்க்கிறதுக்கு எவ்வளவு கஷ்டமா இருக்கு தெரியுமா...? கொடுமைடா... கொடுமை..." என்று தலையில் அடித்துக் கொண்டு மயில்வாகனம் அழ...

நண்பனின் அழுகை கொஞ்சமும் மேகநாதனை பாதிக்கவில்லை... அவரது கைகள் மதுவை எடுத்து வாயில் ஊற்றிக் கொண்டிருக்க அவரது கண்கள் பழிவெறியில் மின்னியது...

சதி தொடரும்...

அதற்கு மேல் ஒரு நிமிடம் கூட அலுவலகத்தில் இருக்க மனம் இல்லாமல் உடனே கிளம்பி வெளியில் வந்தான் நாகா... இந்த இரவு நேரத்தில் மனைவியை எங்கே சென்று தேடுவது, எப்படித் தேடுவது என்று தவித்துப் போனவனாய் சற்று நேரம் அப்படியே உறைந்து போய் நின்றான்...

திக்குத் தெரியாத காட்டில் தனித்து விடப்பட்ட குழந்தையின் மனநிலையை ஒத்து இருந்தது அவனது மனநிலை... காலையில் அவனுக்கும், மனைவிக்கும் இடையில் எழுந்த மனஸ்தாபம் கூட இப்போது முற்றிலும் காணாமல் போய், 'தேவிம்மா நீ எங்கே இருக்கிறாய்...?' என்ற தவிப்பான கேள்வியே அவனது மனம் முழுவதும் வியாபித்து அவனைத் துடிக்கச் செய்தது...

முயன்று தன்னைச் சமாளித்துக் கொண்டு தனது இரு சக்கர வாகனத்தைக் கிளப்பியவன் அந்த இரவு வேளையில் மனையாளை தேடி தெரு தெருவாய் பைத்தியக்காரன் போல் அலைந்தான்...

அவனுக்குத் தெரிந்து அவள் செல்லும் இடங்கள் எல்லாம் ஒன்று விடாமல் அலசி பார்த்துவிட்டான்... அவள் வேலை செய்யும் பள்ளிக்கு சென்று அங்கிருந்த காவலாளியிடம் கூட அவன் விசாரித்துப் பார்த்துவிட்டான்... பள்ளி முடிந்ததும் தேவி கிளம்பி சென்றுவிட்டதாய் காவலாளி கூறியது கேட்டு அவன் மனம் கலங்க ஆரம்பித்தது...

மாலை நான்கரைக்கு விடும் பள்ளியில் இருந்து கிளம்பி சென்றவள் அப்படி எங்கே தான் சென்றிருப்பாள்...? தனது மணிக்கட்டை திருப்பிக் கைக் கடிகாரத்தில் மணியைப் பார்த்தான்... இரவு பதினொரு மணியாகி இருந்தது... இத்தனை நேரம் அவள் காணாமல் போயிருப்பதைப் பார்த்தால்...??? அவனது மனதில் அபாயச் சங்கு அலற ஆரம்பித்தது...

தன்னுடைய எதிரிகளால் அவளுக்கு ஏதும் ஆபத்து வந்திருக்குமோ...? அதற்கு மேல் அவனால் அதைப் பற்றிச்

சிந்திக்க முடியவில்லை... நேரே காவல் நிலையத்திற்கு விட்டான் தனது வாகனத்தை...

அங்கிருந்த அதிகாரி அவனுக்கு வேண்டப்பட்டவர் என்பதால் இந்த விசயத்தை ரகசியமாக வைத்து விசாரிப்பதாய் அவனுக்கு உறுதி கொடுத்தார்...

காவல் நிலையத்தில் இருந்து வெளியில் வந்தவனுக்கு மனமும், உடலும் தளர்ந்து போயிருந்தது... அதனால் அவனது நடை கூடச் சற்றுத் தள்ளாடியது... தனது வாகனத்தின் மீது சிறிது நேரம் சாய்ந்து நின்றவன் பிறகு தன்னைச் சமாளித்துக் கொண்டு அதைக் கிளப்பினான்...

அவனுக்கு இருக்கும் மனநிலையில் வீட்டிற்குச் செல்ல பிடிக்கவில்லை... மனைவியைக் காணாது தவித்த தவிப்பு அடங்காது படபடவெனத் துடிக்கும் இதயத்தைச் சமாதானப்படுத்தும் வழி தெரியாது தவித்தவன் தனது வாகனத்தை நேரே அவளும், அவனும் வாழ்ந்த அந்த அடுக்குமாடி குடியிருப்புக்குச் செலுத்தினான்...

நான்காவது மாடியில் இருக்கும் அவனது வீட்டிற்கு மின்தூக்கியில் செல்லாமல் படியேறிச் சென்றான்... அப்படிச் செல்லும் போது அவனது கண்கள் அவனையும் அறியாது இரண்டாவது மாடியில் இருந்த அவளது வீட்டினை நோக்கி சென்றது... அதில் தொங்கிய பூட்டினை பார்க்கும் போது மனதில் சொல்லொண்ணா வேதனை எழுந்தது...

அன்றைய நாளுக்குப் பின் தேவி அந்த வீட்டினை காலி செய்துவிட்டு போய்விட்டாள் என்பதினை அவன் அறிந்து தான் இருந்தான்... நினைத்த காரியம் வெற்றி பெற்ற பின் அவளுக்கு அங்கு என்ன வேலை... அதை நினைத்தவன் விரக்தியுடன் தனக்குள் சிரித்தபடி மாடியேறினான்...

எப்போதும் அவனிடத்தில் ஒரு சாவி இருக்கும்... அதே போல் பூவாயி பாட்டியிடமும்... அவன் இல்லாத நேரத்தில் வீட்டை சுத்தப்படுத்தி வைப்பதற்காக அவரிடம் ஒரு சாவியைக் கொடுத்து வைத்திருந்தான்...

வீட்டின் கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைந்தவனை ஆள் அரவமற்ற வீடு வெறுமையாக வரவேற்றது... இதோ இந்தச் சோபாவில் தானே அவனும், அவளும் சந்தோசமாய்ப் பேசி சிரித்தது... அது மட்டுமா இதே சோபாவில் தானே அவளோடு... எங்கேங்கோ சென்ற நினைவலைகளைக் கட்டுப்படுத்துவதற்குள் அவன் ஒருவழியாகி போனான்...

ஒருவாறு தன்னைத் தேற்றிக் கொண்டு தனது அறைக்கு நுழைந்தவன் அங்கிருந்த மின்விளக்கை போட்டுவிட்டுத் திரும்பிய போது இனிமையாக அதிர்ந்து போய் நின்றான்...

காரணம் அவனது மனையாள் ஒரு பூவை போல் அவனது கட்டிலில் சுகமாய் உறங்கி கொண்டு இருந்தாள்...

அவளைக் கண்டதும் அத்தனை நேர மனக்கிலேசம் மறைந்து கண்களில் நீர் சுரக்க அவளின் அருகே சென்றான்...

கைகள் நடுங்க அவளது தலையை வருடி கொடுத்தவன், "கொஞ்ச நேரத்தில் என்னை இப்படிப் பைத்தியக்காரன் மாதிரி புலம்ப விட்டுட்டியே தேவிம்மா..." முணுமுணுத்தவன் அவளது நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டான் அவளது உறக்கம் கலையாதபடி...

அத்தனை தூரம் தன்னைத் தவிக்கச் செய்தவள் மேல் ஏனோ அவனுக்குக் கோபம் வரவில்லை... அவனைப் பொருத்தவரையில் அவள் பாதிக்கப்பட்ட ஒரு குழந்தை போல் தான் தெரிந்தாள்... அது என்ன மாதிரியான பாதிப்பு என்று தான் அவனுக்கு இன்னமும் தெரியவில்லை...

அவனது மனதில் முன்பு இருந்த தவிப்பு போய் இப்போது மகிழ்ச்சி குடி கொண்டது... அந்தச் சந்தோசத்துடன் அறையை விட்டு வெளியில் வந்தவன் தனது அன்னைக்கு இருவரும் இங்கு இருக்கும் விசயத்தைக் கூறிவிட்டுக் காலையில் வீடு திரும்புவதாகச் சொல்லிவிட்டு, அடுத்து அந்தக் காவல்துறை அதிகாரிக்கும் அழைத்து விசயத்தைக்

கூறிவிட்டு நன்றி கூறி வைத்தவன் மீண்டும் அறைக்குள் வந்தான்...

ஏசியை உயிர்ப்பித்து விட்டு மனையாளுக்குப் போர்வையைப் போர்த்திவிட்டு தானும் அவள் அருகில் இருந்த இடத்தில் படுத்தான்... ஆனாலும் அவள் அருகே சென்று படுக்கவில்லை... ஏனோ அப்படி உரிமையோடு படுக்க அவனது மனம் ஒத்து கொள்ளவில்லை... இனி அவளாகத் தான் அவனது காதலை புரிந்து கொண்டு வர வேண்டும் என்று எண்ணினான் போலும்...

மனையாளின் மலர் முகத்தைப் பார்த்துக் கொண்டே எப்போது உறங்கினான் என்று அவனுக்கே தெரியாது...

ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த போது மெல்லிய முனங்கல் சத்தம் கேட்டு அவன் கண் விழித்தான்...

தேவி தான் ஏதேதோ பிதற்றியபடி உடலை முறுக்கி கொண்டு புலம்பி கொண்டு இருந்தாள்...

"தேவிம்மா... என்ன செய்யுது...?" அவன் பதற்றத்துடன் அவள் அருகில் வந்து அவளைச் சமாதானப்படுத்த முயன்றான்...

அவனது தொடுகையோ இல்லை அவனது குரலோ ஏதோ ஒன்று அவளை அப்படியே அமைதிப்படுத்தியது... மெல்ல அலைப்புறுதல் குறைந்து அவள் அமைதியாகி உறங்கவும் அவன் அவளை விட்டு விலக முயல அவளோ அவனது கையை விடாமல் பற்றியபடி உறக்கத்தில்,

"நாகா..." என்று முணுமுணுத்தவள் அவனது கைகளில் தலை சாய்த்து உறங்கி போனாள்...

அந்த ஆழ்ந்த உறக்கத்திலும் தன்னை உணரும் அவளின் மனது அவனுக்கு அப்போது தான் நன்கு புரிந்தது... அவள் மனதில் தான் எந்தளவுக்கு ஆழமாய்ப் பதிந்து இருக்கிறோம் என்பதை உணர்ந்தவன் சந்தோசமாய் அவளை நெருங்கி அமர்ந்து அவளைத் தனது நெஞ்சில் சாய்த்துக் கொண்டு தலையை வருடி கொடுத்தான்...

மனதிற்குப் போட்டு இருந்த கட்டுப்பாட்டை அவளுக்காகச் சற்றுத் தளர்த்திக் கொண்டான்... அந்தக் கட்டுப்பாடே அவளது காதலுக்காகத் தானே... இப்போது அது தெரிந்த பின் இன்னும் எதற்கு அந்தக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும்...

கணவனின் அருகாமையில் அவள் நன்கு ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்ந்தாள்...

அதிகாலையில் தேவி விழிக்கும் முன் எழுந்தவன் தன்னைச் சுத்தபடுத்திக் கொண்டு அவள் தூக்கம் கலையாத வண்ணம் மெதுவே அறையை விட்டு வெளியில் வந்தவன் சமையலறை சென்று ஃபிளாஸ்க்கை எடுத்துக் கொண்டு வெளியில் சென்றான்...

தனக்கும் அவளுக்குமாய்ப் பால் வாங்கி வைத்து விட்டு மனைவி எழுவதற்காகக் காத்திருந்தான்...

அடுத்த ஒரு மணி நேரத்தில் எழுந்த தேவி அருகில் அமர்ந்திருந்த கணவனைக் கண்டு திடுக்கிட்டவளாய் விழி விரிய அவனைப் பார்த்தபடி அசையாது அமர்ந்திருந்தாள்...

"என்ன அப்படிப் பார்க்கிற...? அத்தான் என்ன அம்புட்டு அழகாவா இருக்கேன்..." குறும்பாய் கண்சிமிட்டியவனைக் கண்டு அவளது மனம் இயல்பு நிலைக்குத் திரும்ப அவனை முறைத்துக் கொண்டு எழுந்தவள் குளியலறைக்குள் சென்று மறைந்தாள்...

அவனது குறும்பு சிரிப்பு கேலியாய் அவளைத் துரத்தியது...

குளியலறைக்குள் நுழைந்ததும் அவளது மனம் படபடவென அடித்துக் கொண்டது...

தன்னைக் காணாது தேடி இருப்பானோ...? அதை நினைக்கும் போது தான் நேற்று அவனது அழைப்பை தான் எடுக்காதது அவளது ஞாபகத்தில் வந்தது... எடுத்து பேசி இருக்கலாமோ என்று நினைவு எழுவதை அவளால் தடுக்க முடியவில்லை...

அவனைக் கண்டு சிறிது பரிதாபம் கூட எழுந்தது... எல்லாம் கொஞ்ச நேரம் தான்... எப்போதும் ஆணை கண்டால் வெறுக்கும் அவளது மனமோ, 'இது அவனாகத் தேடி கொண்ட வினை... அதற்கு நான் என்ன செய்ய முடியும்...?' என்று மறுபடியும் முறுக்கி கொண்டது...

முகம் கழுவி கொண்டு வெளியில் வந்தவளை கையில் பால் தம்பளருடன் நாகா எதிர் கொண்டான்...

"எனக்குப் பால் பிடிக்காது..." வேண்டும் என்றே அவனை வெறுப்பேற்ற எண்ணி அவள் முகத்தைச் சுளித்துக் கொண்டு சொல்ல...

"ம்ஹூம்... அப்படியா...?" என்றவன் அந்தத் தம்பளரில் இருந்த பாலை லேசாக உறிஞ்சி ஒரு மடக்கு குடித்து விட்டு மீண்டும் அதை அவள் புறம் நீட்டியவன்,

"இப்போ உனக்கு ரொம்ப ரொம்பப் பிடிக்குமே..." கேலி குரலில் கேட்டவனைக் கண்டு அவளது உள்ளம் தடதடத்தது...

அவனுடன் கூடி களித்த நாட்களின் நினைவுகள் அவளையும் அறியாமல் அவளது நெஞ்சில் சுகமாய் எழுந்து அவன் மீதான மயக்கத்தில் அவளை ஆழ்த்தியது...

அவன்பால் நழுவி செல்ல முயன்ற மனதை முயன்று தனது கட்டுக்குள் கொண்டு வந்தவள், "அன்று அமிர்தமாக இருந்தது... ஆனால் இன்று விசமாக இருக்கு... உங்க எச்சில் பால் எனக்கு வேண்டாம்..." முகத்தில் அடித்தார் போன்று அவள் சொன்னது கேட்டு அவனது முகம் சுருங்கி போயிற்று... அமைதியாக அறையை விட்டு வெளியேறினான் அவன்...

ஒன்றும் பேசாது அவன் செல்வதைக் கண்டு அவளுள் பெரும் துக்கம் எழுந்தது...

'போயும் போயும் என்னைப் போன்ற ஒருத்தியை ஏன் திருமணம் செய்தீங்க...?' மனதுக்குள் சத்தமாய் அழுதாள் அவள்...

மெல்ல தன்னைச் சமாளித்துக் கொண்டு அறையை விட்டு வெளியில் வந்தாள் அவள்... சோபாவில் அமர்ந்தபடி கையில் இருந்த பால் தம்பளரை வெறித்துப் பார்த்துக் கொண்டு இருந்த கணவனைக் கண்டதும் மனதுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது...

அதே சமயம் தானாய் வலிய வந்து துன்பத்தை வரவழைத்துக் கொள்ளும் அவனைக் கண்டு கோபமும் எழுந்தது...

அவன் முன் இருந்த மேசை மீது இருந்த மற்றொரு பால் தம்பளரை எடுத்துக் கொண்டு அவன் முன் அமர்ந்தாள் அவள்...

அதை ஒரு மடக்கு பருகி விட்டு அவள் அமர்த்தலாக அவனைப் பார்க்க... அவனோ அடக்கப்பட்ட சிரிப்புடன் அவளையே பார்த்திருந்தான்... இத்தனை நேரம் இருந்த அவனது வருத்தம் துணி கொண்டு துடைத்தது போல் சுத்தமாய் மறைந்திருந்தது...

வருத்தமாய் இருப்பான் என்று பார்த்தால் இவன் நம்மைக் கேலி செய்து சிரிக்கிறானே என்று கோபம் எழ,

"இப்போ எதுக்கு இப்படிப் பல்லை காண்பிக்கிறீங்க...?" பல்லை கடித்துக் கொண்டு அவள் கேட்க...

"அதுவும் என் எச்சில் பால் தான்..."

அவனது வார்த்தையில் அவள் 'ஙே' என்று விழிக்க...

"நான் குடித்து விட்டு வைத்தது..." என்று அவன் சேர்த்து சொல்ல, அதைக் கேட்டு அவனை முறைக்க முயன்றவள் அது முடியாமல் தனது பார்வையைச் சுவற்றுப் பக்கமாய்த் திருப்பிக் கொண்டு,

"அதான் கொஞ்சம் கசந்ததோ...? பரவாயில்லை..." என்று கெத்தாய் சொன்னவள் மீதியை பருக ஆரம்பித்தாள்...

அவளது செய்கையை ஒரு விசித்திர புன்னகையுடன் பார்த்துக் கொண்டே அவனும் கையிலிருந்த பாலை

பருகினான்...

அவள் குடித்து முடித்ததும் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு அவன் சமையலறைக்குச் சென்ற போதும் அவள் அவன் பின்னால் எழுந்து செல்லாமல் அழுத்தமாய் அமர்ந்திருந்தாள்...

அதைக் கண்டு அவன் அவளைத் திரும்பி பார்க்க, அதே நேரம் அவளும் அவனைத் தான் பார்த்துக் கொண்டு இருந்தாள்...

இருவர் மனதிலும் ஒரே எண்ணம் தான் ஓடியது...

பாத்திரங்கள் கழுவுகிறேன் பேர்வழி என்று ஒருவர் மீது மற்றவர் நீரை வாரியிறைத்து விளையாடிய அந்த மகிழ்ச்சியான தருணங்கள் இருவர் கண்முன் வந்து நிழலாடியது...

உண்மையில் அவனுடன் இருந்த அந்த மணித்துளிகள் அவளது வாழ்க்கையில் மிகவும் மகிழ்ச்சியாக இருந்த தருணங்கள் தான்... அது இல்லை என்று மறுப்பதற்கு இல்லை...

கடமை பொருட்டு அவனை மயக்க வந்தவள் அவனிடத்தில் மயங்கி போனது தான் விந்தையிலும் விந்தை...

ஆனாலும் அவளை மாதிரி ஒரு பெண்ணுக்கு இந்த மயக்கம் அவசியம் தானா என்று அவளது மனசாட்சி தினந்தோறும் கொன்று கொண்டு இருப்பது அவளுக்கு மட்டும் தான் தெரியும்... அதுவும் நேற்று திருமணமானதில் இருந்து அது இன்னமும் அதிகரித்துப் போய்விட்டது...

ஆணான கணவனுக்கு அவளின் தவிப்பு எங்கே புரிய போகிறது...? அப்படியே புரிந்தாலும் காதல் அது இதுவென்று எதையாவது சொல்லி அவளின் மனதை மாற்றத்தான் முயலுவான்...

என்ன தான் மனதை மாற்றினாலும், தேற்றினாலும் அவள் மனதின் காயத்தை யாராலும் மாற்ற இயலாது...

மனதின் ரணம் நினைவில் எழுந்ததும் கணவனது முகத்தைப் பார்க்க பிடிக்காது தனது முகத்தை அவள் திருப்பிக் கொள்ள... என்றும் போல் இன்றும் அவள் மனதில் என்ன இருக்கிறது என்பதை அறியாதவனாய் ஒரு பெருமூச்சுடன் அவன் உள்ளே சென்றான்...

எல்லாவற்றையும் கழுவி வைத்து விட்டு வந்தவன் நேரே அவளிடம் சென்று, "கிளம்பு... போகலாம்..." என்க...

"நான் வரலை..." என்றாள் மொட்டையாக...

"ஏன்...?" அவனது கண்கள் சுருங்கியது...

"உங்கம்மா எதையாவது சொல்லிக்கிட்டே இருக்காங்க... நேத்துக் காலையில் கூட யாரை மயக்க கிளம்பிட்டேன்னு என்னைக் கேட்கிறாங்க... இப்படித் தினமும் என்னால் சித்ரவதை அனுபவிக்க முடியாது... நான் இங்கேயே இருக்கேன்... நீங்க வேணா உங்க வீட்டுக்கு போங்க..." என்றாள் அவனின் முகத்தைப் பார்க்காது...

'ஓ... அம்மா பேசியதால் வந்த கோபம் தானா இது...?' மனதுக்குள் நினைத்தவனுக்கு இந்த மட்டிலும் அவள் வேறு எங்கும் போகாமல் அவர்கள் இருவரும் வாழ்ந்த வீட்டிற்கே வந்தது மிகவும் சந்தோசமாக இருந்தது...

அப்படி என்றால் அவள் இந்தத் திருமணப் பந்தத்தை மதிக்கிறாள் என்று தானே அர்த்தம்...

மனம் லேசாக அவள் அருகில் அமர்ந்தவன் அவளின் கையைப் பிடிக்க வர, அவளோ அவனை விட்டு விலகி அமர்ந்தாள்...

"நேத்து முழுவதும் இங்கே தான் படுத்து தூங்கிட்டு இருந்த..." என்று தனது நெஞ்சை நீவி விட்டவன்,

"இப்போ என்ன வந்தது...?" ஒற்றைப் புருவத்தை உயர்த்தி அவன் கேட்ட போது அவளது முகம் செக்கச்செவேல் என்று சிவந்து போனது...

அதை அவனிடம் காட்ட இயலாமல் தலையைக் குனிந்து கொண்டாள்...

"இங்கே பார் ஸ்வீட்டி... எனக்கு நீ எந்தளவுக்கு முக்கியமோ... அதே அளவு என்னைப் பெத்தவங்களும் எனக்கு முக்கியம்... நீ இங்கேயும், அவங்க அங்கேயுமா இருந்துட்டு நான் ரெண்டு பக்கமும் பந்தாடப்படுறது எனக்குப் பிடிக்கலை... இருபத்துமூணு வருசம் எங்கம்மா, அப்பாவை பிரிஞ்சு நான் வாழ்ந்தாச்சு... இனியாவது அவங்க கூடச் சந்தோசமா வாழணும்ன்னு நான் நினைக்கிறேன்..."

அவன் சொன்னது கேட்டு அவளது மனதில் சுருக்கென்று ஒரு வலி எழுந்தது... அன்னையைப் பிரிந்து அவள் அவலப்பட்ட வலி அவளுக்கும் தெரியும் தானே...

"உங்க சந்தோசத்திற்கு நான் ஒண்ணும் குறுக்கே வரலையே... நீங்க அங்கேயே கூட இருந்துக்கோங்க... எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை... ஆனா நான் அங்கே வர மாட்டேன்..."

"என்னோட சந்தோசம் நீ தான்னு சொல்றேன்... அது உனக்குப் புரியலையா...? இல்லை புரியாத மாதிரி நடிக்கிறியா...?"

அவனது உரத்த குரலில் அவனை ஏறிட்டு பார்த்தவள் விழிகளில் என்ன இருந்தது என்று அவனுக்குச் சத்தியமாகத் தெரியவில்லை...

'நான் உங்க கூட இருந்தா உங்க சந்தோசம் போயிரும்... அது உங்களுக்குப் புரியலையா...?' ஊமையாய் கதறிய அவள் மனதின் ஓலம் அவனின் காதில் விழவில்லை...

"நான் நடிக்க எல்லாம் இல்லை... எனக்கு இந்தக் கல்யாண வாழ்க்கை பிடிக்கலை... உங்க கூட வாழ்றது பிடிக்கலை... என்னை இப்படியே விட்டுருங்க... இல்லை டிவோர்ஸ் கொடுத்துடுங்க... அது தான் எனக்கு நிம்மதி..."

ஏறக்குறைய கத்தியவளை கண்டு அவன் அதிர்ந்து தான் போனான்...

நேற்று முழுவதும் கிளிப்பிள்ளைக்கு எடுத்து சொல்வது போல் சொல்லியும் அவள் இப்படிப் பேசுவது கண்டு அவனுக்கும் கோபம் வந்தது...

"ஏய்... இங்கே என்னைப் பாரு..." அவளின் தோள்பட்டையை இரு கைகளால் பற்றித் தன் புறமாய் வலுக்கட்டாயமாய்த் திருப்பியவனின் திருப்பலில் அவளுக்கு அப்படி ஒரு வலி எழுந்தது...

"ம்ப்ச்..." என்று முனங்கி கொண்டே அவனைப் பார்த்தாள்...

"எங்கே என் கண்ணைப் பார்த்து சொல்லு... என்னை உனக்குப் பிடிக்கலை... என்னை நீ காதலிக்கலை..."

அவனது வார்த்தையில் அவனது விழிகளை நேருக்கு நேர் சந்தித்தவள் பிரம்மை பிடித்தார் போன்று அப்படியே சிலையாய் சமைந்து தான் போனாள்...

அவள் இந்தளவுக்கு உதாசீனப்படுத்தியும் அவன் கண்ணில் கண்ட கரை காணாத காதலில் அவளது வாய் பேச்சற்று மௌனமாகி போனது...

ஆனால் இந்தக் காதல் நல்லதுக்கு இல்லையே... இதை யார் அவனிடத்தில் எடுத்து சொல்வது...

அவனது பார்வையைச் சந்திக்க முடியாமல் தலையைக் குனிந்தவள், "எனக்கு யாரும் வேண்டாம்... என்னைத் தனியா விட்டுருங்க..."

நேற்று அவள் எடுத்த உறுதிமொழியைக் கிளிப்பிள்ளை போல் திரும்பத் திரும்ப அவனிடத்தில் ஒப்புவித்தாள்...

இப்போதும் அவளால் அவனைப் பிடிக்கலை என்றோ, காதலிக்கவில்லை என்றோ கூற முடியவில்லை...

நேற்று வரை அந்த வார்த்தைகளை அவள் கூறிக் கொண்டு தான் இருந்தாள்... ஆனால் இன்று ஏனோ அதைச் சொல்ல

முடியவில்லை... ஏனெனில் நேற்றில் இருந்து காதலின் முழு அர்த்தத்தையும் அவள் உணர்ந்து இருந்தாள் என்றால் அது மிகையில்லை...

அவனுடன் ஈருடல் ஓருயிராய் பழகும் போது எல்லாம் தோன்றாத காதல் இப்போது அவளது மனதில் தோன்றி அவளை எந்த ஒரு முடிவும் எடுக்க விடாமல் தடுத்தது... அதே சமயம் அவனை நெருங்கவும் அவளால் முடியவில்லை... ஒருவித குற்றவுணர்வு அவளைக் கொன்று கொண்டு இருந்தது கொஞ்சம் கொஞ்சமாய்...

"நீ எல்லாம் நல்லவிதமா சொன்னால் கேட்க மாட்ட... உனக்கு எல்லாம் அதிரடி தான் சரியா வரும்..." என்றவன் பேச்சு முடிந்தது போல் எழுந்து நின்று தனது வலக்கரத்தால் அவளைப் பிடித்துத் தூக்கி நிறுத்தினான்...

மெல்லிய தேகமுடையாள் அவனின் வலிமை மிகு செயலில் தன்னிச்சையாய் எழுந்தவள் நிற்க முடியாமல் தடுமாற, வேறுவழியின்றி அவனது தோளை கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள் கீழே விழாமல் இருப்பதற்காக...

அது சாக்கு என்று அவளது இடையோடு அணைத்து பிடித்தவன் அவளை அழைத்துக் கொண்டு கதவை நோக்கி நடந்தான்...

"நான் வரலை..." அவனை மறுக்கும் தைரியம் இல்லாமல் மெல்லியதாய் ஒலித்தது அவளது குரல்...

அவளைத் திரும்பி பார்த்து முறைத்தவன், "நீ வந்து தான் ஆக வேண்டும்..."

"இப்படி வலுக்கட்டாயமா நீங்க என்னைக் கூட்டிட்டு போறதுக்கு நீங்க நல்லா அனுபவிப்பீங்க..." என்றவளை தீர்க்கமாய்ப் பார்த்தவன்,

"எதை என்றாலும் நான் தாங்கி கொள்வேன்... நீ என்னுடன் இருந்தால் போதும்... அது என் உயிர் போவதாய் இருந்தாலும் கூட..."

அவனது வார்த்தையில் அவள் திடுக்கிட்டு போய் அவனைப் பார்த்தாள்...

"என்ன...?" அவன் கேட்டதும் தனது முகபாவனையை மாற்றிக் கொண்டாள் அவள்...

அதைத் தான் இனி அவள் செய்யப் போகிறாள் என்று அவன் அறிந்தால்...??? மனதுக்குள் பயப்பந்து உருள ஆரம்பித்தது அவளுக்கு...

தான் என்றுமே அவனுக்கு நல்ல மனைவியாய் நடக்க முடியாது என்கிற நிதர்சனத்தை உணர்ந்தவள் விழிகளிலோ கண்ணீர் ததும்பியது...

மேலே செல்ல முடியாமல் அவளது நடை தேங்கி நிற்க,

"இன்னும் என்ன...?" அவனது உறுமலில் மருண்டு விழித்தவள்,

"என்னோட ஹேண்ட்பேக்..."

அதில் அவள் மேலிருந்த கையை எடுத்தவன், "போய் எடுத்து வா..." என்க...

தளர்ந்த நடையுடன் அவள் படுக்கையறையை நோக்கி சென்றாள்... அவளின் ஓய்ந்து போன தோற்றத்தை கண்டவன் மனதில் மிகுந்த வேதனை எழுந்தது...

'ஏன் தேவிம்மா என்னைப் புரிந்து கொள்ள மாட்டேங்கிறாய்...?' மனதில் எழுந்த கேள்வியை மனதிலேயே போட்டு புதைத்துக் கொண்டான் அவன்...

படுக்கையறைக்குள் நுழைந்தவள் கண்ணில் அங்கிருந்த கட்டில் விழ, அதில் அவனும் அவளும் காதலாய் கூடிய காட்சிகள் மனதில் எழுந்து மிகுந்த வேதனையை அளிக்க அதற்கு மேல் நிற்க முடியாமல் சுவற்றில் சாய்ந்து நின்று கண்களை இறுக மூடி கொண்டாள் அவள்...

அவளது கண்களில் இருந்து கண்ணீர் கரகரவென வழிந்தது... பிரகாஷிற்காக என்று நாகாவை வீழ்த்த

எண்ணி திட்டம் தீட்டியவள் கடைசியில் இப்படி அவளே அவனிடத்தில் வீழ்ந்து போவாள் என்று கனவிலும் நினைக்கவில்லை...

காதலில்லாமல் சதிக்காகத் தான் அவனுடன் கூடியதாக எண்ணிய கூடல்கள் எல்லாம் இப்போது காதலாய்ப் பூதகரமாக எழுந்து அவள் கண்முன் தோன்றி அவளைப் பார்த்து எள்ளி நகையாடியது...

ஆண்களை வெறுக்கும் அவள் எப்படி அவனிடம் மட்டும் காதலில் வீழ்ந்து போனாள்... இந்த நொடி வரை அது அவளுக்குப் புரியவில்லை... புரியவும் வேண்டாம்... புரிந்தால் அந்த எண்ணமே அவளை உயிரோடு கொன்றுவிடும்...

"தேவிம்மா..." கணவனது அழைப்பில் அவசரமாய்க் கண்களைத் துடைத்தவள் படுக்கைக்குப் பக்கத்து மேசையில் இருந்த கைப்பையை எடுத்துக் கொண்டு வெளியில் வந்தாள்...

என்ன தான் கண்களைத் துடைத்த போதும் அவளது அழுத விழிகள் அதை அப்படியே அவனிடத்தில் காட்டி கொடுத்தது...

அவள் அழுதிருப்பது அவனை இன்னமும் அதிகமாய் வேதனைப்படுத்தியது...

"போகலாம்..." ஜீவனே இல்லாது சொன்னவளை கண்டு அவனது ஜீவன் மடிந்து தான் போனது...

"தேவிம்மா..." ஒற்றை வார்த்தையில் உயிரை தேக்கி அழைத்தவனின் அழைப்பு அவளது உயிரில் கலந்து அவளது மேனியில் ஒருவித சிலிர்ப்பை உண்டாக்கியது...

நேற்று மாலையில் இருந்து அவனது நினைவுகள் அவளுள் எழுப்பிய குளுமையான சிலிர்ப்பை போல்...

"நாகா..." எதையோ சொல்ல வந்ததைப் போல் அவளது உதடுகள் துடித்தது... ஆனால் வார்த்தைகள் தான் ஒலி

வடிவம் பெறாமல் நலிந்து போனது...

"என்னோடு வருவது உனக்கு அந்தளவுக்குக் கஷ்டமா இருக்கா...? நான் என்ன அவ்வளவு கொடுமைக்காரனா...?"

அவனது வார்த்தையில் அவளது இதயப்பூட்டு அவிழ்ந்தது...

"நாகா..." என்றபடி உடைந்து போனவளாய் அவனது தோள் சாய்ந்தாள் அவள்...

ஆறுதலாய் அவளை அணைத்து கொண்டவன் அமைதியாய் சில நொடிகள் நின்றிருந்தான்...

"நான் உங்களுக்கு வேண்டாம் நாகா..."

திரும்பவும் பழையைப் பல்லவியைப் பாடியவளை கண்டு அவனுக்கு ஆற்றாமையாக இருந்தது... ஆனாலும் தனது மனதினை கட்டுப்படுத்திக் கொண்டவன்,

"ஆனால் எனக்கு நீ வேண்டுமே..." காதலோடு சொன்னவனை நிமிர்ந்து பார்த்தவள்,

"நான் ரொம்ப ரொம்பக் கெட்டவள் நாகா... நான் பாம்பை விட மிகவும் மோசமானவள்..." உள்ளர்த்தத்துடன் பேசி தன்னை அவனுக்குப் புரிய வைக்க முயன்றாள்...

ம்ஹூம், எங்கே...? அவனுக்கு அது புரிந்தால் தானே...?

"என்னைப் பொருத்தவரையில் நீ மிகவும் நல்லவள்... எனக்கு எந்தக் கெடுதலும் உன்னால் வராது... அதில் எனக்கு மிகுந்த நம்பிக்கை இருக்கு..."

உறுதியாய், நம்பிக்கையாய் சொன்னவனின் பேச்சில் அவள் என்ன புரிந்து கொண்டாளோ... அவளது முகம் பளிச்சென்று பூவாய் மலர்ந்தது...

"இது எந்தச் சந்தர்ப்பத்திலும் நீங்க மறக்க கூடாது..." பூடகமாகச் சொன்னவளை புதிராய் பார்த்தவன்,

"நான் சாகும் போதும் மறக்க மாட்டேன்... போதுமா..." அவன் சொல்லி முடிக்கும் முன் அவனது வாய் மீது கை வைத்து

தடுத்தவள்,

"அதற்கு முன் நான் செத்துவிடுவேன்..." என்றாள் முணுமுணுப்பாய்...

"என்ன...? என்ன சொன்ன...?" அவளது உதட்டுக்கு அருகில் தனது காதை கொண்டு வந்தபடி அவன் கேட்க...

"ஒண்ணுமில்லை..." என்றவள், "போகலாமா..." என்று கேட்க...

சம்மதமாய்த் தலையசைத்தவன் அவளைப் புரியாத பார்வை பார்த்தபடி வெளியில் வந்து வீட்டு கதவை பூட்டிவிட்டு அவளுடன் இணைந்து நடந்தான்...

வழியில் தென்பட்ட தெரிந்தவர்களிடம் எல்லாம் புன்னகை முகமாய்ப் பேசியபடி குடியிருப்பை விட்டு வெளியில் வந்து இரு சக்கர வாகனத்தை அவன் உயிர்ப்பிக்க, பின்புறம் ஏறிக் கொண்டு இயல்பாய் அவனது தோளில் கை வைத்துப் பிடித்துக் கொண்டாள் அவனது தேவி...

அவளது இயல்பான செய்கையில் அவன் முன்புற கண்ணாடி வழியாக அவளைப் பார்த்தான்... அவளோ மற்ற பக்கம் திரும்பி வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தாள்...

சுடும் சூரியனாய்த் தகிப்பதும், குளிர் நிலவாய் குளுமையாய் இருப்பதும் என்று இரு விதமாய்க் குணம் கொண்டு இருக்கும் அவனது மனைவி அவனுக்குப் புரியாத புதிராய் தெரிந்தாள்...

வாகனத்தைக் கிளப்பியவனுக்கு அப்போது தான் அந்தச் சந்தேகம் வந்தது...

"தேவி... நேத்து ஏன் நீ சொல்லாம கொள்ளாம இங்கே வந்து இருந்துட்ட... என்னோட ஃபோனையும் நீ எடுக்கலை... உன்னைத் தேடி நான் தவிச்சது எனக்குத் தான் தெரியும்..."

முன்புற கண்ணாடி வழியாக அவளைப் பார்த்துக் கொண்டு அவன் வருத்தத்தோடு கேட்க... அதை உணராத அவளோ நேற்றைய நினைவில் முகம் வெளிறி போனாள்... பயத்தில்

அவனது தோளை இன்னமும் இறுக பிடித்துக் கொண்டாள்...

அதை அவன் வேறு மாதிரியாக எடுத்துக் கொண்டான்...

"அம்மா பேசியது உன் மனசுக்கு கஷ்டமா இருந்ததா..."

அதில் திடுக்கிட்டு அவனது முதுகை வெறித்தவள் பின்பு, "ம்..." என்றாள்...

"இனி அம்மா அது மாதிரி எல்லாம் பேச மாட்டாங்க... நான் அவங்க கிட்ட சொல்லுறேன்..." தன்மையாக அவன் அவளைச் சமாதானப்படுத்தினான்...

அதற்கு அவள் ஒன்றும் பதில் பேசவில்லை... தனக்குள் எதையோ யோசித்தபடி அவள் அமர்ந்திருக்க, அவனும் வேறுவழியின்றி அதே அமைதியை கடைப்பிடித்தான்...

வீட்டிற்கு வந்ததும் சண்டைக்கு ஆயத்தமாய் இருந்த அன்னை துர்காவை, நாகா சமாதானப்படுத்தி விட்டு வரும் முன்னரே அவன் மனைவி அவர்களது அறையில் ஐக்கியமாகி இருந்தாள்...

வந்ததும் வராததுமாய்க் கட்டிலில் சுருண்டு படுத்துக் கொண்ட மனைவியைப் பார்க்கும் போது அவனுக்குப் பாவமாய் இருந்தது... ஏனெனில் அவள் ஓருயிர் இல்லையே... ஈருயிராய் அவனது உயிரையும் சேர்த்து அல்லவா அவள் சுமக்கிறாள்...

"டயர்டா இருந்தா இன்னைக்கு வேணா ஸ்கூலுக்கு லீவு போடுறியா...?"

அவளுக்குமே நிறைய யோசிக்க வேண்டியிருந்தது... அதனால் கணவன் கேட்டதும் சம்மதமாய்த் தலையாட்டினாள்...

அவளுக்கு உணவு எடுத்து வந்து கொடுத்து விட்டே அவன் தனது வேலையைப் பார்க்க சென்றான்... அதைக் கண்டு அவளுக்குக் கண்களைக் கரித்துக் கொண்டு வந்தது...

இந்தளவுக்கு அவள் மேல் காதலாய் இருப்பவனுக்கு அவள் இனி பரிசாக அளிக்கப் போவது எல்லாம் துரோகம் மட்டுமே...

அந்தத் துரோகத்தை எண்ணி எண்ணி நாள் முழுவதும் மனதை போட்டு உழட்டி கொண்டு இருந்தவளுக்கு அன்றைய நாளின் முடிவில் அவளது அடிவயிற்றில் இருந்து சுளீரென்று ஒரு வலி எழுந்து அவளை நிலைக்குலைய செய்தது...

அடிவயிற்றை அழுந்த பிடித்துக் கொண்டு, "அம்மா..." என்று அலறியவள் தனது உடலில் இருந்து ஏதோ ஒன்று சூடாய் வெளியேறுவதை அக்கணம் உணர்ந்தாள்...

அது என்ன என்று புரியாத அளவுக்கு அவள் ஒன்றும் சின்னக்குழந்தை இல்லை...

தனக்குள் நிகழ்ந்த மாற்றத்தை எண்ணி அவளுக்குக் கண்ணீர் தான் வந்தது...

"இந்தக் கேவலமான அம்மாவை உனக்கும் பிடிக்காமல் போய்விட்டதா என் கண்ணே..." என்று வயிற்றைப் பிடித்துக் கொண்டு கதறியழுதவளை தேற்றுவதற்குத் தான் அங்கு யாரும் இல்லை...

சதி தொடரும்...

அடக்க மாட்டாமல் மீண்டும் மீண்டும் அழுகை பொங்கியது தேவிக்கு... மறுபடியும் சுளீரென்ற வலி அடி வயிற்றில் இருந்து புறப்பட அப்படியே மடங்கிப் போய் அமர்ந்தவள் கண்களில் கண்ணீர் வழிந்தோடியது... உடலின் வலியை விட மனதில் ஏற்பட்ட வலி இன்னமும் அதிகமாய்த் தாக்க அவள் மனதளவில் மிகவும் தளர்ந்தே போனாள்...

ஆனாலும் இப்படியே அமர்ந்திருக்க முடியாது... தேகத்தில் பலத்தைக் கூட்டி மெல்ல எழுந்தவள் தனது உடைகளை எடுத்துக் கொண்டு குளியறைக்குச் சென்று சுத்தப்படுத்தி விட்டு வெளியில் வந்தவளின் அறிவு மருத்துவமனைக்குச் செல்ல சொல்லி அறிவுறுத்தியது... அதைச் செயல்படுத்த எண்ணி படுக்கையில் இருந்த தனது கைப்பையை அவள் எடுத்த நேரம் அதில் இருந்த அவளது கைப்பேசி அலறியது அவளின் மனதினை போல்...

கணவனாக இருக்குமோ என்று ஆவல் எழ அந்த நிலையிலும் அதை அவசரமாய் எடுத்தாள்... அதன் திரையில் தோன்றிய எண்ணை கண்டதும் அவளது முகம் இறுகி போனது... அதை எடுக்காமல் வெறித்துப் பார்த்தாள்...

இப்போது உடல் மற்றும் மனம் இரண்டின் வலியும் அதிகரிக்கப் பல்லை கடித்துக் கொண்டு கட்டிலில் அமர்ந்தவள் வேறுவழியின்றி அந்த அழைப்பை ஏற்றாள்... அதை எடுக்காவிட்டால் ஏற்படும் விபரீதங்களை அவள் நன்கு அறிவாள்...

"என்ன நான் சொன்னதுக்குச் சம்மதா...?" கரகரப்பாய் ஒலித்த ஆணின் குரலில் எதையோ நினைத்தவளின் இதயத்தில் இரத்தம் வழிந்தது...

முயன்று சமாளித்துக் கொண்டு, "சம்மதம்... ஆனால் எனக்குக் கொஞ்சம் அவகாசம் தேவை..." கொஞ்சமும் யோசிக்காது பதில் கூறினாள்...

சில நிமிடங்களுக்கு முன்பு வரை இரு மனதாய் உள்ளுக்குள் போராடி கொண்டு இருந்தவளுக்கு வயிற்றில் இருந்த இந்தச் சிசு கலைந்தது கூட நல்லதுக்கே என்று தான் இந்தக் கணம் தோன்றியது... இப்போது முழுமனதுடன் மனமுவந்து தான் அவள் இந்தத் திட்டத்திற்குச் சம்மதிக்கிறாள்... இனி அவளைக் கட்டுப்படுத்துவதற்குத் தான் யாரும் இல்லையே....

அப்படி அவள் எண்ணும் போதே கணவனின் காதல் ததும்பிய முகம் நினைவில் ஆடியது... மனதுக்குள் பெரும் துயரமாக இருந்தது... இதை எல்லாம் யோசித்தால் அவளால் செயல்பட முடியாது... அதனால் மனதை இரும்பை போல் இறுக்கமாய் வைத்து கொண்டாள்...

"இரண்டு மாதம் போதுமா...? அதற்கு மேல் நீ ஒரு நொடி தாமதித்தாலும் நான் நேரிடையாய் களத்தில் இறங்கிவிடுவேன்..." என்று அந்தக் குரல் மிரட்டிய தொனியில் அவளது உள்ளமும், உடலிலும் பதறியது வலிய அவள் அணிந்து கொண்ட இரும்பு கவசத்தை மீறி... அந்த மிரட்டலின் அர்த்தம் அவளுக்குத் தானே புரியும்...

ஆனாலும் அதை வெளிக்காட்டி கொள்ளாது, "போதும்..." என்று ஒற்றை வார்த்தையில் பதிலளித்தவள் அழைப்பேசியைத் துண்டித்து விட்டு எழுந்தாள்...

உடல் உபாதையோடு மனதில் வேறு பாரம் ஏறியதால் அவளால் நடக்கக் கூட முடியவில்லை... மெல்ல சுவற்றைப் பிடித்துக் கொண்டு நடந்து அறையை விட்டு வெளியில் வந்தவள் எப்படியோ கஷ்டப்பட்டு மாடிப்படி இறங்கி கீழே வந்தாள்... அதற்கு மேல் செல்ல அவளின் உடல் ஒத்துழைக்க மறுத்தது... கண்கள் இருட்டி கொண்டு வருவது போல் இருந்தது...

வரவேற்பறையில் இருந்த தனது மாமியாரை நோக்கி கையை நீட்டியவள், "அத்தை..." என்ற சொல்லோடு மயங்கி விழுந்தாள்...

முதலில் தேவி தன்னை அழைத்தது கண்டு முகத்தைச் சுளித்த துர்கா பின்பு அவள் மயங்கி விழுந்ததைக் கண்டு மனம் பதறியவராய் அவள் அருகில் ஓடி வந்தார்...

என்ன தான் இருந்தாலும் அவரும் ஒரு பெண் அல்லவா... அதுவும் பெண் குழந்தை இல்லாதவருக்குப் பெண்ணான அவளின் நிலை பதட்டத்தைக் கொடுத்தது... தேவி அவரது வீட்டிற்கு நுழைந்த முறை தான் தவறு என்று நினைத்தாரே ஒழிய, அவர் ஒன்றும் காதல் திருமணத்தை எதிர்க்கும் பிற்போக்கு சிந்தனையுடைய அம்மா கிடையாது...

"தேவி..." என்று அவளைத் தன் மடியில் போட்டுக் கொண்டு பதட்டத்துடன் அவளது கன்னத்தில் தட்ட...

அண்ணியைத் தொடர்ந்து அங்கே விரைந்து வந்த ரமா தான் அந்த விபரீதத்தை முதலில் கவனித்தார்...

"மன்னி... இங்கே பாருங்க... குழந்தை..." மேலே பேச முடியாமல் அவர் இரத்தப் போக்கை சுட்டிக்காட்ட...

அதைப் பார்த்த துர்காவிற்குத் தாங்கொண்ணா வேதனை எழுந்தது... கடைசியில் அவர் கறுவியது போல் வீட்டின் தலைச்சன் வாரிசு இப்படி உருக்குலைந்து போய்விட்டதே... மனதுக்குள் அத்தனை துக்கமாய் இருந்தது அவருக்கு... அதைத் தாங்க முடியாது அவரது கண்கள் கலங்கியது... என்ன தான் இருந்தாலும் அந்தக் குழந்தை அவரது அருமை மகன் 'அஜூ'வின் வாரிசு அல்லவா...

"மீரா... சீக்கிரம் காரை எடு... ஹாஸ்பிட்டலுக்குப் போகணும்..." ரமா தான் நிலைமையைக் கையில் எடுத்துக் கொண்டு துரிதமாகச் செயல்பட்டார்...

அடுத்த அரை மணி நேரத்தில் தேவி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாள்...

"மீரா... அஜூக்கு ஃபோன் பண்ணி விசயத்தைச் சொல்லிரு..." ரமா நியாபகப்படுத்தவும் மீரா நாகாவுக்கு அழைத்து விசயத்தைச் சொல்ல... அடுத்தச் சில

நிமிடங்களில் அவன் மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தான்...

"தேவி எப்படி இருக்கிறாள்...?" தவிப்புடன் கேட்ட மகனை கண்டு துர்காவிற்கு இரக்கமாய் இருந்தது...

"அஜூ... இப்படி ஆகிட்டதேடா..." கண்கள் கலங்கிய அன்னையைக் கண்டு அவனின் கண்களும் கலங்க துவங்கியது...

ஆனாலும் தன்னைத் தேற்றிக் கொண்டான்... தான் பதற்றம் கொள்ளும் நேரம் இதுவல்ல... தான் தன்னவளுக்கு அனுசரணையாக, ஆறுதலாக இருக்க வேண்டிய நேரம் இது என்பதை உணர்ந்தவனாய் மனதை தேற்றிக் கொண்டு அன்னையின் அருகில் அமர்ந்தான்...

"இந்தக் குழந்தை போனால் என்னம்மா...? எங்களுக்கு வயசும், காலமும் இருக்கு..." அவரின் கையைப் பிடித்து ஆறுதல் கூறினாலும் அவனின் குரலில் துக்கம் நிறைந்து தான் காணப்பட்டது...

"தேவி எப்படி இருக்கிறாள் அத்தை..." ரமாவிடம் அவன் கேட்க...

"ட்ரீட்மெண்ட் நடந்துக்கிட்டு இருக்குப்பா..." என்று மட்டும் அவர் சொன்னார்...

கண்களை மூடி கொண்டு நாற்காலியில் சாய்ந்தான் அவன்... மனதில் வருத்தம் இருந்த போதிலும் மனைவியின் மனநிலையை எண்ணி அவனுக்குச் சற்றுக் கலக்கமாக இருந்தது...

அடுத்து கடந்த ஒரு மணி நேரமும் அவனுக்கு நெருப்பில் நிற்பது போல் தகிப்பாய் இருந்தது... மனைவி கண் திறந்ததும் தான் அவனுக்குச் சற்று நிம்மதியாக இருந்தது...

கணவனைக் கண்டதும் அத்தனை நேரம் அடக்கி வைத்திருந்த கண்ணீர் நிற்காமல் பொங்கி வழிந்தது தேவிக்கு...

"த்ச்சு தேவிம்மா... இப்போ எதுக்கு அழுகை...? இந்தக் குழந்தை போனால் என்ன...? அடுத்தக் குழந்தையைச் சீக்கிரம் வரும் பாரேன்..." அவன் அவளை ஆறுதல் படுத்த...

கணவனைப் போன்று ஒரு ஆண் குழந்தை என்று நினைத்தவளுக்கு அந்த நினைவே தித்திப்பாய் இருந்தது... ஆனால் அதற்கான சாத்தியம் இருக்கிறதா...? இந்த ஜென்மத்தில் அது இல்லை என்று தான் அவளுக்குத் தோன்றியது...

அதிர்ஷ்டம் என்பதே அவளது வாழ்க்கையில் இல்லையா... நினைக்கும் போதே கண்கள் கரித்தது... அதற்கு மேல் தாங்க மாட்டாமல் கணவனை அணைத்துக் கொண்டு கதறிவிட்டாள் அவள்...

அவள் அளவு அவனால் வெளிப்படையாய் துக்கத்தைக் காட்ட முடியாத போதும் மனதளவில் அவளை விட அதிகத் துன்பத்தை அனுபவித்தான்... ஆனாலும் அவளுக்கு ஆறுதல் சொல்ல மறக்கவில்லை...

ஜனார்த்தனன், கோமளம், பிரகாஷ் மூவரும் அவளை வந்து பார்த்தனர்... நாகா பெரியவர்கள் இருவரிடமும் சாதாரணமாகப் பேசினாலும், பிரகாஷிடம் முகம் கொடுத்து பேசவில்லை...

மருத்துவமனையில் சிகிச்சை முடிந்து தேவி வீட்டிற்கு வந்து ஒரு வாரமாகி விட்டது... கண்ணின் இமை போல் அவளைப் பாதுகாப்பாய் பார்த்துக் கொண்டான் அவளது கணவன்...

அதைவிட மாமியாரிடத்தில் தோன்றிய மாற்றம் தான் அவளை வியக்க செய்தது... இந்த நிகழ்வுக்குப் பின் துர்கா அவளிடம் சற்று இணக்கமாகவே நடந்து கொண்டார்... இப்போது எல்லாம் அவர் அவளை அநாவசிய பேச்சுக்கள் பேசுவது கிடையாது...

வாழ்க்கை தங்கு தடையின்றிச் சுழலும் இயந்திரம் போல் அழகாய்ச் சுழன்றது...

அடுத்து வந்த சில வாரங்களில் ரமா தனது குடும்பத்தினருடன் அமெரிக்காவுக்குக் கிளம்பினார்... எல்லோரிடமும் விடைப்பெற்று கிளம்பும் போது மீரா நாகாவிடம் சொல்லிவிட்டு போக வந்தாள்...

அவன் பார்க்க வளர்ந்த பெண் அல்லவா அவள்... அந்த வாஞ்சை அவனது மனதில் என்றும் இருக்கும்... அதனால் பாசத்துடன் அவளின் தலையை வருடி அவளுக்கு விடை கொடுத்தவன்,

"பேபி... கூடிய சீக்கிரம் கல்யாண சாப்பாடு போட வேண்டும்..." அவளின் கன்னம் தட்டி அவன் சிரிக்க...

அதைக் கண்டு அவனின் மனையாளின் இரத்த அழுத்தம் ஏகத்துக்கும் எகிறியது... அவனோ அதை உணரவில்லை...

அத்தை குடும்பத்தை விமான நிலையம் சென்று வழியனுப்பி வைத்து விட்டு வந்தவனை உம்மென்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு இருந்த தேவி வரவேற்றாள்...

முதலில் அவன் அதைக் கவனிக்கவில்லை... பிறகு தான் அதைக் கவனித்தான்... தான் கேட்கும் கேள்விகளுக்கு ஒற்றை வார்த்தையில் பதில் சொன்னவளை கண்டு அவனது கண்கள் சுருங்கியது...

"என்னோட தேவிம்மாவுக்கு என்னவானது...?" சிரித்தபடி மனைவி அருகில் வந்து அவன் அமர்ந்தான்...

"அவள் உங்களுக்குப் பேபியா...?" கோபத்துடன் முறைத்துக் கொண்டு கேட்ட மனைவியைப் புரியாது பார்த்தவன்,

"யாரை சொல்ற...? நம்ம மீராவையா...?" என்றவனின் குரலில் வியப்பு வெளிப்படையாய்த் தெரிந்தது...

"நம்ம மீரான்னு என்னையும் ஏன் உங்க கூடக் கூட்டு சேர்த்துக்கிறீங்க...? அவள் உங்க மீரா..." அடக்கப்பட்ட கோபத்துடன் அவள் சொல்ல...

முதலில் அவளது கோபம் அவனுக்குச் சற்றும் புரியவில்லை... விவரம் தெரிந்த வயது முதல் வெளிநாட்டில் வளர்ந்து வந்தவனுக்கு அப்படி அழைப்பது ஒன்றும் தவறாகத் தோன்றவில்லை... அதுவும் மீரா அவனது அத்தை மகள்... அவன் கண் முன்னால் வளர்ந்த பெண் வேறு...

"எதுக்கு இந்தக் கோபம்...?" பின்புறமாய் அவளை அணைத்தவன் அவளது கழுத்து வளைவில் முகம் புதைத்தபடி கேட்க...

அவனது அருகாமை தேவியின் உணர்வுகளை எங்கேங்கோ பயணிக்கச் செய்தது... முயன்று அதற்குத் தடா போட்டவள்,

"பேபின்னு கூப்பிட்டு அவளது கன்னத்தை வேறு செல்லமா தட்டுறீங்களா...?" பக்கவாட்டில் திரும்பி அவனை முறைத்து பார்த்தாள்...

"ஹேய் ஸ்வீட்டி..." அவளது உரிமையான கோபத்தில் அவனது மனம் உல்லாசம் அடைந்தது...

அவளைத் தன் புறம் திருப்பியவன், "அவள் என் அத்தை மகள்... சின்ன வயசில் இருந்து ஒண்ணா விளையாண்டு வளர்ந்தவங்க நாங்க... இது எல்லாம் அங்கே சகஜம் தேவிம்மா..." என்று அவளைச் சமாதானப்படுத்தியவன்,

"ஆனால் சில விசயங்கள் மட்டும் என் மனைவிக்கு மட்டுமேயானது... அதாவது என் ஸ்வீட்டிக்கு மட்டுமேயானது..." என்றவனின் கைகள் அவளது தேகத்தில் ஊர்ந்து சென்று அவளுள் புதுவித மயக்கத்தை ஏற்படுத்தியது...

"இந்த மாதிரி வேறு எந்தப் பெண் கிட்டேயும் என்னால் விளையாட முடியாது... இந்த விளையாட்டை என் ஸ்வீட்டி கூட மட்டும் தான் நான் விளையாடுவேன்..."

சொல்லி கொண்டே மெதுவே அவளைத் தன்வசப்படுத்த முயன்றான் அந்தக் கள்ளன்... அவனின் வசிய செயல்

புரிந்தாலும் அதில் இருந்து மீளும் எண்ணம் இல்லாமல் அவளும் அவனில் மயங்கி கிறங்கி கண் மூடி இருந்தாள்...

"ஸ்வீட்டி... உன் கோபம் எல்லாம் போயிருச்சா..."

நியாயத்திற்கு அவன் தான் அவளிடத்தில் கோபம் கொள்ள வேண்டும்... ஆனால் அதை விட்டு விட்டு இப்படிக் கேட்பவனைக் கண்டு கண்களைத் திறந்தவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்...

எல்லையில்லா நேசத்துடன் தன்னைப் பார்த்துக் கொண்டு இருந்தவனைக் கண்டு என்றும் போல் இன்றும் மயங்கியது அவளது நெஞ்சம்...

"ம்... போயிருச்சு..." என்றவளை கூர்ந்து பார்த்தவன் அவளின் விழி வழியே அவளின் மனதினை படிக்க முயன்றான்...

மனைவி என்ன நினைக்கிறாள் என்று அவனுக்குச் சுத்தமாய்ப் புரியவில்லை... ஆனால் அவள் விழியில் வழிந்த காதல் மட்டும் நன்றாகப் புரிந்தது அவனுக்கு... எந்தப் புள்ளியில் அவளது கோபம் குறைந்தது என்று அவனுக்குத் தெரியவில்லை... எப்படி இருந்தாலும் அவள் இது போல் இணக்கமாய் நடந்து கொள்வது அவனுக்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது...

"அப்படின்னா நிரூபி பார்க்கலாம்..." சிரித்தபடி அவளைப் பார்த்தவனைக் கண்டு அவள் புரியாது பார்த்தாள்...

"எப்படி...?" என்று விழித்தவளை நோக்கி குனிந்தவன்,

"இப்படி..." என்றபடி அடுத்த நொடி அவளின் இதழை முற்றுகையிட்டான் தனது இதழ்களால்...

முதலில் திகைத்து திணறியவள் பின் அவனது கைகளில் வாகாய் அடங்கிப் போனாள்... காதல் இல்லாத போதே அவனின் மாயாஜாலத்தில் மயங்கியவள் இன்று மனதில் இருந்த காதல் அவளை உடல், பொருள், ஆவி என்று

அனைத்தையும் துறந்து அவனிடத்தில் அடைக்கலமாகச் சொன்னது…

என்றுமே அவன் தான் அவளிடத்தில் அவனது தேடலை தேடுவான்… இன்று அவளும் அவனுக்குச் சளைக்காமல் அவனிடத்தில் தனது தேடலை தேடி அவனைச் சந்தோசத்தில் திக்குமுக்காட செய்தாள்…

சும்மாவே அவளிடத்தில் மயங்கி இருப்பவன் இன்று அவள் காட்டிய இணக்கத்தில் கள்ளுண்ட வண்டாய் அவளுள் சுகமாய் மூழ்கி போனான்…

மீண்டும் மீண்டும் வேண்டும் என்றவளின் தாகத்தை அவனும் வற்றாத நதியாய்ச் சளைக்காமல் தீர்த்து வைத்தான்…

ஓய்ந்து களைத்து போய் இருவரும் பிரிந்ததும் அவன் அவளை அணைத்துக் கொண்டு உறங்கி விட, அவள் உறங்காமல் அவனைப் பார்த்துக் கொண்டு அப்படியே அமர்ந்து இருந்தாள்…

அவன் அருகில் நெருக்கமாய் அமர்ந்து அவனது தலையை வருடி கொடுத்தவள் அடுத்த நொடி அவனது முகத்தைத் தனது நெஞ்சோடு அணைத்து கொண்டாள்… தூக்கத்தில் அவனும் வாகாய் அவளுள் புதையுண்டான்…

'நாகா… ஐ லவ் யூ…' அவளது மனம் ஓயாது இந்த மந்திரத்தை ஜெபித்துக் கொண்டு இருந்தது…

மனதில் ஏதேதோ யோசனைகள் எழுந்து அவளைப் பெரிதும் பயமுறுத்தியது… யாருமே இல்லாத தீவில் அவள் மட்டும் தனித்து இருப்பது போல் ஒரு தோற்றம்… தனிமை மிகவும் கொடியதாக இருந்தது அவளுக்கு…

அவளது கைகள் தானாகக் கணவனை இறுக அணைத்துக் கொண்டது… இனி வரும் நாட்களில் கணவனைத் தனது அன்பில் குளிப்பாட்ட வேண்டும், அவனது அன்பில் தான் முற்றிலும் மூழ்கி முக்குளித்து எழ வேண்டும் என்கிற பேராவல் மனதில் எழுந்தது…

****************************

அதே போன்று அடுத்து வந்த நாட்கள் மிகவும் சந்தோசமாய்க் கழிந்தது நாகா மற்றும் தேவி இருவருக்கும்... சில நாட்களுக்கு முன் தன்னிடம் கோபம் கொண்ட மனைவி இவள் தானா என்று அவன் ஆச்சிரியப்படும் அளவிற்குத் தேவியின் மாற்றம் இருந்தது... அந்த மாற்றம் அவனுக்குப் பிடித்த விதத்தில் இருந்தது அவனுக்கு அத்தனை உவகையை அளித்தது...

அவன் அவளைச் சுற்றி வந்த காலம் போய், இப்போது எல்லாம் அவள் தான் 'நாகா, நாகா' என்று அவன் பின்னால் சுற்றி வந்தாள்...

அதைப் பார்த்துத் துர்கா கூட மகனை கிண்டல் செய்தார்...

"உன் பொண்டாட்டி பிழைச்சுக்குவாடா... அரச மரத்தை சுத்துறதை விடப் புருசனை சுத்தினா தான் குழந்தை வரம் கிடைக்கும்ன்னு நல்லாவே தெரிஞ்சு வச்சியிருக்கா..."

அவரது கேலியில் இளையவர்கள் இருவரின் முகமும் வெட்கத்தில் சிவந்து போய்விடும்... ஆனாலும் தேவி அவனிடத்தில் காட்டும் அன்பை மட்டும் குறைக்கவில்லை... அது இன்னமும் அதிகரித்துக் கொண்டு தான் போனது...

வீட்டிலும் மாமியார் மெச்சும் மருமகளாய் தேவி மாறிவிட்டாள்... இப்போது எந்தப் பிரச்சினையும் அவர்களிடையே எழவில்லை... அதனால் நாகாவை பொருத்தவரையில் அவனுக்கு வீடு சொர்க்கமாய் மாறிப் போனது... இப்போது எல்லாம் எப்போதடா வேலை முடியும் என்று நேரத்தோடு வீட்டிற்கு ஓடி வர ஆரம்பித்து இருந்தான் அவன்...

ஆனாலும் திகட்ட திகட்ட கிடைத்த இன்பம் கண்டு மனதுக்குள் சிறு பயம் இருந்து கொண்டே இருந்தது அவனுக்கு...

'இந்தச் சந்தோசம் காலம் முழுவதும் நிலைத்திருக்க வேண்டும் இறைவா...' என்று ஆண்டவனிடத்தில் வேண்ட

மட்டுமே அவனால் முடிந்தது...

அமைச்சர் மேகநாதனின் மருத்துவமனை, தொழில் இடங்களில் அதிகாரிகள் சோதனை நடத்தினர்... அதே போல் தான் மயில்வாகனத்தின் தொழிற்கூடங்களிலும்... அவர்களது தவறுகள் கண்டுப்பிடிக்கப்பட்டு நிரூபிக்கப்பட்டால் எல்லாமே நிரந்தரமாக மூடப்பட்டு விடும் அபாயகர நிலை இப்போது...

மயில்வாகனம் நண்பனை தேடி ஓடி வந்தார்...

"மேகா... இன்னும் ஏன் இப்படி அமைதியா இருக்க...? அந்த நாகாவை ஏதாவது பண்ணணும்டா...?" ஆத்திரத்தில் அவர் அறிவிழந்து கத்தினார்...

அவரை நிதானமாய்ப் பார்த்த மேகநாதன், "என் மேல் உனக்கு நம்பிக்கை இருக்கா இல்லையா...?"

"மேகா..." திகைப்பாய் நண்பனை அவர் பார்க்க...

"என் மேல் நம்பிக்கை வை... அவன் விசயத்தை நான் பார்த்துக்கிறேன்... இப்போ நாம அவன் மேல் கை வச்சா எல்லோரின் சந்தேகமும் நம் மீது தான் எழும்... அதனால் கொஞ்சம் அடக்க வாசிக்கணும் நண்பா... என் பையன் சாவுக்குக் காரணமான அவனை நான் அவ்வளவு எளிதில் சும்மா விட மாட்டேன்..."

கண்களில் பழிவெறி மின்ன கூறிய மேகநாதனை கண்டு மயில்வாகனத்திற்குச் சற்று திருப்தியாய் இருந்தது...

அன்று தான் நாகா தனது மனைவியை அழைத்துக் கொண்டு ஊட்டிக்குத் தேனிலவு சென்றுவிட்டு திரும்பி இருந்தான்... இப்போது எல்லாம் கடமையை விட மனைவி அவனைப் பெரிதும் கவர்ந்து இழுத்தாள்...

அவனின் மனநிலையைப் புரிந்து தாத்தாவும், அப்பாவும் அலுவலகத்தை அவர்கள் இருவரும் பார்த்து கொண்டனர்...

இன்று அவன் கட்டாயம் வேலைக்குச் சென்றே ஆகவேண்டும்...

"வேலைக்குப் போகவே மனசில்லை தேவிம்மா..." அவளது மடியில் தலை வைத்து படுத்துக் கொண்டு அவன் புலம்ப...

"அப்படின்னா என் கூடவே இருந்துருங்க..."

கண்களில் ஆர்வம் மின்ன கூறிய மனைவியை அள்ளி எடுத்துக் கொண்டு சில, பல பரிசுகளை அவளுக்குக் கொடுத்துவிட்டு அது போல் தானும் மறக்காமல் அவளிடம் இருந்து பரிசுகளைப் பெற்றுக் கொண்ட பின்பே அவளை விடுவித்தான் அவன்...

"ம்... உன் கூட இருக்கத்தான் ஆசையா இருக்கு... அதுவும் நீ இப்படி ஏக்கத்தோடு சொல்லும் போதே நிச்சயம் என்னால் மறுக்க முடியலை... ஆனால் கடமை என்னை அழைக்கிறதே..." ராகம் போட்டு இழுத்து சொன்னவனை இமைக்காது பார்த்தவளின் முகம் மாறியது...

"நாகா... எனக்கு ஒரு சத்தியம் செஞ்சு கொடுப்பீங்களா..."

"அது நீ கேட்கும் சத்தியத்தைப் பொறுத்து இருக்கு..." அவள் கன்னம் பற்றிச் செல்லம் கொஞ்சியவனைக் கண்டு,

"இப்போ நீங்க தனி மனுசன் இல்லை... உங்கள் நம்பி நான் இருக்கேன்... அதனால் இந்த மாதிரி ஆபத்தான காரியங்களில் இறங்காம..."

அதற்கு மேல் பேச முடியாமல் அவளது தொண்டை அடைத்தது...

"தேவிம்மா... இங்கே என்னைப் பார்..." அவளது முகத்தை நிமிர்த்தியவன் கலங்கிய அவளது கண்களைத் துடைத்து விட்டபடி,

"எனக்காக இல்லைன்னாலும் உனக்காகக் கொஞ்சம் குறைச்சிக்கிறேன்... ஆனா பத்திரிக்கை துறையில் இருந்துட்டு எப்போதும் இப்படியே இருக்க முடியாது தேவிம்மா... அதனால் நீ தான் தைரியத்தை வளர்த்துக்கணும்..."

எளிதாய் சொன்ன கணவனை அணைத்துக் கொண்டு வெகுநேரம் அப்படியே அமர்ந்திருந்தாள்...

"நான் கிளம்பவா...?" அவளின் மனம் புண்படாதபடி அவன் மெல்ல கேட்க...

"ம்..." அரை மனதாய் தலையாட்டினாள் அவள்...

அவன் சென்றதும் அவள் அறையைச் சுத்தம் செய்து கொண்டு இருக்கும் போது அவளது அலைப்பேசி அடித்தது... அதில் ஒளிர்ந்த எண்ணை கண்டதும் அவளது மனதில் இத்தனை நாளாய் இருந்த சந்தோசம் அப்படியே வடிந்து போனது...

எரிச்சலும், கோபமாய் அதை எடுத்துக் காதில் வைத்தாள்... அவள் பேச வேண்டிய அவசியமே இல்லாமல் அந்தப் பக்கம் தானாய் பேசியது...

"என்னம்மா வைஷ்ணவிதேவி... ஹனிமூன் எல்லாம் போயிட்டு வந்து ரொம்பச் சந்தோசமாய் இருக்கிற மாதிரி இருக்கு..."

கேலி குரலுக்குப் பதில் சொல்ல பிரியமற்று அவள் அமைதி காக்க...

"என்ன நான் சொன்னது எல்லாம் மறந்து போச்சா... இல்லை அதை நான் ஞாபகப்படுத்தவா...?" குரூரமாய் ஒலித்த குரலில் அவளது சப்தநாடியும் ஒடுங்கி போனது...

"புத்திசாலி புரிஞ்சிப்பன்னு நினைக்கிறேன்... நம்மளோட திட்டத்தை நீ செயல்படுத்தும் நேரம் வந்திருச்சு... இனியும் நீ தாமதிச்சா, நான் அதைக் கையில் எடுக்க வேண்டி வரும்... வசதி எப்படி...?"

அதில் அவள் பதறித்தான் போனாள்...

"இல்லை...நானே இதைச் செய்யறேன்..." துக்கம் தொண்டையை அடைக்கக் கூறியவள் அலைப்பேசியை அணைத்து விட்டு அடுத்து தான் என்ன செய்ய வேண்டும்

என்பதைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தாள்... அதுவும் கணவனுக்கு எதிரான சதியாலோசனை பற்றி...

இதை அறியாத நாகாவோ மறுநாள் வெளிவர இருக்கும் பத்திரிக்கைக்குத் தலையங்கம் எழுதி கொண்டு இருந்தான்...

பொது இடத்தில் பட்ட பகலில் முன் பின் தெரியாத ஒருவனால் வெட்டி கொலை செய்யப்பட்ட இளம்பெண்ணின் மனக்குமுறலாய் அமைந்திருந்தது அவனது தலையங்க பேச்சு...

'எப்படி இப்படித் துடிக்கத் துடிக்க ஒரு உயிரை கொல்ல முடிகிறது...? இவர்களுக்கு எல்லாம் மனதில் ஈரம் என்பதே இல்லாமல் போயிற்றா...? ஏன் இப்படிச் செய்கிறார்கள்...? அதை விட எல்லோரும் அந்தப் பெண்ணைப் பற்றி இப்படி அவதூறாகப் பேசுகிறார்களே ஏன் இப்படி...? மறுப்பு கூறவோ, இல்லை போராடவோ அந்தப் பெண் உயிர்த்து எழுந்து வர போவதில்லை என்கிற தைரியமா...? அதுவும் சமூக வலைத்தளங்களில் கருத்து என்கிற பெயரில் சில மூடர்கள் எழுதும் அசிங்கத்தைப் படிக்கவே வாய்க் கூசுகிறது...' ஆணாய் இருந்தாலும் நாகா அந்தப் பெண்ணிற்காகப் பெரிதும் வருத்தப்பட்டான்...

இது தான் சாக்கு என்று ஊடகங்கள் அதை வேறு மாதிரி பெரிதுப்படுத்துவதைக் கண்டு அவனுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது... அதனால் தான் அவன் அதை எதிர்த்து தனது தலையங்க பகுதியில் எழுதியிருந்தான்...

எழுதி முடித்ததும் எல்லாவற்றையும் சரி பார்த்தவன் அதை மூடி வைத்து விட்டு மற்ற விசயங்களை ஆராய ஆரம்பித்தான்... அப்போது அந்தச் சிறு துணுக்கு செய்தி அவனை மிகவும் கவர்ந்தது...

கணவன் நோயால் துன்பப்படுவதைக் காண சகிக்காமல் மனைவி அவனைக் கருணைக் கொலை செய்த செய்தி தான் அது...

ஊரார் கண்ணில் அந்தப் பெண் ஒரு கொலைக்காரி, இரக்கமற்றவள்... ஆனால் அவனின் கண்கள் மட்டும் சற்று வித்தியாசமான கோணத்தில் அதைச் சிந்தித்துப் பார்த்தது...

கணவன் மீது அந்தப் பெண் வைத்திருந்த அளவில்லா காதலை அவளின் அந்தச் செயலின் மூலம் உணர்ந்தான் அவன்... அந்தப் பெண்ணின் மீது அவனுக்குப் பெரும் மதிப்பு தோன்றியது...

அதே தான் அவனது மனைவியும் அவனுக்குச் செய்யப் போகிறாள் என்பதை அவன் அறிந்தால் இதே போன்று தன் மனைவியின் காதலையும் அவன் புரிந்து கொள்வானா...??? அவள் மீதும் இதே போன்றதொரு மதிப்பு உண்டாகுமா...???

மனித மனம் அந்த ஆழ்கடலை போன்று மிகவும் ஆழமானது... அதில் ஆயரமாயிரம் உணர்வுகள், எண்ணங்கள்... அந்த எண்ணங்கள் போகும் திசை அறிந்தால் துன்பம் ஏதுமில்லை...

அதை அறிந்தவர், தெரிந்தவர் தான் இங்கு யாருமில்லை...

சதி தொடரும்...

"நண்பா..." உரக்க கத்தியபடி உற்சாகமாய், அட்டகாசமாய் நாகாவின் அறையினுள் நுழைந்தான் விவேக்...

கையில் இருந்த காகிதத்தில் இருந்து கண்களை விலக்கிய நாகா விவேக்கை நிமிர்ந்து பார்த்து வரவேற்பாய் புன்னகைத்தான்...

"நாகா... உன் தலைக்குப் பின்னால் பிரகாசமான ஒளிவட்டம் தெரியுது... முகத்தில் தேஜஸ் வேறு கூடியிருக்கு... சூப்பர் அழகா இருக்கேடா..." நண்பனை புகழ்ந்தவன்,

"எல்லாம் திருமணம் செய்யும் மாயமோ... எனக்குமே கல்யாண ஆசை வந்திருச்சுடா..." நாகாவின் முகத்தை ஆசையுடன் பார்த்தபடி விவேக் கூற...

"ஹா... ஹா..." விவேக்கின் பேச்சில் வாய்விட்டு சிரித்தவன்,

"அழகா மாறணும்ங்கிறதுக்காக யாராவது கல்யாணம் பண்ணுவாங்களா...? சந்தோசம் மனசில் இருந்தா எப்பவும் அழகா இருக்கலாம்..."

"நீ எப்பவும் சந்தோசமா தான் இருக்க... ஆனா இப்போ உன் முகத்தில் தெரியும் களை தனிக் களைடா நாகா..."

"ம்ஹூம் அப்படியா...? இப்போ நான் சொல்ல போற நியூஸ் கேட்டு உன் முகத்திலும் தனித் தேஜஸ் தெரியும் பாரேன்..."

"என்ன... என்ன... சொல்லு நாகா ப்ளீஸ்..." கெஞ்சியவனைக் கண்டு சிரிப்பு வந்தது நாகாவிற்கு...

"உனக்குச் சிமியை பேட்டி எடுக்கும் வாய்ப்பை கொடுக்கலாம்ன்னு இருக்கேன்..."

நாகா சொன்னதைக் கேட்டு விவேக்கின் முகம் பிரகாசமாய் ஒளிர்ந்தது...

நாற்காலியில் இருந்து எழுந்து வந்து நாகாவை கட்டி தழுவி கொண்டவன், "நண்பா... என்னோட வாழ்க்கையில் மோட்சத்தைக் காண்பித்து விட்டாய்..." என்று வசனம் பேசியவன்,

"அப்படியே எனக்கு ஒரு அரை நாள் லீவு கொடு..." என்று கேட்க...

"எதுக்கு...?" புரியாமல் பார்த்தான் நாகா...

"எதுக்கா... ஹேர் கட் பண்ணணும், ஷேவ் பண்ணணும்..." சவரம் செய்து பளபளவென்று இருந்த தனது தாடையைத் தடவியபடி சொன்ன விவேக்,

"எல்லாத்துக்கும் மேலே ஃபேசியல் பண்ணணும்..."

"அதுக்கு எல்லாம் உனக்கு டைம் இல்லை... இப்போவே நீ கிளம்பற..." என்ற நாகா நடிகை சிமியை சென்று சந்திக்க வேண்டிய முகவரியை விவேக்கிடம் கூற...

அதைக் கேட்டுக் கொலைவெறியானான் விவேக்...

"என்னது...? ஆசிரமத்துக்கா...?" ஏறக்குறைய கத்தினான் அவன்...

"ஆமாம் டா... இன்னைக்கு அவங்க ஆசிரமத்துக்குப் பெருசா பண உதவி பண்ண போறாங்களாம்... இன்னைக்கு முழு நாளும் அங்கே தான் கழிக்கப் போறாங்களாம்... எல்லோரும் அவங்க கவர்ச்சியைத் தான் கவர் பண்ணி பத்திரிக்கையில் போட்டுருக்காங்க... இது மாதிரி நல்ல விசயம் செய்கிற அவங்க நல்ல உள்ளத்தை யாரும் எழுதியது இல்லை... அவங்களும் இதை வெளியில் சொன்னது இல்லை... நம்பத் தகுந்த வட்டாரத்தில் இருந்து கிடைத்த தகவல் இது... அதனால் நான் அவங்க கிட்ட கெஞ்சி கூத்தாடி அவங்களைப் பத்தி எழுத பெர்மிசன் கேட்டு வாங்கி இருக்கேன்..."

நாகா சொன்னது கேட்டு விவேக்கின் மனம் சமாதானமானாலும், "ம்ஹூம்... நான் கொடுத்து வச்சது

அவ்வளவு தான்..." என்று பெருமூச்சு விட்டுக் கொண்டான்...

"சரி விவேக்... காசியைக் கூட அழைச்சிக்கிட்டு போ..." என்றவன் வெளியில் கிளம்ப...

"என்னடா... தங்கச்சி ஞாபகம் வந்துருச்சா...?"

விவேக்கின் கேலியில் நாகாவின் மனக்கண்ணில் தேவியின் காதல் முகம் மின்னி மறைந்தது... அவனையும் அறியாது அவனது முகமும், உதடுகளும் மலர்ந்தது...

"ஏய்... ஏய்... அப்போ நான் சொன்னது உண்மை தானா..." என்று விவேக் மீண்டும் கிண்டல் செய்ய...

"ச்சு... சும்மா இருடா..." என்று நண்பனை அடக்கியவன்,

"அரசு அதிகாரி ஒருவர் காரியம் நடப்பதற்கு நிறைய லஞ்சப் பணம் கேட்கிறதா தகவல் வந்திருக்கு... ஏழை, எளிய மக்களையும் விட்டு வைக்கிறது இல்லையாம்... அது உண்மை தானான்னு களத்தில் இறங்கி விசாரிக்கப் போறேன்..."

"ஆல் த பெஸ்ட் நண்பா..." நண்பனை விவேக் வாழ்த்தி அனுப்ப...

நாகா சிரித்தபடி வெளியில் சென்றான்...

***********************************

இரவு பத்து மணியாகியும் கணவன் வரவில்லை என்றதும் பதட்டமான தேவி வெளிவாயிலுக்கும் வீட்டிற்குமாய் ஒரு நூறு தடவை நடந்து இருப்பாள்...

"ஏம்மா தேவி... ஏன் இப்படிக் குட்டி போட்ட பூனை மாதிரி நடந்துக்கிட்டு இருக்க... அஜூ வந்துருவான்ம்மா... அவன் என்ன சின்னக் குழந்தையா...? வேணும்ன்னா ஃபோன் பண்ணி பாரு..."

துர்கா கூட மருமகளைப் பார்த்துப் பரிதாபம் கொண்டு சொன்னார்...

"அவர் வேலையா இருப்பார் அத்தை... இப்போ நான் ஃபோன் பண்ணினா தொந்திரவா இருக்கும்..."

புரிதலோடு பேசும் மருமகளைக் கண்டு அத்தனை பெருமிதமாக இருந்தது அவருக்கு... தனது மகன் ஏன் அவ்வளவு பிடிவாதமாய் அவளை விரும்பி திருமணம் செய்தான் என்பது அவருக்கு இப்போது புரிந்தது... இந்தப் புரிதல், இந்த அன்பு எல்லாம் எல்லாப் பெண்களிடத்திலும் இருக்காது... இவள் ஒரு அபூர்வ பெண் என்று மனதிற்குள் நினைத்தவர்,

"உன்னை மனைவியா அடைய என் பையன் கொடுத்து வச்சிருக்கணும்..." வாஞ்சையுடன் அவளது கன்னத்தை வருடியபடி சொன்னவரை கண்டு தேவி தான் விதிர்த்து போனாள் மனதுக்குள்...

அவளைப் பற்றி முழுவதும் அறிந்தால் அவரின் பேச்சு இது போல் இருக்குமா... மனதுக்குள் கலவரம் மூண்டது...

மகனை பார்த்துக் கொள்ள மருமகள் இருக்கும் நிம்மதியில் துர்கா உறங்க சென்றுவிடத் தேவி தளர்ந்து போனவளாய் சோபாவில் அமர்ந்தாள்...

நாளை அவள் செய்யப் போகும் காரியத்தை எண்ணி இப்போதே அவளுக்கு மனதில் அச்சம் எழுந்தது...

"தேவிம்மா..." என்ற அழைப்போடு உள்ளே நுழைந்த கணவனின் குரலில் மனதின் அச்சத்தைத் தள்ளி வைத்தவள் முகம் மலர அவனை நோக்கினாள்...

அவளது மலர்ச்சியில் அவனது அத்தனை நேர சோர்வும் நொடியில் பறந்து போனது...

"ஹேய் பொண்டாட்டி... நீ இப்படி எனக்காகக் காத்திட்டு இருக்கிறதை பார்க்கும் போது எத்தனை சந்தோசமா இருக்கு தெரியுமா...?" இடையோடு சேர்த்து அவளை அணைத்து அவளின் காதுக்குள் ரகசியம் பேசியவன்,

"ஐ லவ் யூடி பொண்டாட்டி..." மையலுடன் கூறியவன் அவளது கன்னத்தில் தனது இதழை பதிக்க...

"அச்சோ ஹாலில் இருந்துட்டு என்ன பண்றீங்க..." சுற்றும் முற்றும் பார்த்தபடி அவள் அவனை எச்சரிக்க,

"அப்போ வா நம்ம ரூமுக்கு..." மனைவி கைப்பிடித்து அவன் அழைக்க...

"முதல்ல குளிச்சிட்டு வாங்க... நான் சாப்பாடு சூடு பண்ணி வைக்கிறேன்..." என்று கணவனது முதுகில் கை வைத்து மாடிக்கு அனுப்பி வைத்தவள் பின் சமையலறைக்குச் சென்றாள்...

கணவன் குளித்து முடித்து வந்ததும் அவனுக்குப் பரிமாறி விட்டு தானும் அவனுடன் அமர்ந்து பேசி சிரித்தபடி உணவு உண்டவளுக்கு வயிறை விட மனது பெரிதும் நிறைந்திருந்தது...

அறைக்கு வந்ததும் நாகா மடிகணினியை எடுத்து வைத்துக் கொண்டு வேலையில் ஆழ்ந்து விட, தேவி அவனைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்...

அவளது கண்கள் அவனை விடாமல் மொய்த்து அவனது அழகை அள்ளி பருகியது... ஏதேச்சையாய் மனைவி புறம் திரும்பியவன் அவளது பார்வை கண்டு என்ன என்பது போல் புருவம் உயர்த்தி வினவினான்...

அதற்குப் பதில் பேசாது அவன் அருகில் வந்தவள் அவனது தோளில் சாய்ந்து அமர்ந்து கொண்டு மடி கணினியை அணைக்கப் போக...

அவளின் நோக்கம் புரிந்தவனாய் அவன் சிரித்தபடி மடிகணினியை அணைத்து தள்ளி வைத்து விட்டு மறுநொடி மனைவியை அணைத்திருந்தான்...

என்றும் இல்லாத திருநாளாய் மீண்டும் மீண்டும் தன்னை நாடிய மனைவியைக் கண்டு அவனுக்கு ஆச்சிரியமாய் இருந்தது...

"என்னோட ஸ்வீட்டிக்கு என்னாச்சு இன்னைக்கு...?" அவளின் மூக்கோடு மூக்கு வைத்து உரசியபடி அவன் கேட்க...

"என்னென்னமோ ஆச்சு..." என்று அவனைப் பார்த்து கண்சிமிட்டி சொன்னவள்,

"உங்க மேல் பைத்தியமாச்சு..." என்று கூறியபடி அவனைத் தன் முகம் நோக்கி இழுத்து அவனைப் பேச விடாது செய்தாள் அவள்... அவளது செய்கையில் அவன் தான் அவளிடம் பைத்தியமாகி போனான்...

அதன் பின் நாகா உறங்கி விட அவள் மட்டும் உறங்காமல் வெகுநேரம் முழித்து இருந்தாள்...

அவன் நன்கு உறங்கியதும் தான் நினைத்ததைச் செயல்படுத்திவிட்டு மீண்டும் படுக்கையில் படுத்தவளுக்குக் கண்களில் கண்ணீர் வழிந்தது...

அதிகாலையில் எழுந்த நாகா எப்போதும் போல் குளியலறைக்குச் சென்று தன்னைச் சுத்தம் செய்து கொண்டு வெளியில் வந்தவன் பின் நியாபகம் வந்தவனாய் அங்கு இருந்த ஹீட்டர் ஸ்விட்ச்சை போடுவதற்காகக் கையைக் கொண்டு சென்றான்...

அடுத்த நொடி அவனது கையில் மின்சாரம் தாக்கியது... சட்டென்று அவனால் கையை எடுக்கவும் முடியவில்லை... அவனையும் அறியாது அவனது உடல் உதறியது...

அந்நேரம் சரியாக எழுந்து வந்த தேவி, "என்னங்க..." என்று அலறியவளாய் அருகில் இருந்த விளக்குமாற்றால் அவனது கையில் ஓங்கி அடித்தாள்...

மின்சாரம் உடலில் பாய்வது நின்ற போதிலும் அவனால் அந்த அதிர்ச்சியில் இருந்து உடனே மீண்டு வெளியில் வர முடியவில்லை... அசையாது நின்றவனைத் தேவி தான் அறைக்குள் அழைத்து வந்து கட்டிலில் அமர்த்தினாள்...

"உங்களுக்கு ஒண்ணும் இல்லையே..."

கைகள் நடுங்க அவனைத் தொட்டு பார்த்து வினவியவளின் குரலில் இருந்த நடுக்கத்தை உணர்ந்தவனாய் அவள் புறம் திரும்பியவன் அவளின் ஓய்ந்து போன தோற்றத்தை கண்டு தன்னைத் தேற்றிக் கொண்டு அவளை ஆறுதலாய் அணைத்துக் கொண்டான்...

"நல்லவேளை நானாகப் போய்ப் பரவாயில்லை... நீ மட்டும் ஸ்விட்ச்சை போட்டு இருந்தால்...?" அதை நினைத்தவனாய் அவனது உடல் நடுங்கியது...

அவனது அன்பில் அவளது உள்ளம் உருகியது... அந்த நேரத்திலும் அவன் தன்னைப் பற்றித் தான் யோசிக்கிறான், கவலைப்படுகிறான் என்பதை உணர்ந்தவளின் மனம் குற்றவுணர்ச்சியில் தவித்தது...

இந்த அசம்பாவித சம்பவத்துக்குத் தான் தான் காரணம் என்று கணவன் அறிந்தால், அந்த நினைவே கசந்தது அவளுக்கு...

'கடவுளே... இதற்கு என் உயிரை நீ எடுத்து விடேன்...' மனம் நோக கடவுளை வேண்டினாள்...

உயிர் போனால் கூட ஒரேடியாய் போய்விடும்... ஆனால் இப்படி நித்தம் நித்தம் செத்துப் பிழைப்பது அத்தனை வேதனையாக இருந்தது அவளுக்கு...

தான் அவனது வாழ்க்கையில் வந்திருக்கக் கூடாதோ என்று அவளது மனம் ஏதேதோ யோசித்துக் குழப்பித் தவித்தது...

அன்று முதல் வேலையாய் ஆளை வரவழைத்து ஹீட்டர் ஸ்விட்ச்சை சரி செய்தான் நாகா... அதன் பின்னரே அலுவலகத்துக்குக் கிளம்பி சென்றான்... கணவன் சென்றதும் அவளும் பள்ளிக்கு கிளம்பி சென்றாள்...

பள்ளிக்குள் நுழையும் போதே அவளது அலைப்பேசி அலறியது... அதில் மின்னிய எண்ணை கண்டு அவளுக்கு அத்தனை பயமாய் இருந்தது... பெரும் தயக்கத்துடன் அதை எடுத்தாள்...

"என்ன தேவி... தாலி கட்டிய புருசன்னு புதுசா பாசம் வந்திருச்சோ..." அந்தக் கேலி குரலில் அவளது உள்ளம் வலித்தது...

"என்ன பேசாம இருக்க... அப்படின்னா நான் சொன்னது சரி தானா...? ம்ஹூம் இனி நீ வேலைக்காக மாட்ட... நானே களத்தில் இறங்க வேண்டியது தான்..."

"வேண்டாம்..." அவசரமாய் மறுத்தவளை கண்டு மறுபுறம் சற்று யோசித்தது...

"அப்புறம் ஏன் இந்த ப்ளானை சொதப்பின...?"

"அது வந்து..." தடுமாறியவள்,

"இது உடனே முடிக்க வேண்டிய காரியம் இல்லை... கொஞ்சம் கொஞ்சமாய்த் தான் செயல்படுத்த முடியும்... எடுத்தோம் கவிழ்த்தோம்ன்னு செய்ய முடியாது..."

"அடப்பார்றா... உனக்குக் கூட மூளை வேலை செய்யுது... குட் நான் நினைச்சதை விட நீ நல்லாவே யோசிக்கிற... உன்னை நான் நம்பறேன்..."

அத்தோடு அழைப்பு துண்டிக்கப்பட அவள் ஆயாசத்துடன் அலைப்பேசியைக் கைப்பையில் வைத்தவள் அங்கிருந்த கல்மேடையில் அமர்ந்தாள்...

அவளே கணவனுக்கு எதிராய் சதி செய்து அதில் இருந்து அவளே அவனைக் காப்பாற்றி, எத்தனை நாள் இந்தக் கண்ணாமூச்சி ஆட்டம் ஆட முடியும்... என்றாவது ஒரு நாள் உண்மை தெரிய வரும் போது...?

இரண்டு பக்கமும் உண்மை தெரிய வந்தால் அது அவளின் வாழ்க்கைக்குத் தான் உலையாக முடியும்... அவளது வாழ்க்கையைப் பற்றிக் கூட அவள் கவலைப்படவில்லை... ஆனால் கணவனது உயிருக்கு ஆபத்து ஏதும் வந்துவிட்டால்... அதைத் தான் அவளால் நினைத்து பார்க்க முடியவில்லை...

'அவனின் உயிருக்கு ஆபத்து என்று நீயே அவனைக் கொலை செய்யப் போகிறாயா...?' அவளது மனசாட்சி அவளை இடித்துரைத்தது...

யாரையோ நம்ப வைக்க அவள் இந்த மாதிரி கொலை முயற்சிகளை முயற்சித்துத் தானாக வேண்டும்... இல்லாவிட்டால்... அதன் பின் நிகழவிருக்கும் நிகழ்வுகளை நினைக்கவே அவளது மனம் பதறியது...

வேறு என்ன தான் செய்வது...? அவளுக்கும் வேறு வழி தெரியவில்லை... நாலாப்புறமும் அவள் தப்பிச் செல்ல முடியாதபடி அவளின் நிலை அபாயகரமாய் இருந்தது... எந்தப் பக்கம் சென்றாலும் கதவுகள் மூடப்பட்டு வழி அடைக்கப்பட்டு இருந்தது...

அவளுக்கான வழி இல்லாவிட்டாலும் பரவாயில்லை... கணவனுக்கான வழியாவது புலப்படுகிறதா என்பதைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தாள்...

****************************

அடுத்து வந்த இரு நாட்கள் ஒருவித அமைதியுடன், மனதில் இறுக்கத்துடன் கழிந்தது தேவிக்கு...

அன்று ஓய்வாக இருந்த கணவனிடம், "என்னங்க... எனக்கு டிரைவிங் கத்து தர்றீங்களா...?" என்று கேட்டவளை ஆச்சிரியமாகப் பார்த்த நாகா,

"உனக்கு டிரைவிங் தெரியாதா...?"

"ம்ஹூம்..." மறுப்பாய் தலையசைத்தவளை கண்டு,

"இன்றைய காலக்கட்டத்தில் டிரைவிங் ரொம்ப அவசியமானது தேவி... இன்னைக்கே உனக்குக் கத்து தர்றேன்..." என்றவன் அவளை அழைத்துக் கொண்டு வெளியில் சென்றான்...

அடுத்த வந்த ஒரு வாரத்தில் எப்படியோ தட்டு தடுமாறி கார் ஓட்ட கற்று கொண்டாள் அவள்...

அன்று தேவியைக் கார் ஓட்ட சொல்லிவிட்டு நாகா அவளுக்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டு வந்தான்... மிதமான வேகத்தில் நன்றாகக் கார் ஓட்டிய மனைவியை மெச்சுதலாய் பார்த்தவன்,

"உனக்குக் கற்பூரபுத்தி தேவிம்மா..." என்றான் பாராட்டுதலாய்...

அவனின் பாராட்டைக் கேட்டு அவளது மனம் இறக்கை கட்டி பறந்த போதும் அடுத்து தான் செய்யவிருக்கும் காரியத்தை எண்ணி மனதுக்குள் பெரும் கலக்கம் தோன்றியது...

ஆனால் அதை அவள் செய்து தானாக வேண்டும்... இல்லாவிட்டால் அவனது உயிர் கேள்விக்குறியாகி விடும்... உயிரை கொடுத்து உயிரை காப்பாற்றுவது என்பது இது தானா...?

அந்நேரம் அவளுக்கு எதிர் திசையில் ஒரு லாரி வந்து கொண்டு இருந்தது... கண நேரம் கூட யோசிக்காது காரின் வேகத்தைக் கூட்டியவள் நேரே அந்த லாரியை நோக்கி காரை விட்டாள்...

"தேவி என்ன பண்ற...?" நாகா பதறி போய்க் கேட்கும் போதே அவள் காரை அவன் புறமாய் ஒடித்துத் திருப்பி அருகில் இருந்த மரத்தின் மீது மோதி நின்றாள்...

"தேவிம்மா... உனக்கு ஒண்ணும் ஆகலையே..." பயத்தில் கண்களை இறுக மூடி இருந்தவள் கணவனின் குரலில் மெதுவே கண் விழித்தாள்...

நெற்றியில் இருந்து இரத்தம் வழிய இருந்த கணவனைக் கண்டு உள்ளம் பதறியவளாய், "ஐயோ... இரத்தம்..." என்று அதைத் துடைக்கப் போக...

"த்ச்சு... அதை விடு... உனக்கு அடி படலையே..." அவனது பார்வை அவளை அலசி ஆராய்ந்தது...

அப்போது தான் அவள் அதை உணர்ந்தாள்... அந்த ஆபத்தான நிலையிலும் அவன் அவளைத் தனது

நெஞ்சுக்குள் பாதுகாப்பாய் பொதிந்து கொண்டு அவளுக்கு அடி ஏதும் விழாமல் காப்பாற்றி இருக்கிறான் என்று...

அவனது உயிரை கூடப் பொருட்படுத்தாமல் அவளின் உயிரை காக்க முற்பட்டு இருக்கிறான் அவளது அன்பு கணவன்... அவனின் தன்னலம் இல்லாத காதலை கண்டு அவளுக்கு அழுகை பொங்கியது...

"நாகா..." என்று அவனை அணைத்துக் கொண்டு கதறி விட்டாள் அவள்...

ஒரு கையால் அவளை அணைத்து ஆறுதல் கூறியவன் மறுகையால் அலைப்பேசியை உயிர்ப்பித்துத் தந்தைக்கு அழைத்து விபத்தைப் பற்றிக் கூறியவன் அதற்கான நடவடிக்கையை அவரைப் பார்த்துக் கொள்ளச் செய்துவிட்டு, மனைவியை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்குச் சென்றான்...

அடிப்பட்ட இடத்தில் மருந்து போட்டு விட்டு மனைவியோடு வீடு வந்து சேர்ந்தவனைக் கவலை தோய்ந்த முகத்துடன் அனைவரும் எதிர் கொண்டனர்...

"நல்லவேளை தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போச்சே..." என்று துர்கா ஆறுதல் சொல்ல, மற்ற இருவரும் அதை ஆமோதித்தனர்...

அறைக்குள் வந்த பின்பும் தன்னை விட்டு அகலாமல் இருந்த மனைவியைக் கண்டு நாகாவிற்கு இரக்கமாய் இருந்தது... மிகவும் பயந்து போயிருக்கிறாள் என்று எண்ணி கொண்டான்... சிறிதளவும் அவள் மேல் சந்தேகம் வரவில்லை...

"இதுக்கு எல்லாம் பயப்படக் கூடாது தேவிம்மா... நானும் கார் ஓட்டிய புதிதில் இது போல் நிறைய ஆக்சிடெண்ட் பண்ணியிருக்கேன்..."

ஆறுதல் வார்த்தை கூறி தேற்றியவனை நிமிர்ந்து பார்த்தவளுக்குத் தான் பிரகாஷின் காரை அதிவேகத்தில்

ஓட்டிய காட்சியும், 'வைஷூ... கொஞ்சம் வேகத்தைக் குறைம்மா... எனக்குப் பயமாயிருக்கு...' என்று அவன் பயந்து கெஞ்சிய காட்சியும் மனக்கண்ணில் படமாய் ஓடியது...

சிறிதும் தன்னைச் சந்தேகப்படாமல் தன்னை முழுவதும் நம்பும் கணவனுக்கு அவள் அளிக்கப் போவது எல்லாம் துரோகம் மட்டுமே... மனதின் வருத்தம் விழிநீராய் உடைப்பெடுக்கத் துவங்கியது...

அவளது அழுகை கண்டு அவன் தான் ஆறுதல்படுத்தினான் அவளின் மனதை அறியாதவனாய்...

மறுநாள் காலையில் மீண்டும் அவளுக்கு அந்த எண்ணில் இருந்து அழைப்பு வந்தது...

"இனியும் உன்னை நம்பி பிரயோஜனம் இல்லை... அவனை என்ன செய்யணும்ன்னு எனக்குத் தெரியும்... இனி அவனை நானே பார்த்து கொள்கிறேன்..."

அவளின் பதிலை எதிர்பாராமல் அலைப்பேசி துண்டிக்கப்பட... என்ன செய்வது என்று தெரியாமல் தேவி திக்பிரம்மை பிடித்து அப்படியே அமர்ந்திருந்தாள்...

அன்று இரவு மணி பன்னிரெண்டு ஆகியும் நாகா வீடு வந்து சேரவில்லை...

பதைபதைக்கும் மனதுடன் அவனுக்காக வழி மேல் விழி வைத்து காத்திருந்தாள் அவனது மனையாள் தேவி...

சதி தொடரும்...

நேரம் கடகடவெனக் கடந்து கொண்டு இருந்தது... ஆனால் நாகார்ஜூன் தான் இன்னமும் வீடு வந்து சேர்ந்த பாடில்லை... அவனின் அலைப்பேசிக்கு சேஷாத்திரி முயற்சித்த போது அது அணைக்கப்பட்டு இருப்பதாய் பதிவு செய்யப்பட்ட பெண் குரல் ஒன்று அழகாய்ப் பதிலளித்தது...

அலுவலகத்திற்கு அழைத்துக் கேட்ட போது நாகா பதினொரு மணிக்கு கிளம்பி சென்றுவிட்டதாகத் தகவல் கிடைத்தது...

சேஷாத்திரிக்குமே பயம் பிடித்துக் கொண்டது... பதினொரு மணிக்கு கிளம்பிய மகன் மணி இரண்டாகியும் வரவில்லை என்றால்...

தேவிக்கு அடக்கப்பட்ட அழுகை விம்மலாய் வெடித்துச் சிதறியது... அதைக் கண்டு துர்கா அவளை ஆதரவாய் அணைத்துக் கொண்டார்...

"அஜூ வந்துடுவான் தேவி... நீ பயப்படாதே..." மருமகளுக்கு ஆறுதல் சொன்னாலும் அவருக்கும் மனதுக்குள் பெரும் கலக்கமாய் இருந்தது...

பஞ்சாபிகேசனும் பேரன் வரவில்லை என்றதும் கவலையின் உருவாய் உறக்கத்தைத் தொலைத்துவிட்டு வரவேற்பறையில் அமர்ந்திருந்தார்...

"எதுக்கும் போலீசுக்குப் போகலாமா சேஷூ..." பஞ்சாபிகேசன் மகனை பார்த்து கேட்க...

"காலை வரை பார்க்கலாம்ப்பா... அப்படியும் வரலைன்னா போலீசுக்கு போவோம்... சில சமயம் அவன் இது மாதிரி நைட் பூரா வேலை பார்க்கிறது உண்டு... இவ்வளவு நாள் அவன் தனியா இருந்ததால நமக்குத் தெரியலை..."

தந்தையிடம் கூறினாலும் சேஷாத்திரிக்கு மனதுக்குள் ஒரே யோசனையாகத் தான் இருந்தது... எந்த வேலையாக இருந்தாலும் முதலில் வீட்டிற்கு அழைத்து ஒரு வார்த்தை

சொல்லியிருக்க வேண்டாமா என்று மகன் மீது கோபம் எழுந்தது... முதலில் தான் தனிக்காட்டு ராஜாவாக ஊரை சுற்றிக் கொண்டு இருந்தான்... இப்போது மனைவி என்று ஒருத்தி வந்த பின்னும் இப்படிப் பொறுப்பு இல்லாமல் இருப்பது அவருக்குக் கோபத்தை வரவழைத்தது...

அதே சமயம் மகனின் மனைவி மீதான நேசத்தையும் அவர் அறிவார்... அப்படி இருந்தும் அவன் தகவல் தெரிவிக்கவில்லை என்றால் அவனுக்கு என்னவானது...? அந்த நினைவு வேறு அவரைக் கவலைக்குள்ளாக்கியது...

எல்லோரும் ஆளுக்கு ஒரு பக்கமாய் அமர்ந்து தங்களுக்குள் யோசனையில் மூழ்கியிருந்தனர்...

தேவியோ சோபாவில் அமராமல் தரையில் அமர்ந்து சுவற்றில் சாய்ந்து இருந்தாள்... அவளது கண்கள் விட்டத்தை வெறித்துக் கொண்டு இருந்தது... மனமோ கணவனுக்கு ஏதோ ஆபத்து நேர்ந்துவிட்டதாக எண்ணி கூக்குரல் எழுப்பித் துடித்தது...

'அந்த மாபாவி சொன்னதைச் செய்து விட்டானோ...?' மனம் மருகி போனாள் அவள்...

கணவன் உயிருக்கு ஏதாவது ஒன்று என்றால் அதற்கு மேல் அவள் உயிர் வாழ்வதில் அர்த்தம் இல்லை... அந்தளவுக்கு அவன் அவளது மனதில் அழியாது பதிந்து இருக்கிறான்... அதே அளவு அவனது காதலையும் ஆழமாய்ப் பதித்து இருக்கிறான்...

அவன் மீதான தன் காதலை அவள் உணர்ந்த தருணத்தை நோக்கி அவளது எண்ணம் பயணம் செய்தது...

*************************

திருமணத்திற்கு மறுநாள் வழக்கம் போல் பள்ளிக்கு வேலைக்குச் சென்றவளுக்கு அன்று ஏனோ வேலையில் மனம் செல்லாததால் அரை நாள் விடுப்பு எடுத்துக் கொண்டு வெளியில் வந்தாள்...

காலையில் கணவனுக்கும் அவளுக்கும் நடந்த வாக்குவாதத்தை எண்ணியபடி அவள் நடந்து வந்து கொண்டு இருந்தாள்...

என்ன இருந்தாலும் தான் அவனை அடித்திருக்கக் கூடாது என்று அவளது மனசாட்சி அவளுக்கு அறிவுரை கூறியது...

திருமணத்திற்கு முன் கணவனிடம் தனது கற்பையே அடமானம் வைத்து அவனுடன் பழகி இருக்கிறாள் தான்... அப்படி இருந்தும் இப்போது திருமணம் முடிந்தும் கூட அவளது மனதில் ஏதோ ஒரு வெறுமை ஆக்கிரமிப்பு செய்வதை அவளால் தடுக்க முடியவில்லை...

முழுமனதோடு கணவன் என்கிற சொந்தத்தை அவளது மனதில் பதிய வைக்க ஏனோ அவளால் முடியவில்லை...

அந்த நேரம் ஒரு கார் அவள் அருகில் வந்து நின்றது... அவள் சுதாரிக்கும் முன் காரில் இருந்த ஒருவன் கண்ணிமைக்கும் நேரத்தில் அவளை இழுத்து காருக்குள் தள்ளிய அடுத்த நொடி கார் வேகமெடுத்தது... அவனின் பிடியில் இருந்து விடுபடத் திமிறியவளை மறு பக்கத்தில் இருந்தவன் இறுக பிடித்துக் கை, கால்களைக் கட்டி போட்டு வாயையும் இறுக மூடி விட்டான்...

அவள் ஒன்றும் பயந்த பெண் இல்லை... அதனால் தைரியமாகத் தான் இருந்தாள் அப்படி என்ன நடந்துவிடும் தன்னை மீறி என்று...

அவளை ஒரு குடோனில் சென்று இறக்கிய போது உள்ளுக்குள் சற்றுக் குளிரெடுக்கத் தான் செய்தது... ஆனாலும் அதை வெளிக்காட்டி கொள்ளவில்லை...

கால்கட்டை மட்டும் அவிழ்த்து விட்டு அவளை நடக்கச் சொல்லி மிரட்டியவர்கள் அவளை உள்ளே அழைத்து வந்தனர்...

அங்கே அவளுக்காகக் காத்திருந்தவரை கண்டதும் அவளது முகம் கோபத்தில் சிவந்தது... அது வேறு யாரும் இல்லை மேகநாதன்... அவனது மகன் செய்த செயல்,

அன்று சனாவின் நிலை எல்லாம் அவளுக்கு நியாபகம் வந்தது...

"என்னம்மா புதுப் பொண்ணு நல்லாயிருக்கியா...?"

அதற்குப் பதில் பேசாது அமைதியாய், அழுத்தமாய் அவரைப் பார்த்தாள் அவள்...

"பிடிக்காதவனைக் கட்டிக்கிட்டா எப்படி நல்லாயிருக்க முடியும்...?"

அவர் சொன்னதைக் கேட்டு, 'பிடிக்கலைன்னு நான் உன் கிட்ட சொன்னேனா...?' மனதுக்குள் சொல்லி கொண்டவள் அந்த வார்த்தையில் திடுக்கிட்டு போனாள்...

'அப்போ எனக்கு நாகாவை பிடிக்குமா...' அவளுக்குக் குழப்பமாய் இருந்தது...

"சரி அது எனக்குத் தேவையில்லாத விசயம்... எனக்கு உன்னால் ஒரு காரியமாக வேண்டி இருக்கிறது..." என்றவரை அவள் கூர்மையாகப் பார்த்தாள்...

"இப்போ உன் புருசன் மேல நான் கொலைவெறியில் இருக்கேன்... என்ன பார்க்கிற...? என் ஒரே மகன் சாவுக்கு அவன் தான் காரணம்... அன்னைக்கு அவனைப் போலீசில் பிடிச்சு கொடுத்து எல்லாப் பேப்பரிலும் நியூஸ் வர செய்து அவனை ரொம்ப அவமானப்படுத்திட்டான்... அந்த அவமானம் தாங்காம அவன் தூக்கில் தொங்கிட்டான்... என் ஒரே மகனோட சாவுக்கு உன் புருசன் பதில் சொல்லியே ஆகணும்..." ஆக்ரோசமாய்க் கத்தியவரை அருவருப்புடன் பார்த்தாள் அவள்...

'உன் பையன் என்ன நாட்டு விடுதலைக்காகப் போராடியா செத்தான் மடையா... அப்பாவி பெண்களுக்குப் போதை மருந்து கொடுத்து தன் உடல் இச்சையைத் தீர்த்துக் கொண்ட கொடும்பாவி அவன்... அவன் எல்லாம் உயிரோட இருந்து என்ன செய்யப் போகிறான்... இன்னும் பல பெண்களைச் சீரழிக்கவா...? அதற்கு அவன் செத்து போனதே நல்லது...'

அவளது மனம் ஆத்திரத்தில் குமுறியது... அவளும் ஒரு காலத்தில் இது போல் பாதிக்கப்பட்ட பெண் அல்லவா...

"ஏற்கெனவே ஒரு தடவை அவனைப் போட்டு தள்ள முயற்சி பண்ணினேன்... எப்படியோ தப்பிச்சிட்டான்..." என்ற மேகநாதனை கண்டு அவளது கண்கள் விரிந்தது அச்சத்தில்...

அன்று கடற்கரையில் வைத்து நாகா வெட்டி சாய்க்கப்பட்ட நிலை இப்போது அவள் கண்முன் தோன்றியது... அதை நினைத்து இப்போதும் அவளது உள்ளம் பதறியது... அன்று அந்த நொடி அவளின் உயிர் போனது போல் அவள் துடித்துக் கதறியது அவளுக்குத் தானே தெரியும்...

அதன் பின் அவனை மருத்துவமனையில் சேர்த்தது... அன்றே அவன் காணாமல் போனது என்று எல்லா நிகழ்வுகளும் அவள் நினைவில் எழுந்தது...

அன்று அவனைக் காணாது அவள் துடித்த துடிப்பு நிஜம்... தவித்த தவிப்பு நிஜம்... அவனைப் பாராது செத்துவிட நினைத்த அந்த மனம் நிஜம்... அதன் பின் அவனைக் கண்ட போதோ அவனை இழந்து விடுவோமோ என்று மனம் பதறியது நிஜம்... உண்மை தெரிந்து அவன் தன்னை விட்டு விலகிவிட்டால் என்ற தவிப்பில், அவனை இழந்துவிடக் கூடாது என்கிற துடிப்பில் அவனோடு கூடியது நிஜம்...

அத்தனை நாளாய் தனது செயல்களுக்கு எல்லாம் பிரகாஷ்க்கான நன்றிக்கடன் என்று நினைத்துக் கொண்டு இருந்தவளுக்கு இப்போது புரிந்தது அது வெறும் நன்றிக்கடனுக்காக நடந்தது அல்ல என்று... மனதில் இருந்த காதல் தான் அவளை அந்த மாதிரி நடக்க வைத்திருக்கிறது என்று...

ஆரம்பத்தில் நாகாவை பழிவாங்க என்று அவனுடன் பழகியவள் அவளையும் அறியாமல் அவனிடத்தில் மனதை பறி கொடுத்துவிட்டாள்... அவள் தனது காதலை உணர்ந்த போது அத்தனை சந்தோசமாக இருந்தது... கணவன் கட்டிய

தாலிக்கு தான் துரோகம் இழைக்கவில்லை என்ற நினைவு அவளுக்கு அத்தனை சந்தோசத்தைத் தந்தது...

அந்த நேரம் மேகநாதனின் குரல் அபஸ்வரமாய் அவளது காதில் விழுந்தது...

"இப்போ நான் இருக்கிற நிலைமையில் அவன் மேல் கை வச்சா நான் தான் அவனைக் கொலை பண்ணினேன்னு ஈசியா போலீஸ் கண்டுபிடிச்சிடும்... அதனால் தான் நான் உன்னை அதுக்குத் தேர்ந்தெடுத்தேன்... ஏற்கெனவே உனக்கும் அவனுக்கும் பிரச்சினை நடந்திருக்கு... இந்தச் சமயத்தில் நீ அவனைக் கொன்னால் பழி உன் மீது தான் விழும்... கொலையும் செய்வாள் பத்தினி என்பது போல்..."

அவரது எகத்தாளமான வார்த்தைகள் அவளது காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போல் இருந்தது... திகைப்பாய் அவரைப் பார்த்தாள் அவள்...

"என்ன செய்வ தானே...?" மேகநாதன் கேட்டதற்கு அவளால் பதில் சொல்ல முடியவில்லை... இன்னமும் அவள் திகைப்பில் இருந்து வெளிவரவில்லை...

"நீ தான் செய்யற... நீ தான் செஞ்சாகணும்... இல்லைன்னா இதோட விளைவுகள் விபரீதமாக இருக்கும்..." என்று அவளை மிரட்டினார் அவர்...

இவ்வளவு நேரம் வாயை திறக்காதவள் இப்போது வாய் திறந்தாள்...

"நானே செய்யறேன்..." என்றாள் மெதுவே...

அந்த வார்த்தையைச் சொல்லும் போது அவள் உள்ளுக்குள் செத்துப் போனது அவளுக்குத் தான் தெரியும்... கொஞ்ச நாட்களுக்கு முன் நாகா மீது அபாண்டமாய்ப் பழி சுமத்தியவள் தான் அவள்... ஆனால் அப்போது எல்லாம் எழாத வேதனை இப்போது எழுந்து அவளை உயிரோடு கொன்றது...

அதை விட இந்த மேகநாதனை கண்டு அவளுக்கு அத்தனை அச்சமாக இருந்தது... ஏற்கெனவே ஒரு முறை நாகாவை கொலை செய்ய முயற்சித்தவன் அல்லவா... அன்று நாகா இரத்த வெள்ளத்தில் வீழ்ந்ததை அவளால் மறக்க முடியுமா...? அப்படிப்பட்ட பாவி இந்த மேகநாதன்... அவன் சொன்னது போல் நாகாவை கொன்றுவிட்டால்...? அதை நினைக்கும் போதே அவளுக்கு மூச்சடைத்தது...

அதனால் தான் இதற்குச் சம்மதம் சொன்னாள்... அவளாய் நாகாவின் உயிரை பறிக்கும் வரை அவனுக்கு எந்த ஆபத்தும் இல்லை... அதனால் தான் மேகநாதனை நம்ப வைப்பதற்காக இந்தக் கண்துடைப்பு நாடகத்தை நடத்தினாள்...

என்ன செய்தும் மேகநாதன் இவளை நம்பவில்லை... கடைசியில் அவள் மனதை கண்டு கொண்டு விட்டானே... அதை நினைத்து தான் அவளுக்கு வருத்தமாக இருந்தது... சொன்னது போல் நாகாவை ஏதும் செய்திருப்பானோ... மனம் திக்திகென்று அடிக்க உயிரை கையில் பிடித்துக் கொண்டு கணவனின் வரவிற்காகக் காத்திருந்தாள் அவள்...

அவளது மனம் முழுவதும் 'நாகா, நாகா' என்று தான் துடித்துக் கொண்டு இருந்தது...

அன்று மேகநாதனிடம் பேசிவிட்டு வந்தவளுக்குப் புகுந்த வீட்டிற்குப் போகவும் விருப்பம் இல்லை... அவள் வளர்ந்த வீட்டிற்கும் போகவும் விருப்பம் இல்லை... அதனால் தான் அவர்கள் வாழ்ந்த அடுக்குமாடி குடியிருப்புக்கு வந்தாள்...

பூவாயி பாட்டியிடம் இருந்த சாவியை வாங்கிக் கொண்டு வீட்டினுள் சென்றவளுக்குப் பழைய நியாபகங்கள் மனதில் கிளர்ந்தெழ வாய்விட்டு அழுதாள்... ஆழ்மனதில் இருந்த காதல் பீறிட்டுக் கொண்டு அழுகையாய் பொங்கி வந்தது...

இரவு வரை அழுது கொண்டு இருந்தவள் கணவனுக்கு அழைத்துச் சொல்ல வேண்டும் என்பதை மறந்து

போனவளாய் அவனது நினைவில் தன்னைத் தொலைத்தபடி அமர்ந்திருந்தாள்...

அந்நேரம் அவளது அலைப்பேசி அடித்தது... அவளது கணவன் தான்... அத்தனை நேரம் மனதில் இருந்த காதல் போய் ஒருவித குற்றவுணர்ச்சி மனதை தாக்க அவனது அழைப்பை ஏற்க அவளது கைகள் தயங்கியது...

அவ்வளவு நேரம் காதலில் கரைந்து உருகியவள் இப்போது குற்றவுணர்ச்சியில் மருகி கொண்டு இருந்தாள்...

************************

தனக்குள் கரைந்து கொண்டு இருந்தவளை இரு சக்கர வாகனத்தின் ஒலி நிகழ்காலத்திற்கு அழைத்து வந்தது...

பரபரப்புடன் அவசரமாய் எழுந்த தேவி கண்களில் எதிர்பார்ப்பை தேக்கியபடி ஆவலுடன் வாயிலின் மீது விழி வைத்து காத்திருந்தாள்... அவள் மட்டும் தனியாக இருந்திருந்தால் இந்நேரம் வாயிலுக்கு ஓடி சென்று கணவனை அணைத்துக் கொண்டு கதறி இருப்பாள்... ஆனால் உடன் இருந்த பெரியவர்கள் அவளது எண்ணத்திற்குத் தடை போட்டனர்...

அவள் உடல் அங்கே செல்லாவிட்டால் என்ன... அவளது உயிர் அதற்கு முன் அவனிடத்தில் சென்று நின்றது முதல் ஆளாய்...

களைத்து போன முகத்துடன் உள்ளே நுழைந்த நாகாவை அவளது கண்கள் அலசி ஆராய்ந்தது... எங்கேனும் அடி எதுவும் பட்டு இருக்கிறதா என்று... எந்த ஒரு அடியும் இல்லாமல் அவன் நன்றாகத் தான் இருந்தான்... மனதில் எழுந்த நிம்மதியுடன் சுவற்றில் சாய்ந்தவள் அவனையே இமைக்காது பார்த்திருந்தாள்...

உள்ளே வந்தவன் முதலில் அவளைக் கவனிக்கவில்லை... அந்த நேரத்தில் தாத்தாவும், அப்பாவும் தனக்காகக் காத்திருப்பதைக் கண்டு அவர்களிடம் சென்று அமர்ந்தான்...

"என் வேலை தான் உங்களுக்குத் தெரியுமே... எதுக்காக நீங்க தூங்காம வெயிட் பண்றீங்க..." தாத்தாவை பார்த்து அவன் செல்லமாய்க் கடிய...

"உன் வேலை பத்தி தெரியும் தான்... ஆனா வீட்டுக்கு ஒரு ஃபோன் பண்ணி என்ன விசயம்ன்னு சொல்லணும்ங்கிறது உனக்குத் தெரியாதா..." சேஷாத்திரி கோபத்துடன் கேட்டார்...

இப்படித் தகவல் சொல்லாமல் எல்லாரையும் துன்பப்படுத்தி விட்டானே என்கிற ஆதங்கம் அவருக்கு...

"ஃபோன் பண்ண கூட நேரம் இல்லைப்பா... ஒரு சின்ன ஆக்சிடெண்ட்..." அவன் சொல்லி முடிக்கும் முன்,

"ஐயோ..." என்ற தேவியின் பதறிய குரலில் திரும்பி அவளைப் பார்த்தவன் கண்களால் அவளுக்கு ஆறுதல் கூறியவன் அத்தோடு மன்னிப்பும் சேர்த்து கேட்டான்...

"வீட்டுக்கு வந்துட்டு இருக்கும் போது ஒரு வேன் என் மேல் மோதுற மாதிரி வந்துச்சு... நான் கொஞ்சம் சுதாரிச்சிட்டு விலகிட்டேன்... ஆனா அந்த வேன் கண்ட்ரோல் இல்லாம எனக்குப் பின்னால் வந்த பஸ் மேல் மோதி..." என்றவன் அந்த விபரீதத்தை நினைத்தபடி யோசனையுடன் அமர்ந்திருந்தான்...

அதைக் கேட்டுத் தேவி நடுக்கத்துடன் நின்றிருந்தாள்...

"யாருக்கும் ஒண்ணும் ஆகலையே அஜூ..." துர்கா தான் நடுக்கத்துடன் கேட்டார்...

"ஒண்ணும் ஆகலைம்மா..."

"அஜூ கண்ணா... நீ பழையபடி அமெரிக்காவுக்கே போயிரேன்டா..." தாத்தா அப்படிக் கூறியதும் அவனுக்கு வியப்பாய் இருந்தது...

அதையே அவனது தந்தையும் ஆமோதித்தார்...

"இதுக்கு எல்லாம் பயந்தால் உயிர் வாழ முடியாது... என்னைக் காப்பாத்திக்க எனக்குத் தெரியும்..." என்று உறுதியான குரலில் கூறியவன்,

"நீங்க எல்லாம் தூங்க போங்க..." என்று கூறிவிட்டு தனது அறையை நோக்கி நடந்தான்...

கணவன் பின்னேயே தேவியும் தங்கள் அறைக்கு வந்தாள்... அவளைத் திரும்பி பார்த்தவன்,

"குளிச்சிட்டு வந்திர்றேன்..." என்று புன்னகைத்து விட்டு செல்ல...

அவனது புன்னகையை நெஞ்சில் சேமித்து வைத்துக் கொண்டு அவனுக்காகத் தவிப்புடன் காத்திருந்தாள் அவள்...

குளித்து முடித்து விட்டு படுக்க வந்தவனை இறுக அணைத்து கொண்டாள் அவள்... மனதின் தவிப்பை அந்த அணைப்பில் குறைக்க முயன்றாள் போலும்...

"தேவிம்மா... பயந்துட்டியா...?" அவளது முகம் நிமிர்த்தி அவன் கேட்க,

"ம்..." என்று கண்ணீர் மல்க தலையாட்டியவள் அவனது நெஞ்சில் சாய்ந்து கொண்டாள்...

"தாத்தா சொல்ற மாதிரி நீங்க அமெரிக்கா போயிரலாமே நாகா..."

அவள் 'நீங்க' என்று தனித்துச் சொன்னதை அவன் கவனிக்கவில்லை...

"ஹேய்... நீயும் என்ன பயந்துக்கிட்டு... பத்திரிக்கைக்காரன் பொண்டாட்டி தைரியமா இருக்க வேண்டாமா...? இப்படியா பயப்படுறது..."

'உங்க விசயத்தில் நான் எப்பவும் கோழை தான்...' மனதுக்குள் சொல்லிக் கொண்டவள் அதை அவனிடத்தில் சொல்லவில்லை...

தனது காதலை அவனிடத்தில் சொல்லும் தைரியம் அவளுக்கு இல்லை...

"நாளைக்கு எனக்கு ஏதாவது ஒண்ணு ஆனாலும் கூட... நீ என் மகனை தைரியமா வளர்க்கணும்... அவனும் என்னை மாதிரி தைரியமான பத்திரிக்கைக்காரனா வரணும்..."

அவனது வார்த்தைகளில் அவளது உள்ளமும் உடலும் அதிர்ந்தது... அதுவும் 'குழந்தை' என்ற வார்த்தையில் இன்னமும் அதிகம் அதிர்ந்தது...

"அப்படி எல்லாம் உங்களுக்கு ஒண்ணுமாகாது..." அவள் தவிப்புடன் அவனது வாயை கை கொண்டு பொத்தினாள்...

"நெருப்புன்னா வாய் வெந்துடாது தேவிம்மா... நாளைக்கு என்ன நடக்கும்ன்னு நமக்குத் தெரியாது..."

நாளை என்ன நடக்கும் என்பதை உணர்ந்தவளாய் மனதில் துக்கம் எழ அவனை இறுக அணைத்துக் கொண்டு அவனுள் அவள் புதைய, அவனோ அவளது செயலில் கிறங்கி போனான்...

"ஸ்வீட்டி..." தாபத்துடன் அவளது முகம் நோக்கி குனிந்தான் அவன்...

"ப்ளீஸ் நாகா வேண்டாமே..." என்றவளின் முகம் கலக்கத்தைச் சுமந்திருந்தது...

அவளது கலக்கம் புரிந்தவனாய் விலகியவன், "காலையில் வேலையிருக்கு... கொஞ்சம் நேரத்தோட எழுப்பிவிடு தேவி..." என்றபடி அவன் படுக்க...

"இப்போவே மணி நான்கு... இதில் நேரத்தோட வேறு எழுப்பணுமா... ஒண்ணும் வேண்டாம்... நல்லா தூங்கி ரெஸ்ட் எடுங்க..." அவள் மனைவியாய் அக்கறை கொண்டு அவனை அதட்ட...

"முக்கியமான வேலை இருக்கு..." என்றவனின் முகம் மிகவும் சீரியசாய் மாறியது...

அதில் தேவி அமைதியாகி விட்டாள்... நாகா படுத்ததும் தூங்கிவிட்டான்... அவள் தான் அவனைப் பார்த்தபடி விழித்துக் கொண்டு இருந்தாள்...

'எப்படி இவரை வெளியில் செல்லாமல் தடுப்பது...?' என்று யோசித்துக் கொண்டு இருந்தாள் வெகுநேரமாய்...

சொன்னது போல் இரண்டு மணி நேரத்தில் தூங்கி எழுந்த நாகா அவசரமாய் வெளியில் கிளம்பினான்... கைவிரல் நகத்தைக் கடித்தபடி டென்சனாக அவன் பின்னே சென்றாள் தேவி...

மாடிப்படியில் இறங்குவதற்காகக் காலை வைத்தவன் அப்படியே வழுக்கி விழுந்து உருண்டு கீழே சென்று விழுந்தான்... அவன் கொஞ்சம் சுதாரிப்போடு இருந்திருந்தால் இந்த அசம்பாவிதத்தைத் தடுத்து இருக்கலாம்... ஆனால் டென்சனோடு கிளம்பியவன் எதையும் யோசிக்கும் மனநிலையில் இல்லாது காலை வைத்துவிட்டு இப்படி விழுந்து கிடந்தான்...

"நாகா..." என்று அலறியபடி தடதடவெனப் படிகளில் விரைந்து இறங்கிய தேவி அவனைக் கைத்தாங்கலாய் தூக்க முயன்றாள்...

அவனும் தன்னைச் சமாளித்துக் கொண்டு எழுந்து நிற்க முயன்றான்... ஆனால் அவனால் முடியவில்லை... வலது காலில் சுள்ளென்று ஒரு வலி எழுந்தது...

"அம்மா..." என்று அவன் வலியில் அலறினான்...

அவனின் சத்தம் கேட்டு அசந்து உறங்கி கொண்டு இருந்த எல்லோரும் எழுந்து வந்தனர்... மகனின் நிலை கண்டு சேஷாத்திரி அவனை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்கு விரைந்தார்... தேவியும் உடன் சென்றாள்...

அவனைப் பரிசோதித்த மருத்துவர் காலில் சின்னதாக எலும்பு முறிவு ஏற்பட்டு இருக்கிறது என்றும்... ஒரு

மாதத்திற்கு ஓய்வில் இருக்க வேண்டும் என்று கூற… நாகா மிகவும் நொந்து போனான்…

தேவிக்கு மிகவும் சந்தோசமாய் இருந்தது… அடிப்பட்ட நிலையில் இருக்கும் கணவனைக் கண்டு சந்தோசப்படும் மனைவி உலகத்தில் அவள் மட்டுமாய்த் தான் இருப்பாள்…

ஏனெனில் இந்த ஒரு மாதமும் அவன் எங்கும் செல்லாமல் வீட்டில் பாதுகாப்பாய் இருப்பானே… அதனால் வந்த சந்தோசம் அவளுக்கு… ஆனால் இது எல்லாம் நிரந்தரம் இல்லை என்பது அவளுக்குத் தெரியவில்லை… சிறு பிள்ளை போல் அவனது உயிரை பாதுகாப்பது பற்றி மட்டுமே யோசித்தாள்… இதை எத்தனை நாட்களுக்குச் செயல்படுத்த முடியும் என்பதைப் பற்றி யோசிக்க மறந்து போனாள்… அதற்கான நிரந்தரத் தீர்வையும் அவள் நாடவில்லை…

மருத்துவமனையில் இருந்து வந்த நாகா விவேக் மூலம் தனது வேலைகளைப் பார்க்க சொன்னான்… இந்த நேரத்தில் இப்படியானது குறித்து அவனுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது…

அதே சமயம் தேவி மாமனார், மாமியார் இடத்தில் நாகாவை அமெரிக்காவிற்குப் போகும் படி சொல்ல சொல்லி அழுது கரைந்து கொண்டு இருந்தாள்…

"அவன் மட்டும் உடனே கிளம்புவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை… ஆனால் உன்னை விட்டுட்டு எப்படிம்மா போவான்… நீயும் அவன் கூடப் போகணும்ன்னா நிறைய ஃபார்மாலிட்டீஸ் இருக்கே…" சேஷாத்திரி யோசித்தார்…

"நான் போகணும்ன்னு அவசியம் இல்லை மாமா… இப்போ அவரோட பாதுகாப்பு தான் நமக்கு முக்கியம்…" என்று அவள் கண்ணீர் மல்க கூற…

"சரிம்மா… அவன் கிட்ட பேசி பார்க்கிறேன்…" என்றார் அவர்…

சொன்னபடி மகனிடம் பேசினார் அவர்... ஆனால் அதை எல்லாம் அவன் காதில் போட்டு கொள்ளவில்லை...

"என்ன அப்பா கிட்ட சிபாரிசா...?" என்று அவளை அதட்டியவன் பின் அவளை அருகே இழுத்து,

"என்னை விட்டுட்டு நீ இருந்துருவியா தேவிம்மா..." நேசம் பொங்க அவன் கேட்ட போது அவள் அழுதுவிட்டாள்...

"உன்னால் முடியாது இல்ல... அப்போ என்னால் மட்டும் எப்படி முடியும்...?"

அவன் கேட்ட போது தன்னைச் சமாளித்துக் கொண்டவள், "முதல்ல நீங்க போங்க... அதுக்கு அப்புறமா நான் வர்றேன்..."

"இரண்டு பேரும் எங்கேயும் போக வேண்டாம்... நாம இங்கேயே இருந்து சாதிச்சு காட்டணும்... அதை விட்டுட்டு இப்படிக் கோழை மாதிரி ஓடி ஒளிய கூடாது..." என்றவனின் குரல் மட்டுமல்ல முகமும் தீவிரமாய் மாறியிருந்தது...

அதை உணரும் நிலையில் அவள் இல்லை... சோகத்தில் தனக்குள் மூழ்கியிருந்தாள் அவள்...

*********************************

அதற்குப் பின் வந்த நாட்கள் வேகமாய் நகர்ந்தது... தேவி பள்ளிக்கு விடுப்பு எடுத்துவிட்டு கணவனைக் கவனிப்பதில் மூழ்கிவிட்டாள்... சிறு குழந்தையைப் போல் அவள் அவனைக் கண்ணும் கருத்துமாய்ப் பார்த்துக் கொண்ட விதத்தில் இருவரின் மனதிலும் காதலையும் தாண்டிய வேறு ஒரு பிணைப்பு தோன்றியது... அது இன்னமும் இருவரின் மனதையும் அன்பால் இறுக்கி பிணைத்தது...

இப்போது எல்லாம் அவன் மெல்ல மெல்ல ஊன்றுகோல் உதவியுடன் நடக்க ஆரம்பித்து இருந்தான்... அதைக் கண்டு அவளுக்குச் சந்தோசமாக இருந்த போதும் கூடவே கவலையும் சேர்ந்து தோன்றியது...

அன்று காலையில் எழுந்த நாகா ஊன்றுகோல் உதவியுடன் மெதுவாய் படியில் இறங்கி கீழே வந்தான்...

அவனைக் கண்டதும் வேகமாய் அவன் அருகில் வந்த தேவி, "ரூமில் இருந்திருக்கலாமே..." என்றபடி அவனை அழைத்துக் கொண்டு உணவு மேசைக்குச் சென்றாள்...

அவனுக்கு உணவு பரிமாறி அவன் உண்டு முடித்ததும் மாமியாருடன் சமையலறைக்குச் சென்றுவிட்டாள்... நாகா ரிலாக்சாக வரவேற்பறையில் அமர்ந்தவன் நாளிதழை பிரித்து அதில் கண்களை ஓட்டினான்...

அப்போது வேலைக்காரி அலறிய அலறலில் அவன் ஊன்றுகோலை எடுத்துக் கொண்டு அங்கே செல்ல முனைய, அதற்கு முன் தேவியும், துர்காவும் அங்கே விரைந்தனர்...

தாத்தா தான் அவரது அறையில் நெஞ்சுவலியில் துடித்துக் கொண்டு இருந்தார்... தேவி கொஞ்சமும் தாமதிக்காது,

"அத்தை... நான் கார் எடுக்கிறேன்... ஹாஸ்பிட்டல் கூட்டிட்டு போகலாம்..." என்று சொல்ல, இருவரும் தாத்தாவை கைத்தாங்கலாய் அழைத்துக் கொண்டு வெளியில் வந்தனர்...

அதற்குள் நாகாவும் அங்கு வந்துவிட்டான்... தாத்தாவின் நிலை அறிந்து அவன் துடித்துப் போனான்... ஆனால் அவனால் ஒன்றும் செய்ய முடியாதபடி அவனின் நிலை இருந்தது... தனது கையறு நிலையை எண்ணி மனம் வெறுத்துப் போனான் அவன்...

"நீங்க வீட்டில் இருங்க நாகா... நான் பார்த்துக்கிறேன்..." என்ற தேவி வாசலில் நின்றிருந்த பெரிய காரில் தாத்தாவை அமர வைத்து விட்டு ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்து கொள்ள, துர்கா மாமனாருடன் பின்னால் ஏறிக் கொண்டார்...

அப்போது தான் நாகாவுக்கு அது ஞாபகத்தில் வந்தது...

"தேவி பத்திரம்..." என்று அவன் சொல்லி முடிக்கும் அவள் காரை அதிவேகமாய்க் கிளப்பி இருந்தாள்...

விருட்டென்று கார் வெளிவாயிலை தாண்டிய வேகத்தில் அவன் திகைத்து போய் நின்றிருந்தான்...

கைத்தேர்ந்த ஓட்டுநர் போல் லாவகமாய்க் காரை ஓட்டிய மனைவியைக் கண்டு அவனது முகத்தில் குழப்பம் தோன்றியது... ஒரு வாரத்தில் கார் கற்று கொண்டவளை போல் அல்ல அவளது செய்கை...

குழப்பமாய் நின்றிருந்தவனுக்கு அப்போது தான் அது மூளையில் உறைத்தது...

எப்போதும் மருண்ட விழிகளுடன் தன்னை நோக்கும் அவன் மனைவி தேவி இவள் இல்லை என்பது... இந்தத் தேவியின் தைரியம், ஆளுமை எல்லாம் அவனுக்குப் புதிதாய்த் தெரிந்தது...

விடை தெரியா கேள்விகள் பல அவனது மனதில் சடுதியில் எழுந்தது அந்தக் கணம்...

சதி தொடரும்...

கார் சென்ற திசையைப் பார்த்துக் கொண்டு அப்படியே நின்றிருந்தான் நாகார்ஜூன்... சிறிது நேரத்தில் காலில் லேசாக வலியெடுக்க உள்ளே வந்து சோபாவில் அமர்ந்தான்...

மனைவியின் இந்தப் புதிய முகம் அவனுள் பெரும் திகைப்பை ஏற்படுத்தி இருந்தது...

'ஏன் இதற்கு முன் அவளின் தைரியத்தின் அளவு எந்தளவு என்பது உனக்குத் தெரியாதா என்ன...?' அவனின் மனசாட்சி அவனைப் பார்த்து எள்ளி நகையாடியது...

அதில் அவனையும் அறியாது மனைவி தன்னை நாளிதழில் கேவலப்படுத்தி அவமானப்படுத்தியது ஏனோ தேவையில்லாமல் அவனது நியாபகத்தில் வந்து அவனின் மனதில் பெரும் புயலை கிளப்பியது...

ஒருவேளை தாத்தாவின் உடல்நிலையை அறிந்து அந்த மாதிரி வேகமாய்ச் சென்று இருப்பாளோ என்று கூட அவன் தனது மனதினை சமாதானப்படுத்திப் பார்த்தான்... அவனுக்கே தெரியும் அது பாசாங்கான சமாதானம் தான் என்று...

மனதில் ஏதேதோ யோசனைகள் ஆக்கிரமித்தது... கண்களை மூடி யோசித்தபடி அமர்ந்திருந்தான்...

அந்நேரம் வீட்டின் தொலைப்பேசி அழைத்தது... கைகள் அது பாட்டிற்குத் தொலைப்பேசியை எடுத்தது...

"நாகா... தாத்தாவுக்கு மைல்ட் அட்டாக்காம்... ஆனா பயப்பட்ட மாதிரி எதுவும் இல்லை..." அவனது மனைவி தான் நியாபகமாய் அவனுக்கு அழைத்து விசயத்தைக் கூறினாள்...

அத்தனை நேரம் இருந்த குழப்ப மனநிலையைத் தள்ளி வைத்தவன், "நான் வேணும்ன்னா அங்கே கிளம்பி வரவா..."

"இல்லை வேண்டாம்... மாமாவுக்கு ஃபோன் பண்ணி விசயத்தைச் சொன்னதும் அவங்க வந்துட்டாங்க... எனக்குமே இங்கே வேலை இல்லை..."

"சரி... பார்த்துக்கோ..." என்றவன் தொலைப்பேசியை வைத்துவிட்டு மணியைப் பார்த்தான்...

கிட்டத்தட்ட ஒரு மணி நேரமாக அவன் யோசித்துக் கொண்டு அமர்ந்திருக்கிறான் அதுவும் தாத்தாவின் உடல்நிலையைப் பற்றிக் கூடக் கவலைப்படாமல்... அவனுக்கே தன்னைக் குறித்து வெட்கமாக இருக்க மெல்ல எழுந்து மேலே இருந்த தனது அறைக்குச் சென்றான்...

மாடிப்படி ஏறியதில் மீண்டும் கால் வலியெடுக்கு ஆரம்பிக்க, அப்போது தான் நியாபகம் வந்தது காலையில் தான் மாத்திரை உட்கொள்ளாதது... எப்போதும் தேவி தான் அவனுக்கு வேண்டிய மாத்திரையை எடுத்துக் கொடுப்பது வழக்கம்... இன்று தாத்தாவுக்கு உடம்பு சரியால்லாமல் போனதால் அந்தப் பதட்டத்தில் அவள் அதை மறந்து சென்றுவிட்டாள்...

மாத்திரையை மனைவி எங்கே வைத்திருக்கிறாள் என்று அவன் அங்கே இருந்த மேசை மீது தேடினான்... அங்கு இல்லை... கண்களை அறை முழுவதும் ஓட்டி வேறு எங்கும் வைத்திருக்கிறாளா என்று பார்த்தான்... ம்ஹூம் எங்கும் இல்லை...

ஒருவேளை அவளது அலமாரியில் வைத்திருப்பாளோ என்று யோசனையுடன் அவளது அலமாரியை திறந்தான்... இதுநாள் வரை அவளது உடைமைகளை அவன் ஆராய்ச்சி செய்து பார்த்தது கிடையாது... அதனால் முதன்முறையாக அன்று தான் அந்த அலமாரியை திறந்து பார்க்கிறான்...

நியாபகமாய் எடுத்து கொடுப்பதற்கு வசதியாக அவளது அலமாரியில் தான் மாத்திரையை வைத்திருந்தாள்... தனக்குத் தேவையானவற்றைச் சரி பார்த்துக் கையில் எடுத்தவன் தனக்கு வேண்டிய மாத்திரையைத் தவிர்த்து அங்கு வேறு ஒரு வகை மாத்திரையும் நிறைய இருப்பதைக்

கண்டான்... அதுவும் கிட்டத்தட்ட அறுபது மாத்திரையாவது இருக்கும்...

என்ன இது...? என்று நினைத்தபடி அதைக் கையில் எடுத்துப் பார்த்தான்...

இவ்வளவு மாத்திரை சாப்பிடும் அளவுக்கு அவளுக்கு உடலில் அப்படி என்ன பிரச்சினை...? ஒருவேளை தீர்க்க முடியாத நோயாய் இருக்குமோ... அந்த நினைவு வந்ததும் அவனது மனதின் சஞ்சலம் எல்லாம் மறைந்து மனதில் ஒருவித நடுக்கம் வந்து குடியேறியது...

வேகமாய்த் தனது அலைப்பேசியை எடுத்து அந்த மாத்திரையின் பெயரை அடித்து அதைக் கூகுள் ஆண்டவரிடம் தேடச் சொல்லி கேட்க... அவர் கொடுத்த விடையோ அவனது தலையில் லாரி லாரியாய் நெருப்பை அள்ளி கொட்டியது...

ஏனெனில் அந்த மாத்திரை கரு உருவாகாமல் தடை செய்யும் கர்ப்பத்தடை மாத்திரை...

நாகா செயலிழந்து போனவனாய் கட்டிலில் அமர்ந்தான்... அவனால் இந்த விசயத்தை ஜீரணிக்கவே முடியவில்லை... தலையைக் கையில் பிடித்துக் கொண்டு அப்படியே அமர்ந்திருந்தான்... மனைவியின் மறுபக்கம் அவனுக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்து இருந்தது...

எந்த இடத்தில் அவனது காதல் பொய்த்துப் போனது அது அவனுக்கே தெரியவில்லை...

'அப்படி என்றால் அன்று அந்தக் கரு கலைந்ததும் அவள் திட்டமிட்டு செய்த சதி தானோ...' என்று நினைத்தவனுக்கு அந்த நினைவே பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது...

அவள் இப்படி எல்லாம் செய்ய வேண்டும் என்றால் இதற்கு என்ன அர்த்தம்...? அவனைப் பிடிக்கவில்லை, அவனது வாரிசை சுமக்க பிடிக்கவில்லை என்று தானே அர்த்தம்... அப்படி என்றால் இன்னமும் அவள் தன்னைப் பழிவாங்க தான் நினைக்கிறாளா...?

அப்படி அவள் பழிவாங்கும் அளவுக்கு அவன் செய்த தவறு தான் என்ன... அவளைக் காதலித்ததைத் தவிர அவன் வேறு எந்தத் தவறும் செய்யவில்லையே...

ஏனோ அந்தச் சமயம் அவனது மனையாளின் காதல் ததும்பிய விழிகள் அவன் கண்முன் வந்து போனது... அதை நினைக்கவே பிடிக்காதவன் போல் கண்களை இறுக மூடி கொண்டான்...

அவளின் நினைவுகளை அவ்வளவு சீக்கிரத்தில் அவனால் விரட்டி விட முடியுமா என்ன...? மீண்டும் மீண்டும் அவளது கனிவான முகம் நினைவில் எழுந்து அவனை வேதனையில் ஆழ்த்தியது...

அவனது காதல் கொண்ட மனமோ அந்த வேதனையின் வலி தாங்காது துடித்துத் தவித்தது...

'எப்படிடி உனக்கு மனசு வந்தது...? இப்படி என்னை நம்ப வைத்து கழுத்தறுப்பதற்கு...? இதற்கு நீ என்னை ஒரேடியாய் கொன்று இருக்கலாமே... அதை விட்டு விட்டு எனக்கு இவ்வளவு பெரிய பாதகத்தை நீ செய்திருக்கத் தேவையில்லையே... உயிர் கூட ஒரு நொடியில் போய்விடும்... ஆனால் நீ செய்த காரியத்தின் விளைவு என் காதல் மனதை உயிருடன் துடிக்கத் துடிக்கக் கொன்று தாங்கொண்ணா வலியை தருகிறதே...' மனதில் மருகியவன் கண்கள் கரித்தது...

'ச்சே... என்ன இது... அவள் இப்படிச் செய்ததுக்கு நான் ஏன் அழ வேண்டும்...? நான் விடும் கண்ணீருக்கு கொஞ்சமும் யோக்கியதை இல்லாதவள் அவள்... போயும் போயும் அவளுக்காக நான் கண்ணீர் சிந்துவதா...'

முயன்று கலங்கிய தனது கண்களைக் கட்டுப்படுத்திக் கொண்டான்...

அன்றும் அப்படித்தான் அவனைக் காதலிப்பது போல் நடித்து அவனை முற்றிலும் நம்ப வைத்து

ஏமாற்றிவிட்டாள்... இன்றும் அதே போல் நடித்து அவனை ஏமாற்றிக் கொண்டு இருக்கிறாள்...

இதற்கு மேல் அவளை நம்ப அவன் ஒன்றும் முட்டாள் இல்லையே...

மீண்டும் மீண்டும் அவளிடம் காதல் கொண்டு தன் காதல் சிறுமை அடைவதை அவனால் தாங்கி கொள்ள முடியவில்லை...

காதலில் மனம் போன வழியில் தான் போக வேண்டும்... ஆனால் அங்குக் காதலே இல்லை என்றான பின் அறிவின் வழியில் போவது தான் நல்லது என்று அவனுக்குத் தோன்றியது...

அவன் மனதில் இருந்த காதல் கொஞ்சம் கொஞ்சமாய்ச் செத்து போய் அவனின் தன்மானம் தலை தூக்கியது... இதற்கு மேலும் அவளுடன் தான் வாழ வேண்டுமா...? என்கிற மிகப் பெரிய கேள்வி அவனது மனதில் எழுந்து அவனைச் சில தீர்க்கமான முடிவுகளை எடுக்க வைத்தது...

மனைவியின் வருகைக்காக அடக்கப்பட்ட ஆத்திரத்துடன் அவன் காத்திருந்தான்...

இந்த விசயம் அவன் மனதை ஆக்கிரமித்து இருந்ததில் அவள் லாவகமாய்க் காரை ஓட்டி கொண்டு போன விசயம் பின்னுக்குச் சென்றுவிட்டது... அதை மட்டும் அவன் நினைத்து பார்த்து இருந்தால் அவளது செய்த மற்ற காரியங்களும் அம்பலத்துக்கு வந்திருக்கும்...

சிறிது நேரத்தில் அறைக்கதவு திறக்கும் ஒலி கேட்டது... கேட்டும் நாகா திரும்பி பார்க்கவில்லை... நேர்ப்பார்வையாய் பார்த்தபடி சிலையாய் அமர்ந்திருந்தான்...

"நாகா..." என்றபடி அவன் முன் வந்து நின்ற தேவியின் கையில் அவனுக்கான மதிய உணவு தட்டு இருந்தது...

"ஒரு மணியாச்சு... சாப்பிடறீங்களா நாகா...?" என்றபடி அவள் தட்டில் இருந்த உணவை கையில் எடுத்தாள்...

சரியாய் அந்த நொடி நாகா அந்தத் தட்டை தட்டி விட்டு இருந்தான் ஆவேசத்துடன்... தேவி திகைத்து போய் விழித்தாள் கணவனது செயலுக்கான காரணம் தெரியாமல்...

கண்கள் சிவக்க ஆக்ரோசத்துடன் தன்னைப் பார்த்த கணவனைக் கண்டு அவளது நாக்கு மேலண்ணத்தில் ஒட்டி கொண்டது... பயத்தில் அவளுக்குப் பேச வாய் வரவில்லை...

"என்னடி இது...?" அவள் முன் அந்த மாத்திரைகளைக் காட்டி ஆங்காரமாய் அவன் கேட்க...

புரியாது அவனது கையைப் பார்த்தவள் அதிர்ச்சியில் பின்னால் ஓரடி நகர்ந்தாள்...

"கேட்கிறேன்ல்ல சொல்லுடி..." மீண்டும் கேட்டவனிடத்தில் அவள் என்னவென்று சொல்வாள்...

"ச்சீ... நீ எல்லாம் ஒரு பெண்ணாடி..." அருவருப்பில் முகத்தைச் சுளித்தவன் அந்த மாத்திரையை அவளது முகத்தில் விட்டெறிந்தான்...

மெல்லிய அலுமினிய காகிதத்தில் செய்து இருந்த அந்த மாத்திரையின் உறை லேசாக அவளது கன்னத்தைக் கீறிக் கொண்டு கீழே விழுந்தது...

அந்தக் கீறலில் லேசாக இரத்தம் துளிர்க்க, அதைக் கண்டு அவனது மனம் துடித்தது அந்த வேதனையான நேரத்திலும்...

அவனுக்கே அவனது மனம் போகும் பாதை புரியவில்லை... ஆனாலும் அவளது துரோகத்தை அவனால் மறக்க முடியவில்லை...

அவளுக்குச் சிறு காயம் ஏற்பட்டதையே அவனால் தாங்கி கொள்ள முடியவில்லை... ஆனால் இந்த ராட்சசி உயிரும்

சதையுமாய் இருந்த அவனது குழந்தையைக் கொன்று இருக்கிறாளே... அவளது மனம் என்ன இரும்பில் செய்ததா...

அதை நினைத்து நினைத்து அவனது மனதில் ஆத்திரம் எழுந்தது...

"இன்னமும் என்னைப் பழிவாங்க நினைக்கிற உன் குணம் மாறலை இல்ல... அப்படி என்னடி நான் உனக்குத் துரோகம் பண்ணினேன்... என்னை இந்தளவுக்குக் காயப்படுத்தற...? என்னை நீ என்ன பண்ணி இருந்தாலும் நான் சரின்னு போயிருப்பேனே... இவ்வளவு ஏன் என் உயிரை கேட்டால் கூடச் சந்தோசமா உனக்குக் கொடுத்து இருப்பேன்... ஆனால் நீ என்னோட வாரிசை..." மேலே பேச முடியாது அவனது தொண்டை அடைத்தது...

அதை விட அவனது வார்த்தைகள் கேட்டு அவளது மனதிலும் துக்கம் நெஞ்சை அடைத்தது... அவளால் அவனை மறுத்து ஒரு வார்த்தை கூற முடியவில்லை... ஏனெனில் அவன் கூறுவது அத்தனையும் உண்மையல்லவா...

"அது என்னடி உனக்குப் பாவம் பண்ணிச்சு... இப்படிக் கர்ப்பத்திலேயே அதை அழிக்கிற அளவுக்கு...?"

அவன் கூறிய குற்றச்சாட்டை மறுக்கும் வகையறியாமல் அவனைப் பார்த்தபடி நின்றிருந்தாள்... ஆனால் அவளின் வார்த்தைக்குப் பதிலாக அவளது கண்ணீர் அவனுக்குப் பதில் சொல்லியது... ஆனால் அந்த மௌனக் கண்ணீரை உணர்ந்து கொள்ளும் திறனை இழந்திருந்தான் அவன்... ஒருவேளை மனதில் காதல் இருந்து இருந்தால் அதை உணர்ந்திருப்பானோ என்னவோ... அந்தக் காதலை தான் அவள் கொன்றுவிட்டாளே...

"இப்பவும் என் குழந்தையைச் சுமக்க கூடாதுன்னு நீ இந்த மாத்திரையைச் சாப்பிட்டுட்டு இருக்கிற... இதை விட அசிங்கமா என் காதலை யாராலும் கொச்சைப்படுத்த முடியாது... நீ கேவலப்படுத்திட்டே... ஆனா இதுக்கு

மேலேயும் நீ என்னைக் கேவலப்படுத்த நான் விட மாட்டேன்..." என்றவனை மனதில் எழுந்த அச்சத்துடன் திகைப்பாய் பார்த்தாள் அவள்...

"என் வாழ்க்கையில் இருந்து நீ விலகி போயிரு..." என்றான் அவளது முகத்தைப் பார்க்க பிடிக்காது...

"நான் போக மாட்டேன்..." அதற்கு மட்டும் பதில் சொன்னவளை கண்டு ஆவேசமாய் அவள் அருகில் வந்தவன் அடுத்த நொடி அவளது கழுத்தில் கையை வைத்து நெறித்து இருந்தான்...

"என்னைக் கொலைக்காரனா மாத்தறுதுக்கு முன்னாடி நீ இங்கே இருந்து போயிரு... இல்லை உன்னைக் கொல்ல கூட நான் தயங்க மாட்டேன்..." மேலும் மேலும் அவளது கழுத்தை அவன் நெறிக்க...

"அப்படியாவது நீங்க என்னைக் கொன்னு போட்டுருங்க... நிம்மதியா செத்து போறேன்..." என்று கண்ணீர் விட்டு அழுதவள் பின் ஒரு முடிவுடன் தன் கண்ணீரை துடைத்துக் கொண்டு,

"நான் இந்த வீட்டை விட்டு போறதா இருந்தா என் பிணம் தான் போகும்..." உறுதியான குரலில் அழுத்தமாய்ச் சொன்னவளை கண்டு அவனது கை தானாய்த் தளர்ந்தது...

'பிணம்' என்ற வார்த்தையில் அவனது காதல் மனம் அவளுக்காகத் துடித்தது... அந்தக் கணம் அவனுக்கு ஒன்று புரிந்தது அவள் என்ன தான் அவனைத் துன்புறுத்தினாலும் அவனது காதல் கொஞ்சமும் குறையப் போவதில்லை என்று...

தவறான ஒருத்தியிடம் காதல் கொண்ட தன் மனதினை அடக்கும் வகையறியாது, அதே சமயம் அவளை ஏற்றுக் கொள்ளும் வழியறியாது அவன் தான் திக்குமுக்காடி போனான் மனதளவில்...

அவன் வளர்ந்த விதம் அவளின் கழுத்தை பிடித்து வெளியில் தள்ள வைக்க முடியவில்லை...

அதற்கு மேல் அங்கிருக்கவே அவனுக்குப் பிடிக்கவில்லை... அதை விட அவள் முகத்தில் விழிப்பது பாவம் என்றே கருதினான்...

தன் காலின் எலும்பு முறிவை கூட மறந்தவனாய் வேகமாய்ச் செல்ல எண்ணி திரும்பியவன் உடனே, "அம்மா..." என்று தீனமான குரலில் முனங்கினான்...

வலியில் உயிர் போயிற்று அவனுக்கு...

"என்னங்க... பார்த்து..." தேவி அவன் அருகில் வந்து அவனைத் தாங்கி பிடிக்க...

"தொடாதே..." என்று அவளைப் பிடித்துத் தள்ளியவன், "நீ தொட்டா எனக்கு அருவருப்பா இருக்கு..." முகத்தை அருவருப்பாய் சுளித்தபடி அவன் வெளியில் சென்றுவிட்டான்...

கணவனது அருவருப்பு மிகுந்த முகம் கொடுத்த வேதனையை விட அந்த அருவருப்பையும் மீறி கால் வலியில் அவனது முகத்தில் தெரிந்த வேதனை அவளுக்கு மிகவும் வலித்தது...

கண்களில் கண்ணீர் பொங்கி கொண்டு வர அதைத் துடைக்கும் எண்ணம் கூட இல்லாமல் அழுது கரைந்து கொண்டு இருந்தாள் அவள்...

என்றாவது ஒரு நாள் கணவன் தன்னை வெறுக்கக் கூடும் என்று நினைத்தவள் தான்... ஆனால் அவனது வெறுப்பு இந்தளவுக்குத் தாங்க முடியாத வேதனையைக் கொடுக்கும் என்று அவள் எண்ணி பார்க்கவே இல்லை... உயிரை உருக்கி பிழிவது போல் மிகவும் கொடூரமாய் அது வலித்தது...

கானல் நீராய் போன கணவனின் காதலை எண்ணி எண்ணி அந்தப் பேதையவள் மனதிற்குள் மருகி போனாள்...

கீழே வரவேற்பறையில் வந்தமர்ந்த நாகாவோ சொல்லொண்ணா துயரத்தில் இருந்தான்...

அவன் தேவி மேல் காதல் கொண்ட நிகழ்வுகள் அனைத்தும் படம் போல் அவனது மனதில் ஓடியது...

பார்த்த கணத்தில் இருந்து அவளைத் தான் காதலித்தது, அடுத்த இரண்டு நாட்களில் தன் காதலை அவளிடத்தில் சொல்லியது, அடுத்து வந்த ஒரு மாதத்தில் அவளுடன் ஈருடல் ஓருயிராய்க் கலந்தது எல்லாம் அவனது நினைவில் எழுந்து அவனைப் பெரும் துயரத்தில் ஆழ்த்தியது...

அன்று முதல் இன்று வரை அவன் அவளை என்றுமே புரிந்து கொள்ள முற்பட்டது இல்லை... எல்லாமே ஒருவித அவசரகதியில் நடந்து முடிந்துவிட்டது... அது தான் அவன் செய்த ஒரே தவறு...

அதுவும் அவன் திருமணம் நடந்து முடிந்த சூழ்நிலையை எண்ணி பார்த்தவனுக்கு அப்படி ஒரு வேதனை மனதில்...

அன்று மட்டும் அவன் சமயோசிதமாகச் செயல்பட்டு இருக்காவிட்டால் இந்தச் சமூகத்தில் அவனது அடையாளம் காமக் கொடூரனாய் மாறியிருக்கும்... அதற்குக் காரணமான மனைவி மீது அன்று வராத ஆத்திரம் இன்று வந்தது அவனுக்கு...

அன்று தேவியின் விருப்பத்தை நிறைவேற்றிய மறுநாளே அவன் பதிவு திருமணத்திற்கு விண்ணப்பிக்க வேண்டி அவளிடம் கையெழுத்து கேட்ட போது அவள் என்ன ஏது என்று கூட யோசியாது அதை வாசித்துக் கூடப் பார்க்காது கையெழுத்து போட்டுக் கொடுத்த போது அந்தக் கணம் அவன் தான் எத்தனை மகிழ்ந்து போனான்... அவளுக்குத் தன் மீது எத்தனை நம்பிக்கை, எத்தனை காதல் என்று பூரித்துக் கூடப் போனானே...

ஆனால் அந்த நம்பிக்கையை, காதலை அவள் உடைத்த போதும் அவனால் அவள் மேல் கோபம் கொள்ள

முடியவில்லை... அப்போதும் அவள் தான் வேண்டும் என்று அவளை மணந்து கொண்டான்...

இதற்கு எல்லாம் அடிப்படை காரணம் அவள் மீது அவன் வைத்த மாசற்ற காதல் தான் என்பதை அவள் இன்று வரை புரிந்து கொள்ளவில்லையே...

புரிந்து கொள்ளாத ஒருத்திக்கு அதைப் புரிய வைக்கவும் அவனுக்கு விருப்பம் இல்லை... இனியும் காதலில் ஏமாளி பட்டம் வாங்க அவனுக்கு விருப்பம் இல்லை...

*************************

மதியம் தாத்தாவுக்கு உணவு எடுத்துக் கொண்டு சென்ற தந்தையிடம் தானும் வருவதாகக் கூறி அவருடன் சென்றுவிட்டான் வீட்டில் இருக்கப் பிடிக்காமல்...

அன்று இரவு பெற்றோரை வீட்டிற்குப் போகச் சொன்னவன் தாத்தாவுடன் தான் தங்கி கொண்டான்... அவருக்கு என்று பெரிதாக உதவிகள் ஏதும் செய்யத் தேவையில்லை அதனால் தான் சமாளித்துக் கொள்வதாகக் கூறி அவர்களின் வாயை அடைத்தான்...

அன்றிரவு கணவன் வீட்டிற்கு வராததை உணர்ந்தவளுக்குப் பெரும் துக்கமாய் இருந்தது...

பாலைவன மழையாய் அவளது வாழ்வில் வந்து அவளுக்கு அளப்பரிய மகிழ்ச்சியை அளித்தவன் இன்று யாரோ போல் அவளை வெறுத்து ஒதுக்கியது கண்டு மனம் வலித்தது...

ஆனாலும் அவன் பக்கம் இருக்கும் நியாயம் அவளுக்குப் புரியத்தான் செய்தது... எந்தவொரு ஆண்மகனாய் இருந்தாலும் அவள் பண்ணிய காரியத்திற்குக் கோபம் கொள்வான் தான்...

ஆனால் அவளுக்கு இதைத் தவிர வேறுவழியும் தெரிந்து இருக்கவில்லை... என்னைக்கு இருந்தாலும் அவனது வாழ்க்கையில் இருந்து விலக வேண்டியவள் அவள்... அது

இன்றே நடந்து முடிந்திருக்கிறது அவ்வளவே என்று மனதை தேற்றி கொண்டாள்...

என்ன தான் மனதை தேற்றி கொண்டாலும் மனதில் இருந்த வேதனை முற்றிலும் மறையவில்லை... இரவெல்லாம் உறங்காமல் கண்ணீர் வடித்துக் கொண்டு இருந்தாள் அவள்...

அங்கே அவனும் அப்படி ஒரு மனநிலையில் தான் இருந்தான்...

மறுநாள் தாத்தாவை வீட்டிற்கு அழைத்து வந்த பின்னர் நாகா வீட்டில் இருக்கும் நேரத்தை வெகுவாய் குறைத்துக் கொண்டான்... ஒரு நாளில் முக்கால்வாசி நேரத்தை அலுவலகத்தில் கழித்தான்... சில நாட்கள் அலுவலகத்தில் தங்கவும் செய்தான் வேலையைக் காரணம் காட்டி...

"உன் கால் இருக்கும் நிலைமையில் நீ இப்படி அலைவது எனக்குக் கஷ்டமா இருக்குப்பா..." சேஷாத்திரி கூட மகனை தடுத்து பார்த்தார்...

ஆனால் மகன் அதைக் கேட்கவில்லை...

"அங்கேயும் உட்கார்ந்து தான் வேலை செய்யப் போகிறேன்..." என்று அவரைச் சமாளித்து விட்டான்...

அப்படியே அவன் வீட்டில் இருந்தால் கவனமாக மனைவியை நேருக்கு நேர் பார்ப்பதை தவிர்க்க ஆரம்பித்தான்... அதை உணர்ந்தார் போன்று தேவியும் அவன் இருக்கும் போது அறைக்குள் வருவதில்லை... அப்படியே வந்தாலும் பால்கனியில் போய் இருந்து கொள்வாள்...

இரவில் அவன் உறங்கிய பின்னர் உறங்க வருபவள் காலையில் அவன் எழும் முன் எழுந்து சென்றுவிடுவாள்... அதுவே அவனுக்குப் பெருத்த நிம்மதியாய் இருந்தது... இந்த மட்டும் அவள் தன் மனதை புரிந்து நடந்து கொள்கிறாளே என்றிருந்தது...

பெரியவர்கள் முன்னிலையில் அத்தியாவசிய பேச்சுக்களைத் தவிர வேறு எதையும் இருவரும் பேசி கொள்ளவில்லை... அதனால் அவர்களுக்குச் சந்தேகம் வராமல் இருந்தது...

அதை விட இதை நினைக்க முடியாதபடி நாகாவிற்கு அலுவலகத்தில் பல வேலைகள் காத்துக் கொண்டு இருந்தது...

அடுத்து வந்த நாட்களில் அவனின் கால் கட்டு பிரிக்கப்பட்டு அவனால் ஓரளவு இயல்பாய் நடக்க முடிந்தது... வெகு நாட்களுக்குப் பின் நாகாவின் மனதில் சிறு சந்தோசம் எழுந்தது... இனி யாரின் உதவியும் அவனுக்குத் தேவையில்லை அல்லவா...

அன்று விவேக் அலுவலகம் வந்த போது நாகா அவனைத் தனியாக அழைத்தான்...

"ஏதாவது முன்னேற்றம் தெரியுதா விவேக்...?"

"இன்னும் அப்படியே தான்டா இருக்கு... நம்பிக்கையோடு இரு... எல்லாம் நல்லபடியாக நடக்கும்..."

விவேக் சொன்னதைக் கேட்டு அவனது முகம் சிந்தனையில் ஆழ்ந்தது...

"எல்லாம் சீக்கிரம் முடிந்தால் நல்லாயிருக்கும்..." என்ற நாகா விவேக்கை அனுப்பிவிட்டு யோசனையில் ஆழ்ந்தான்...

இன்னும் சில தினங்களில் அவன் மீண்டும் அமெரிக்கா செல்லவிருக்கிறான்... அதற்கான ஏற்பாட்டைக் கூட அவன் செய்துவிட்டான்... இன்னமும் வீட்டில் சொல்லவில்லை... சொன்னால் தேவியையும் உடன் அழைத்துச் செல்ல சொல்லி வற்புறுத்துவார்கள்... அந்த யோசனையே அவனுக்கு அறவே பிடிக்கவில்லை...

அவளைப் பார்க்க பிடிக்காமல் தானே அவன் அமெரிக்காவுக்குச் சென்று ஓடி ஒளிவது... அதுவும்

அவனுக்குப் பிடித்தமான பத்திரிக்கையைத் தொழிலை கூட விட்டு விட்டு... அந்தளவுக்கு அவனது மனதின் காதலை அவள் துடிக்கத் துடிக்கக் கொன்று இருந்தாள்... அந்த வலி இந்த ஜென்மத்தில் போகும் என்று தெரியவில்லை... அதனால் தான் அவளை விட்டு விலகி செல்ல அவன் முடிவு செய்துவிட்டான்...

ஒரு பெண்ணுக்கு அஞ்சி இப்படி வனவாசம் போல் ஓடி ஒளிவது அவனுக்கே சற்று அவமானமாகத் தான் இருந்தது... ஆனால் அவனுக்கு இதைத் தவிர வேறுவழியில்லை...

ஏனோ இன்று பெரும் பாரம் ஒன்று மனதை அழுத்தியது... இரவு வீட்டிற்குப் போகும் முன் அவனையும் அறியாது அவனது இருசக்கர வாகனம் மதுபான விடுதியை நோக்கி சென்றது... அங்குத் தனக்குத் தேவையானதை வாங்கிக் கொண்டு வீட்டிற்குக் கிளம்பினான்...

பெற்றோர் முன் குடித்துவிட்டுப் போதையில் தள்ளாடி கொண்டு போவதை எண்ணி வெறுத்தவனாய் அந்தக் கர்மத்தை குடிக்காமல் கையில் வாங்கிக் கொண்டு சென்றான்...

எல்லா வேலைகளையும் முடித்துக் கொண்டு அறைக்குள் நுழைந்தவன் எதிர்பாராமல் அங்கிருந்த மனைவியைக் கண்டு திகைத்துப் போனான்...

அவன் வாங்கிக் கொடுத்த புடவையில், தலையில் வைத்த பூச்சரம் இரு தோள்களில் தழுவி வழிய அவள் நின்றிருந்த அழகு தோற்றம் அவனின் மனதை மயக்கத்தான் செய்தது...

'பாம்பு கூட அழகு தான்... அதற்காக அதோடு விளையாட முடியுமா...? கடைசியில் அது தன் வேலையைக் காட்டி விடும்... அது போல் தான் இவளும்...' மனதுக்குள் கசப்பாய் நினைத்தவன் மது பாட்டிலை திறந்து கொண்டு அமர்ந்தான்...

அவனது செயலை திகைப்பாய் பார்த்த தேவி அதைத் தடுக்கும் வகையறியாது வேதனையோடு கணவனைப் பார்த்துக் கொண்டு இருந்தாள்...

அவளுக்குத் தெரியும் வெளிநாட்டில் வளர்ந்தவன் என்றாலும் கணவனுக்கு எந்தவொரு கெட்டப் பழக்கமும் கிடையாது என்று... அப்படிப்பட்டவன் இன்று இதைச் செய்கிறான் என்றால்...? அதற்கு அவள் தானே காரணம்...

கண்களில் கண்ணீர் வெள்ளமென உடைப்பெடுத்துக் கொண்டு வழிந்தது...

அவன் அவளைக் கண்டு கொள்ளவே இல்லை... அவளின் அழகினால் எழுந்த தாபத்தை அந்த மதுவில் கரைக்க முயன்று கொண்டு இருந்தான்...

என்ன தான் வீரப்பாய் அவளிடம் பேசினாலும் அவளைக் காணும் போது எல்லாம் எழும் அவனது தாப உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் வகையறியாது தவிப்பது அவனுக்கு மட்டும் தான் தெரியும்... அத்தோடு அவனது உணர்வுகளுக்கு உயிர் கொடுக்க அவளால் மட்டும் தானே முடியும்...

அந்தளவுக்குத் தான் அவளிடம் அடிமைப்பட்டு இருக்கிறோமா என்கிற எண்ணமே அவனை உயிரோடு தகிக்கச் செய்ய அவன் உள்ளே தள்ளும் மதுவின் அளவும் கூடி கொண்டே போனது...

"போதுமே..." வேறுவழியின்றி அவனைத் தடுக்க நினைத்து அவள் தான் வலிய சென்று அவனிடம் பேசினாள்...

அதற்குப் பதில் பேசாது அவளை முறைத்து பார்த்தவன் மீண்டும் கோப்பையில் இருந்த மதுவை வாயில் சரித்தான்...

"என் மேலுள்ள கோபத்தில் நீங்க உங்க உடம்பை கெடுத்துக்காதீங்க..."

அதில் ஆத்திரத்துடன் எழுந்தவன், "அப்போ உன்னைக் கொல்லவாடி..." என்று ஆவேசமாய்க் கேட்டபடி அவள் அருகே வர... அவளோ மருண்ட விழிகளோடு அவனைப் பார்த்தாள்...

அதைக் கண்டு அவனது ஆத்திரம் இன்னமும் அதிகரித்தது...

"இப்படிப் பார்த்து பார்த்து இனியும் என்னை ஏமாத்தாதே... நடிக்காதேடி..." என்று கத்தியவன் மனதில் அன்று தைரியமாய்ச் செயல்பட்ட தேவி, காரை லாவகமாய் ஓட்டி கொண்டு போன தேவி என்று அவளது புதிய பிம்பங்கள் எழுந்து அவனைக் கொலைவெறியில் ஆழ்த்தியது...

"உண்மையைச் சொல்லுடி... உனக்கு டிரைவிங் தெரியும் தானே...?"

அவன் கேட்ட கேள்வியில் அவளது சப்த நாடியும் அடங்கிப் போனது...

பாவமன்னிப்பு கேட்டால் கூடப் போக்க முடியாத பாவத்தைச் செய்தவளுக்கு அவனிடத்தில் என்ன சொல்லி பாவமன்னிப்பு கேட்பது என்று தெரியாமல் பரிதாபமாய் விழித்து நின்றாள்...

அவளது மனம் அதிவிரைவாய் ஓடும் இரயிலை போல் வேகமாய்த் தடதடத்துத் துடித்தது...

சதி தொடரும்...

தனது நிலை மிகவும் பயங்கரமாய் இருப்பதை உணர்ந்தாள் தேவி... கணவன் கேட்கும் கேள்விக்கு அவளால் என்ன பதில் சொல்ல முடியும்... பதில் தெரிந்தாலும் அதைச் சொன்னால் கணவன் தன்னை நம்புவானா...? அவளுக்குச் சரி என்று தோன்றிய விசயம் அவனின் பார்வையில் அது தவறன்றோ...

இப்படிக் குற்றவாளியாய் அவன் முன் நிற்கும் நிலையை எண்ணி அறவே மனம் வெறுத்தவளாய் அவள் நின்றிருந்தாள்... பூமி இரண்டாய் பிளந்து தான் புதைந்து போய்விட மாட்டோமா என்று மனதுக்குள் மருகியபடி அவள் இருந்தாள்...

"பதில் சொல்லுடி..." கர்ஜித்தவனின் குரலில் அவளது தலை தானாக ஆம் என்று ஆடியது...

"அப்போ டிரைவிங் தெரிஞ்சுக்கிட்டே தான் என்னைப் பழக்கி விடச் சொன்னியா...? நல்லா டிரைவிங் தெரிஞ்ச நீ ஒண்ணும் தெரியாதவள் மாதிரி ஆக்சிடெண்ட் பண்ணி என்னை நம்ப வச்ச பாரு... அந்த நடிப்புல தான்டி நீ நிற்கிற... எதுக்குடி நீ இப்படி எல்லாம் நடிக்கிற...? எதுக்கு என் உயிரை போட்டு இப்படி எடுக்கிற...?"

பேசி கொண்டே வந்தவன் அந்த இடத்தில் சட்டென்று நிறுத்தியவன் அவளைச் சந்தேகமாய்ப் பார்த்தான்... அவனது பார்வையில் அந்த நொடி அவள் உள்ளுக்குள் உயிரோடு மரித்துப் போனாள்...

"உண்மையில் என் உயிரை எடுக்கிறதுக்காகத் தான் அன்னைக்கு ஆக்சிடெண்ட் பண்ண நினைச்சியா...?" அவனது குரலில் உச்சபட்ச அதிர்ச்சி இருந்தது...

அவனால் தான் கிரகித்த விசயத்தை ஜீரணிக்க முடியவில்லை... இருந்தாலும் அவனது இன்னொரு மனம் அப்போதும் 'அப்படி இருக்காது' என்று அவளை இன்னமும் நம்பியது...

அவன் கேட்டதற்குப் பதில் சொல்ல முடியாமல் புடவை தலைப்பால் முகத்தை மூடி கொண்டு அழுதவளின் அழுகை அவள் வாய் திறந்து சொல்லாத பதிலை அவனுக்கு எடுத்து சொல்லியது...

அதைக் கண்டு அவனது மனமும், உடலும் தளர்ந்தது... அதிர்ச்சியைத் தாங்க முடியாது அருகில் இருந்த சுவற்றில் சாய்ந்து நின்றான்...

இவ்வளவு நேரம் ஏற்றியிருந்த போதை முற்றிலும் இறங்கி போயிருந்தது... அவனது முகத்தில் வியர்வை துளிகள் அரும்பத் துவங்கியது... அது நிச்சயம் பயத்தினால் அல்ல... தான் இப்படி ஏமாந்து போய்விட்டோமே என்று மனதில் தோன்றிய பெருத்த ஏமாற்றத்தில் எழுந்த படபடப்பின் விளைவால் துளிர்த்த வியர்வை அது...

தன்னைக் கொல்ல மனைவி முயன்று இருக்கிறாள் என்பதை அறிந்த பின்னும் அவளை அடிக்க அவனது கைகள் எழவில்லை... அவளின் கழுத்தை பிடித்து வெளியில் தள்ள அவனால் முடியவில்லை...

அவளோ அழுகையில் கரைந்து கொண்டு இருக்க, அவனோ நடந்து முடிந்த எல்லா நிகழ்வுகளையும் இணைத்து வைத்து யோசித்துக் கொண்டு இருந்தான்...

"அப்போ அன்னைக்கு ஷாக் அடிச்சது, மாடிப்படியில் உருண்டு விழுந்தது... இதுக்கு எல்லாம் நீ தான் காரணமா...?"

ஆம்... அன்று ஹீட்டர் ஸ்விட்ச் போர்டில் பழுது செய்து வைத்தது அவள் தான்... அது போல் அன்று நாகா செல்வதற்கு முன்னே மாடிப்படியில் எண்ணெய் கொட்டி வைத்ததும் அவள் தான்...

யாரையோ நம்ப வைக்க, கணவனது உயிரை காப்பாற்ற என்று எண்ணி அவள் செய்த முட்டாள்த்தனமான காரியங்கள் இன்று பூதாகரமாய் அவள் முன் எழுந்து

அவளைக் குற்றவாளி கூண்டில் நிற்க வைத்துக் கேள்வி கேட்க வைத்தது...

வாழ்க்கையில் எத்தனையோ அவமானங்களை அவள் அடைந்து இருக்கிறாள் தான்... அப்போது எல்லாம் கூனிக்குறுகாத அவளது உள்ளம் இப்போது கணவன் முன் கூனிக்குறுகி போனது...

"வாயை திறந்து சொல்லுடி..."

அவளின் அமைதி அவனுக்குப் பெருங்கோபத்தை அளிக்க அவளது தோள்பட்டையை இறுக பிடித்துக் கொண்டு உலுக்கினான் அவன்...

தோள்பட்டை இரண்டும் கழன்று விடுவது போல் வலித்தது... மனதின் வலியின் முன் உடலின் வலி அவளுக்கு அத்தனை பெரியதாகத் தோன்றவில்லை...

"ஒருத்தி கட்டின புருசனை கொலை செய்யத் துணிகிறாள் என்றால் ஒண்ணு அவன் கொடுமைக்காரனா, அவளைச் சந்தேகப்படுகிறவனா, கெட்டப்பழக்கங்கள் உள்ளவனா இருக்கணும்... ஆனா நான் அப்படி எந்தவொரு தப்பும் பண்ணலையே..."

அவன் அப்படிக் கேட்ட போது அவனது குரலில் இருந்த பாவனையில் அவளது மனம் 'நான் தான் தப்புப் பண்ணிட்டேன்' என்று ஓவென்று ஓலமிட்டு அழுதது...

"இல்லைன்னா அன்னைக்குச் செய்தித் துணுக்கில் படிச்ச மாதிரி கணவன் நோயில் அவஸ்தைப்படுவதைப் பார்க்க முடியாமல் மனைவி கருணைக்கொலை பண்ணியிருக்கணும்... எனக்கு எந்த நோயும் இல்லையே... அப்படி இருந்தும் நீ இதைச் செய்யத் துணிஞ்சியிருக்கேன்னா..." என்றவன் நிறுத்தி அவளை உறுத்து விழித்தபடி,

"நிச்சயம் இதற்குக் காரணம் கள்ளக்காதலா தான் இருக்கணும்..." உறுதியான குரலில் கூறினான்...

ஆண்களைக் கண்டால் வெறுப்பவள் தன் மனைவி என்பதை அவன் அந்தக் கணம் வசதியாய் மறந்து போனான்...

அவனது வார்த்தையின் வீரியத்தைத் தாங்க முடியாது அவள், "நாகா..." என்று அலறியபடி தனது இரு காதுகளையும் பொத்தி கொண்டாள்...

"பின்னே வேறு என்னடி காரணம் இருந்திர போகுது... என்னைக் கொல்ல நினைச்ச உன்னை எல்லாம் கொல்லாம இன்னமும் உன் கிட்டக் காரண, காரணி கேட்டு பேசிக்கிட்டு இருக்கேன் பார்... என்னைச் சொல்லணும்... என்னை மாதிரி ஒரு கோழை ஆம்பிளை எவனும் இருக்க மாட்டான்..."

அவளை ஒன்றும் செய்ய முடியாமல் தனது கைகளைக் கட்டி போட்டு இருக்கும் அவள் மீதான காதலை அவன் அறவே வெறுத்தான்... தன்னையும் சேர்த்து தான்...

கள்ளக்காதலா என்று கேட்ட பின்பும் அவளால் இன்னமும் அமைதி காக்க முடியவில்லை...

"நான் எல்லாத்தையும் சொல்லிடறேன்..." என்றவள் கண்களைத் துடைத்துக் கொண்டு மேகநாதன் தன்னைக் கடத்தி சென்று மிரட்டியதை ஒன்று விடாமல் சொல்லியவள்,

"அவன் கிட்ட இருந்து உங்களைக் காப்பாத்த எனக்கு வேறு வழி தெரியலை... நான் உங்களைக் கொல்லாத வரைக்கும் அவனும் வேறு எதுவும் முயற்சிக்காம இருப்பான்... அதனால் தான் அவனுக்காக இந்தக் கண்துடைப்பு நாடகத்தை நடத்தினேன்... அவனை நம்ப வைக்கத்தான் இந்த மாதிரி செஞ்சேன்... அப்படி இருந்தும் அவன் என்னை நம்பாம..." மேலே பேச முடியாமல் அவள் அழ...

அடுத்த நொடி நாகாவின் கை அவளது கன்னத்தைப் பதம் பார்த்து இருந்தது... அவனது இத்தனை நாள் பொறுமை காற்றில் பறந்திருந்தது...

"ராஸ்கல்... பொய் மேல பொய்யா சொல்லுற... பிடிப்பட்டதும் பொய் சொல்லி தப்பிக்க நினைக்கிறியா...?" என்றவன் கைகள் ஆத்திரத்துடன் அவளது கழுத்தை நெறித்து இருந்தது...

அவனது கைகளின் அழுத்தம் தாங்காது 'ஹக்' என்ற சத்தம் அவளிடம் இருந்து வெளிப்பட அதில் அவன் தனது கைகளைத் தளர்த்தினான் மிகுந்த வெறுப்புடன்...

"உன் முகத்தில் முழிப்பதே பாவம்டி... இதுக்கு மேல் உன் கூட இருந்தால் தூக்கத்தில் கூட என்னை நீ கொன்னாலும் கொன்னு விடுவாய்..." என்றவன் அறையை விட்டு வெளியேறினான்...

இந்த நேரத்தில் எங்குச் செல்கிறான் என்று பதற்றத்துடன் அவள் அவன் பின்னே ஓடினாள்...

அவள் வரும் முன் அவன் தனது இருசக்கர வாகனத்தைக் கிளப்பிக் கொண்டு சென்றிருந்தான்...

போதையில் வண்டியை எடுத்துச் செல்லும் அவனைத் தடுத்து நிறுத்தும் வழியறியாது அவன் சென்ற திசையைக் கண்ணீர் வழியும் விழிகளுடன் பார்த்தபடி நின்றிருந்தாள் அவள்...

*********************************

அதே நேரம் மேகநாதன் தனது நண்பர் மயில்வாகனத்துடன் சேர்ந்து தாகச் சாந்தியில் ஈடுபட்டு இருந்தார்...

"இன்னும் நீ அந்தப் பயலை உயிரோடு விட்டு வச்சியிருக்கிறது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கலை மேகா..." மயில்வாகனம் போதையில் மனதை அரித்த விசயத்தை அவரிடம் கூறிக் கொண்டு இருந்தார்...

அந்நேரம் மேகநாதனின் அலைப்பேசி அழைத்தது... எடுத்தவர் மறுபுறம் வந்த தகவலில் சிறிது நேரம் யோசித்துவிட்டு,

"இப்போ ஒண்ணும் பண்ண வேண்டாம்..." என்றபடி அதை அணைத்தார்...

"என்னடா நண்பா...?" மயில்வாகனம் அவரைக் கேள்வியாய் பார்க்க...

"அந்த நாகா இந்த நேரத்தில் தனியா பைக் எடுத்துக்கிட்டுப் போறானாம்... அதான் போட்டு தள்ளிடலாமான்னு கேட்கிறான்..."

"ஐயோ... லட்டு மாதிரி சான்ஸ் கிடைச்சிருக்கே மேகா... அதைப் போய் ஏன் வேண்டாம்ன்னு சொன்ன...?"

அதைக் கேட்டு அவர் முகம் தீவிர யோசனையில் ஆழ்ந்தது...

"அவனைப் போடுறது பெரிய விசயம் இல்லை... ஆனா என்னோட துருப்பு சீட்டு ஒண்ணு அவன் கிட்ட மாட்டிக்கிட்டு இருக்கு... அது எங்கே இருக்குன்னு கண்டுப்பிடிச்ச பிறகு தான் அவனைப் போட்டு தள்ளணும்... இல்லைன்னா நாம தான் இதைச் செஞ்சோம்ன்னு தெளிவா தெரிஞ்சிரும்..."

"எத்தனையோ பேரை போட்டு தள்ளியிருக்கோம்... இந்தச் சுண்டைக்காய் பயலை கண்டு நீ இப்படிப் பயப்படுறது சரியில்லை மேகா..." மயில்வாகனம் தனது திருப்தியின்மையை வெளிப்படையாய் காட்டினார்...

மேகநாதனுக்குமே அந்த எண்ணம் மனதில் இருந்து கொண்டு தான் இருக்கிறது... ஆனாலும் புத்திசாலித்தனமாய்த் தனக்குச் செக் வைக்கும் நாகாவிடம் அவருக்குக் கொஞ்சம் பயமாய்த் தான் இருந்தது அவனை நெருங்குவதற்கு...

முள்ளில் விழுந்த புடவையைச் சேதம் இல்லாமல் எடுக்க வேண்டும் அது போல் தான் அவரின் நிலையும்... முதலில் அவர் எந்தவித சேதமும் இல்லாமல் தப்பிக்க வேண்டும்... அதன் பின்னரே அந்த நாகாவிற்குப் பெரும் சேதத்தை விளைவிக்க வேண்டும்...

*****************************

அதற்குப் பின் வந்த நாட்கள் நாகா வீட்டில் தங்குவதை வெகுவாய் குறைத்துக் கொண்டான்... அதிலும் தேவியைச் சுத்தமாய்ப் பார்ப்பதில்லை... அவளும் அவன் வீட்டில் இருந்தால் தூரத்தில் இருந்து பார்ப்பாள் அவ்வளவே... வீட்டில் இருந்தவர்களுக்கு அவர்களின் பிணக்குத் தெரியாமல் போனது அதிசயம் தான்...

அப்படித்தான் ஒரு நாள் வீட்டில் இருந்தவர்களிடம் தான் இன்னும் மூன்று நாட்களில் அமெரிக்கா போவதாக அறிவித்தான் நாகா... அதைக் கேட்டு முதலில் எல்லோரும் மகிழ்ந்தாலும் பின்னர்த் திகைக்கத் தான் செய்தார்கள்...

"தேவியை நீ உன் கூடக் கூட்டிட்டு போகலையாப்பா..." சேஷாத்திரி கேட்டார்...

அதற்குப் பதில் சொல்லாமல் தவிர்த்தால் என்ன ஏது என்கிற கேள்வி வரும்... அதன் பின்னர்த் தங்கள் பிரச்சினை தெரிய வரும்... அது தெரிந்தால் அவனது பயணம் தடைப்படும்... அதனால் அவன் சமாளிப்பாய் பதிலளித்தான்...

"இல்லைப்பா... கொஞ்ச நாள் இங்கே இருக்கட்டும்... நான் அங்குப் போய்ச் செட்டிலாகிட்டு பிறகு கூட்டிட்டு போறேன்..." மனதறிந்து பொய் கூறினான்...

ஏன் இந்தத் திடீர் முடிவு என்று எல்லோர் மனதிலும் தோன்றினாலும் அவன் அமெரிக்கா செல்வதே அவனுக்குப் பாதுகாப்பு என்று எண்ணி அமைதியாக இருந்தனர்... அவர்களுக்கும் அவனைப் பிரிவது வருத்தமாகத் தான் இருந்தது...

கணவன் வெளிநாடு செல்வது குறித்துத் தேவிக்கு ஒரு பக்கம் மகிழ்ச்சியாகத் தான் இருந்தது... இங்கே இருந்து ஆபத்தை விளைவித்துக் கொள்ளாமல் அவன் செல்வதே நன்று என்று தான் தோன்றியது... அப்படியாவது அவன் உயிரோடு நூறு வருடங்கள் நன்றாக வாழ வேண்டும் என்று மனைவியாய் அவளது உள்ளம் இறைவனிடத்தில் வேண்டி கொண்டது...

அதே சமயம் காதல் கொண்ட அவள் மனது அவனைப் பிரிந்து இருப்பது எவ்வளவு பெரிய துன்பம் என்று எண்ணி இப்போதே வேதனை கொள்ள ஆரம்பித்தது...

அன்று அலுவலகத்தில் நாகா வேலையாக இருந்த போது பிரகாஷ் அவனைப் பார்க்க வந்திருந்தான்... அவனுக்குப் பிரகாஷை பார்க்கவே பிடிக்கவில்லை... அவன் பெயரை கேட்கும் போதே அவன் மனைவி அவனுக்குச் செய்த துரோகங்கள் தான் அவனின் நியாபகத்திற்கு வந்தது...

இப்போது பார்க்க முடியாது என்று சொல்லி அனுப்பிவிட்டான்... ஆனால் பிரகாஷோ அவனைப் பார்த்துவிட்டு தான் போவேன் என்று பிடிவாதமாய்ச் சொன்னவன் அங்கேயே காத்திருக்க ஆரம்பித்தான்...

மதிய உணவு இடைவெளியின் போது நாகாவின் வேலைப்பளு சிறிது குறைந்ததும் அவனின் அனுமதி வேண்டாமலே பிரகாஷ் அவனின் அறைக்குள் நுழைந்தான்...

"நான் தான் உன்னைப் பார்க்க பிடிக்கலைன்னு சொல்றேனே...அப்புறமா எதுக்குப் பார்க்க வந்த...?" பிரகாஷின் முகத்தைப் பார்க்க பிடிக்காது மேசை மீது இருந்த கணினி மீது பார்வையைப் பதித்தபடி நாகா கேட்டான்...

"நான் உன் கிட்ட முக்கியமான விசயம் பேச வந்திருக்கேன்..." என்ற பிரகாஷ் நாகாவின் அனுமதியின்றி அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தான்...

அதைக் கண்டு கோபமாய் நாகா அவனைப் பார்க்க... அதை அவன் கண்டு கொள்ளவில்லை...

"உனக்கும் வைஷூவுக்கும் ஏதும் பிரச்சினையா...?"

'வைஷூ' என்ற பெயரை கேட்டதும் நாகாவுக்கு வேப்பங்காயாய் மனம் கசந்தது...

"ஏன் அவள் உன் கிட்ட வந்து ஒப்பாரி வச்சாளா...?" வெறுப்பாய் வந்து விழுந்தது அவனது வார்த்தைகள்...

அதில் இருந்த வெறுப்பைப் பிரகாஷ் இனம் கண்டு கொண்டான்... தங்கை செய்த துரோகம் தெரிந்தும் அவளைத் திருமணம் செய்து கொண்ட நாகாவின் காதலை அவன் நன்கு அறிவான்... அதுவும் தங்கையைக் கண்டதும் அவனது விழிகளில் கசியும் காதலை அவனும் நன்கு உணர்ந்திருந்தான்...

அப்படிப்பட்டவன் இப்படி வெறுப்பாய்ப் பேசுகிறான் என்றால்...? எதையோ நினைத்தவன் உள்ளம் பதறியது...

"அந்தக் கோபால் எதுவும் வைஷூவை பத்தி தப்பா சொன்னானா...?"

"கோபால்...?" கேள்வியாக நாகா பிரகாஷை பார்த்தான்...

கோபால் தேவியின் அக்கா கணவன் என்பதை அவன் மறந்து போயிருந்தான்...

நாகா கேள்வி கேட்ட விதத்திலேயே தெரிந்து போனது பிரச்சனை கோபால் இல்லை என்று...

"அப்போ வேற என்ன பிரச்சினை உங்களுக்குள்...?" என்று கேட்ட பிரகாஷை கொலைவெறியுடன் பார்த்தான் நாகா...

"என்ன பிரச்சினையா...? பிரச்சினையோட மொத்த உருவம் உன் தங்கை தான்... இதில் தனியா ஒரு பிரச்சினை வேறு இடையில் வரணுமாக்கும்..." கோபமும் நக்கலுமாய் அவன் கேட்க...

அதில் பிரகாஷின் முகம் மாறியது...

"அர்ஜூன்... வைஷூ பத்தி உனக்கு ஏதும் தெரிஞ்சிருச்சா...?"

பிரகாஷின் பதற்றம், நடுக்கம் அவனுக்குப் புதிதாய் இருந்தது... கண்கள் இடுங்க கூர்மையாய் பிரகாஷை பார்த்தான் அவன்... ஆனால் எதுவும் பதில் பேசவில்லை...

பிரகாஷே ஆரம்பிக்கட்டும் என்று அமைதியாக இருந்தான்...

"அவள் மேல் எந்தத் தப்பும் இல்லை அர்ஜூன்... அவள் ரொம்ப நல்ல பெண்..."

இதை அவன் சொன்ன போது நாகாவின் உள்ளம் எரிந்தது தணலாய்...

'தவறுகளின் ஒட்டுமொத்த பிரதிநிதி அவள் தான்... அவள் நல்லவளா... இது என்னடா புதுக் கதை...' என்று மனதிற்குள் நக்கலாய் கவுண்டர் கொடுத்தபடி பிரகாஷை பார்த்தான்...

"இனியும் உன் கிட்ட இருந்து மறைக்கிறது ரொம்பத் தப்பு... அவளைப் பத்தின உண்மைகளை எல்லாம் நீ தெரிஞ்சிக்கிறது தான் நல்லது... யாரோ சொல்லி தெரிஞ்சிக்கிறதை விட நானே சொல்லிடறேன்... அவள் வாழ்க்கையில் நிறைய அசம்பாவிதங்கள் நடந்திருக்கு..." பிரகாஷின் குரலில் இருந்த வேதனையோ, வருத்தமோ ஏதோ ஒன்று நாகாவையும் தாக்கியது...

என்ன இருந்தாலும் இப்போதும் அவனது மனம் அவளுக்காகத் தான் துடிக்கிறது... அப்படி என்ன தான் அவள் வாழ்க்கையில் நடந்து இருக்கும் என்று எண்ணியவன் இதயம் பயத்தில் அதிவேகமாகத் துடித்தது...

பிரகாஷ் தேவியின் வாழ்க்கை ரகசியத்தை ஒவ்வொன்றாய் சொல்ல ஆரம்பித்தான்... வீட்டு வேலைக்காரியின் பெண் தனக்கு எப்படித் தங்கையானாள் என்ற கதையை நாகாவிடம் கூறத் துவங்கினான்...

"வைஷூவோட அம்மா எங்க வீட்டில் தான் ரொம்ப வருசமா வேலை செஞ்சுக்கிட்டு இருந்தாங்க... எங்க வீட்டு அவுட் ஹவுசில் தான் அவங்க தங்கியிருந்தாங்க... அப்போ எனக்கு அவ்வளவா அவள் பழக்கம் இல்லை... என்னை விட ஐஞ்சு வருசம் சின்னவள்... அதுவும் பெண் பிள்ளை என்பதால் அவளிடம் நான் நெருங்கி பழகியது இல்லை...

பார்த்தால் சிரிப்பேன்... எப்படி இருக்கேன்னு கேட்பேன்... அவ்வளவு தான் எனக்கு அவளைப் பத்தி தெரியும்..."

"ஒரு நாள் அவளோட அம்மா வேலை பார்த்துக்கிட்டு இருக்கும் போது திடீர்ன்னு மயங்கி விழுந்துட்டாங்க... டாக்டர் கிட்ட காட்டினப்போ தான் அவங்களுக்கு ப்ரையின் ட்யூமர்ன்னு தெரிய வந்தது... வைஷூவோட அப்பா மொடாக் குடிகாரன்..."

பிரகாஷ் இதைச் சொல்லும் போதே அன்று தேவி 'என் குழந்தைக்கு அப்பா தேவையில்லை' என்று கத்தியது அவனது நியாபகத்தில் வந்தது... அவனுக்குமே சற்று வருத்தமாக இருந்தது அவளை நினைத்து... ஆனால் அவள் அதற்காக மட்டும் சொல்லவில்லை என்பதை இனி தான் அவன் அறிய போகிறான்...

பிரகாஷ் மேலே தொடர்ந்தான்...

"அவனை வச்சு அந்தக் குடும்பத்துக்கு எந்தப் பிரயோஜனமும் இல்லை... இப்படிப்பட்ட ஒரு நிலையில் அவளோட அம்மாவுக்கு இந்த வியாதி வேறு... அதனால் தான் தன்னோட மூத்த பொண்ணுக்கு உடனே கல்யாணம் பண்ணி வைக்கணும்ன்னு நினைச்சாங்க... மருமகன் வந்திட்டா தன்னோட இன்னொரு பெண்ணையும் பார்த்துக்குவான்னு நம்புனாங்க... அதே மாதிரி பாரதிக்கு மாப்பிள்ளை பார்த்துக் கல்யாணம் பண்ணி வச்சாங்க..."

"இதற்கிடையில் அவங்களுக்கு நோயின் தீவிரம் கூடியிருந்தது... எங்கப்பா, அம்மாவையும் சும்மா சொல்லக் கூடாது... வீட்டு வேலை செய்பவள் தானேன்னு அலட்சியமா நினைக்காம அவங்களுக்கு வேண்டிய பண உதவிகளைச் செய்யத்தான் செய்தாங்க... வெளிநாட்டுக்கு அனுப்பி ட்ரீட்மெண்ட் கொடுக்கவும் தயாராத்தான் இருந்தாங்க... ஆனா இது எதுவுமே நடக்காம நோயின் தீவிரம் அதிகமாகி அவங்க போய்ச் சேர்ந்துட்டாங்க... அப்போ வைஷூவுக்குப் பத்து வயசிருக்கும்..."

அந்த வயதில் தாயை இழந்து தேவி எந்தளவுக்கு வேதனைப்பட்டு இருப்பாள் நினைத்தவன் மனமும் வேதனை அடைந்தது... அதை விடப் பெரும் துன்பம் எல்லாம் அவள் அடைந்திருக்கிறாள் என்பதை அவன் அந்தக் கணம் அறியவில்லை...

"மனைவி இறந்ததும் அவளோட அப்பா கொஞ்ச நாள் நல்லவன் மாதிரி நடிச்சான்... அப்பாவும் அம்மாவும் அதை நம்பிட்டாங்க... வைஷூவுக்குப் பாதுகாப்பா இருக்கட்டுமேன்னு அவனை அவுட் ஹவுசில் தங்க வச்சாங்க... ஆனா அந்தப் பாவி..."

மேலே சொல்ல முடியாமல் பிரகாஷின் குரல் நடுங்கியது... அவனது தேகமும் தானோ...

அவனையே கூர்மையாய் பார்த்துக் கொண்டு இருந்த நாகா அதைக் கண்டு பதறி போய்த் தண்ணீர் பாட்டிலை அவன் புறம் நகர்த்தினான்... அதை விடத் தன்னவளுக்கு என்னவானதோ என்று மனதில் ஒரு பதற்றம் அவனையும் மீறி எழுந்தது...

அவள் அவனை என்ன வேண்டுமானாலும் செய்துவிட்டு போகட்டும்... ஆனால் அந்தப் பத்து வயது சிறுமிக்கு எந்த ஆபத்தும் வந்திருக்கக் கூடாது என்று தான் அவன் மனம் வேண்டி கொண்டது...

"அவன் ராத்திரியோட ராத்திரியா அவளைக் கேரளாவிற்குக் கூட்டிட்டு போய்... அங்கே ஒரு விபச்சாரக் கும்பலிடம் பணத்துக்காக அவளை வித்துட்டு ஓடி போயிட்டான்..."

அதைச் சொன்னவன் அடைந்த துன்பத்தை விடக் கேட்டவன் அடைந்து துயரம் தான் அதிகமாய் இருந்தது...

'கடவுளே...' மனம் பதறித்தான் போனது நாகாவிற்கு... பத்து வயது சிறுமிக்கு என்ன தெரியும்...

கண்களை மூடி மனதின் தவிப்பை அடக்க முயன்றான் அவன்... முடியவில்லை... மனம் கலங்கி போனது

அவனுக்கு...

"அங்கே ஒரு வயசானவன் அவளை..." பிரகாஷ் வார்த்தை வராமல் தடுமாறினான்...

நாகாவோ மனதின் துன்பத்தை அடக்கப் பெரும்பாடு பட்டுக் கொண்டு இருந்தான்...

"வேண்டாம் விட்டு விடு பிரகாஷ்... தேவியோட இறந்த காலம் எனக்குத் தேவையில்லை... அதைப் பத்தி பேசவும் நான் விரும்பவில்லை..." என்ற நாகா பிரகாஷிற்கு தெய்வமாகத் தெரிந்தான்...

அந்த நிலையிலும் அவளை அவனால் விட்டு கொடுத்து பேச முடியவில்லை... இது தான் தூய்மையான காதல் என்பதோ...

"நீ நினைப்பது போல் எதுவும் நடக்கவில்லை அர்ஜூன்... அதற்குள் அங்கு ரெய்டுக்கு வந்த போலீஸ் அவளைக் காப்பாத்திட்டாங்க... ஆனாலும் அன்று அவள் அனுபவித்த வேதனையை அவள் வாழ்க்கை முழுவதும் மறக்கவில்லை... எங்க பத்திரிக்கை பெயரையும், அப்பா பெயரையும் அவள் போலீஸ் கிட்ட சொல்லியிருக்கா... அவங்க உடனே அப்பாவுக்குத் தகவல் சொல்ல... அப்பா உடனே அவளைப் போய்க் கூட்டிட்டு வந்தாங்க..."

"அன்னைக்கு அப்பா, அம்மா கிட்ட அங்கு நடந்ததை எல்லாம் சொன்னவள், 'ஏன் அந்த அங்கிள் என் கிட்ட அப்படி நடந்தாங்கன்னு' கேட்ட போது முதன்முறையா ஆம்பிளையா பிறந்ததுக்காக நான் வெட்கப்பட்டேன் அர்ஜூன்... எனக்கு ஓரளவுக்கு விவரம் புரியும் வயது அது... அவள் சொன்னது எல்லாம் எனக்கு நல்லா புரிஞ்சது..."

அன்றைய வருத்தம் பிரகாஷின் முகத்தில் அப்படியே தெரிந்தது... நாகாவிற்குத் தேவிக்கு ஒன்றுமாகவில்லை என்பது நிம்மதியை கொடுத்தாலும், அவள் கேட்ட கேள்வி அவனின் மனதை வாள் கொண்டு அறுத்தது... மனதுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது...

"அதுக்கு அப்புறம் தான் நான் அவளின் மனதை மாற்ற எண்ணி அவளிடம் நெருங்கி பழகினேன்... சகோதரன் இறந்து போன எனக்கு அவள் உடன்பிறந்த சகோதரியாக மாறி போனாள்..."

"அவளோட அப்பா...?" நாகா தயக்கமாய் அந்தக் கேள்வியைக் கேட்டான்...

அப்படி அவன் மட்டும் உயிரோடு இருந்தால் அவனை வெட்டி போட்டுவிடும் வெறியில் இவன் இருந்தான்...

"ஏதோ ஆக்சிடெண்ட்டில் செத்து போயிட்டான்... தகவல் வந்தும் நாங்க யாரும் போகலை... அநாதை பிணமா போகட்டும்ங்கிற வெறுப்பு..."

அதைக் கேட்டு நாகாவிற்குச் சற்று நிம்மதியாக இருந்தது... அவனுக்கே ஆச்சிரியமாக இருந்தது தன்னைக் குறித்து... அவள் அவனுக்கு இவ்வளவு துரோகம் செய்தும் மீண்டும் மீண்டும் அவளுக்கு நல்லதை தானே அவனின் மனது நினைக்கிறது...

"எல்லாம் நல்லபடியாகப் போயிட்டு இருந்தது வைஷூவோட பதினாறு வயசு வரைக்கும்... எங்க வீட்டில் தான் வளர்ந்தாள்... அப்பா, அம்மா தங்களோட பொண்ணாட்டம் பார்த்துக்கிட்டாங்க... எனக்கு அவள் என்றுமே குட்டி தங்கை தான்..."

இதைச் சொல்லும் போது பிரகாஷின் முகத்தில் ஒரு புன்னகை, வாஞ்சை தனியாகத் தெரிந்தது...

"அப்போ பாரதி குழந்தை ட்ரீட்மெண்ட்க்காக சென்னை வந்திருந்தாள்... அவளோட அந்தக் கோபாலும் வந்திருந்தான்..." அதைச் சொல்லும் போதே பிரகாஷ் பல்லை கடித்தான்...

அதைக் கண்டு நாகா அவனை யோசனையாய் பார்த்தான்...

"அந்தச் சமயம் தான் அந்த அயோக்கியனோட பார்வை வைஷூ மேல விழுந்திருக்கு... திரும்ப ஊருக்கு கிளம்பும் போது பாரதியோட துணைக்கு உதவியா வைஷூவை கூட்டிட்டு போறேன் அவன் சொன்னப்போ நாங்க யாரும் அதைத் தப்பா நினைக்கலை... அப்போ பாரதியும் ரொம்ப அனிமீக்கா இருந்தாள்... அதனால் நாங்க சரின்னு வைஷூவை அனுப்பி வைச்சோம்... அங்கே அவன் பாரதியை மிரட்டி வைஷூவை அடைய திட்டம் போட்டிருக்கான் ராஸ்கல்..."

ஒரு பெண்ணுக்கு எத்தனை ஆண்களால் தான் பிரச்சினை... உடலளவில் அவள் பெண்ணாய் இருப்பது தான் இவர்களுக்கு எல்லாம் குற்றமாகத் தெரிகிறதா...? அவளின் அங்கங்கள் தான் அவர்களின் கண்களை உறுத்துகிறதோ... அப்படிப் பெண்ணாய் அவளை அடையாளம் காட்டும் உறுப்புகளை வெட்டி எறிந்துவிட்டால் இந்தக் காமுகர்கள் அடங்கிவிடுவார்களா... என்ன வேண்டுமாம் அவர்களுக்கு...

பெண்ணைத் தாய்க்குச் சமமாக வணங்கும் இந்த நாட்டில் தான் இத்தகைய அவலங்களும் அரங்கேறுகிறது... அதுவும் குடும்பத்தில் உள்ளவர்களாலேயே இந்த மாதிரி துஷ்பிரயோகம் நடப்பது தான் கொடுமையிலும் கொடுமை...

அந்தக் கோபால் மட்டும் நாகாவின் கையில் கிடைத்தால் அவன் தொலைந்தான்... அந்தளவுக்கு அவன் கொலைவெறியில் இருந்தான்...

"பாரதி குழந்தை உண்டாகாதது வேறு அவனுக்கு ரொம்பவே வசதியா போச்சு... அதைக் காரணம் காட்டி பாரதிக்கு மூளைச்சலவை செய்திருக்கிறான்... அவனுக்கு உடனடியா குழந்தை வேண்டும்... வேறு பெண்ணை அவன் திருமணம் செய்தால் அவள் பாரதியை வீட்டை விட்டு விரட்டி விடுவாள்... அதனால் 'வைஷூவை எனக்கு நீயே திருமணம் செய்து வை' என்று அவளிடம் வற்புறுத்தி இருக்கிறான்... அந்த லூசும் அறிவில்லாம அதுக்குச்

சம்மதம் சொல்லியிருக்கு... அதற்கு அப்புறம் அவனோட ஆட்டம் அதிகமாகியிருக்கு... ரொம்பவே டார்ச்சர் கொடுத்திருக்கிறான்... வைஷூ இயல்பிலேயே கொஞ்சம் தைரியமான பெண்... அதனால் எப்படியோ அவனைச் சமாளிச்சு இருக்கிறாள்..."

"அப்போ ஒரு வேலை விசயமா நான் அங்கே போக வேண்டி இருந்தது... அப்படியே பாரதி வீட்டுக்கு போயிட்டு வைஷூவை பார்த்திட்டு வரலாம்ன்னு போனேன்... அன்னைக்கு அந்த ராஸ்கல் அவள் கிட்ட முறை தவறி நடந்துக்க முயற்சி பண்ணியிருக்கிறான்... எப்படியோ தப்பிச்சு வீட்டுக்கு வெளியில் வந்து அவள் அழுதுக்கிட்டு உட்கார்ந்திருக்கா... எதிர்பாராம என்னைக் கண்டதும் சந்தோசம் அடைந்தாலும் இந்தக் கேவலத்தை என் கிட்ட அவள் சொல்லலை... நான் தான் அவளை அதட்டி, உருட்டி அவள் கிட்ட இருந்து விசயத்தை வாங்கினேன்..."

"அதுக்கு அப்புறம் கோபாலை ரெண்டு தட்டு தட்டி, ட்ரீட்மெண்ட்க்கு தேவையான பணத்தைத் தூக்கி எறிஞ்சிட்டு வைஷூவை என்னோட கூட்டிட்டு வந்திட்டேன்... இன்னமும் பாரதி தப்பு தன் கணவன் மேல் இல்லைன்னு நம்புகிறாள்... அவளைத் திருத்த முடியாதுன்னு விட்டுட்டேன்... என்னோட அப்பா, அம்மாவுக்கு இதுவரை இந்த விசயம் எதுவும் தெரியாது... பாரதியை அவங்க பொண்ணு மாதிரி தான் நினைச்சிக்கிட்டு இருக்காங்க... எனக்கு அவங்க கிட்ட உண்மையைச் சொல்லணும்ன்னு தான் ஆசை... ஆனா வைஷூ சொல்ல விடாம தடுத்துவிட்டாள்..."

பிரகாஷ் சொல்லி முடிக்கும் முன் நாகா எழுந்து வந்து அவனைக் கட்டி தழுவி கொண்டான்... அவனது செயலில் பிரகாஷ் ஒரு கணம் திகைத்து போனவன் மறு நொடி தானும் அவனைக் கட்டி கொண்டான்...

"தேவி நன்றிக்கடன்னு சொன்னப்போ கூட நான் நம்பலை... ஏதோ பொய் சொல்கிறாள்ன்னு தான் நினைச்சேன்...

ஆனா இப்போ புரியுது... உனக்காக அவள் ஏன் இவ்வளவு பெரிய ரிஸ்க் எடுத்து இருக்கிறாள்ன்னு..."

நிச்சயம் நாகாவின் குரலில் வருத்தம் இல்லை... மாறாக அவர்களின் உறவினை புரிந்து கொண்ட பாவம் மற்றும் சந்தோசம் மட்டுமே நிறைந்திருந்தது...

"அதுக்கு நான் உன் கிட்ட மன்னிப்புக் கேட்டுக்கிறேன் அர்ஜூன்... இது முழுக்க முழுக்க என்னோட தவறு தான்..." என்று தங்கள் வீட்டு மாப்பிள்ளையிடம் மன்னிப்பு கேட்டவன்,

"இதனால் தான் உங்களுக்குள்ள பிரச்சினையா...?"

அதில் நாகாவின் முகம் மாறியது... பிரகாஷை விட்டு விலகி நின்றவன்,

"இல்லை... இது வேறு..." சொல்லும் போதே அவனது முகம் இறுகி போனது...

அந்த நொடி தனக்கும் மனைவிக்கும் அப்படி என்ன பகை இருக்கப் போகிறது என்பதைப் பற்றி அவன் யோசிக்க மறந்து போனான்... அப்படி யோசித்து இருந்தால் அவள் கூறிய மேகநாதன் விசயம் அவனுக்குப் புரிந்திருக்கும்...

கணவன், மனைவி பிரச்சினைக்கு இடையில் தான் அநாவசியமாய் மூக்கை நுழைப்பது அநாகரீகம் என்று கருதி பிரகாஷூம் அமைதியாக இருந்தான்...

"ஏன் அர்ஜூன் வைஷூவை இங்கே கூட்டிட்டு வர்றது இல்லையா...?"

"டீச்சரம்மாவுக்குப் பத்திரிக்கை ஆபிசில் என்ன வேலை...?" என்று கேலியாய் கேட்டுப் புன்னகைத்தான் நாகா...

"என்ன இப்படிக் கேட்டுட்ட... வைஷூ உன் கிட்ட எதுவும் சொல்லலையா...?" பிரகாஷ் கேட்கவும் அவனது கண்கள் சுருங்கியது...

"அவள் ஜர்னலிசத்தில் மாஸ்டர் டிகிரி பண்ணியவள்... அங்கே நம்ம பத்திரிக்கையில் தான் வேலை பார்த்துக்கிட்டு இருந்தாள்... இந்த வேலைகள் எல்லாம் அவளுக்கு அத்துப்படி... ஜகோஷ்ங்கிற பெயரை கேள்விப்பட்டு இருக்கிறியா..."

நம் தேசம் பத்திரிக்கையில் ஜகோஷ் என்ற பெயரில் சமுதாயத்தின் அவலத்தைச் சுட்டிக்காட்டி எழுதும் கட்டுரைகள் அவனைப் பெரிதும் கவர்ந்து இருக்கிறது... அந்த எழுத்துக்கு அவன் தீவிர ரசிகனும் கூட...

"அது நம்ம வைஷூ தான்... அப்பா, அம்மா, என்னோட பெயரை எல்லாம் சேர்த்து வச்சு அவளா ஒரு புனைப்பெயரை உண்டாக்கிக்கிட்டாள்... அவள் எழுதுற கட்டுரையால் தான் பத்திரிக்கை விக்கிறதா அப்பா கூட என்னைச் சத்தம் போடுவார்..."

நாகாவிற்கு இந்தச் செய்தி முற்றிலும் புதிது... அவளின் கட்டுரையே அத்தனை துணிச்சலாக இருக்கும் போது அதை எழுதும் அவளின் தைரியத்திற்குக் கேட்கவா வேண்டும்... அவனையும் அறியாது அவனது உதட்டில் புன்னகை அரும்பியது...

"நான் இன்னைக்கு வைஷூவை பார்க்க போயிருந்த போது அவளோட முகமே சரியில்லை... எதையோ பறிக் கொடுத்தது போல் விரக்தியா அவள் இருந்தாள்... அதனால் தான் உன்னைப் பார்க்க வந்தேன்... அத்தனை கஷ்டத்திலும், துன்பமான நேரத்திலும் அவள் மனம் தளர்ந்து போய் விடவில்லை... தைரியமா எல்லாத்தையும் தாண்டி வந்தாள்... ஆனா இப்போ இப்படி அவளைப் பார்க்கும் போது மனசுக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்கு... எதுவா இருந்தாலும் வைஷூ கிட்ட நேரிடையாய் பேசி தீர்த்துக்கோ அர்ஜூன்... அவள் ரொம்பவே பாவம்..." என்று சொன்ன பிரகாஷ் சிறிது நேரம் அவனிடம் பேசி கொண்டு இருந்துவிட்டு கிளம்பி சென்றுவிட...

நாகாவோ தனது மனைவியைப் பற்றி யோசித்துக் கொண்டு இருந்தான்...

அவளின் மறுபக்கம் தெரிந்து அவளைப் பார்க்க வேண்டும் என்று அவனது காதல் மனம் துடித்தது.. ஆனால் இன்னமும் என்ன காதல் வேண்டி கிடக்கிறது என்று அவளது துரோகத்தால் பாதிக்கப்பட்ட இன்னொரு மனம் வேண்டாம் என்று அவனைத் தடுத்தது...

கடைசியில் அவனின் காயம்பட்ட மனமே ஜெயித்தது... அவன் அமெரிக்கா செல்கின்ற நாள் வரை அவளைச் சந்திக்க அவன் முயற்சிக்கவே இல்லை...

உடைந்த கண்ணாடி என்றுமே ஒட்டாது அல்லவா... அது போல் தான் அவனின் மனமும்...

அவனது பிரிந்த காதல் என்றுமே இணையாது... தன் இணையைச் சேராது...!!!

சதி தொடரும்...

இரவில் தான் விமானம் என்பதால் நாகா அன்று காலையில் தான் வீட்டிற்கு வந்து சேர்ந்தான்... காலையில் அங்கு வருவதற்குக் கூட அவனுக்குப் பிடிக்கவில்லை தான்... அங்கு வந்தால் வீணாக மனைவியின் முகத்தில் விழிக்க வேண்டுமே... அதுவே அவனுக்கு மிகவும் கொடுமையாக இருந்தது...

மனைவி மீது மனம் நிறையக் காதல் இருந்தாலும் அந்தக் காதல் மனதை காயப்படுத்திய மனைவியின் முகத்தைப் பார்க்க அவனுக்கு அறவே பிடிக்கவில்லை... அது தான் நிதர்சனமான உண்மையும் கூட...

"என்ன அஜூ இது... ஊருக்கு போறதுக்கு முன்னாடியாவது உன் மனைவி கூடச் சேர்ந்து இருக்கலாம் இல்லையாப்பா... இப்பவும் வேலை வேலைன்னு அதைக் கட்டிக்கிட்டு அழணுமா...?" துர்கா கூட மகனை கடிந்து கொண்டார்...

இருவருக்கும் திருமணமான புதிது... மனைவி கூட இருக்காமல் மகன் வேலை வேலை என்று இருப்பது அவருக்குச் சற்றுக் கடுப்பை அளித்தது... அதை விட மருமகள் தான் என்ன நினைப்பாள்... அது வேறு அவருக்குச் சற்று உறுத்தலாக இருந்தது...

ஆனால் தேவியோ மனதில் எத்தனை வருத்தம் இருந்த போதிலும் எதையும் முகத்தில் காட்டி கொள்ளாமல் வளைய வந்தாள்... உப்பை தின்றவன் தண்ணி குடித்துத் தானாக வேண்டும் என்பதற்கேற்ப இது தனக்கான தண்டைனையாக எண்ணி மௌனமாக அவனின் புறக்கணிப்பை வலியோடு தாங்கி கொண்டாள்...

கணவன் வீடு வந்தது அறிந்து மாடியில் இருந்து வேகமாய்க் கீழே இறங்கி வந்த தேவி வரவேற்பறையில் அமர்ந்திருந்தவனின் முகத்தைப் பார்வையால் பருகியவாறே படியிலேயே நின்றுவிட்டாள்...

எத்தனை நாட்களாகி விட்டது அவனைப் பார்த்து... கடந்து சென்ற மூன்று நாட்களும் அவளுக்கு மூன்று யுகங்களாகக் கடினமாகக் கழிந்தது...

ஏதேச்சையாய் நிமிர்ந்து பார்த்த நாகாவின் பார்வை வட்டத்தில் அவன் மனைவி விழுந்தாள்... அவளது ஆவலான பார்வை கண்டு அவனது மனமும் சிறிது அசையத்தான் செய்தது... அவனையும் மீறி அவனது கண்கள் அவளை ஆசையுடன் உள்வாங்கிக் கொண்டது...

'எத்தனை தடவை அடிப்பட்டாலும் நீ திருந்தாத ஜென்மம்டா...' அவனது மனசாட்சி அவனைத் திட்டி காறித்துப்பியது...

அதில் முயன்று தன் பார்வையைத் திருப்பிக் கொண்டான் அவன்... ஆனாலும் மனதிற்குள் அவளின் பாதிக்கப்பட்ட கடந்த காலம் எழுந்து அவனைப் பெரிதும் அலைக்கழித்தது அவள் பால் சாயச் சொல்லி ...

துன்பத்தை அனுபவித்தவளுக்குத் தானும் துன்பம் இழைக்கிறோமே என்கிற எண்ணமே அவனைக் கொல்லாமல் கொன்றது...

'அவள் உனக்குக் கொடுத்த துன்பத்தை விடவா நீ அவளுக்குக் கொடுத்துவிட்டாய்...?' மனசாட்சி கேட்ட கேள்வி மிகவும் நியாயமாகப் பட்டது அவனுக்கு... அதன் விளைவு அவனது முகம் இறுகி போனது... அதற்குப் பிறகு மறந்தும் அவள் புறம் அவன் திரும்பவில்லை...

மாலை வரை அவன் தனது பெற்றோர், தாத்தாவுடன் நேரத்தை செலவிட்டான்... அவர்கள் கவனிக்காதவாறு மனைவியை அழகாகத் தவிர்த்தான்... அது சம்பந்தப்பட்ட இருவருக்கு மட்டுமே புரிந்தது...

அதற்கு மேலும் அறைக்குச் செல்லாமல் இருந்தால் எல்லோரும் தன்னைச் சந்தேகமாகப் பார்ப்பார்கள் என்று எண்ணி அவன் தனது அறைக்குச் சென்றான்... அவன் செல்வதை உணர்ந்து துர்கா மருமகளிடம்,

"அஜூக்கு கூடமாட உதவி பண்ண நீயும் போம்மா..." தாங்கள் இருப்பதால் அவள் சங்கடப்படுகிறாளோ என்ற நினைவில் அவர் சொல்ல...

அதை மறுத்துப் பேசினால் வீண் சந்தேகம் எழும் என்று அவள் அவன் பின் சென்றாள்...

மனைவி பின்தொடர்வதை உணர்ந்தாலும் நாகா திரும்பி பார்க்கவில்லை... அறைக்குச் சென்று தனது பெட்டியை எடுத்து உடைமைகளை அடுக்கி வைக்கத் துவங்கினான்... பெரிதாக ஒன்றும் அவன் எடுத்துக் கொண்டு போகவில்லை... அத்தியாவசிய தேவைகளுக்கு வேண்டியதை மட்டும் தான் அவன் எடுத்து வைத்தான்...

அவனது செயல்களை மௌனமாகப் பார்த்துக் கொண்டு இருந்த தேவியின் மனம் கனத்துப் போயிருந்தது... இன்னும் கொஞ்ச நேரத்தில் கணவன் கிளம்பி சென்று விடுவான் என்பதே அவளுக்கு அத்தனை துக்கத்தைத் தந்தது...

இனிமேல் அவனைப் பார்க்க முடியாது... பேச முடியாது என்ற நினைவே அவளுக்குப் பெரும் துயரத்தை ஏற்படுத்தியது... எப்படியாவது அவனிடம் அவள் பேசியே ஆகவேண்டும்... அதனால் மனதில் தைரியத்தைத் திரட்டி கொண்டு அவன் முன் வந்து நின்றாள்...

அவள் தன் முன் வந்து நிற்பதை உணர்ந்தாலும் அவன் அவளைத் திரும்பி பார்க்கவில்லை... தனது வேலைகளைத் தொடர்ந்து செய்து கொண்டு இருந்தான்...

"நாகா..." அவளது அழைப்பில் பொருட்களை எடுத்து வைத்துக் கொண்டு இருந்த அவனது கை ஒரு நொடி தயங்கி நின்றது... மறுநொடி அது பொய்யோ எனும்படி அவன் தன் வேலைகளைச் செய்ய ஆரம்பித்தான்...

"நீங்க இன்னொரு கல்யாணம் பண்ணிக்கணும்..." சற்று தயங்கினாலும் தான் சொல்ல வேண்டியதை அவனிடத்தில் சொல்லிவிட்டாள்...

அதில் மனதில் ஆத்திரம் எழ கோபமாய் நிமிர்ந்தவன் பார்வை அவளை ஒரு கணம் எரித்துப் பொசுக்கியது... அதே சமயம் அவள் செய்த துரோகம் அவனது மனதை வாள் கொண்டு அறுக்க அவன் தனது உணர்வுகளை அடக்கி கொண்டு அவளைப் பார்த்து அலட்சியமாக,

"கட்டாயம் பண்ணிக்குவேன்... பின்னே உன்னையவே நினைச்சிக்கிட்டு இருப்பேன்னு நினைச்சியா...?" எகத்தாளமாய் வெளிவந்தது அவனது வார்த்தைகள்...

அதில் அவளது மனம் அனிச்சை மலராய் வாடினாலும் அவனது நலன் கருதி மீண்டும் முகம் மலர்ந்தவள்,

"ரொம்பச் சந்தோசம்..." என்க...

"அதுக்கு நீ இப்படி நந்தி மாதிரி குறுக்கே நிற்காம டிவோர்ஸ் பேப்பரில் சைன் பண்ணி கொடுத்துட்டு இந்த ரூமை விட்டு இல்லை இல்லை இந்த வீட்டை விட்டு வெளியில் போனால் ரொம்பச் சந்தோசமா இருக்கும்..."

தயவுதாட்சண்யம் பார்க்காமல் முகத்தில் அடித்தார் போன்று கூறியவனைக் கண்டு அவளுக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது...

"இல்லை நான் இந்த வீட்டை விட்டு போக மாட்டேன்... அப்படிப் போறதா இருந்தா என் பிணம் தான் போகும்..." அழுகையினூடே அன்று போல் இன்றும் உறுதியாய் மறுத்து சொன்னாள் அவள்...

அவளது அழுகையைக் காண பிடிக்காதவனாய் முகத்தைத் திருப்பிக் கொண்டவன், "நீ டிவோர்ஸ்க்கு சம்மதிக்காம நான் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிட்டா நான் ஜெயிலில் போய்க் களி தான் திங்க வேண்டும்... இல்லை அது தான் உன்னோட அடுத்தத் திட்டமா...?" என்று வேறு கேட்டு அவளின் இதயத்தை இரண்டு துண்டாய் உடைத்தான் அவன்...

அதில் உயிர் போகும் வலி எழ துடிதுடித்தபடி, "ஐயோ... நான் அந்த அர்த்தத்தில் சொல்லலை..." என்றவளை நோக்கி

ஆத்திரத்துடன் திரும்பியவன்,

"வேற எந்த அர்த்தத்தில் சொன்ன...? என் உயிரை எடுக்கணும்ங்கிறது தானே உன்னோட திட்டம்..." ஆவேசமாய்க் கத்தியவன்,

"ஒரு கல்யாணம் பண்ணிட்டு நான் படுற அவஸ்தை போதும்... இதில் இன்னொரு கல்யாணம் வேறயா...? அம்மா பரதேவதை... என் ஆத்திரத்தை கிளப்பாம இங்கிருந்து போயிடு... இல்லை நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது..." அவளைப் பார்த்து பல்லை கடித்தான் அவன் ஆத்திரத்துடன்...

நாகாவின் இந்தக் கோபம் அவளுக்குப் புதிது... பயந்து போனவளாய் ஓடி போய்ப் பால்கனியில் சரண் புகுந்தாள்...

காதல் மனைவியே தன்னை மறுமணம் செய்யச் சொல்லியதை நினைத்து மனதுக்குள் மருகியவனாய் அவன் அப்படியே அமர்ந்திருந்தான்... மனதுக்கு அத்தனை கஷ்டமாக இருந்தது...

'இவள் என்று தான் என்னைப் புரிந்து கொள்ளப் போகிறாள்...?' என்று மனதிற்குள் பெருத்த ஆயாசமாக இருந்தது...

அதோ இதோ என்று கடைசியில் அவன் கிளம்பும் நேரம் வந்தே விட்டது... பால்கனியில் குடியிருந்த மனைவியை அழைக்கும் வகையறியாது அங்கு எட்டி பார்த்தவன் தனது தொண்டையைச் செருமினான்...

அதில் ஆவலே உருவாய் அவள் அவனைத் திரும்பி பார்க்க...

"இப்ப நீ என் கூட வரலைன்னா அதுக்கும் ஏதாவது கேள்வி கேட்டு என்னைக் குடைவாங்க... கீழே வா..." என்று அழைத்தவன் உள்ளே செல்ல எத்தனிக்கும் போது அவள் வேகமாய் அவன் முன் வந்து நின்றவள் அவனது முகத்தை ஆசை தீர பார்த்து தனது இதயத்தில் பத்திரமாகச் சேமித்து வைத்து கொண்டாள்...

அவளது உயிரை உருக்கும் பார்வையில் அவனது மனம் தடுமாறத்தான் செய்தது...

"கடைசித் தடவையாய்..." என்றபடி அவன் அருகில் வந்தவள் அவனது முகத்தைத் தனது இரு கைகளில் ஏந்த... அதில் அவன் முகத்தைச் சுளித்துக் கொண்டு விலகி செல்ல முயல...

"ப்ளீஸ் நாகா..." என்றவள் அவனது இதழோடு தனது இதழை பொருத்தினாள் அழுத்தமாய்...

இனி அவனைப் பார்க்க முடியாது, இது போல் அவனை முத்தமிட முடியாது என்ற நினைவே அவனுள் அவளைப் புதையச் சொல்லி தூண்டியது...

முதலில் திமிறியவன் மெல்ல மெல்ல அவளின் முத்தத்தில் தன்னை இழக்க துவங்கினான்... அதிலும் அவளது கண்ணீரும், இதழின் தித்திப்பும் அவனின் மனதில் காதல் உணர்வை கண்டபடி தட்டி எழுப்பியது...

அவளது கண்ணீர் 'எதற்கடி இத்தனை துயரம்...?' என்று அவனையும் துயரப்படுத்தி அவளுக்குக் காதலாய் ஆறுதல் சொல்ல விழைந்தது...

அதே போல் அவளது இதழின் தித்திப்பு 'இந்த இனிமையை மறந்து போகிறாயேடா மடையா...?' என்று அவன் மனம் அவனைத் திட்டி அவளது முத்தத்தைக் காதலோடு அனுபவிக்கச் சொல்லியது...

மொத்ததில் காதல் உணர்வு வெள்ளமென அவன் மனதில் பெருக்கெடுக்க அவளது செயலை அவன் தனதாக்கிக் கொண்டான் அவனையும் அறியாமல்...

இடையில் காதலித்த அவளுக்கே இத்தனை ஏக்கம் இருக்கும் போது, அவளைப் பார்த்த கணத்தில் இருந்து இந்த நொடி வரை அவளது நிறை குறை எல்லாம் தெரிந்தும் அவளைக் காதலிக்கும் அவனுக்கு எத்தனை ஏக்கம் இருக்கும்...

அத்தனை காதலை, ஏக்கத்தை அந்த ஒற்றை இதழ் முத்தத்தில் காட்டிவிட எண்ணி அவன் வேக வேகமாய்ச் செயல்பட்டான்...

அவனது செயலை முதலில் திகைத்து, பின்பு பிரமித்து அதன் பின் காதலோடு அவனின் முத்தத்தை அனுபவித்தவள் அவனோடு ஒன்றினாள் தன்னை மறந்து...

இருவருக்குமே ஒருவரை ஒருவர் விட்டு ஒருவர் விலக முடியாது தங்களுக்குள் மூழ்கி திளைத்திருந்தனர்... சுவாசக் காற்றுக்குத் திணறிய போது தான் அவர்கள் இருவரும் வேறுவழியின்றி விலகினர்...

மூச்சு வாங்க அவனிடம் இருந்து பிரிந்தவள் முகத்தில் மகிழ்ச்சி கொப்பளிக்க அவனைப் பார்த்து புன்னகைத்தாள் காதலோடு...

அவனும் மூச்சு வாங்க அவளிடம் இருந்து பிரிந்தவன் அவளைக் காதலோடு பார்த்த போது அவளின் சிரிப்பு அவனின் மனதின் காயத்தைக் குத்தி கிளற, சட்டென்று அவனின் முகம் மாறியது...

கோபமாய் அவளை முறைத்து பார்த்தவன் அதே கோபத்தோடு அவளை விலக்கி தள்ளிவிட்டு அறையை விட்டு வெளியேறினான்...

வெறுப்போடு போகும் அவனைக் கண்டு அப்படியே அசையாது நின்றாள் அவள்...

அவளுக்குத் தெரியும் அவன் உயிருக்கு பயந்து அமெரிக்கா செல்லவில்லை என்று... மனதில் அளவில்லா காதலை சுமந்து கொண்டு அவளை வெறுக்கவும் முடியாமல், தவிர்க்கவும் முடியாமல் தான் அவளை விட்டு அவன் விலகி போகிறான் என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும்...

ஆனால் அவனுக்கு அவள் மீது இந்தளவுக்குக் காதல் இருக்கும் என்று அவள் அறியாமல் போனது தான் அவளது அறியாமை...

தனக்குத் துரோகம் செய்த மனைவியையும் இந்தளவுக்குக் காதல் செய்ய அவளது கணவனால் மட்டும் தான் முடியும்... அதை நினைத்தவளுக்கு ஒரு பக்கம் சந்தோசமாக இருந்தது... மறுபக்கம் துக்கமாக இருந்தது...

தனக்குள் கரைந்தவள் துர்காவின் அழைப்பில் தன்னைச் சுதாரித்துக் கொண்டு கீழே சென்றாள்...

எல்லோரிடமும் விடைப்பெற்ற நாகா அவளைப் பார்த்தும் பார்க்காமல் மெல்ல தலையசைத்து விட்டு காரிலேறி அமர்ந்தான்... அது கூட அவனது பெற்றோருக்காகத் தான் என்பது அவளுக்குத் தெரிந்து தான் இருந்தது...

சேஷாத்திரி மட்டும் அவன் கூடச் சென்றார்...

கண்களில் கண்ணீர் மல்க கார் போவதை பார்த்துக் கொண்டு இருத்தவளை துர்கா தான் ஆறுதல் படுத்தி உள்ளே அழைத்துச் சென்றார்...

அறைக்குள் வந்தவள் தான் ஏற்கெனவே மூட்டை கட்டி வைத்திருந்த தனது உடைமைகளை எல்லாம் கீழே கொண்டு வைத்தவள் ஏற்கெனவே சொல்லியனுப்பி இருந்த பிரகாஷின் காரில் எல்லாவற்றையும் ஏற்றி தன்னை வளர்த்த வீட்டிற்கு அனுப்பி வைத்தாள்...

துர்கா ஏன் என்று கேட்டதற்கு, "அவர் இல்லாம இங்கே இருக்க ஒரு மாதிரியா இருக்கு... அவர் வரும் வரை அம்மா வீட்டில் போய் இருக்கப் போறேன்..." என்றவள் மேலே ஒன்றும் சொல்லவில்லை...

அவளும் கிளம்புவது கண்டு துர்காவிற்கு வருத்தமாக இருந்தது... ஆனாலும் அதை வெளிக்காட்டி கொள்ளவில்லை அவர்...

மேலே அறைக்கு வந்தவள் கதவை தாளிட்டுக் கொண்டு ஒரு காகிதத்தை எடுத்துக் கொண்டு அமர்ந்தாள்...

ஏற்கெனவே மனதில் ஓட்டி வைத்த வார்த்தைகள் தான் என்றாலும் மீண்டும் ஒரு முறை அதை எல்லாம் நினைத்து

பார்த்து கொண்டாள்... மீண்டும் மீண்டும் அதை நினைப்பதற்கு அவளுக்கு எரிச்சலாக இல்லை மாறாக அது அவளுக்கு ஒருவித சந்தோசத்தைத் தான் அளித்தது...

கணவன் மீதான தன் காதல் நினைவுகளை அசை போட்டுக் கொண்டு இருந்தவளுக்கு அந்த நினைவே தனிச் சுகமாய்த் தான் இருந்தது...

பின் மனதில் இருந்த வார்த்தைகளுக்குக் காகிதத்தில் எழுத்து வடிவம் கொடுக்க ஆரம்பித்தாள்... ஆரம்பத்தில் இருந்து அவனைப் பார்த்த கணத்தில் தன் மனதில் இருந்த நினைவு பற்றி, அதன் பின் காதல் தோன்றிய கணம், இதோ இப்போது மனதில் அளவில்லா காதலை சுமந்து கொண்டு இருக்கும் இந்தக் கணம் வரை எல்லாவற்றையும் எழுதியவள் தனது துரோகத்தைப் பற்றி எழுதவும் மறக்கவில்லை...

"நான் செய்த காரியம் எல்லோருக்கும் துரோகமாகத் தான் தெரியும்... இவ்வளவு ஏன் உங்களுக்கும் அது துரோகமாகத் தான் தெரியும்... ஆனால் எனக்கு அப்படித் தோன்றவில்லை... என் கணவரின் உயிரை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்று எண்ணி தான் நான் அதைச் செய்தேன்... எப்படியாவது நீங்க உயிரோடு இருந்தால் மட்டும் போதும் என்று எண்ணித்தான் அதைச் செய்தது... உங்களைக் கொலை செய்வது மட்டும் தான் எனது நோக்கமாக இருந்தால் ஒரே முறையில் உயிர் எடுப்பதற்கு வழியா இல்லை... அதற்கு நான் ஏன் இத்தனை தடவை முயற்சி செய்ய வேண்டும்... கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள் நாகா... அப்போது என் பக்க நியாயம் உங்களுக்குப் புரியும்..."

"பொதுவாய் நான் தைரியமான பெண் தான்... எத்தனையோ இடர்களை அனுபவித்து வந்த போதும் என் தைரியத்தை நான் ஒரு போதும் இழந்தது இல்லை... ஆனால் என்னைக் கடத்தி கொண்டு போன மேகநாதன் நான் உங்களைக் கொல்லாவிட்டால் அவன் உங்களைக் கொன்றுவிடப் போவதாய்க் கூறிய போது எனது தைரியம்

முழுவதும் இழந்து நான் கோழையாய் மாறி உங்களுக்காகத் துடித்தது எனக்குத் தான் தெரியும்... அன்று இரத்த வெள்ளத்தில் உங்களைக் கண்டு என்னுயிர் துடித்தது எனக்கு மட்டும் தான் தெரியும்... அன்று காதலை உணராத போதே உங்களுக்காக நான் அப்படித் துடித்தேன் என்றால், இப்போது மனதின் காதலை உணர்ந்து இருக்கும் போது எப்படித் துடித்து இருப்பேன்... இப்போதும் அதை நினைக்கும் போது எனக்குள் ஒருவித குளிரெடுக்கத்தான் செய்கிறது..."

"அவனுக்குத் தெரியவில்லை நான் உங்களைக் காதலிக்கிறேன் என்று... அது தெரியாமல் அவன் இதை என்னைச் செய்யச் சொன்னான்... நிச்சயம் இதை நான் செய்யப் போவதில்லை... ஆனால் அதை அவன் அறிந்து கொண்டால் அடுத்த நொடி உங்களின் உயிர்...? அதற்குப் பயந்து தான் அதற்கு நான் சரியென்று சம்மதம் சொன்னேன்... அடுத்தடுத்து மடத்தனமான காரியத்தை அரங்கேற்றினேன்... இதைச் செய்த நான் இதைப் பற்றி உங்களிடம் சொல்ல மிகவும் பயந்தேன்... ஏனென்றால் இதைக் கேட்டு நீங்கள் அவன் மீது கோபம் கொண்டு அவனோடு மோதினால்...? அதன்பின் உங்கள் நிலை...? நினைத்து பார்க்கவே பயமாய் இருந்தது அப்போது... இப்போது உங்களது வெறுப்பைக் காணும் போது சொல்லியிருக்கலாமோ என்று எனது மனம் தவிக்கிறது... சொல்லி இருக்க வேண்டும்... எல்லாவற்றையும் உங்களிடம் சொல்லி பாவமன்னிப்பு கேட்டு இருக்க வேண்டும்... அதைச் செய்யாமல் மேலும் மேலும் தவறு செய்து உங்கள் முன்னாடி இப்படிக் குற்றவாளியாய் நிற்கும் அவல நிலையை நான் அறவே வெறுக்கிறேன்..."

"நீங்கள் என்னை வெறுத்து ஒதுக்கிய பின் எனக்கு உயிர் வாழ விருப்பம் இல்லை... அதோடு உங்க மீதி வாழ்க்கைக்கு இடைஞ்சலாகவும் நான் இருக்க விரும்பவில்லை... நீங்க கேட்ட மாதிரி டிவோர்ஸ் பேப்பரில் சைன் போட்டு கொடுத்துவிட்டு உங்களை விட்டு ஒதுங்கி போயிருக்கலாம் தான்... ஆனால் அதுக்குக் கூடத் தைரியம் இல்லாத

கோழையாய் நான் மாறி போனேன் இந்தக் காதலினால்... ஆம் உங்களுடனான விவாகத்தை ரத்து பண்ணும் தைரியம் எனக்கு இல்லை... அதனால் தான் என் உயிரை ரத்து பண்ணும் இந்த முடிவை எடுத்தேன்... நான் பிணமாய்ப் போனாலும் உங்களின் மனைவி என்கிற அடையாளத்தோடு தான் போக விரும்புகிறேன்... இப்போதைக்கு நான் உங்கள் வாழ்க்கையை விட்டுப் போகிறேன்... மீண்டும் வருவேன்... உங்களின் மகளாய் பிறந்து... மனைவியாய் தான் உங்கள் அன்பை அனுபவிக்க முடியாமல் போயிற்று... இந்த ஜென்மத்தில் நான் அனுபவிக்காத தந்தை பாசத்தை அடுத்த ஜென்மத்தில் உங்கள் மூலம் நான் அனுபவிக்க வேண்டும்... அதற்கு மட்டும் எனக்கு அனுமதி கொடுங்கள்..."

"இப்போது உங்களுக்கு ஒன்று புரிந்து இருக்குமே... அடுத்த ஜென்மத்தில் உங்க மகளாய் பிறக்க விரும்பும் நான் எப்படி நம்ம குழந்தையைக் கலைத்து இருப்பேன் என்று... அது நான் திட்டமிட்டு செய்யவில்லை என்பதை இப்போதாவது நம்புறீங்களா...? அன்று மேகநாதன் என்னைக் கடத்திய அதிர்ச்சி, அதிலும் அவன் கூறிய விசயத்தை எப்படிச் செயல்படுத்தப் போகிறேன் என்ற மனவுளைச்சல் எல்லாம் சேர்ந்து தான் நம் குழந்தையைக் கருவிலேயே கலைத்து விட்டது... இல்லை இல்லை இப்படி ஈனமான அம்மாவின் வயித்தில் இருக்க அதுக்கே பிடிக்கவில்லை போதும்..."

இதை எழுதும் போதே அவளின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து காகிதத்தில் சொட்டியது... கண்களைத் துடைத்துக் கொண்டு மேலே எழுதினாள்...

"இவ்வளவு சொல்ற நீ ஏன் கர்ப்பத்தடை மாத்திரையை எடுத்து கொண்டாய் என்கிற சந்தேகக் கேள்வி உங்க மனசில் தோன்றத்தான் செய்யும்... ஆம் நாகா... இந்த முடிவை நான் எடுத்ததுமே எனக்கு உயிர் வாழும் ஆசை போய்விட்டது... என்றாவது ஒரு நாள் உங்க வாழ்க்கையில் இருந்து நான் கட்டாயம் விலகி போயாகத் தான் வேண்டும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்... இல்லை என்றால் நான் செய்த துரோகமே என்னை உயிரோடு

கொன்றுவிடும்... அப்படி நான் உங்களைப் பிரியும் போது குழந்தை ஒன்று இருந்தால் நிச்சயம் வாழும் ஆசை எனக்கு வரும்... அது என் மனதினை மாற்றும்... அது போக என்னால் குழந்தை வந்தால் அது உங்க மறுமண வாழ்க்கைக்குத் தடையாக அல்லவா இருக்கும்... அதற்காகத் தான் இருவரையும் கட்டுப்படுத்தும் குழந்தை என்ற ஒன்று வேண்டாம் என்று முடிவு செய்தேன்... உங்க குழந்தையைச் சுமப்பது எனக்குக் கசக்குமா நாகா... அது எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியம் அல்லவா... அந்தப் பாக்கியம் இந்த ஜென்மத்தில் கிட்டாத நான் பெரும் துரதிர்ஷ்டசாலி தான்..."

"கடைசியாக ஒன்று... எனக்குக் கடந்த காலத்தில் எந்தக் கள்ளக்காதலும் கிடையாது... இப்போதைக்கு உங்கள் மீது எனக்கு இருக்கும் நல்ல காதல் மட்டுமே... இந்தக் காதலுக்காகத் தான் நான் இதை எல்லாம் செய்தேன்... உங்கள் காதலுக்காக மட்டும் தான் இதைச் செய்தேன்... அதனால் நல்ல காதலுக்காகத் தான் நான் இதைச் செய்தேன் அதை மட்டும் நீங்கள் உணர்ந்து கொண்டால் போதும்... ஜனாப்பா, பிரகாஷ் அண்ணா இருவரை தவிர்த்து ஆண்களைக் கண்டாலே வெறுக்கும் நான், நான் நேசித்த ஒரே ஆண் நீங்க மட்டும் தான்... இதோ இப்போது இந்த நொடி வரை என் மனம் உங்களுக்காகத் தான் துடிக்கிறது... கடைசிவரை உங்களுக்காக மட்டும் தான் துடிக்கும்..."

கடிதத்தை முடிக்கும் போது 'இப்படிக்கு உங்கள் சகி...' என்று எழுதியவள் 'சகி' என்ற சொல்லை அடித்துவிட்டு 'சதி' என்று எழுதியவள் விரக்தியாய் தனக்குள் சிரித்துக் கொண்டாள்...

**************************

விமான நிலையத்தில் செக்கிங் முடித்துவிட்டு விமானம் ஏறுவதற்காக அங்குக் கொடுக்கப்பட்ட தனி அறையில் அமர்ந்த நாகா வீட்டிற்கு அழைத்தான்... துர்கா தான் தொலைப்பேசியை எடுத்தார்...

"அஜூ... எந்தப் பிரச்சினையும் இல்லையே..."

"இல்லைம்மா... செக்கிங் முடிந்தது, ஃப்ளைட் தான் ஏறணும்..."

"சரிப்பா... உடம்பை பார்த்துக்கோ... நான் எதுக்கும் ரமாவுக்கு ஃபோன் போட்டு சொல்லவாடா..."

அத்தைக்கு அவன் கிளம்பும் விசயத்தைச் சொல்ல அவன் விரும்பவில்லை...

"அம்மா... நானே அவங்க வீட்டுக்குப் போய்ச் சொல்லிக்கிறேன்ம்மா..." என்று மறுத்தான் அவன்...

இப்போது அவனுக்கு வேண்டியது தனிமை... அத்தை வீட்டிற்குச் சென்றால் அது கிடைக்காது என்று அவனுக்குத் தெரியும்...

"சரி உன் இஷ்டம்..." என்றவர், "தேவி கிட்ட பேசறியா...?" என்று கேட்க...

"அவளோட செல்போனில் பேசிக்கிறேன்..." என்று சமாளித்து அழகாய் மனைவியிடம் பேசுவதை அவன் தவிர்த்தான்...

"என்னமோடா அஜூ... மனசே சரியில்லை... நீயும் இல்லை, உன் மனைவியும் அம்மா வீட்டுக்குப் போறாளாம்... வயசு பிள்ளைங்க நீங்க இல்லாம வீடே வெறிச்சோடி கிடக்கும்... நீயாவது அவள் கிட்ட எடுத்து சொல்லேன்டா..."

இது அவனுக்குப் புதிய செய்தி...

"அம்மா... இங்கேயே இருந்தா அவளுக்கு மனசு கஷ்டமா இருக்குமோ என்னவோ... கொஞ்ச நாள் அங்கே போய் இருந்துட்டு வரட்டும்மா..." என்று சமாளித்துவிட்டு அலைப்பேசியை அணைத்து விட்டான்...

இத்தனை நேரம் இல்லாத தன்னவளின் நினைவு அவனின் மனதில் அலைக்கடலாய் எழுந்தது... அதிலும் அவள்

கொடுத்த இதழ் முத்தம் அவனது உயிர் வரை சென்று தீண்டி அவனை நிலைக்குலைய செய்தது...

அப்போது தான் அவனுக்கு அது ஞாபகத்தில் வந்தது...

'கடைசி முறையாய்...' அவளது நலிந்த குரல் மறுபடியும் மறுபடியும் அவனது காதில் ஒலித்தது...

'இல்லை நான் இந்த வீட்டை விட்டு போக மாட்டேன்... அப்படிப் போறதா இருந்தா என் பிணம் தான் போகும்..' அதுவும் அவனது ஞாபகத்தில் எழுந்து அவனைப் பெரிதும் குழப்பத்தில் ஆழ்த்தியது...

அவன் என்ன சொல்லி விரட்டிய போதும் வீட்டை விட்டு போகாதவள் இப்போது போகிறாள் என்றால் அதற்கு என்ன அர்த்தம்...?

புரிந்த அர்த்தமோ அவனுக்கு அனர்த்தமாக விளங்கியது... தலையைப் பிடித்துக் கொண்டு அப்படியே அமர்ந்து விட்டான்...

***********************

அங்கே தேவியோ தான் கணவனோடு வாழ்ந்த அந்த அறையை ஒரு முறை ஆசைத்தீர கண்களால் வலம் வந்தாள்...

'இதோ அங்கே தான் அவன் தன்னை அணைத்து முத்தமிட்டான்... இதோ அங்கே தான் அன்று குளித்து விட்டு வரும் போது மறைந்திருந்து அவளைப் பயம் காட்டி, அவளின் பயத்தை அவனுக்குச் சாதகமாக்கி கொண்டு இதோ இந்தக் கட்டிலில் தான் அவளோடு காதல் யுத்தம் புரிந்தான்...'

எங்குப் பார்த்தாலும் அவனின் ஞாபகம், அவனின் முகம்... காணும் இடமெல்லாம் அவளின் கணவனே அவளது கண்ணுக்குள் தெரிந்தான்...

அந்த அறையில் இருந்த அவளுடைய பொருட்களை எல்லாம் அவள் மூட்டைக் கட்டி அனுப்பி விட்டாள்... இனி

இந்த அறையில் அவள் வாழ்ந்ததற்கான அடையாளமாக எதுவுமே இல்லை...

மிச்சம் இருக்கும் அவளும் இன்னும் சிறிது நேரத்தில் போய்ச் சேர்ந்து விடுவாள்... அதன்பின் தேவி என்பவள் நாகாவின் வாழ்க்கையில் இருந்ததற்கான சுவடுகள் யாருக்கும் தெரியாமல் மறைந்து போய்விடும்...

அவனின் நினைவில் இருந்தும் அவள் கொஞ்சம் கொஞ்சமாய் மறக்கடிக்கப்பட்டு விடுவாள்... அதன்பின் அவன் வேறு ஒரு திருமணம், மனைவி, குழந்தை என்று அவனது வாழ்க்கை அதன் போக்கில் சென்றுவிடும்... மறந்தும் அவளை நினைப்பதற்கு அவனுக்கு நேரமிருக்காது...

அதை நினைக்கும் போதே மனதில் இரும்பு குண்டை வைத்து அழுத்தியது போல் பாரமாய் ஏதோ ஒன்று அழுத்தியது... ஓவென்று ஒரு பாடு அழுது முடித்தவள் அரும்பாடுபட்டுத் தன்னைச் சமன் செய்து கொண்டு விசப்பாட்டிலை கையில் எடுத்தாள்...

தற்கொலை செய்து கொள்வது கோழைகளின் முடிவு என்று எள்ளி நகையாடியவள் இன்று அந்த முடிவை நோக்கி போகிறாள்... ஆனால் அது கோழைகளின் முடிவு இல்லை... அதற்கும் ஒரு தைரியம் வேண்டும் என்பதை அந்தக் கணம் கண்கூடாக உணர்ந்தாள்...

அந்தத் தைரியம் வரப்பெற்றவளாய் அவள் விசத்தை மடமடவென வாயில் ஊற்றினாள்... இன்னும் கொஞ்ச நேரம் தான்... அதன்பின்...??? நினைத்தவளுக்குத் துக்கமாக இருப்பதற்குப் பதில் எதையோ சாதித்த நிம்மதி தான் இருந்தது...

அவளது மரணத்தால் கணவனுக்கு நன்மை ஏற்படுமாயின் அது அவளுக்குப் பெருத்த நிம்மதி தானே...

அந்த நேரம் கதவு தடதடவெனத் தட்டும் ஓசை கேட்டது...

'யாரது...?' என்று யோசனையாய் கதவை பார்த்தாள்...

இப்போது அவளுக்கு வேண்டியது மீண்டு எழ முடியாத ஆழ்தூக்கம்... அந்தத் தூக்கத்திற்கு இந்த மாதிரி தடைகள் தேவையில்லாத ஒன்று... அந்தத் தடையை அப்புறப்படுத்த எண்ணி மெல்ல நகர்ந்து சென்று கதவை திறந்தாள்...

அங்கே படபடப்புடன் தவிப்போடு நின்றிருந்த கணவனைக் கண்டதும் திகைப்பில் அவளது கண்கள் சாசர் போல் விரிந்தது... அடுத்த நொடி அவள் முகத்தில் அந்தத் திகைப்பையும் மீறி அப்பட்டமாய் மகிழ்ச்சி ததும்பியது...

சதி தொடரும்...

தவிப்பான பதற்றமான அந்த நேரத்திலும் தன்னைக் கண்டதும் முகம் மலரும் மனைவியின் அழகு முகத்தைப் பார்த்த நாகாவின் மனத்தவிப்புக் கொஞ்சம் கொஞ்சமாய் அடங்கியது... அந்தக் கணம் ஒன்று மட்டும் அவனுக்குத் தெள்ளத்தெளிவாகப் புரிந்தது... அவள் இல்லையேல் அவனில்லை என்பது...

அந்தக் காதல் கொடுத்த தாக்கத்தில் தான் அவள் தன்னைக் கொன்றால் கூடச் சம்மதமே என்று அவளை நாடி ஓடி வந்திருக்கிறான் அவன்...

அவசரமாய் அவனது கண்கள் அவளைத் தலையில் இருந்து கால் வரை அலசி ஆராய்ந்தது... எந்தவித சேதாரமும் இல்லாமல் பாதுகாப்பாய் அவள் இருப்பதை உணர்ந்தவன் மனதில் எழுந்த நிம்மதியுடன் கதவின் நிலை மீது சாய்ந்தபடி அவளை இமைக்காது பார்த்தான்...

காதல் கொடுத்த உணர்வு பிரவாகத்தில் அவனது கண்கள் கூடச் சிறிது கலங்கிவிட்டது...

சற்றும் எதிர்பாராமல் அங்கே கண்ட கணவனைக் கண்டு விழி இமைக்க முடியாது நின்றவள் மெல்ல சுதாரித்துக் கொண்டு,

"நாகா..."

தனது உள்ளத்து அன்பை எல்லாம் அந்த ஒற்றை அழைப்பில் தேக்கி வைத்துக் கொண்டு அழைத்தவளை கண்டு தன்னை மீட்டுக் கொண்டு அறைக்குள் நுழைந்து கதவை சாத்தியவன் அடுத்த நொடி தனது மனைவியை இறுக அணைத்து இருந்தான்...

அவனது வருகையை நம்ப முடியாமல் இருந்தவளுக்கு அவனின் இந்த அணைப்பை இன்னமும் நம்ப முடியவில்லை... ஆனாலும் அவனுள் சுகமாய்க் கரையவும் அவள் தயங்கவில்லை...

அவனது நெஞ்சில் முகம் புதைத்து இருந்தவள் மனதில் எல்லையில்லா நிம்மதி... அவனின் மடியில் இறுதி மூச்சை விடப் போகிறோம் என்கிற ஆழ்நிம்மதி அவளுள்... இந்த ஜென்மத்தில் ஒரு முழுமையான வாழ்க்கையை வாழ்ந்து முடித்துவிட்ட திருப்தி அவளுள்...

ஆனால் அவனுள் அந்த நிம்மதி இல்லை போலும்... அவளை அணைத்துக் கொண்டு அவன் மனதில் உள்ளதை எல்லாம் அவளிடம் கூறி புலம்பி கொண்டு இருந்தான்...

"ஏர்போர்ட்டில் இருந்து இங்கே வரும் இந்த முக்கால் மணி நேரமும் மனசுக்குள் செத்து பிழைச்சேன்டி தேவிம்மா... உனக்கு என்னாச்சோ ஏதாச்சோன்னு பயந்துட்டு வந்தது எனக்கு மட்டும் தான் தெரியும்..." என்றவனை நிமிர்ந்து பார்த்தாள் வியப்பாய்...

அவள் இத்தனை துரோகம் செய்தும் அவன் தனக்காகத் துடித்தானா... அவள் இன்னமும் தன் பக்கம் இருந்து எந்த விளக்கமும் சொல்லாத இந்த நிலையில், அதை அவன் அறிந்து கொள்ளாத இந்நிலையிலும் அவளுக்காக அவன் தவிக்கிறானா...?

எத்தகைய உயர்வானது அவனது காதல்...!!!

'அவ்வளவு காதலா என் மீது உனக்கு...?' பிரமிப்பு நீங்காமல் கணவனைப் பார்த்தாள் அவள்...

"ஏன்டி அப்படிச் சொன்ன...? கடைசி முறைன்னு... அம்மா வேற சொன்னாங்க நீ உன் வீட்டுக்கு கிளம்பி போறதா... நான் சொல்லி போகாதவள், இந்த வீட்டை விட்டுப் போனா பிணமா தான் போவேன்னு சொன்னவள் இப்போ போறேன்னு சொன்னா என்னடி அர்த்தம்...? என்னை விட்டு ஒரேடியா போகப் போறதா தான்னே அர்த்தம்... அப்படி என்னை விட்டுட்டு நீ போயிருவியாடி... அப்படிப் போகத்தான் நான் விட்டு விடுவேன்னா... உனக்கு என்ன என் உயிர் தானே வேணும்... நீ உயிரோட இருந்து என் உயிரை எடுத்துக்கோடி... உனக்காக நான் இது கூடச் செய்ய மாட்டேன்னா..."

அவளுக்கு இன்னமும் பிரமிப்பு விலகவில்லை... கண்கள் அகல விரிய அப்படியே பார்த்திருந்தாள் கணவனை...

"என்ன தேவிம்மா இப்படிப் பார்க்கிற...? இந்தச் சில நிமிசங்களில் ஒண்ணு மட்டும் எனக்குப் புரிந்தது நீ இல்லை என்றால் நான் இல்லைன்னு... எனக்கு நீ வேணும்டி... நீ வேணும் தேவிம்மா..."

பைத்தியக்காரன் போல் புலம்பியபடி அவளுள் புதைந்தவனைக் கண்டு அவளுக்கு மகிழ்ச்சியாய் இருந்தது... எப்படிப்பட்டவனையும் காதல் பைத்தியக்காரன் ஆக்குவதைக் கண்டு அவளுக்கு அந்த நிலையிலும் சிரிப்பு வந்தது...

எந்த விளக்கமும் கேட்காமல், காரணம் காரணி அறியாமல் கணவன் கொண்ட தன்னலமில்லா காதலில் அவளும் உருகி கரைந்து கொண்டு இருந்தாள்...

அதே சமயம் அவளின் உயிரும் அவளை விட்டுக் கொஞ்சம் கொஞ்சமாய் விடைப்பெற்று சென்று கொண்டு இருந்தது...

அவளுக்குக் கண்கள் இருட்டி கொண்டு வருவது போல் இருந்தது... உடலில் ஏற்பட்ட மாற்றங்கள் தனது இறுதி முடிவு நெருங்கி விட்டதை அவளுக்கு அறிவுறுத்தியது...

தன்னில் புதைந்த கணவனை வலுக்கட்டாயமாய் விலக்கியவள் அவனது முகத்தைத் தனது கரங்களில் தாங்கி அவனது முகத்தைப் பருகிவிடுவது போல் பார்த்தாள்... இனியொரு முறை அவனைப் பார்க்க முடியாது என்பதை அறிந்தவளாய் அவனின் பிம்பத்தை மனதினுள் ஆழமாய் உள்வாங்கிக் கொண்டவள்,

"என்னை மன்னிச்சிருங்க நாகா..." என்றபடி அவனின் கைகளில் மயங்கி சரிந்தாள்...

கடைசியில் அவன் பயந்தது போலவே நடந்து விட்டது...

"தேவிம்மா..." அவன் அலறிய அலறலில் வீட்டில் இருந்தவர்கள் மேலே ஓடி வந்தனர்...

விமானம் ஏறியிருக்க வேண்டியவன் இப்படித் திடுமென வந்து நின்ற போதே அவர்களுக்குப் பெரும் குழப்பமாய் இருந்தது... அதிலும் அவன் முகத்தில் இருந்த பதட்டம் வேறு அவர்களுள் பல சந்தேகத்தை விதைத்தது... அதை மெய்ப்பிப்பது போல் அவனது அலறல் சத்தம் வேறு...

என்னவோ ஏதோ என்று அவர்கள் அங்கு விரைந்து வந்தனர்...

அடுத்த அரை மணி நேரத்தில் தேவியை மருத்துவமனையில் சேர்த்து விட்டு அவளின் நலம் அறிவதற்காகக் காத்திருந்த நாகாவின் மனம் பயத்தில் அதிர்ந்து போய் வேகமாய்த் துடித்தது...

விமான நிலையத்தில் இருந்து அன்னையிடம் பேசியதில் இருந்து அவனது மனம் ஒரு நிலையில் இல்லை... அதிலும் தேவி அவனிடத்தில் பேசிய வார்த்தைகள் அவனது செவியில் மீண்டும் மீண்டும் ஒலித்து அவனை நிலைக்குலைய செய்தது...

அவள் கூறியது போல் ஏதேனும் செய்து கொண்டால்...? அந்த நினைவே அவனுள் பெரும் அதிர்வை ஏற்படுத்தியது... அந்த நொடி அவன் உணர்ந்தான் அவள்

மீது அவன் கொண்டு இருந்த காதல் இன்னமும் சாகவில்லை என்று...

அவள் எப்படி இருந்தாலும் அவள் தனக்கு வேண்டும் என்று அவனது மனம் துடித்தது... அடுத்த நொடி சிறிதும் யோசிக்காது கிளம்பிவிட்டான் தன்னவளை காண...

மீண்டும் மனைவியை முழு ஆளாய் பார்த்த பின்பும் தான் அவனது மனம் அமைதியுற்றது... எதிர்பாராமல் தன்னைப் பார்த்த மனைவியின் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சியைக் கண்ட போது இத்தனை நாள் கோபம் என்ற திரை போட்டு மூடி வைத்திருந்த அவனது மனதில் குழப்ப மேகம் நொடியில் விலக, மனைவியின் காதல் அவனது கண்களுக்கு அப்பட்டமாய்த் தெரிந்தது...

அவள் அவனுடன் இருந்த ஒவ்வொரு மணித்துளியிலும் சிறிதும் கள்ளமில்லை... சிறிதும் சந்தேகம் இல்லை... அவளது கண்களில், செயலில் இருந்தது எல்லாம் அவன் மீதான காதல் மட்டுமே... அவள் சொன்னதைத் தான் கேட்டு இருந்திருக்க வேண்டுமோ என்று அவனுக்குத் தோன்றியது... அவள் பக்கமும் ஏதேனும் நியாயம் இருந்திருக்கக் கூடுமோ என்று இப்போது நினைத்தான் அவன்...

அவன் கிளம்பி வந்தது எவ்வளவு நல்லதாய் போயிற்று என்றே அவனுக்குத் தோன்றியது... இல்லை என்றால் இந்நேரம் தன்னவளை இழந்து இருப்பானே... அவளை இழந்த பின் அவனுக்கு என்று ஒரு வாழ்வு இருக்கிறதா என்ன...?

இந்த நொடி அவனுக்குத் தோன்றியது ஒன்றே ஒன்று தான்... அது தன்னவள் எந்தவித ஆபத்தும் இல்லாமல் அவனிடம் வந்து சேர வேண்டும் என்பதே...

தேவியின் நிலை அறிந்து ஜனார்த்தனன், கோமளம், பிரகாஷ் மூவரும் வந்து விட்டனர்...

"அர்ஜூன்... நான் அவ்வளவு தூரம் எடுத்து சொல்லியும் நீ வைஷூவை புரிஞ்சிக்கலையா...?" தாங்க மாட்டாது பிரகாஷ் அவனிடம் கோபம் கொண்டான்...

"நான் தப்புப் பண்ணிட்டேன் பிரகாஷ்... என் தேவிம்மா எனக்குத் திரும்பக் கிடைப்பாளா...?" கண்கள் கலங்க கேட்ட நாகாவை பார்த்த பிரகாஷ் அவனின் தவிப்பை புரிந்தவனாய் கோபத்தைக் கைவிட்டு விட்டு அவனை ஆறுதலாய் அணைத்துக் கொண்டான்...

தங்கை மீது அவனுக்குப் பாசம் இருக்கிறது தான்... ஆனால் அவனின் தங்கை மீது அவளது கணவன் தன் உயிரை அல்லவா வைத்திருக்கிறான்... அது நாகா கேட்ட தொனியில் அவனுக்கு நன்கு விளங்கியது...

அமைதியாய் பல மணி நேரம் தவிப்புடன் கழிந்தது... நாகாவின் பிரார்த்தனை வீண் போகவில்லை என்பது போல் தேவி பிழைத்து கொண்டாள்...

எல்லோரும் அவள் அருகில் சென்று ஆறுதல் கூறிய போதும் நாகா அவள் அருகில் செல்லவில்லை... அமைதியாய் தள்ளி நின்று அவளைப் பார்த்துக் கொண்டு இருந்தான்...

அதைக் கண்டு தேவிக்குத் தான் தவிப்பாய் இருந்தது மனதுக்குள்... கண்களால் மன்னிப்பு வேண்டியபடி இருந்தவளை கண்டு அவனது மனம் இறுகி போனது தனது தவறை எண்ணி...

அவனுக்குத் தெரியும் அவள் அருகில் சென்றால் தான் உடைந்து போய்விடுவோம் என்று... அதனால் அமைதி காத்தான்...

"அஜூ... தேவியை நான் பார்த்துக்கிறேன்... நீ வீட்டுக்குப் போய்க் குளிச்சிட்டு வாப்பா..." வீட்டில் இருந்து உணவை கொண்டு வந்த துர்கா மகனை வீட்டிற்குச் செல்ல சொல்ல...

அவன் வேறுவழியின்றி வீட்டிற்குக் கிளம்பி சென்றான்... ஒன்றும் பேசாது செல்லும் கணவனைக் கண்டு தேவிக்கு

மனதுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது... ஆனாலும் அந்த நிலையிலும் தன்னைத் தேடி வந்த கணவனது காதல் அவளது மனதில் சற்று நம்பிக்கையை அளித்தது...

**********************

தனது அறைக்குள் நுழைந்த நாகாவின் கண்ணில் முதலில் விழுந்தது தேவியின் கடிதம் தான்... மனம் பதற அதை எடுத்துப் படித்தான்... படித்து முடித்ததும் அவன் என்ன மாதிரி உணர்ந்தான் என்று அவனுக்கே தெரியவில்லை...

அவனது மனதை உறுத்தி கொண்டு இருந்த அத்தனை கேள்விகளுக்கும் விடையாக அவளது கடிதம் இருந்தது...

தன்னவளுக்குத் தன் மீது காதல் இல்லையோ என்று வருந்தியவனுக்கு அவளது காதல் புரிந்தது...

நெருஞ்சி முள்ளாய் உறுத்திய மேகநாதனின் சதி கூட அவனுக்குப் பின்னுக்குத் தள்ளப்பட்டு அவளின் காதல் மட்டுமே முன்னுக்கு நின்றது... மேகநாதனின் சதிக்கு எந்தவித ஆதாரமும் இல்லை... ஆனாலும் இப்போது அவன் தேவியை முழுமனதாய் நம்பினான்...

வாழ்க்கையில் பெருமளவு துன்பத்தை அவள் சந்தித்த போதும் தற்கொலை முடிவை நாடாமல் துணிச்சலுடன் அதை எல்லாம் கடந்து வந்தவள், தன் மீது கொண்ட காதலில் கோழை போல் தற்கொலை முடிவை நாடியதை எண்ணி அவன் மனம் வருந்துவதா இல்லை பெருமை கொள்வதா என்று அவனுக்குத் தெரியவில்லை...

ஆனாலும் அவனின் மனதின் ஒரு ஓரத்தில் கர்வம் தோன்றியது என்றால் அது உண்மையும் கூட...

அவளின் கடிதத்தை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு கட்டிலில் சாய்ந்தவன் கண்களில் இருந்து கண்ணீர் துளிகள் உருண்டோடியது...

அவள் பக்க நியாயம் முழுதாய் அறியாத போதும் அவளுக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்று பயந்து அவளைத்

தேடி வந்து அவன் தனது காதலுக்கு ஒரு வகையில் நியாயம் செய்தால், எந்த நிலையிலும் தைரியத்தைக் கைவிடாத அவளோ கணவனுக்காக உயிரையும் துறக்கும் அளவுக்குச் சென்று அவளது காதலுக்கு வேறு வகையில் நியாயம் செய்திருக்கிறாள்...

இருவரின் காதலும் ஒன்றுக்கு ஒன்று சளைத்தது அல்ல... அதை நினைக்கும் போது மனதில் ஒருவித நிம்மதி, சந்தோசம் எழுந்தது அவனுள்...

இத்தனை நாள் அவனது மனதில் இருந்த போராட்டம் அப்படியே அடங்கி மனம் அமைதியானது...

அடுத்து வந்த இரு நாட்களில் தேவியை வீட்டிற்கு அழைத்து வந்தனர்... அதுவரை அவன் அவளிடம் எதுவும் பேசவில்லை...

அறைக்குள் வந்ததும் அவனின் கைப்பிடித்து நிறுத்தியவள், "நாகா... இன்னமும் நீங்க என்னை மன்னிக்கவில்லையா...?"

அவளது அந்த வார்த்தைகளில் அவன் அப்படியே உடைந்து போனான்... அவளை அணைத்துக் கொண்டு கதறிவிட்டான்...

"யாரை யார் மன்னிப்பது தேவிம்மா...? நீ தான் என்னை மன்னிக்கணும்..."

அவனது வார்த்தையில் பிரமிப்பு நீங்காதவளாய் இருந்தாள் அவள்... அவனது கண்ணீர் அவளுக்குப் பல கதைகள் கூறியது... அது சொன்ன அர்த்தமோ அவளது மனதில் குளிர் தென்றலை வீசியது...

"எனக்காக உயிரை கூட விடத் துணிவியா தேவிம்மா..." உயிர் உருக கேட்டவனைக் கண்டு,

"ம்... உங்களுக்காக எதையும் நான் செய்வேன்..." என்றவளை கண்டு அவனுக்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது...

"அத்தனை காதலா என் மீது..." அவனது கேள்வியில் அவளது முகம் வேதனையில் கசங்கியது...

அவனை விட்டு விலகி கட்டிலில் அமர்ந்தாள்... அவனும் விடாப்பிடியாய் அவள் அருகில் வந்தமர்ந்தான்...

"உன் லெட்டரை நான் படிச்சேன் தேவிம்மா..." என்றவனின் குரல் உணர்ச்சிவசப்பட்டதில் கரகரத்து ஒலித்தது...

அவள் கண்ணீர் மல்க அவனைப் பார்த்தவள், "நான் ரொம்பக் கெட்டவள் இல்லையா நாகா...?"

அவளது கேள்வியில் மறுப்பாய் தலையசைத்தான் அவன்...

"ஒரு பொய் சொல்வதால் நன்மை ஏற்படும்ன்னா பொய் கூடத் தப்பில்லை... அது மாதிரி ஒரு தீமை செய்வதால் நல்லது ஏற்படும்ன்னா தீமை கூடத் தப்பில்லை... நீ எனக்காக, எனது உயிரை காப்பாற்றுவதற்காகத் தானே இந்த மாதிரி செய்திருக்க... அப்போ இது தப்பில்லை... விசத்தை முறிக்க விசத்தைக் கொடுப்பது போல் தான் இதுவும்..."

அவன் சொன்னதைக் கேட்டு அவளது கலக்கம் முற்றிலும் மறைந்த போதும் சிறிது தயக்கம் இருக்கத்தான் செய்தது...

"நீ ரொம்ப ரொம்ப நல்லவள் தேவிம்மா... நான் தான் புரிந்து கொள்ளாமல் உன் கிட்ட கொஞ்சம் கடுமையா நடந்துக்கிட்டேன்... ஏற்கெனவே வாழ்க்கையில் கஷ்டப்பட்ட உனக்கு நானும் கஷ்டத்தைக் கொடுத்துட்டேன்... என்னை மன்னிச்சிரு தேவிம்மா..." என்றவனைத் திகைப்பாய் பார்த்தாள் அவள்...

"யார் சொன்னது...?" அவளது உடலும், உள்ளமும் நடுங்கியது...

அவளை ஆறுதலாய் அணைத்தவன், "பிரகாஷ் தான்... அன்னைக்கு உன் முகம் சரியில்லைன்னு ஆபிசில் என்னைப் பார்க்க வந்திருந்தான்... அப்போ சொன்னான்..."

"நாகா... என்னைத் தப்பா..." அவள் மேலே சொல்லும் முன் அவளது வாயை கை கொண்டு மூடியவன்,

"உன்னை நான் தப்பா நினைச்சா அது என்னை நானே தப்பா நினைப்பது போல்..." என்றவனைக் கண்ணில் நேசம் வழிய பார்த்தவள் தானும் அவனை அணைத்து கொண்டாள்...

"நாகா... நம்ம குழந்தையை நான் அழிக்கலை... அது எப்படிக் கலைஞ்சதுன்னு எனக்குத் தெரியாது..." வேதனையுடன் கூறியவளை கண்டு அவனுக்கும் வேதனையாய் இருந்தது...

தந்தை தனக்கே இந்தளவுக்கு வேதனை இருக்கும் போது தாய் அவளுக்கு எத்தனை வேதனை இருக்கும்... மனக்கஷ்டம், உடல் கஷ்டம் எல்லாம் அனுபவித்தவள் அவள் அல்லவா...

"ஆண் என்கிற திமிரில் அப்படிப் பேசிட்டேன்... என்னை மன்னித்துவிடு தேவிம்மா..." அவனால் முடிந்தது அவளிடம் மன்னிப்பு கேட்பது மட்டுமே...

"நான் டேப்லெட் சாப்பிட்டது..." என்றவளை தடுத்து,

"போதும்டா... எல்லா விளக்கமும் போதும்... எல்லாவற்றையும் உன் லெட்டர் படிச்சுத் தெரிஞ்சிக்கிட்டேன்... இனி இதைப் பத்தி எதுவும் பேச வேண்டாம்..." என்றவனைக் கண்டு அவளது மனம் பாகாய் உருகியது...

என்ன சொன்னாலும் அவனின் காதலின் முன் அவளின் காதல் சற்று மதிப்பு குறைந்து தான் காணப்பட்டது... அதை அவனிடத்தில் சொல்ல வேறு செய்தாள் அவள்...

"எனக்கு என்னவோ உன் காதலின் மதிப்பு தான் கூடத் தெரியுது... நான் உன்னை விட்டு பிரிஞ்சு போகத்தான் நினைச்சேன்... ஆனா நீ எனக்காக உயிரையும் விடத் துணிஞ்சு இருக்கியே... உன் உயிர் முன்னாடி என் காதல் எல்லாம் தூசுக்கு சமானம்..."

அவன் பேசும் போதே அவனது அலைப்பேசி அடித்தது... எடுத்து பேசியவன் முகம் பலவித உணர்வுகளைப் பிரதிபலித்தது... பேசி முடிந்ததும் அதை அணைத்து விட்டு அவளைப் பார்த்தவன் அடுத்த நொடி முத்தத்தால் அவளைக் குளிப்பாட்டி இருந்தான்...

அவனது முத்த மழையில் அவள் தான் திக்குமுக்காடி போனாள்... என்ன ஏது என்று தெரியாத போதும் அவனின் முத்தத்தில் மயங்கி அவனது கரங்களில் தொய்ந்து விழுந்தாள் அவள்...

"மேகநாதன் உன்னைக் கடத்திட்டு போனதை நீ ஏன் என் கிட்ட சொல்லலை...?" அவள் காதில் முணுமுணுத்தவனின் குரலில் தான் எத்தனை துயரம்...

அதில் திடுக்கிட்டுக் கண்களைத் திறந்து அவனைப் பார்த்தாள்... அவனது முகத்தில் தெரிந்த துன்பத்தைக் கண்டு மனம் வாடியவளாய் அவனது முகத்தை மெல்ல வருடியவாறு,

"நான் தான் சொன்னேனே..." என்றவள் குரல் அவளுக்கே கேட்கவில்லை...

அவள் சொன்ன கணமும், தான் அதை நம்பாது அவளை அடித்த அந்தக் கணமும் அவன் மனதில் வந்து போன அந்த நொடி அவனின் முகம் வேதனையில் கசங்கியது...

"உன்னை நம்பாமல் போயிட்டேனே தேவிம்மா... நான் எல்லாம் என்ன கணவன்...?" வருத்தமாய்ச் சொன்னவனைக் கண்டு,

"நீங்க சந்தேகப்பட்டது ரொம்பச் சரி... உங்க நிலையில் யாராயிருந்தாலும் அதைத் தான் செய்திருப்பாங்க... உங்களை விட நல்லவங்க இந்த உலகத்தில் யாரும் இல்லை..." என்றவளின் கண்ணில் வழிந்த நேசம் அவனை மெய் மறக்கச் செய்தது...

"இது எப்படி உங்களுக்குத் தெரியும்...?"

அவளுக்குத் தெரியும் கணவனுக்கு இந்தச் செய்தி தெரியாது என்பது... அது தெரியாமலேயே அவன் தன் மீது கொண்ட காதலில் தன்னை நாடி வந்துவிட்டான் என்று... அவனது காதலின் ஆழமும் அவளுக்கு நன்கு தெரியும்... இருந்தாலும் தனக்கு ஏற்பட்ட சந்தேகத்தை நிவர்த்திச் செய்ய அப்படிக் கேட்டாள்...

"எனக்குத் தெரிஞ்ச போலீஸ் ஆபிசர் பேசினார்..." என்றவன் அந்த விசயத்தைப் பற்றி விலாவரியாகக் கூற துவங்கினான்...

அன்று அவனுக்கு விபத்தை ஏற்படுத்திய வேனின் ஓட்டுநரை அவன் தான் காப்பாற்றி மருத்துவமனையில் சேர்த்தது... அப்போது அவனுக்குச் சந்தேகம் தோன்ற காவல்துறை உதவியை நாடினான்... அவன் கூறியதை கருத்தில் கொண்ட காவல்துறை அந்த ஓட்டுநருக்கு உரிய பாதுகாப்பு அளித்து யாருக்கும் தெரியாத வகையில் தனது விசாரணையை ஆரம்பித்தது...

இத்தனை மாதங்களாகக் கண் விழிக்காமல் இருந்தவன் இன்று தான் கண் விழித்திருக்கிறான்... விழித்ததும் அவன் மேகநாதனை பற்றிய எல்லாத் தகவல்களையும் கக்கி விட்டான்... ஏனெனில் அவன் தான் மேகநாதனின் வலதுகை... இந்த இடத்தில் மேகநாதன் நிலை சற்று சறுக்கி தான் போயிற்று...

அன்று கடற்கரையில் நாகாவை கொல்ல முயன்றது, அதற்குப் பின்னரும் அவனைத் தொடர்ந்தது, பிறகு தேவியைக் கடத்தி மிரட்டியது என்று எல்லா உண்மைகளையும் அவன் கூறிவிட்டான்... அதை வைத்து இப்போது மேகநாதனையும், மயில்வாகனத்தையும் கைது செய்துவிட்டார்கள்... அவர்களிடத்தில் விசாரணை நடந்து கொண்டு இருக்கிறது...

அதைக் கேள்விப்பட்ட அந்த அதிகாரி உடனே நாகாவிற்கு அழைத்து அவனது மனைவியைப் பத்திரமாகப் பார்த்து கொள்ளும்படி கேட்டுக் கொண்டார்... அதன் பின்னரே நாகாவிற்கு அந்த உண்மை தெரிய வந்திருக்கிறது...

"அவனே ஒரு டம்மி பீஸ்சு... அவனுக்குப் போய் நீ பயந்துக்கிட்டு இப்படிச் செய்து நம்ம ரெண்டு பேருக்கும் இடையில் இப்படிப் பிரச்சினையை உண்டாக்கி விட்டியே தேவிம்மா..." என்ற நாகாவின் குரலில் வருத்தமே இருந்தது...

"ஏற்கெனவே அவன் உங்களைக் கொல்ல முயன்றவன்... அதை நேரில் பார்த்தவள் நான்... அவன் அப்படிச் சொல்லும் போது நான் எப்படி...? என்னால் அந்த நொடி வேறு எதையும் சிந்திக்க முடியவில்லை..." என்று முகத்தை மூடி கொண்டு அழுதவளின் நிலை, காதல் எல்லாம் அவனுக்குப் புரிவதாய்...

"வேண்டாம் விட்டுவிடு கண்ணம்மா..." என்று அவளை ஆறுதலாய் அணைத்துக் கொண்டான்...

கணவனின் காதலில் கரைந்தவள் சற்று அமைதியானாள்... இருவருமே ஒருவித மோனநிலையில் கட்டுண்டு அமைதியாய் இருந்தனர்...

**************************

அடுத்து வந்த நாட்கள் அமைதியாய்க் கழிந்தது... நாகா, தேவி இருவருக்குள்ளும் சுமூகமான பேச்சு இருந்த போதிலும் கணவன், மனைவியாய் இருவரும் ஒரு பார்வை கூடப் பரிமாறி கொள்ளவில்லை... அவன் பொறுமை காத்தான் என்றால், அவளோ குற்றவுணர்ச்சியில் விலகி நின்றாள்...

ஆம் என்ன செய்தும் அவளது குற்றவுணர்ச்சி இன்னும் முழுமையாய் மறையவில்லை... தான் எந்த விதத்திலும் கணவனுக்குப் பொருத்தம் இல்லாதவள் என்று மனதளவில் தவித்துக் கொண்டு இருந்தாள்...

அன்று வரும் போதே நாகா மிகவும் சந்தோசமாக இருந்தான்... நொடிக்கு ஒரு தடவை மனைவியின் முகத்தை உற்று நோக்கி அதில் ஏதாவது தெரிகிறதா என்று ஆராய்ச்சியாக வேறு பார்த்தான்...

ம்ஹூம் அவன் எதிர்பார்த்த எதுவும் தெரியவில்லை...

"என்ன நாகா அப்படிப் பார்க்கறீங்க...?" தேவி கேட்கும் போதே கணவனின் பார்வையில் அவளது முகம் சிவந்துவிட்டது...

அவளின் முகச்சிவப்பை ரசித்துப் பார்த்தவன் ஒன்றும் இல்லை என்பது போல் தலையசைத்தான்...

அப்போது அவளது அலைப்பேசி அழைக்க அதை எடுத்து பேசியவள் மறுபுறம் கேள்விப்பட்ட செய்தியில் திடுக்கிட்டு போய் அவனது முகத்தைப் பார்த்தாள்... பேசிவிட்டு வைத்தவள் உடல் நடுங்க கணவனை அணைத்து கொண்டாள்...

"ஏன் இப்படிச் செய்தீங்க...?" அவளது குரல் நடுங்கியது...

"அவன் மட்டும் என் மனைவி கிட்ட அப்படி நடந்து இருக்கலாமா...?" அவனது குரலில் அடக்கப்பட்ட கோபம் தெரிந்தது...

"உன் அப்பன் மட்டும் உயிரோடு இருந்திருந்தா அவரையும் போட்டு தள்ளியிருப்பேன்..." ஆவேசத்துடன் வந்தது அவனது வார்த்தைகள்...

அவளின் நிலை அறிந்து மனம் குமைந்தவனின் மனம் இப்போது தான் சற்று நிம்மதியாய் இருந்தது...

ஆம் கோபாலை அடி ஆட்களை வைத்து அடித்துப் படுக்கையில் படுக்க வைத்துவிட்டான் நாகா... அவன் குணமாகி எழ எப்படியும் மூன்று மாதங்களாகும்... அப்படியே குணமாகினாலும் அவனது உடைந்த கை முழுவதும் சரியாகுமா என்பது கேள்விக்குறியே...

தனக்காகத் தன் கணவன் இருக்கிறான் என்பதே அவளுக்குப் பெரும் பாதுகாப்பு உணர்வை தோற்றுவித்தது... இப்போது அவளிடம் நடுக்கம் குறைந்து நிம்மதி எழுந்தது...

"உன் அக்கா மற்றும் அந்தக் குழந்தைக்காகத் தான் அந்தப் பொறுக்கியை உயிரோடு விட்டு வச்சேன்... இல்லை அவனை...?" பல்லை கடித்தவனின் கோபம் அவளுக்குப் புரிவதாய்...

"ம்ப்ச்... விடுங்க நாகா..." என்றவளை கோபமாய்ப் பார்த்தவன்,

"அது எப்படி விட முடியும்...? தங்கை போல் பார்க்க வேண்டிய ஒரு சின்னப் பெண்ணைத் தாரமாய்ப் பார்க்க அவனுக்கு எப்படி மனசு வந்தது...?"

இன்னமும் அடங்காமல் கொதித்தது அவனது மனது... அவள் அமைதியாய் அவனை அணைத்து கொண்டாள்... அவளது அணைப்பில் மெல்ல அவனது கோபம் வடிய ஆரம்பித்தது...

மனதில் இருந்த கோபம் வடிந்து கணவனாய் அவனது மனதில் மோகம் ஆக்கிரமித்துக் கொள்ள அவனது கரங்கள் தனது வேலையைச் செவ்வெனச் செய்ய ஆரம்பித்தது நல்ல கணவனாய்...

ஆனால் அவளோ அவனது கைகளில் பாந்தமாய் அடங்குவதை விட்டு விட்டு உடல் விறைத்துப் போய்த் தனக்குள் மருகி கொண்டு அமர்ந்திருந்தாள்...

அவளது நிலையை உணர்ந்தவன் அவளின் முகத்தைப் பற்றி, "என்னோட ஸ்வீட்டிக்கு என்னாச்சு...?" என்று கேட்க...

அதில் அவளது கண்கள் உடைப்பெடுக்க... அதில் அவனது கண்கள் இடுங்கியது...

"இன்னும் என்னம்மா...?"

"நான் உங்களுக்குக் கொஞ்சமும் பொருத்தம் இல்லாதவள்..."

விக்கி விக்கி அழுதபடி கூறியவளை கண்டு என்ன வார்த்தைகள் கூறி ஆறுதல் படுத்துவது என்று அவனுக்குத் தெரியவில்லை... ஏனெனில் இது நாள் வரை எல்லா

ஆறுதல் வார்த்தைகளையும் கூறி அவன் அவளை ஆறுதல் படுத்தி விட்டான்...

இனி ஒன்றே ஒன்று தான் அவனிடத்தில் மிச்சம் இருக்கிறது... அந்த ஆறுதல் மொழியாவது அவளுக்குப் புரிகிறதா என்று பார்க்கலாம் என்று நினைத்து அவள் முகம் நோக்கி குனிந்தவன்,

"நீ எனக்குப் பொருத்தமானவளா...? இல்லையா...? என்பது இப்போ தெரிந்து விடும்..." என்று கண்சிமிட்டி சொன்னவன் அவளின் இதழை முற்றுகையிட்டான் தாபத்தோடு...

இந்த மொழி அவளுக்குப் புரியாமல் போகுமா என்ன... கணவனது இதழொற்றலில் மனம் மயங்கி அவனது கைகளில் அவள் தொய்ந்து போய் விழ, அதைக் கண்டு அவன் தனக்குள் சிரித்துக் கொண்டான்...

அதன் பின் அவளிடம் இருந்து எந்த எதிர்ப்பும் எழவில்லை... வாகாய் அவனது கைகளில் அடங்கினாள் நல்ல மனைவியாய்...

மொத்தமாய் அவளைக் களவாடியவன் பின் உவகையுடன் அவளது நெற்றியில் முத்தமிட்டு,

"இப்போ சொல்லு ஸ்வீட்டி... நீ எனக்கு ஏத்தவள் தானே..." விசமமாய் அவன் கேள்வி கேட்ட விதத்தில் அவள் நாணம் கொண்டு அவனது நெஞ்சத்தில் முகத்தைப் புதைத்துக் கொள்ள...

"ஜகோஷ் எவ்வளவு பெரிய தைரியசாலின்னு நினைச்சேன்... இப்படி வெட்கப்படுறாங்களே..." என்று கூறி அவன் சிரிக்க...

அதில் திடுக்கிட்டு அவனைப் பார்த்தவள், "பிரகாஷ் அண்ணா சொல்லிட்டாங்களா...?"

"ம்..." என்றவன், "நீ ஏன் இதை என் கிட்ட சொல்லலை...? நம்ம பத்திரிக்கையில் நீ சேர்ந்திருக்கலாமே..."

அதில் முகம் மாறியவள் எழுந்து அமர்ந்தபடி, "உங்களை அப்படிக் கேவலப்படுத்திய பிறகு பத்திரிக்கையில் வேலை பார்க்க எனக்குப் பிடிக்கலை... அதனால் தான்... இந்த டீச்சர் வேலை என்னோட மனசுக்குக் கொஞ்சம் ஆறுதலா இருந்தது..." என்றவளை புரிந்தது போல் அவன் அணைத்துக் கொண்டான்...

"இனி இந்த மாதிரி எதுவும் நீ நினைக்கக் கூடாது... நாளையில் இருந்து நம்ம ஆபிசுக்கு வேலைக்கு வர்ற..." கண்டிப்புடன் அவன் கூற...

அவனது கண்டிப்பில் அவளது முகத்தில் புன்னகை வந்தமர்ந்தது... அவனது கண்டிப்பை பற்றி அவளுக்குத் தெரியாதா என்ன...?

"சரிங்க சார்..." என்று கை கட்டி வாய் பொத்தி பவ்யத்துடன் அவள் கூற...

"ஆஹா... இது தான் சரியான சான்ஸ் நாகா... இப்போ என்ன சொன்னாலும் உன் ஸ்வீட்டி சமத்தாய் கேட்பாள்..." என்றபடி மனைவி இழுத்து அணைத்தவன் மீண்டும் அவளிடம் காதல் யுத்தத்தை ஆரம்பிக்க அவனது மனம் புரிந்தவளாய் அவனுடன் ஒன்ற ஆரம்பித்தாள் அவனின் சகி...

சதி செய்தாலும் இந்தச் சகி செய்த சதியானது அவனுக்கு நன்மையையே அளித்ததால் அவளின் காதலும் அவனின் காதலுக்குச் சற்றும் குறைவில்லாதது தான்...

*************************

ஏழு வருடங்களுக்குப் பிறகு...

நாகா அந்த ஆசிரம வாயிலை யோசனையாய் பார்த்துக் கொண்டு இருந்தான்... எப்படி உள்ளே செல்வது என்று அவனுக்குத் தெரியவில்லை... இரண்டு முறை முயற்சித்தும் பார்த்துவிட்டான்... ஏனோ இவனைப் பார்த்தால் சந்தேகமாக இருந்தது போலும் உள்ளே விட மாட்டேன் என்கிறார்கள்...

"பக்தா... உள்ளே செல்லாமல் இங்கே என்ன செய்கிறாய்...?" என்ற குரலில் அவனுக்கு எரிச்சல் வந்தது...

"அதுக்கான வழியைத் தான் யோசிச்சிக்கிட்டு இருக்கேன்..." என்றவன் அந்தக் குரலில் சந்தேகம் தோன்ற சட்டென்று திரும்பி பார்த்தான்...

அவன் நினைத்தது போல் அங்கே அவனது மனைவி தேவி தான் நின்றிருந்தாள்...

"என்னடி இது கோலம்...?" அவனுக்குச் சிரிப்பு பீறிட்டது...

கழுத்தில் உத்ராட்சை கொட்டை, உடலில் காவி உடுத்தி பார்க்கவே பக்கா சாமியாரிணி போலிருந்தாள் அவள்...

"அப்பா... நான் எப்படி இருக்கேன்...?" என்றபடி முன் வந்தான் அவனது ஐந்து வயது மகன் நந்தித் அர்ஜூன்...

அவனும் காவி உடுத்தி குட்டி சாமியாராய் மாறியிருந்தான்...

"ஏய்... நீ மாறினதும் இல்லாம என் பையனையும் இப்படி மாத்திட்டியேடி... நீங்க ரெண்டு பேரும் சாமியாரா போயிட்டா நான் என்னடி பண்ணுவேன்..." பரிதாபமாய்க் கேட்ட கணவனை முறைத்து பார்த்தவள்,

"உங்களுக்கு உள்ளே போகணுமா, வேண்டாமா...?"

அதில் முகம் மலர்ந்தவன், "கட்டாயம் போகணும்..."

"அப்போ பேசாம வாங்க..." என்றவள் அவனை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றாள்...

அவளுடன் சென்றதாலோ என்னவோ யாரும் அவனைக் கேள்வி கேட்கவில்லை... அப்போது அங்கு வந்த இளம் சாமியார் ஒருவன் அவளைக் கண்டு வாயெல்லாம் பல்லாக இளித்தபடி,

"தேவி மாதா... எப்படி இருக்கீங்க...?"

'பார்க்கிற பார்வை வேறு மாதிரி... ஆனா கூப்பிடறது மாதாவா... எனக்கு வர்ற ஆத்திரத்துக்கு... இங்கே இருந்து போறதுக்குள்ள உன் முதுகில் நான் டின் கட்டலை என் பெயர் நாகார்ஜூன் இல்லைடா...' மனதுக்குள் கொலைவெறியோடு சபதம் எடுத்துக் கொண்டான் அவன்...

"இவர் தான் என் கணவர்... இவர் மனசை நம்ம ஜி தான் மாத்தணும்..."

தேவி சொன்னதும் நாகாவை ஒரு ஜந்து போல் பார்த்தவன், "ஜியால் முடியாத விசயம் எதுவும் இல்லை... நீங்க இவனைக் கூட்டி கொண்டு போங்க மாதா..." என்றபடி அவன் சென்றுவிட....

"யாரு தேவி இவன்...? உன்னை இந்தப் பார்வை பார்க்கிறான்... என் இரத்தம் கொதிக்குது..."

"உங்களுக்கு இப்போ நியூஸ் கலெக்ட் பண்ணணும்ன்னா இந்த மாதிரி இம்சையை எல்லாம் சகிச்சுக்கிட்டு தான் ஆகணும்... உங்களுக்காக இந்த ஒரு வாரமா இங்கே வந்து இந்தக் கர்மத்தை எல்லாம் நான் சகிச்சுக்கிட்டு இருக்கேன்..."

அவன் இந்தப் போலி சாமியாரை பத்தி கட்டுரை எழுதி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த நினைத்தான்... அதை மனைவியிடத்தில் சொல்லவும் செய்தான்...

அதை அவன் மனைவி இப்போது செயல்படுத்திக் காட்டிவிட்டாள்... அவனுக்கு அத்தனை பெருமையாக இருந்தது அவளை நினைத்து... இதில் அவனது மகன் வேறு அவனுக்கு உறுதுணையாய்...

"அது எல்லாம் இருக்கட்டும்... அவன் கிட்ட என்னைப் பத்தி என்ன சொல்லி வச்ச...?"

"அது வந்து..." என்று இழுத்தவள், "கொஞ்சம் கொடுமைக்காரனா, திருந்தாத ஜென்மமா..."

சொல்லிவிட்டு அவள் நாக்கை கடித்துக் கொள்ள...

"ஹா... ஹா... மனசில் உள்ளது எல்லாம் வெளியில் வருது..." என்று அவன் வேண்டும் என்றே அவளைச் சீண்ட...

"நாகா..." என்று அவன் மனைவி செல்லமாய்ச் சிணுங்க...

"ஏய் இது ஆசிரமம்டி..." என்றபடி சுற்றும் முற்றும் பார்த்தான் அவன்...

"ஆனா இங்கே அது தானே நடக்குது..." என்றாள் அவள் தன் கண்ணைச் சிமிட்டியபடி...

"அதைக் கண்டுபிடிக்கத் தானே வந்திருக்கோம்... வா போகலாம்..."

அங்கு இருந்த அந்த ஒரு நாளில் கண்ணில் பட்ட தவறுகளை எல்லாம் அழகாய் புகைப்படம் எடுத்துக் கொண்டான் நாகா... மேலும் சில ஆதாரங்களைத் திரட்டியவன் ஆசிரமத்தை விட்டு வெளியில் வரும் முன் அவனது மனைவியைப் பார்த்து பல்லை காட்டியவனைச் செமைத்தியா கவனித்து விட்டு தான் வெளியில் வந்தான்... அவ்வளவு கோபம் அவனுக்கு...

காரில் வரும் போது, "அப்பா... நானும் வளர்ந்து அம்மா மாதிரி, உங்களை மாதிரி பெரிய ரிப்போர்ட்டராகப் போறேன்..." என்று பெற்றோர் இருவரின் கழுத்தை கட்டி கொண்டு நந்தித் கூற...

"நிச்சயமா பெரிய ரிப்போர்ட்டராகுவே கண்ணா..." புன்னகைத்தபடி இருவரும் தங்களது வாரிசை அணைத்துக் கொண்டவர்கள் அர்த்தத்துடன் பார்வையைப் பரிமாறி கொண்டனர்...

அவர்களின் பாதையில் அவர்களின் மகனும் பயணிக்க நினைப்பது பெருமை தரும் விசயமல்லவா... மிகவும் சந்தோசமாய் இருந்தது அவர்களுக்கு...

இனி அவர்களது வாழ்க்கையில் மகிழ்ச்சி மட்டுமே...!!!